எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

E-ISSN: 2582 – 399x

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி)
தமிழ்த்துறை உயராய்வு மையம்
பசுமலை, மதுரை

மற்றும்

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
அரண் தமிழ் அறக்கட்டளை, சென்னை

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் காலாண்டு
பன்னாட்டு ஆய்விதழ்

ARAN International e – journal of Tamil Research

பன்முக நோக்கில் பாவேந்தர் பாரதிதாசன்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

பதிப்பாசிரியர்
முனைவர் தி. மல்லிகா
முனைவர் பிரியாகிருஷ்ணன்

தொகுதி - 1

சிறப்பிதழ் மார்ச் - 2024

E-ISSN : 2582 – 399x

மன்னர்திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி)

தமிழ்த்துறை உயராய்வு மையம்

பசுமலை, மதுரை

மற்றும்

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் காலாண்டு

பன்னாட்டு ஆய்விதழ்

ARAN International e – journal of Tamil Research

பன்முக நோக்கில் பாவேந்தர் பாரதிதாசன்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் தி. மல்லிகா

முனைவர் பிரியாகிருஷ்ணன்

தொகுதி – 1

சிறப்பிதழ் மார்ச் – 2024

பன்முக நோக்கில் பாவேந்தர் பாரதிதாசன்

பதிப்பாசிரியர்கள் / Editorial Board

சிறப்பிதழ் பதிப்பாசிரியர்கள் / Special Issue Editor

முனைவர் தி. மல்லிகா

உதவிப் பேராசிரியர்

தமிழ் உயராய்வு மையம்

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,

பசுமலை, மதுரை – 04

dr.mallikaramaraj@gmail.com

முனைவர் பிரியாகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்,

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்,

சென்னை

E-ISSN : 2582 – 399x

வாழ்த்துரை

திரு. மூ. விஜயராகவன்,

செயலாளர்

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் **தமிழ் உயராய்வு மையமும், அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழும் (International peer – reviewed e-journal)** இணைந்து நடத்தக்கூடிய பன்னாட்டுக் கருத்தரங்க நிகழ்வு மிகுந்த மனமகிழ்வைத் தருவதாய் அமைந்துள்ளது. பெரும்புகழ் படைத்த பாவலரான பாரதிதாசன் தமிழ் உலகில் தலை சிறந்தவராவர். தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள், செய்த செயல்பாடுகள், அவர் பட்ட துன்பங்கள் அனைத்துமே கவனிக்கத்தக்கவை. தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சைவ சித்தாந்த வேதங்களை முறையாகக் கற்று, தமிழ் மொழிக்கு அருட் தொண்டாற்றியவர். பாரதிதாசன் அவர்கள் தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி, திரைக் கதாசிரியர், எழுத்தாளர் என்று பல்வேறு துறைகளில் தமிழ் மொழியின் இனிமையை பாரதிக்கு பின்பு மக்களிடம் எடுத்துச் சென்ற பாரதிதாசன் படைப்புக்களில் பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெறுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆய்வாளர்களுக்கு மிகச்சிறந்த தலைப்பைக் கொடுத்து நல்ல முறையில் சிறப்பானக் கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து சிறந்த இதழாக வெளியிடுவதற்கான பணியை **அரண் பன்னாட்டுத் தமிழாய்விதழுடன்** இணைந்து மிகச் சிறப்பாக **தமிழ் உயராய்வு மையம்** செய்துள்ளதைப் பாராட்டுகிறேன்.

திரு. மூ.விஜயராகவன்

செயலாளர்

அணிந்துரை

முனைவர் அ. இராமசுப்பையா

முதல்வர்

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

'புதியதோர் உலகு செய்வோம்' என்ற பாரதிதாசன் வரிகளுக்கிணங்க பாரதிதாசன் படைப்புகளில் பன்னாட்டு கருத்தரங்கம் எமது கல்லூரி **தமிழ் உயராய்வு மையம், அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுடன்** இணைந்து நடத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பாரதிதாசன் மக்களின் நலனுக்காக பல படைப்புகளை எழுதி வெளியிட்டுள்ளார். அவரது படைப்புகளிலிருந்து ஐம்பத்தாறு (56) ஆய்வுக் கட்டுரைகள் கருத்தரங்கத்திற்கு வந்திருப்பதை அறிந்து அக மகிழ்ந்தேன். பாரதிதாசன் இலக்கியத்திற்கு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை ஆகும். இவரது இலக்கியமானது இசையுணர்வையும், நல்லெண்ணத்தையும் அடியொட்டியதாக அமையும். சமூக பிரச்சனைகளை இல்லாதொழிக்க பாடுபட்டவர். இயற்கையாகிய தனித்துறைக்கு முதன் முதலில் கவிதை நூல் எழுதியவர் பாரதிதாசன் என்ற வகையில் அவர் எழுதிய **"அழகின் சிரிப்பு"** என்ற நூலே இயற்கை அழகின் எழிலை பாடுகின்றது. இத்தகைய சிறப்பினைக் கொண்ட பாரதிதாசன் படைப்புகளில் பன்னாட்டுத் கருத்தரங்கினை அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுடன் இணைந்து சிறந்த கட்டுரைகளைத் தெரிவு செய்து சிறந்த ஆய்விதழாக வெளிக் கொண்டு வருவதற்காக முழு முனைப்புடன் செயலாற்றி வரும் **தமிழ் உயராய்வு மையத்தின் உதவிப் பேராசிரியர், ஒருங்கிணைப்பாளர், முனைவர் தி.மல்லிகா** அவர்களை வாழ்த்திப் பாராட்டுகின்றேன். **அரண் பன்னாட்டுத் தமிழாய்விதழில்** சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் **முதன்மை ஆசிரியர் முனைவர் பிரியாகிருஷ்ணன்** அவர்களை பெருமிதத்துடன் வாழ்த்திப் பாராட்டுகின்றேன். இக்கருத்தரங்கத்திற்கு இணைந்து செயல்பட்ட துறைத்தலைவர், பேராசிரியர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்களைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

முனைவர் அ. இராமசுப்பையா

முதல்வர்.

பொருளடக்கம்

வ. எண்.	தலைப்பு / பெயர்	பக்க எண்.
1	**பாரதிதாசன் கவிதைகள் மொழிபெயர்ப்பு ஒரு திறனாய்வு** வீ.ரேணுகாதேவி,	1-6
2	**ஒப்புநோக்கில் பாரதியும் பாரதிதாசனும்** முனைவர். ச. கவிதா	7-14
3	**சேரதாண்டவத்தில் செவ்விலக்கியத் தாக்கம்** முனைவர் பெ.சுமதி	15-24
4	**பாரதிதாசனின் பொதுவுடைமைக் காதல்** முனைவர் த. பிரகலாதன்	25-31
5	**பாவேந்தர் பாரதிதாசன் எழுத்துவழி திராவிட இயக்கச் சிந்தனைகள்** முனைவர் கா.மைதீன்	32-41
6	**பாரதிதாசன் பாடல்களில் ஆளுமைச் சிந்தனைகள்** முனைவர் கோ.சுப்புலெட்சுமி	42-48
7	**பாரதிதாசன் படைப்புகளில் பகுத்தறிவு சிந்தனைகள்** முனைவர் தி. மல்லிகா	49-56
8	**திரைத்துறையில் பாரதிதாசனாரின் பங்களிப்பு** முனைவர் பிரியாகிருஷ்ணன்	57-67
9	**பாரதியின் வழியில் பாரதிதாசனாரின் பன்முகப்பார்வைகள் எழுத்து:** எம்.சேகர் முனியான்டி	68-75
10	**இருண்ட வீடும் – சமூகமும்** திரு.த. அன்பழகன்	76-88
11	**பன்முகப் பார்வையில் பாரதிதாசனின் தமிழ் உணர்வு** செந்தூரான் வாசுதேவன்	89-97
12	**பாரதிதாசனின் பெண்ணுரிமைச் சிந்தனைகள்** முனைவர் மு.நளினி	98-107
13	**பாரதிதாசனின் பெண்ணுலகு** **திருமதி.ஜெ.சரஸ்வதி**	108-117
14	**பன்முக நோக்கில் பாவேந்தர் பாரதிதாசன்** வெ. வரலெட்சுமி	118-125

15	**பாரதிதாசன் கவிதைகளில் அழகியல் கூறுகள்** முனைவர் ம. பாலு	126-132
16	**பாரதிதாசன் கவிதைகளில் பெண் முன்னேற்றம்** முனைவர் திருமதி.ச.சிதம்பரம்	133-138
17	**பாரதிதாசன் கவிதைகளில் தொழிலாளர்கள்** முனைவர் ச.சர்புதீன்	139-145
18	**புரட்சிக்கவியில் பாரதிதாசன்** முனைவர் செ.சுகவனேஸ்வரன்	146-152
19	**பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில் கல்வி** **முனைவர் வெ.பிரேமலதா**	153-161
20	**பாரதிதாசன் பாடல்களில் பெண் கதைமாந்தரிகளின் பன்முக நிலை** முனைவர் தி.வ. சந்திரிகா	162-168
21	**விடுதலை உணர்வில் பாவேந்தர்** முனைவர் தி. பிரகாசி மேரி	169-175
22	**பாரதிதாசனின் வீரத்தாய் நாடகத்தில் பன்முகநோக்கு** முனைவர் ச.இந்திராமேரி	176-181
23	**பாரதிதாசனின் தமிழ் உணர்வு** திருமதி.அ.பாவை	182-186
24	**பாரதிதாசனின் சமுதாய உணர்வு** முனைவர்.சொ.கோகிலமீனா	187-192
25	**பாரதிதாசனின் "பெண்ணுலகு"கவிதையில் பெண்ணியச் சிந்தனைகள்** முனைவர் வி.கலாவதி	193-199
26	**பாவேந்தர் பாரதிதாசன் படைப்புகளில் குழந்தைச் செல்வம்** முனைவர் கு.சுரேஷ்	200-209
27	**தமிழச்சியின் கத்தி -உவமை தேர்வும் நேர்வும்** கி.ராஜ்குமார்	210-218
28	**பாவேந்தர் பாரதிதாசனின் பெண்ணுலகில் கைம்பெண்** முனைவர் மா.செல்வத்தரசி	219-223

பாரதிதாசன் கவிதைகள் மொழிபெயர்ப்பு ஒரு திறனாய்வு

வீ.ரேணுகாதேவி,

தகைசால் பேராசிரியர், மதுரை – 21

மொழிபெயர்ப்பு இலக்கிய மொழிபெயர்ப்பு, அறிவியல் மொழிபெயர்ப்பு என இருவகைப்படும். இலக்கிய மொழிபெயர்ப்பு கவிதை மொழி பெயர்ப்பு, உரைநடை மொழிபெயர்ப்பு என இரு வகைப்படும். மொழிபெயர்ப்புகளில் மிகக் கடினமானது என்று அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுவது கவிதை மொழி பெயர்ப்பு, கவிதை மொழி, உரைநடை மொழியிலிருந்து வேறுபட்டது. கவிதைகளில் கவிஞர் உவமை, உருவகம், எதுகை, மோனை, முரண், யாப்பு, சந்தம், இயைபு போன்ற உத்திகளை அதிகம் பயன் படுத்துவர். இந்த நடையியல் உத்திகள் ஒவ்வொரு மொழிக்கும் வெவ்வேறாக அமையும். அவற்றை தருமொழியிலிருந்து பெறு மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யும் பொழுது பல சிக்கல்கள் எழுகின்றன. எனவே தான் கவிதை மொழிபெயர்ப்பு கடினமானது எனக் கருதப்படுகின்றது.

ஒரு மொழியிலுள்ள கவிதைகளை வேறு மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்யும் பொழுது சில சிக்கல்கள் எழுகின்றன. அவை

மொழியியல் காரணிகள் - ஒருமொழியின் கட்டமைப்பு, பிறமொழிகளின் கட்டமைப்புகளிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது. அதே போன்றது தான் சொற் களஞ்சியம். ஒரு மொழியிலுள்ள சொற்களுக்கு இணையான நிகரன்களை வேறு மொழியில் காண்பதரிது. காட்டாக ‘கூழ்’ என்னும் சொல்லுக்கு இணையான சொல்லை ஆங்கிலத்தில் காண இயலவில்லை. எனவே, அச்சொல் ‘gruael’ என்னும் ‘Sans food’ என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ஏறுகால் என்றொரு சொல் இச்சொல்லுக்கு இணையான நிகரன்களாக ‘Crossbar’ ‘Yoke’ என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அப்பளம் என்ற சொல் ‘Thin Brittle wafer’ என்றும் ‘Appalam’ என்று ஒலி பெயர்ப்பு செய்யப்பட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த சிக்கல் சொல்லுக்கு சொல் மொழி பெயர்ப்பு செய்வதா அலலது பொருண்மையை மொழி பெயர்ப்பு செய்வதா என்பதாகும்.

ஏழையின் குடிசை 'Poverty' என்று மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. பாட்டின் பொருண்மையை மனதில் வைத்து தான் 'poverty' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இல்லையென்றால் 'Hut of the poor' 'poor's hut' என்றோ மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். உழத்தி என்ற சொல் 'Women in the field' என்று ஒரு சொல்லுக்கு நான்கு சொற்களால் ஆன மொழி பெயர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

எது தம்பி வேண்டும்' என்று சொற்றொடர் 'Which would you choose, my brother' என்று நீளமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மிக எளிமையாக 'what do you want, brother' என்று மொழி பெயர்க்கலாம்.

ஒரு பனுவலை மொழி பெயர்க்கும் போது சமூக பண்பாட்டு காரணிகளும் சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன.

'தம்பி' என்னும் சொல்லுக்கு இணையான சொல் ஆங்கிலத்தில் இல்லாததால் 'brother' என்றே பொதுவாக மொழி பெயர்க்கப்படுகின்றது.

ஆங்கில பண்பாட்டில் சாதிகள் இல்லையாதலால் 'முதலாளி செட்டி' என்பது 'Chettityar land lord' 'chettiyar the rich' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

அப்பளம்	-	thim brittle wafer	appalam
அனிச்சப் பூ	-	tenderest Anicham	flower most sensitive
சக்ரவாகம்	-	chakkara vaga	chakkaravaka
செந்தாழை	-	thayzhai	golden
சேரன்	-	chera king	king
ஆடி	-	adi month	
சிக்புட் பறவை-		cimpul bird	eagle
சேரி		chery	cheri

மேற்சுட்டப்பட்ட எடுத்துகாட்டுகள் ஒரு மொழியின் சமூக பண்பாட்டுக் கூறுகளை பெறும்மொழிக்குக் கொண்டு செல்லும் போது ஏற்படும் சிக்கல்களை வெளிப்;படுத்துகின்றன.

அடுத்து சிக்கலுக்கான காரணியாக அமைவது ஒரு மொழியில் அமைந்துள்ள ஒளிகளும் அவ்வொளிகளாளும் சுட்டமைக்கப்படும் சொற்களும்.

சூறையில் ஓடம் என்ற கவிதையில் நான்கு வரிகளின் முதலில்

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

என்ற ஒலிகள் வருகின்றன. இவை மொழி பெயர்க்கப் படவேயில்லை

அரிஅரி அரிஅரி அரிசி போடுங்க

அரிசி போடுங்க அம்மா அம்மா

In the name of Lord Hari, O mother

Give me Little rice

குழுகுழுவென் றோடும்

One hops up here and there

கொட்டடா கொட்டடா முரசும்

Come, Let your drums sound

தடதடன் றோச்சடா முழவம்

Come, we quick with your drum

அரி அரி

குடு குடு;

தடாதடா

கொட்டாட

என்னும் ஒலிகளை பெறு மொழியில் மொழி பெயர்க்க இயலவில்லை

இவை தவிர கவிதைகளில் அழகியல் உணர்வினை கொண்டு வருவதற்காக எதுகை, மோனை, முரண், இயைபு, உவமை, உருவகம் போன்ற நடையியல் உத்திகளும் கையாளப்படுகின்றன. இவையும் மொழிக்கு மொழி மாறுபடும். தருமொழியில் உள்ள இவற்றை பெறு மொழிக்கு கொண்டு செல்வதில் சிக்கல்கள் உள்ளன.

உடையவன் இல்லான் என்பதை நீக்கி

உழைப்பினை அனைவர்க்கும் பொதுமை யாக்கி

உழைப்புக் கேற்ற ஊதியம் தேக்கி

உலகம் நடத்தும் ஊரர சாக்கி

We will produce wealth

And hold collective ownership

We will raze down the walls between

The haves and the have – notes

Make work compulsory for all

And fix wages

Commensurate with work

We will march ahead

Joining hands in love

To bring the whole worlds

Under one government

நானும் அவளும், உயிரும் உடம்பும்

நரம்பும் யாழும், பூவும் மணமும்

தேனும் இனிப்பும், சிரிப்பும் மகிழ்வும்

திங்களும் குளிரும், கதிரும் ஒளியும்

Like body and soul harp and stings

Flower and fragrance, honey and sweetness

Laughter and happiness, moon and coolness

Sun and luminenance

She and I are

ஆங்கில மொழிபெயர்ப்பில் எவ்வித இணைச் சொற்களும் காண இயலவில்லை

வானுக்கு நிலவு வேண்டும்

வாழ்வுக்குப் புகழ் வேண்டும்

தேனுக்கும் பலாச்சுளை வேண்டும் - என்

செங்கரும்பே நீ எனக்கு வேண்டும்

The sky needs the bright moon

Life needs great renown

Honey needs luscious fruits

And, my sweet one! I need you !

தரு மொழி கவிதை வரிகளில் காணும் மோனை பெரு மொழியில் இல்லை. தரு மொழியில் காணப்படும் இயைபு ஆங்கில மொழிபெயர்ப்பில் இல்லை. மொழிபெயர்ப்பு சரி வர அமையாமல் போவதற்கான காரணிகள் இவை,

இருபதாம் நூற்றாண்டின் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் என்னும் புலவன் தொடாத இலக்கிய வகைமைகளே இல்லையென்னும் அளவிற்கு கவிதை, கட்டுரை, நாடகம், உரைநடை என பலவற்றை எழுதியுள்ளார். பாரதிதாசனின் கவிதைகள் இலக்கிய வாதிகளால் கொண்டாடப் படுகின்றன. அவரின் படைப்புகளை பலரும் மொழிபெயர்ப்பு செய்துள்ளனர். அவற்றுள் பாரதிதாசன் பல்கலைக்கழகம் வெளியிட்ட "'Selected Poems of Bharathidasan' (Trichy 1991)' மற்றும் பாண்டிசேரி மொழியியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் வெளியிட்ட 'Bharathidasan: Selected Poems (Puducherry 1996)' என்னும் இரு நிறுவன வெளியீடுகள் இங்கு திறனாய்வுக்காக எடுத்துக் கொள்ளப்படுள்ளன. இவை தவிர தங்கப்பா, தட்சணாமூர்த்தி, பரமேஸ்வரன் போன்றவர்களும் பாரதிதாசன் கவிதைகளை மொழிபெயர்ப்பு செய்துள்ளனர். பாரதிதாசனின் உரைநடைகளில் சிலவும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களின் மொழிபெயர்ப்புக்களே முற்றிலும் முடிவடைந்து செம்மை மொழி பெயர்ப்புகளாக வராத பொழுது நவீன இலக்கியங்களின் மொழிபெர்ப்புகளின் எண்ணிக்கை மிகக் குறைவே. பக்தி இல்கியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவை மொழி பெயர்க்கப்பட்டனவா என்பது கேள்விக்குறியே. இந்நிலையில், செம்மொழி நிறுவனம், தமிழ் வளர்ச்சித்துறை, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற நிறுவனங்கள் சில இலக்கியங்களை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியை மேற்கொண்டுள்ளன. பாரதி, பாரதிதாசன் படைப்புகளும் விரைவில் செம்மை மொழிபெயர்ப்புகளாக பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும். உலக மக்களைச் சென்று அடைய வேண்டும். அந்தப்

படைப்புகளுக்கான அங்கீகாரம் உலக அளவில் கிடைக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின், கட்டுரையாளரின் நோக்கம்.

துணைநூற் பட்டியல்

1. Kothandaraman, R. et.al (Edrs.) 1996, Bharathidasan: Selected Poems, Pondicherry Institute of Linguistics and Culture, Pondicherry.
2. Ramalingam, M., (edrs), 1991, Selected Poems of Bharathidasan, Bharathidasan University, Trichy.
3. ரேணுகாதேவி, வீ. 2021, மொழிபெயர்ப்பியல், இலக்கியா பதிப்பகம், தமிழுன்.

ஒப்புநோக்கில் பாரதியும் பாரதிதாசனும்
(தமிழ்மொழிக் கருதுகோளை முன்வைத்து)

முனைவர். ச. கவிதா
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முன்னுரை:

பாரதியும் பாரதிதானும் தம் படைப்புகளில் காலத்தையும் சமுதாயத்தையும் பிரதிபலித்து அழியாப்புகழ் பெற்றவர்கள் ஆவர். எனவே, காலமும் தமிழ்ச் சமுதாயமும் இவ்விருவரையும் தூக்கிப் பிடிக்கிறது. இவ்விருவரும் தமிழர் மனங்களில் நிலைத்து நிற்பது போலப் பிற கவிஞர்கள் நின்று நிலைப்பெற முடியாமைக்குரியக் காரணத்தைத் திறனாய்வு செய்தல் வேண்டும்.

இவ்விருவரும் காலத்தை மட்டும் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியவர்கள் மட்டுமல்லர்; தமிழ்ச் சமுதாயத்தை மடைமாற்றம் செய்ய வந்தவர்களம் ஆவர். இருவரும் சிறந்த கவிஞர்கள்; ஆனால், சிறந்த பேச்சாளர்கள் அல்லர்; சிறந்த உரைநடையாளர்களும் அல்லர். இருவரும் உடல்வழி கவிதை வழிக் கானப்புகுந்தால் இன்றும் நம்மிடையே வாழ்கிறார்கள். இவ்விருவர் கவிதைகளில், 'தமிழ்' இடம்பெறும் விதத்தை இக்கட்டுரை ஒப்புநோக்கில் விளக்குகின்றது.

பாரதி பாடும் தமிழ்

பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் சில ஒப்புமைகள் உள்ளன. இருவருமே திறந்த புத்தகங்கள் போன்றவர்கள்; எதையும் வெளிப்படையாகப் பாடும் இயல்பு உடையவர்கள். பாரதி தமிழைப் புயல்தமிழ் என்றால் பாரதிதாசன் தமிழை ஆவேசத்தமிழ் எனலாம். இருவரும் வெளிப்படையாகப் பாடுபவர்கள் என்றாலும் பாரதி, பாடவேண்டிய இடம் எது? மூட வேண்டிய இடம் எது என்ற பாகுபாடின்றி எதையும் பாடிவிடும் இயம்புடையவர் என்பதை அவர்தம் கவிதைகள் காட்டிவிடுகின்றன பாரதி,

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே – அதைத்

தொழுது படித்திடடி பாப்பா

(ச.மெய்யப்பன் (பதி.), பாரதியார் கவிதைகள், 'பாப்பா பாட்டு', ப.242 என்று பார்ப்பாவை நெறிப்படுத்துகிறார். தமிழாயனம் மகிழும் வண்ணம்,

யாமிறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்

இனிதாவது எங்கும் காணோம்

(மேலது, 'தமிழ்', ப. 154)

எனக் குளிர்விக்கிறார். தமிழின் சுவ கண்போர் விண்ணுலகென்பத்தை இம்மண்ணில் அடைந்தோராவர் என்ற பொருளில்,

தெள்ளுற்ற தமிழ்அமுதின் சுவைகண்டார்

இங்கு அமரர் சிறப்புக் கண்டார்

(மேலது, 'தமிழ்', ப. 154)

எனப்பாடி, தமிழையும் தமிழரையும் உயர்த்துகின்றார். காலத்தை வென்று வாழும் பாரதி,

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்

வாழிய பாரதி மணித்திரு நாடு

(மேலது; 'வாழிய செந்தமிழ்', ப. 159)

எனப்பாடித் தமிழை முதலிலும் தமிழரை இரண்டாவதும், தமிழும் தமிழரும் வாழும் பாரதத்தை மூன்றாவதும் வரிசைப்படுத்திய விதம் பெருமிதத்திற்குரியது.

இவ்வாறெல்லாம் பாடிய பாரதி, ''நம் முன்னோர்கள் அவர்களைப் பின்பற்றி நாமுங்கூடப் புண்ணிய பாதையாகக் கொண்டாடி வரும் ஸ்மங்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதைத் தெய்வபாஷையென்று சொல்வதுயெல்லாம் மனிதபாஷையென்று சொல்லுவோமானால் இவை அனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா. அதன்பொருடமே அதைத் தெய்வபாஷை என்கிறோம்''(1) என்று கூறித் தமிழ் குறித்த தம் நிலைக்கு நேர்மாறான நிலையை மேற்கொள்கிறார். பாரதி, மேற்கூறிய தம் உரைநடையில் சமஸ்கிருதத்தை, 'புண்ணிய பாஷை' என்றும் 'தெய்வ பாஷை' என்றும் கூறியதை ஏற்பதாயினும் தமிழை, 'ஸாதாரண பாஷை' என்றும், 'மனிதபாஷை' என்றும் கூறியது ஏற்பதற்குரியதா என்பது பன்முறைச் சிந்திப்பதற்குரியது. இக்கூற்றில் இடம் பெற்றுள்ள சமஸ்கிருதச் சொற்களின் ஆதிக்கத்தையும் இங்கு நினைவு கூறாதல் அவசியமாகும். பாரதியின்

உரைநடை குறித்து, பழ.கருப்பையா, ‘‘பாரதியின் பாடங்களிலுள்ள செறிவும் நேர்த்தியும் உரைநடையில் இல்லையே, ஏன்? பாரதியின் உடைநடையைக் கெடுத்தது அளப்பரிய வடமொழிக் கலப்புதானே’’(2) எனக்கூறும் கருத்து இங்கு ஒப்புநோக்குதற்கும் உரியதாகும்.

பாரதிதாசன் பாடும் தமிழ்

இருவரும் கவிதைகள் எழுதுவது என்பது சுவாசிக்கும் செயல்போல் இயற்கையாகவே நடத்துள்ளது. இயக்கச் சார்பற்ற பாரதி ஏற்றம் பெற்றதுபோல இயக்கச் சார்புடைய பாரதிதாசனும் ஏற்றம் பெற்றவரே எனினும் பாரதியிடம் காணும் மாறிய சிந்தனையை பாரதிதாசனிடம் பார்க்க இயலாது. பாரதிதாசன், தன்மையும் தமிழ்மொழியையும் பிரித்துப் பார்க்காது,

செந்தமிழே உயிரே நறுந்தேனே

செயலினை மூச்சினை உனக்கு அளித்தேனே

நைந்தாய் எனில்நைந்து போகும்என் வாழ்வு

நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே

(சுரதா கல்லாடன் (தொகு.), பாரதிதாசன் கவிதைகள், இசையமுது (முதல் தொகுதி), ப. 86.

கவிதை எனும் மூச்சை இழுத்த நாளில் இருந்து கடைசி மூச்சை விட்டநாள் வரை,

தமிழை

என்னுயிர் என்பேன்...

தமிழும் நானும்

மெய்யாய் உடலுயிர்...

உயிரை

உணர்வை வளர்ப்பது தமிழே

(மேலது, பாரதிதாசன் கவிதைகள் (முதல் தொகுதி), ப.6)

என்றே தமிழை அணுகிப் பழகினார்; பாடும் பொருளை வசப்படுத்திக் கொண்டு பிறக்கும் பாடல்கள் காலவரையறையைக் கடந்தும் நிற்கும் என்பதை,

தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம் – இன்பத்

தமிழ்குன்றுமேல் தமிழ்நாடெங்கும் இருளாம் (மேலது, ப.62)

எனும் அடிகள் மெய்ப்பிக்கும். ஒரு கருத்தை இயல்பாகச் சொல்வது இயற்றமிழாகும்; இசையோடு சொல்தல் இசைத்தமிழாகும்; நடித்துச் சொல்தல் நாடகத் தமிழாகும். இக்கருத்தைப் புதிய கோணத்திலும் உரிய கோணத்திலும், எளிதினும் எளிதாக,

படிப்பும் பேச்சும் இயற்றமிழ்

பாடும் பாட்டே இசைத்தமிழ்

நடிப்பும் கூத்தும் சேர்ந்ததே

நாடகத் தமிழ்

பாரதிதாசன் கவிதைகள், இளைஞர் இலக்கியம், ப. 433) எனப்பாடுகின்றார். தம்முடைய இறப்புக்குப் பின்னாலும் இறவாப்புகளுடன் பாரதிதாசன் வாழ்கிறார் என்பதற்கு,

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

மங்காத தமிழென்று சங்கே முழங்கு

பாரதிதாசன் கவிதைகள் (முதல் தொகுதி), ப. 64)

எனும் அடிகள் சான்றாகும். நெருப்பனயைத் தூயனாகிய பாரதிதாசனின் பார்வை தமிழிசை, தமிழியக்கம், தமிழ் மொழித்தூய்மை தமிழ்ப்பண்பாடு, தமிழை ஆட்சிமொழி ஆக்கும் வேட்கை என்பனவற்றை நோக்கியதாகும்.

பாரதியின் தமிழ்ப்பார்வை

கவிதை என்பது ஒருவகையில் ஓர் அழகியல் நிகழ்வாகும். அது வலுவான கருத்தைத் தாங்கி நிற்கையில் போற்றப்படும். மாறான கருத்தை கூறி நிற்கையில் கடும் தாயை, சிவபெருமான் பெற்றதாகவும் அத்தமிழுக்குத் தந்ததாகவும் பாடியதை,

ஆதி சிவன் பெற்று விட்டான் – என்னை

ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்

வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை

மேவும் இலக்க஌ை செய்து கொடுத்தான்

(ச.மெய்ப்பபன் (பதி.), பாரதியார் கவிதைகள், ‘தமிழ்த்தாய்’, ப. 152)

எனும் அடிகளால் அறியலாம். இதுபோன்ற பாடலை, பாரதிதாசனிடம் காணமுடியாது. இப்படிப் பாடுவது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்று பாரதிதாசன் கருதுவார்.

பாரதி, தமிழ் இலக்கணத்தை ஆரியர்களான அகத்தியர், தொல்காப்பியர் எனும் இருவரே படைத்தனர் என்றும் அத்தமிழ் இலக்கணமும் சமஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறியதை அவர் தன் கடடுரையொன்றில், ''தமிழ் பாஷைக்கோ இலக்கணம் முதல்முதலாக அகஸ்தியராலும் அவருடைய சிஷ்யராகிய திரணதுாமாக்நி (தொல்காப்பியர்) என்ற ஆரிய முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்டதென்பது மெய்யே. அதனின்றும் தமிழ் இலக்கணம் பெரும்பாலும் சம்ஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கிறதென்பதும் மெய்யே''(3) எனக் கூறுவதாய் அறியலாம்.

இக்கருத்தோடு பொருந்தும் கருத்தை, தொல்காப்பியம், மரபியலுக்கு உரைகண்ட போராசிரியர், ''தாமே தலைவராயினார் முற்காலத்துத் தமிழ்நூல் செய்திலராகலின் தலைவர் வழிநின்று தலைவனாகிய அகத்தியனார் செய்யப்பட்டதும் முதனுகலென்பது அறிவித்தற்கும், பிற்காலத்துப் பெருமானடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும் பிறகாலத்தானும் முதனூலாவதென்பது அறிவித்தற்கும், அங்ஙனம், 'விளையினீங்கி விளங்கிய அறிவினான் முதனூல் செய்தாதென்பது அறிவித்ததற்கும் இது கூறினானென்பது. எனவே, அக்ததியமே முற்காலத்து முதனுகலென்பதுாஉம், அதன் வழித்தாகிய தொல்கப்பியம் அதன் வழி நூலென்பதுாஉம் பெற்றலாம்''(4) எனக்கூறுவதை தோன்றுகின்றது.

பாரதிதாசனின் தமிழ்ப்பார்வை

மேற்சொ்னன பாரதியின் பார்வையில் இருந்து பாரதிதாசன் முற்றிலும் வேறுபடுகின்றார் கவிஞன் பார்வை வரம்பிற்குரியது; சார்புத்தன்மை உடையது (prejudiced); காலக்கோட்பட்டது. எனவே முழுமையற்றது (wholeness). பாரதியால் உள்ளிழுக்கப்பட்ட பாரதிதாசன்,

அகத்தியன்,
சந்தனப் பொதிகையில் தமிழ்ப்பெரும் புலவரின்
மன்றினில் ஒன்றி ஒன்றி மாத்தமிழ்
நன்று பயின்றான் குன்றாச் சுவைத்தமிழ்
இயற்றமிழ் இசைத்தமிழ் இனியஆ பற்றமிழ
முயற்சியிற் பயின்றவின் முடிபுனை மன்னனின்

நல்லா தரவை நாடுவா னாகிச்

செல்வம் முற்பிறப்பில் செய்த நல்வினைப்பயன்

என்று புதுக்கரடி ஒன்றை ஏவினான்

(சுரதா கல்லாடன் (தொகு.), பாரதிதாசன் கவிதைகள்,

‘அகத்தியன் விட்ட புதுக்கரடி, ப. 271).

எனப்பாடி அதிர வைக்கிறார். மொழியின் நடையில், சொல்லும் முறையில், சொல்லும் செய்தியில், செய்தியில் உள்ள மெய்ம்மையில் என எல்லாவற்றிலும் பாரதிதாசன் விஞ்சி நிற்கிறார்.

பாரதியின் தமிழ் நோக்கு

எழுதியவரைத் தவிர வேறு எவர் படிக்கும் போதும் சலிப்பைத் தரும் கவிதைகளுக்கு மத்தியில் விறுவிறுப்பை ஏற்படுத்தும் வித்தை பாரதிக்குக் கைவந்த கலையாகும். இவ்வித்தையை பாரதி,

கொன்றிடல் போலொரு வார்த்தை – இங்கு

கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்

புத்தம் புதிய கலைகள் – பஞ்ச

பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்

மொத்த வளருது மேற்கே அந்த

மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவ தில்லை – அவை

சொல்றுந் திறமை தமிழ்மொழிக்கு இல்லை

மெல்லத் தமிழ்இனிச் சாகும் – அந்த

மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்

என்று அந்தப் பேதை உரைத்தான் – ஆ

இந்த வசையெனக்கு எய்திடலாமோ

(ச.மெய்யப்பன் (பதி.), பாரதியார் கவிதைகள், ‘தமிழ்தாய்’, ப. 153)

எனப்பாடுவதில் கண்டு அதிசயிக்கலாம். தமிழ்மொழியை மென்மேலும் இனிக்கச் செய்யவும், மேற்கு மொழிகள் ஓங்குவதைத் தவிர்க்கவும் என்ன செய்ய வேண்டும் என்பதை, பாரதி,

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநுகல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும். (மேலது, 'தமிழ்', ப.154)

எனப்பாடி வாழும் தமிழர்க்கு இருக்கும் கட்டாயத்தை உய்த்துரைச் செய்கின்றார். தமிழ் வளம் பெற வேண்டும் என்ற காத்த அறிவே பாரதியின் கருதுகோள் (Thesis) என்பதைச் சிந்தையில் நிறுத்த வேண்டும்.

பாரதிதாசனின் தமிழ் நோக்கு

பாரதிதாசன், சிறந்ததை விரும்பிப் போற்றும் இயல்பும் அல்லாததை வெறுத்துத் துாற்றும் இயல்பும் உடையவராவார் பாரதியைப் போலவே பாரதிதாசனும் தமிழ் ஏற்றம் பெறுவதற்குரிய வழிகளை,

எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்

(சுரதா கல்லாடன் (தொகு.), பாரதிதாசன் கவிதைகள் (முதல் தொகுதி), ப. 61)

எனப்பாடி வெளிப்படுத்தியுள்ளார். பாரதி, பாரதிதாசன் கவிதைகளில் கற்பனையும் உண்டு; கவிநயமும் உண்டு; உணர்வும் உண்டு; தமிழ் உணர்ச்சியும் உண்டு. பழந்தமிழ் மரபும் உண்டு; புத்துலகச் சிந்தனையும் வென்று வாழ்கிறார்கள். தமிழ்மொழி வளர்ச்சி குறித்து பாரதிதாசனிடம் கேட்டபோது அவர்,

"பள்ளிக்கூடத்திலே எல்லாப்பாடங்களையும் தமிழிலே படிப்படியாகச் சொல்லித்தர ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழுக்கு சி. பால சுப்பிரமணியன் கூறியுள்ளார்"

பாரதிதாசனின் விருப்பம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முடிவுகள்

பாரதியும் பாரதிதாசனும் தமிழை வளர்ப்பதில் இருப்புப்பாதையைப் போல இணைந்தே கருத்தாடங்களை புலப்படுத்தியுள்ளனர். சமுதாயத் தேவைகளை மையமாகக் கொண்டு படைக்கும் கவிதைகள் மட்டுமே மக்களைச் சென்றடையும் என்பதற்கு இருவருமே எடுத்துக்காட்டாயினர். தமிழின் பெருமைகளைப் பாடுவதில் இருவருமே எளிமை, இனிமை, புதுமை என்ற பண்புகளைப் பின்பற்றினர்.பாரதி தேசிய மரபின் தோற்றுவாய் என்றால் பாரதிதாசன் திராவிடமரபின் தோற்றுவாய் ஆவார்.

இருவரின் கவிதைகளிலும் தமிழ் பற்றிய சிந்தனை பெருக்கெடுக்கக் காரணம் காலத்தின் பின்னணியே எனலாம். தமிழ்மொழி குறித்தச் சிந்தனைப் புலப்பாட்டில் பாரதிதாசனிடம் காணும் பகுத்தறிவை பாரதியிடம் காண இயலாது.

முதன்மை நூல்கள்

1. ச.மெய்யப்பன் (பதி.), பாரதியார் கவிதைகள், தென்றல் நிலையம், சிதம்பரம், மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2002.
2. சுரதா கல்லாடன் (தொகு.), பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2011.

குறிப்பெண் காட்டும் நூல்கள்

1. பாரதியார் கட்டுரைகள், ப. 46, வானதி பதிப்பகம், சென்னை 1981.
2. பழ. கருப்பையா, கண்ணதாசன்: காலத்தின் வெளிப்பாடு ப. 59, கிழக்கு பதிப்பகம், சென்னை, (கிழக்கு) முதல் பதிப்பு, டிசம்பர் 2012.
3. பாரதியார் கட்டுரைகள், ப. 143, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, (வர்த்தமானன்) இரண்டாம் பதிப்பு, மார்ச் 2019.
4. பேராசிரியர் (உரை.) தொல்காப்பியம், பொருளாதிகாரம், மரபியல், நூ. 94, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, செப்டம்பர் 1966.
5. சி.பாலசுப்பிரமணியன், பாரதியும் பாரதிதாசனும், ப. 244, நறுமலர்ப் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, மார்ச் 1992.

சேரதாண்டவத்தில் செவ்விலக்கியத் தாக்கம்

முனைவர் பெ.சுமதி,
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், ஆட்சிப்பேரவை உறுப்பினர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21.
mail;psumathiarul@gmail.com . 99949 52162

முன்னுரை

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் ஆட்டனத்தி, ஆதிமந்தி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஆட்டனத்தி ஆடற்கலையில் சிறந்தவன், அவன் காவிரி ஆற்றில் புனல் நடனம் ஆடிய போது காவிரி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மருதியால் காப்பாற்றப்படுகிறான். மருதி அவனுடன் சேர்ந்து வாழ்கின்றாள். ஆதிமந்தி தேடி வந்தவுடன் அவனிடம் ஆட்டனத்தியை ஒப்படைத்து விட்டு தன் உயிரை மாய்த்துக்கொள்கின்றாள் என்று சங்க இலக்கியச் செய்தி சேரதாண்டவத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் மருதியின் தியாகத்தைப் போற்ற வேண்டும், கற்புக்கரசியாகச் சிலப்பதிகாரத்தில் கண்ணகியை வழிபடுவது போன்று வழிபட வேண்டும் என்று சேரதாண்டவத்தில் மருதிக்குக் கடல் கரையில் கல் நடப்படுகிறது. சங்க இலக்கிய தலைவன், தலைவியின் களவு, கற்பு வாழ்க்கையை மட்டுமல்லாமல் பெண்களின் கற்பு வணங்கப்பட வேண்டும் என்ற பாரதிதாசனின் சேரதாண்டவம் கட்டமைக்கப்பட்டுள்ளதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

தாக்கம்

ஒரு மொழி இலக்கியம் மற்றொரு மொழியில் உடனே தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. அதற்குப் பல படிநிலைகளைக் கடக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

"ஒருமொழி இலக்கியத்தில் பிறிதொரு மொழி இலக்கியத்தின் தாக்கம் திடீரென்று ஏற்படுவதில்லை. செல்வாக்கைச் செலுத்தும் இலக்கியம் அதை ஏற்கும் இலக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்குச் சில படிநிலைகளைக் கடக்க வேண்டியுள்ளது. செல்வாக்கில் (Influence) தொடங்குகின்ற தாக்கம், போலச் செய்தல் வாயிலாகப் படிப்படியாக வளர்கிறது. இது மற்றொரு மொழிப் படைப்பாளனிடத்தில் அகவயமான எண்ணத்தின் நீள, அகல, ஆழங்களில் ஆட்சி செலுத்துமானால் அது தாக்கம் எனப்படுகிறது. இல்லையெனில் அது செல்வாக்கு அல்லது போலச் செய்தல் என்ற அளவோடு நின்றுவிடுகிறது." (இராசா.சி. ஒப்பிலக்கியம், இ.ப.2018.ப.29)

படைப்பாளனின் எண்ணத்தில் ஆழமான உணர்வுகளையும் சிந்தனைகளையும் உண்டாக்கும் போது அது தாக்கமாகின்றது. அவ்வாறு இல்லை என்றால் செல்வாக்கு அல்லது போலச் செய்தாலக மட்டுமே இருக்கும் என்பதாக அறியமுடிகிறது.

தலைவன் – தலைவி – பொருத்தங்கள்

தலைவன், தலைவியின் இல்லற வாழ்வியலுக்குரிய முக்கியப் பொருத்தங்களாகப் பத்துப் பொருத்தங்கள் தொல்காப்பியத்தில் கூறப்படுகின்றன.

"பிறப்பே குடிமை ஆண்மை **யா**ண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே" **(தொல்.மெய்.25)**

இல்லற வாழ்வியலுக்கு இன்றியமையாதப் பண்புகளைத் தொல்காப்பியர் வரையறை செய்கின்றார்.

ஆட்டனத்தி, ஆதிமந்தியிடம் அவர்களுக்கிடையே உள்ள ஒற்றுமைப் பண்புகளைக் கூறி இருவரையும் பிரிக்கமுடியாது என்று கூறுகின்றான்.

"ஆதிமந்தி. நம் உறவை உறுதி செய்தன ஒத்த இளமையும், ஒத்த அன்பும் ஒத்த அழகும்! ஆயினும், நம்மைப் பிரிக்கக் காத் திருப்பது ஒன்று உண்டு " (பாரதிதாசன், சேரதாண்டவம்,இ.ப.1954. ப.56)

ஒத்த இளமை, ஒத்த அன்பு, ஒத்த அழகு என்பது பாரதிதாசன் கூறுவது தொல்காப்பியர் வரையறுக்கும் தலைவன், தலைவிக்குரிய பண்புகளாக அறியமுடிகிறது. ஆட்டனத்தியும் ஆதிமந்தியும் ஒத்த பண்புடையவர்களாக இருப்பதால் அவர்களின் இல்லறம் சிறக்கும் என்பதைப் பாரதிதாசன் பதிவுசெய்கின்றார்.

ஈருடல் – ஒருயிர்

குறுந்தொகையில் தலைவன், தலைவியிடம் இருவரும் ஒத்த அன்புடையவர்கள். அவர்களின் அன்பை பிரிக்கமுடியாது என்று கூறுகின்றான்

"யாயும் ஞாயும் யாரா கியரோ எந்தையும்
நுந்தையும் எம்முறைக் கேளிர் யானும் நீயும்
எவ்வழி யறிதும் செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே" **(குறுந்.40)**

தலைவன், தலைவிக்கு எந்த உறவும் இல்லை என்றாலும் அவர்களின் அன்பு ஒன்றுபட்டுள்ளது. செம்மண் நீரில் விழுந்த மழை நீரையும் செம்மண்ணையும்

பிரிக்கமுடியாதது போல தலைவன், தலைவியின் அன்பு இரண்டறக் கலந்துவிட்டது என்று கூறுப்படுகிறது.

ஆதிமந்தி தன் அன்பை ஆட்டனத்தியிடம் வெளிப்படுத்துகின்றாள்.

"நீங்கள் யார் என்பதை நான் அறிய வேண்டாம்; உங்கள் அழகு என் உள்ளத் தைக் கவர்ந்து விட்டது. எதுவும் இனி நம்மைப் பிரிக்கமுடியாது நம் இரண்டுள்ள மும் ஒன்றுபட்டதால்! எனக்கு உங்களைவிட எதுவும் பெரிதில்லை நம் இரண்டுடல் ஒருயிர் ஆய்விட்டதால்." (பாரதிதாசன், சேரதாண்டவம்,இ.ப.1954. ப.56)

ஆட்டனத்தி சேர மன்னன் என்பது தெரியாமலே ஆதிமந்தி, ஆட்டனத்தியை விரும்புகின்றாள். அந்நிலையில் ஆதிமந்தி, ஆட்டனத்தியிடம் நாம் இரண்டு உடல் ஆனால் ஒருயிர் என்று தன் அன்பினை ஆட்டனத்திக்கு உணர்த்துகின்றாள். குறுந்தொகையில் தலைவன், தலைவியின் அன்பு செம்மண்ணில் விழுந்த மழைநீரை பிரிக்கமுடியாது என்பது போல ஆட்டனத்தி, ஆதிமந்தியின் அன்பு இரண்டு உடல் ஆனால் ஒருயிர் என்று குறுந்தொகைக் காதலை பாரதிதாசன் சேரதாண்டவத்தில் கட்டமைக்கின்றார்.

இல்லற வாழ்க்கை

தலைவன், தலைவியின் கற்பு வாழ்க்கையில் தலைவி, தலைவனுக்கு உணவு சமைக்கின்ற செயலை செவிலி , நற்றாய்க்குக் கூறுகின்றாள்.

"முளிதயிர் பிசைந்த காந்த**ள்** மெல்விரல்
கழுவுறு கலிங்கங்கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே." (குறு-**167)**

குறுந்தொகையில் தலைவி, தலைவனுக்காக உணவு சமைப்பதையும் அதைத் தலைவன் நன்று என்று மகிழ்ச்சியுடன் உண்பதையும் அதனால் தலைவி மகிழ்ச்சியடைவதையும் செவிலி கூற்று பதிவுசெய்கின்றது.

சோழ நாட்டு இளவரசி தன் குடும்பத்திற்கு உணவு சமைக்கின்றாள்.

"அத்தானுக்கு என்ன பிடிக்கும் மாமிக்கு எந்தக்கறி பிடிக்கும் என்பது எனக்கல்லவா தெரியும்? உணவு ஆக்கும் பொறுப்பை பணிப் பெண்களிடம் ஒப்படைக்கலாமா?" (பாரதிதாசன், சேரதாண்டவம்,இ.ப.1954. ப.87)

ஆதிமந்தி தன் குடும்பத்திற்காக உணவு சமைத்த பொறுப்பான செயல் குறிப்பிடப்படுகினறது. குறுந்தொகையில் தலைவி செல்வந்தர் வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் தன் குடும்பத்திகாகத் தன் தலைவனுக்காக உணவு சமைக்கும் இல்லற கடமையுள்ள பெண்ணாகப் படைக்கப்பட்டிருப்பது போன்று ஆதிமந்தி சோழ நாட்டு இளவரசியாக இருந்தாலும் தன் குடும்பத்திகாக உணவு சமைக்கின்றாள் என்பது இல்லறக் கடமை தவறாத குறுந்தொகைத் தலைவியின் குணநலனை ஆதிமந்திக்கு பாரதிதாசன், சேரதாண்டவத்தில் கட்டமைக்கின்றார்.

ஆதிமந்தி – ஆட்டனத்தியைத் தேடி அலைதல்

பரத்தை தன்னை தலைவி தவறாகப் பேசினால் என்பதை அறிந்து தலைவி கேட்குமாறு தன் தோழியிடம் கூறுவதில் ஆட்டனத்தியை காவிரி ஆறு அடித்துச் சென்றது போல தலைவனை, தலைவியிடமிருந்து கைக்கொள்வேன் என்று கூறுகின்றாள்.

”கச்சினன், கழலினன், தேம் தார் மார்பினன்,

வகை அமைப் பொலிந்த, வனப்பு அமை, தெரியல்,

சுரியல் அம் பொருநனைக் காண்டிரோ**? என**

ஆதி மந்தி பேதுற்று இனைய,

சிறை பறந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்,

அம் தம் காவரி போல,

கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின், யானே.” (அகம்76. 7-14)

ஆட்டனத்தி கச்சு, கழல், தேனொழுகும் மலர் மாலை உடையவன். பல்வேறு வகையான தொழில் திறமையும் சுருண்ட தலைமுடியையும் ஆடலில் வல்லவனாகவும் திகழ்பவன். அவனை காவிரி ஆறு தன் வலிய திரைக்கரங்களால் பற்றிக் கொண்டது. ஆதிமந்தி காவிரி ஆறால் அடித்துச் செல்லப்பட்ட ஆட்டனத்தியை தேடி காவிரி கரையோரம் செல்கின்றாள். அவ்வாறு செல்லும் போது எதிர்ப்படுகின்றவர்களிடம் ஆட்டனத்தியைப் பற்றி கேட்கின்றாள்.

அகநானூற்றில் காதல் பரத்தை தலைவனிடம் ஒரு வேண்டுகோள் வைக்கின்றாள். அந்நிலையில் ஆட்டனத்தி பற்றி கூறப்படுகின்றது.

”கல்லா யானை கடி புனல் கற்றென,

மலி புனல் பொருத மருது ஓங்கு படப்பை,

ஒலி கதிர்க் கழனி, கழாஅர் முன்துறை,

கலி கொள் சுற்றமொடு கரிகால் காண,

தண் பதம் கொண்டு தவிர்ந்த இன் இசை,

ஒண் பொறிப் புனை கழல் சேவடிப் புரள,

கருங் கச்சு யாத்த காண்பின் அவ் வயிற்று,

இரும் பொலம் பாண்டில், மணியொடு தெளிர்ப்ப,

புனல் நயந்து ஆடும் அத்தி அணி நயந்து,

காவிரி கொண்டு ஒளித்தாங்கு அன்னோ!"(அகம். 376)

ஆட்டனத்தி நீர் விளையாட்டில் ஈடுபடுவதை கரிகாலன் தன் சுற்றத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே காவிரி என்ற பெண் ஆட்டனத்தியின் அழகில் மயங்கி நீரோட்டத்தின் போக்கிலே கொண்டு சென்று மறைத்துக்கொண்டாள். அது போல காதல் பரத்தை தலைவனை தான் மறைத்து வைத்திருப்பது பற்றி கூறுகின்றாள். தலைவன் தன்னைப் பிரிந்து சென்றாள் அழகு கெட்டு விடும், அதனால் தன் அழகைத் தன்னிடமே தந்துவிட்டுச் செல் என்று கூறுகின்றாள். ஆட்டனத்தி புனல் விளையாட்டில் சிறந்தவன் என்பதும் அவன் புனல் விளையாட்டில் ஈடுபட்ட போது காவிரி அடித்துச் சென்றுவிட்டது என்பதை காதல் பரத்தை கூற்று பதிவு செய்கின்றது.

சேரதாண்டவத்தில் ஆட்டனத்தி காவிரி வெள்ளத்தில் அடித்துச் சென்றதை அறிந்து ஆதிமந்தி காவிரி கரையோரம் ஆட்டனத்தியைத் தேடிச் செல்கின்றாள்.

"ஆதிமந்தி, காவிரி அன்னாய் கண்ணாளனைக் கொடு, என்று கரையோரம் சென்றுகொண்டே யிருக்கிறாள். அவள் கண்கள் அலைபுரண்டோடும் காவிரி வெள்ளத்தையே நோக்குகின்றன. எதிர்க் கரையில் அவர் ஒதுக்கப்பட்டாரோ என்று நினைத்து அத்தான்! என்று கூவுவாள். எதிர்க்கரையினின்று விடையொன்றும் வாராதொழியவே நிற்காது கரையோடு மேலும் அத்தான் என்று கூவி அழைத்த படி செல்லுவாள். இடையில், ஆற்றங்கரையின் சிற்றூர் மக்கள் சிலர் ஆதிமந்தி அழுது கூவிச் செல்லுதலைக் கண்டு வழிமறிக்கிறார்கள்."(பாரதிதாசன், சேரதாண்டவம், இ.ப.1954. ப.97)

காவிரிக் கரையோரம் எதிர்ப்பட்டவர்களிடம் ஆட்டனத்தியைப் பற்றி விசாரித்துக்கெண்டே செல்கின்றாள்.

காவிரிக் கரையோரம் காவிரியை வேண்டிக் கொண்டு முள், பள்ளம் எது என்று தெரியாமல் ஆட்டனத்தித் தேடிச் செல்கின்றாள்.

"அவள் கரையோடு இன்னும் சென்று கொண்டிருக்கிறாள். கரையில் வழிமறித்து வளர்ந்த முட் செடிகள் பள்ளம் படுகுழிகளைக் கடந்து செல்லு கிறாள். மாலைப்போதும்

மறைய, இருள் சூழ்ந்துகொள் ளுகிறது. அவள் கரையோடு கணவனைக் குரல் எடுத்துக் கூவியும், தருவாய் என் தமிழரசனை என்று காவிரியைக் கெஞ்சியும் நடந்துகொண்டிருக் கிறாள். அவள் கால்கள் முள்ளேறி முறிபடவே, புண்பட்டு வீங்கி மண்மீது ஊன்றமுடியாத நிலையில் மாய்வாள் போல் குப்புற வீழ்வாள். பிணி தீர்ந்தாள் போல் எழுந்து செங்குத்தாய் நின்று திசைநோக்கிக் கதறி மீண்டும் செல்வாள்.(பாரதிதாசன், சேரதாண்டவம்,இ.ப.1954. ப.98)

ஆதிமந்தி இரவு, பகல் என்று பார்க்காமல் காவிரி கரையோரம் தன் கணவன் ஆட்டனத்தியை தேடிச் செல்கின்றாள்.

அகநானூற்றில் காமக் கிழத்தியின் கூற்றில் ஆட்டனத்தி ஆடல் வல்லான் என்றும் அவன் புனல் விளையாட்டில் ஈடுபடும் போது காவிரியால் கவரபட்டான் என்றும் காதல் பரத்தையின் கூற்றில் காவிரி தன் திரைக் கைகளால் ஆட்டனத்தியைப் பற்றிக் கொண்டது என்று பதிவு செய்யப்படுகின்றது. சேரதாண்டவத்தில் ஆட்டனத்தியை காவிரி கரையோரம் ஆதிமந்தி தேடிச் செல்வதாகப் பாரதிதாசன் கூறுவது அகநானூற்றில் கட்டமைக்கப்பட்டுள்ள ஆட்டனத்தி ஆதிமந்தியின் வெளிப்பாடாக அமைகின்றது. சேரதாண்டவத்திற்கு அடிப்படைக் காரணம் பாரதிதாசன் சங்க இலக்கியத்தின் மீது கொண்ட பற்றும் அதனால் ஏற்பட்ட தாக்கத்தின் வெளிப்பாடு சேரதாண்டவம் என்பது குறிப்பிடத்தக்கதாக அமைகின்றது.

மருதியின் புகழ்

அகநானூற்றில் குறிஞ்சி நிலத் தோழி தலைவியிடம் தலைவனை தேடிச் செல்வோம் என்று கூறும் போது மருதியின் புகழ் போற்றப்படுகின்றது.

"முழவு முகம் புலராக் கலி கொள் ஆங்கண்
கழாஅர்ப் பெருந் துறை விழவின் ஆடும்
ஈட்டு எழில் பொலிந்த ஏந்து குவவு மொய்ம்பின்
ஆட்டன் அத்தி நலன் நயந்து உரைஇ
தாழ் இருங் கதுப்பின் காவிரி வவ்வலின்,
மாதிரம் துழைஇ மதி மருண்டு அலந்த
ஆதிமந்தி காதலற் காட்டி,
படு கடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி அன்ன மாண் புகழ் பெறீஇயர்" **(அகம்.222.4-12)**

ஆட்டனத்தி புனல் நடனம் ஆடினான். அவனுடன் காவிரி என்ற பெண்ணும் ஆடினாள். ஆட்டனத்தியின் அழகில் மயங்கிய அப்பெண் தன் கூந்தலில்

ஆட்டனத்தியை மறைத்து நீரோட்டத்தின் வழியில் அழைத்துச் சென்றாள். காவிரி ஆற்றில் ஆட்டனத்தி அடித்துச் செல்வதைப் பார்த்த மருதி அவனை மீட்டு அவனுடன் வாழ்கின்றாள். ஆட்டனத்தியின் காதலி ஆதிமந்தி தேடி வந்தவுடன் அவளிடம் ஆட்டனத்தியை ஒப்படைத்துவிட்டு கடலில் மாய்ந்து தன் உயிரை மாய்கின்றாள். மருதி ஆட்டனத்தி மீது தன் உயிரையே வைத்திருந்தாள் என்பது அவள் தன் உயிரை மாய்க்கும் செயல் குறிப்பிடுகிறது.

சேரதாண்டவத்தில் ஆட்டனத்தியிடம் ஆதிமந்தி காவிரியிலிருந்து மீண்ட நிகழ்வைக் கேட்கின்றாள்.

"தனக்கென வாழாத் தகைமையுடையாள் நெய்தலி! அவளே என்னைக் காப்பாற்றினாள். எனக்கு அவள் என் சென்ற உயிரை மீட்டுத்தந்தாள். சோறிட்டாள். உடை தந்தாள். என்னைக் காத்து உனக்குத் தந்தாள்."(பாரதிதாசன், சேரதாண்டவம்,இ.ப.1954. ப.122)

நெய்தலியாள் காப்பாற்றப்பட்ட செயலை ஆட்டனத்தி கூறுகின்றான்.

நெய்தலி, ஆட்டனத்தி ஆதிமந்தியுடன் சேர்ந்ததை அறிந்து பிறகு தன் உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்து கடலில் கட்டுமரத்தில் கழுத்தில் கயிற்றுடன் நிற்கின்றாள்.

"உயிருண்ண விரைந்த காவிரி வெள்ளத்தைத் தன் மார்பினால் வலியடக்கிப் பிறர்க்கு நலம் செய்தான் ஆட்டனத்தி. அவன் எனக்கும் இன்பத்தை அருளினான். அவன் அவளுக்கு! அவன் அன்பும், அவன் அழகும், அவன் திரு மேனியும் அவளுக்கு! நாளைக்கு மக்களை ஒழித்துண்ணும் புனலில் நான் இன்றைக்கே என் காதலனைக் காணுகின்றேன். இதோ புனலின் ஆழத்தில் அவன் உடல் என்மெய்ப் பாட்டில் தோன்றுகிறது. அங்கு நான் அவனைத் தழுவுகின்றேன். அவன் அவளுக்கு! அவள் அவனுக்கு! இவ்வுலகில்! நெய்தலி கட்டுமரத்திலிருந்த கல்லைக் கடலில் உதைத்துத் தள்ளுகிறாள். கல் தன்னிடமிருந்த கயிற்றால் நெய்தலியை இழுத்துக் கடலில் தள்ளுகிறது."(பாரதிதாசன், சேரதாண்டவம்,இ.ப.1954. ப124)

இந்த உலகில் ஆட்டனத்தி ஆதிமந்தி காதலர்கள் ஆனால் நெய்தலி இறந்தப் பிறகும் ஆட்டனத்தியுடன் சேர்வதாகப் பாரதிதாசன் படைத்துக் காட்டுகின்றார்.

தமிழர்ப் பண்பாட்டில் பெண்களின் கற்பு ஒருவனோடு மட்டுமே என்பதனை மருதியின் செயல் உணர்த்துகின்றது.

"உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்,

செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்,"(தொ. கள.23)

என்று கற்பு உயிரைவிடச் சிறந்தது என்று தொல்காப்பியர் கற்பிற்கு வரையறை செய்கின்றார். சங்க இலக்கியத்திலும் சேரதாண்டவத்திலும் படைக்கப்பட்ட பெண்களின் கற்புக் கட்டமைப்பில் எந்தவித வேறுபாடும் இல்லை. கற்பை நிரூபிக்க மருதியினைப் போன்ற பெண்கள் தங்களின் உயிரை மாய்த்துக்கொண்டேதான் இருக்கின்றார்கள். காரணம் தொல்காப்பியம் போன்ற நூல்கள் பெண்கள் வாழ்வதற்கு அளவுக்க அதிகமான வரையறைகளை வைத்திருக்கின்றன. அந்த வரையறையை காலந்தோறும் பெண்கள் பின்பற்றக் கூடியவர்களாகவேக் காணப்படுகின்றார்கள்

நடுகல் வழிபாடு

வீரமரணம் அடைந்த ஆண்களின் வீரத்தைப் போற்றுவதற்கு நடுகல் வழிபாடு செய்யப்படுகிறது.

"காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,

சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று,

இருமூன்று வகையிற் கல்லோடு புணரச்,"(தொல் .பொ.63)

நடுகல் வழிபாடு பற்றி தொல்காப்பியம் கூறுவதை அறியமுடிகிறது.

ஆண்களின் வீரம் போற்றப்பட்ட நிலையில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பெண்ண்களின் கற்பை வணங்க வேண்டும் என்ற நோக்கத்தில் கண்ணகிக்கு இமயத்தில் கல்லெடுத்து கங்கையில் நீராட்டி சேரநாட்டில் சிலைவைக்கின்றான்.

"இமையவர் உறையும் சிமையச் செவ்வரைச்

சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்,

கைவினை முற்றிய தெய்வப் படிமத்து;

வித்தகர் இயற்றிய விளங்கிய கோலத்து,

முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டிப்;

பூப்பலி செய்து, காப்புக்கடை நிறுத்தி,

வேள்வியும் விழாவும் நாள்தொறும் வகுத்து,

'கடவுள் மங்கலம் செய்க' என ஏவினன்;" (சில.வஞ்சி.நடு.கா.226 -233)

சிலப்பதிகாரத்தில் நடுகற்காதை என்ற காதையை இளங்கோவடிகள் வைத்ததன் நோக்கம் பெண்களின் கற்பு போற்றி வணங்கப்பட வேண்டும் என்பதாக அறியமுடிகிறது.

சேரதாண்டவத்தில் மருதி தன் காதலன் ஆட்டனத்தியுடன் வாழ்ந்த வாழ்க்கை கற்புடையது என்று நிருபிக்க ஆட்டனத்தியை, ஆதிமந்தியிடம் ஒப்படைத்துவிட்டு தன் உயிரை மாய்த்துக்கொள்கிறாள்.

”நெய்தலி என்னும் மருதிக்குக் கடற்கரையில் கல் நாட்டப்படுகிறது. .

சோழன் முதலிய அனைவரும் ஆட்டனத்தி ஆதிமந்தி இருவரும்:

தனக்கென வாழாதாள் மருதியின் பேர் வாழ்க”

(பாரதிதாசன், சேரதாண்டவம்,இ.ப.1954. ப.125)

மருதிக்குக் கடற்கரையில் கல்நடப்பட்டது என்பது சங்க இலக்கியத்தில் ஆண்களின் வீரம் போற்றப்பட்டதைப் போன்றும் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கற்பு போற்றப்பட்டதைப் போன்று மறுதியின் கற்பும் போற்றப்பட வேண்டும் என்ற பாரதிதாசனின் நோக்கம் கடற்கரையில் மருதிக்கு கல்நடப்படுகிறது என்பதாக அறியமுடிகிறது.

முடிவுரை

சேரதாண்டவத்தில் ஆட்டனத்தி, ஆதிமந்தி, மருதி ஆகியோரின் காதல் வாழ்க்கையில் ஏற்படும் வாழ்வியல் சிக்கல்களைப் பாரதிதாசன் படைத்துக்காட்டும் நிலையில் பெண்களின் கற்பு போற்றப்படுகிறது. சங்கஇலக்கியத்தில் காணப்படும் மருதியின் செயல் சேரதாண்டவத்தில் மையக்கருவாகக் கட்டமைக்கப்பட்டு மருதியின் கற்பு போற்றப்படுகிறது. சங்கஇலக்கியத்தில் தலைவன், தலைவியன் காதலை வெளிப்படுத்தும் வகையில் சேரதாண்டவத்தில் ஆட்டனத்தி, ஆதிமந்தியின் காதலை கட்டமைத்திருப்பது சங்க இலக்கித்தாக்கத்தை வெளிப்படுத்துகிறது. ஒருத்திக்கு ஒருவன் என்ற தமிழர் பண்பாட்டை, தமிழர் மரபைமீறாத, கட்டுடைக்காத பெண்ணாக மருதியின் செயல் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆட்டனத்தி, மருதியுடன் வாழும் நிலையில் ஆதிமந்தி வந்தவுடன் அவளிடம் ஆட்டனத்தியை ஒப்படைத்துவிட்டு தன் உயிரை போக்கிக் கொண்டாள் என்பதற்காக மருதியின் தியாகம், கற்புப் போற்றப்படுகிறது. ஆட்டனத்திக்கும் கற்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை சங்க இலக்கியத்திலிருந்து சேரதாண்டவம் மட்டுமல்லாமல் இன்றுவரை. பெண்களின் கற்பு சிலப்பதிகாரத்தில் போற்றப்படுவது போன்று சேரதாண்டவத்திலும் போற்றப்படுகிறது.

பயன்பட்ட நூல்கள்

1. அறவாணன்,க.ப, அற்றைநாட் காதலும் வீரமும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2002.
2. இராசா.சி. ஒப்பிலக்கியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ (பி.) லிட்., சென்னை. இ.ப. 2018 ப.29.
3. இராமசுப்பிரமணியம்.வ.த.,சிலப்பதிகாரம், திருமகள் நிலையம், சென்னை, 2017
4. இளம்பூரணர்,(உ.ஆ), தொல்காப்பியம் – பொருளதிகாரம், முல்லை நிலையம், சென்னை, 2005.
5. செயபால், இரா. (உ.ஆ), அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, 2004.
6. நாகராஜன்.வி, (உ.ஆ), குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, 2004.
7. பாரதிதாசன், சேரதாண்டவம், பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, இ.ப.1954

பாரதிதாசனின் பொதுவுடைமைக் காதல்

முனைவர் த. பிரகலாதன்

தமிழ்த்துறைத் தலைவர், சிந்திக்கல்லூரி, சென்னை. 600077

9442636038, prahalathan10@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

பாரதிதாசன் தமிழை உயிராக எண்ணியவர். "தமிழை இகழ்ந்தவனைத் தாய்த்தடுத்தாலும் விடேன்" எனக்கூறியவர். அவர் படைப்புகளில் இன்னொரு பாடுபொருள் என்று ஒன்றை ஆராய்ந்தால் தொழிலாளர் உயர்வும் அவரது பொதுவுடைமைச் சிந்தனையும் மேலோங்கி இருப்பதைக் காணலாம். வேறு கவிஞர்களிடம் இது போன்று காண்பது அரிது. தொழிலாளர்களின் மேன்மை குறித்து ஏதேனும் ஒரு நிலையில் தம் படைப்புகளில் புகுத்தி விடுகிறார்.

திறவுச் சொற்கள்

பொதுவுடைமை, பகுத்தறிவு, தொழிலாளர்கள், ஓடப்பர், கொத்தடிமை, ஆமை, புரட்சித் தொழிலாளர்கள்.

முன்னுரை

பாரதிதாசன் இயற்கைக் கவிஞர் என்ற முறையிலும் தமிழ்க் கவிஞர் என்ற முறையிலும் புரட்சிக் கவிஞர் என்ற முறையிலும் கொண்டாடப்படுகின்றார். பாரதிதாசன் பகுத்தறிவு இயக்கப் பாடல்களைப் பாடினார். வடமொழிச் சார்பை அறவே நீக்கிய தீவிர தனித்தமிழ் இயக்கத்தில் பற்று கொண்டவர். தமிழையும் திருக்குறளையும் தெய்வம் எனக் கொண்டார். அறத்தையும் மறத்தையும் வேறு வேறு எனப் பிரித்து அறிய முடியாத தடுமாறுகின்ற காலத்தில் திருக்குறள் வழிகாட்டும் என இவர் நம்பினார்.

‘எனை ஈன்ற தாய்க்கும் தந்தைக்கும் தமிழ்நாட்டுக்கும் என்னால் தினை அளவு நலம் கிடைக்கும் என்றால் செத்தொழியும் நாள் எனக்குத் திருநாள்’ என்று பாரதிதாசன் தன் எண்ணத்தைப் பாண்டியன் பரிசு நூலில் வெளிப்படுத்துவார். பாரதிதாசன் இதயத்தில் தமிழ் பெற்ற இடத்தைப் பிடிக்க முயலுகின்ற இன்னொரு பாடுபொருள் உண்டானால் அது தொழிலாளர் உயர்வும் பொதுவுடைமைத் தத்துவத்தின் பெருமையுமே ஆகும். பாரதிதாசன் தன் பாடல்களில் பொதுவுடைமை சிந்தனைகளைப் புகுத்தியுள்ளதை இந்த ஆய்வுக்கட்டுரை ஆய்கிறது.

படைப்புகளில் வெளிப்பாடு

பாரதிதாசன் தனது பொதுவுடைமை சிந்தனைகளைத் தமது படைப்புகளில் வெளிப்படுத்துகிறார். இசையமுது, இளைஞர் இலக்கியம், பாண்டியன் பரிசு,

புரட்சிக்கவி, அழகின் சிரிப்பு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல் உள்ளிட்ட படைப்புகளில் இதைக் காண முடிகிறது.

வெளிப்படுத்தும் முறை

தமது பொதுவுடைமை சிந்தனைகளைக் கவிக்கூற்றாகவும் பாத்திரங்களின் உரையாடல்களின் வழியும் உவமைகள் வாயிலாகவும் வெளிப்படுத்துகிறார்.

படைப்புகளில் காணப்படும் தொழிலாளர்கள்

பலவகைப் படைப்புகளிலும் உடலுழைப்பு மேற்கொள்ளும் தொழிலாளர்களை நமக்குக் காட்டுகிறார். வண்டிக்காரன், மாடு மேய்ப்பவன், தறித்தொழிலாளி, உழவன், உழத்தி, ஆலைத் தொழிலாளி, இரும்பாலைத் தொழிலாளி, கோடாலிக்காரன், கூடைமுறம் கட்டுவோன், பூக்காரி, குறவன், சுண்ணாம்பு இடிக்கும் பெண் ஆகியோரெல்லாம் இளவரசன் இளவரசி போல் பெருமிதத்துடன் உலாவரக் காணலாம்.

இளைஞர் இலக்கியம் எனும் தொகுதியில் குயவர், தட்டார், கொத்தனார், கருமார், தச்சர், கொல்லர், இலைத் தைப்போர், குடை பழுது பார்ப்போர், சாணைப் பிடிப்போர், பூட்டுக்குச் சாவி போடுவோர், குடுகுடுப்பைக்காரன், பாம்பாட்டிகள், குரங்காட்டிகள் ஆகியோரின் நிலை படம் பிடித்துக்காட்டப்படுகிறது.

தொழிலாளர்களின் உயர்வு

பாரதிதாசன் தமிழ் உணர்வால் தொழிலாளர்களின் உயர்வுக்காக அவர்களுக்கிடையேயும் புரட்சிக்கனல் எழுப்பினார். தொழிலாளர்கள் பல வகையானும் அடிமைப்பட்டுக் கிடந்த நேரம் அது. உரிமையற்றுக் கடந்த அந்த நெஞ்சங்களைத் தட்டி எழுப்பி உரிமை கேட்கத் தோன்றியது. தொழிலாளர்கள் இவ்வுலகை உயரச் செய்த தொண்டு மிகப்பெரியது. அவர்களின் உழைப்பு ஈடு செய்ய இயலாதது என்பதை நேரடியாகக் கவிதைகளில் வெளிப்படுத்தினார்.

"சிற்றூரும் வரப்படுத்த வயலும் ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற் சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறை உழைப்புத் தோள்கள் எல்லாம் எவரின் தோள்கள்
கற்பிளந்து மலை பிளந்து கனிகள் வெட்டி
கருவி எல்லாம் செய்து தந்த கைதான் யார்கை?
பொன் துகளைச் சுடர் முத்தை மணிக் குலத்தை
போயெடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு ? (ப. 26 – 27 : 1992)

தோழர் சொல்லாட்சி

மார்க்சியக் கொள்கை கொண்டோர் ஒருவருக்கொருவர் தோழர் என்பர். இச்சொல் முற்போக்கு கருத்தியல் கொண்ட அரசியல் சொல்லாடலாகப் பயன்படுத்தப்படுகிறது. பொதுவுடைமை இயக்கத்தின் சிறந்த சொல் தோழர் என்பதாகும். தோழர் என்னும் சொல்லாட்சியைப் பாரதிதாசன் வெகுவாகக் கவிதைகளில் கையாள்கிறார். காலை எழுந்து மாலை வரை தொடர்ந்து உழவு தொழில் மேற்கொண்டு அறுவடை செய்கின்ற வரைக்கும் எத்தகைய துயரைப் பெற்று உழைக்கும் தொழிலாளர்களைத் தம் பாடல்களில் தோழர் என்றே பாரதிதாசன் குறிப்பிடுள்ளார்.

"சித்திரச் சோலைகளே! உம்மை நன்கு

திருத்த இப்பாரினிலே -முன்னர்

எத்தனை தோழர்கள் ரத்தம் சிந்தினரோ!

உங்கள் வேரினிலே"(ப. 101 : 1992)

காலை எழுந்து மாலை வரை தொடர்ந்து உழவு தொழில் மேற்கொண்டு அறுவடை செய்கின்ற வரைக்கும் எத்தகைய துயரைப் பெற்று உழைக்கும் தொழிலாளர்களைத் தம் பாடல்களில் தோழர் என்றே பாரதிதாசன் குறிப்பிடுள்ளார்.

"கண்மணி போற் பயிரைக்

காத்தும் தண்ணீர் இறைத்தும்

கையறு வடை செய்தீரே நீரே தோழரே.

இத்தனைப்பட்டும் ஊசி

குத்த நிலமும் இன்றி

கொத்தடுமையும் பட்டீரே நீரே தோழரே

ஒத்து விவசாயிகள்

உரிமையை நிலைநாட்டப்

புத்துணர்வு பெறுவீரே நீரே தோழரே. (ப. 431 : 1992)

தொழிலாளர் செய்யும் தொழிலும் உழைப்பும்

தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டவர் திரு.வி.க ஆவார். பாரதிதாசன் தம் கவிதை வழி உழைக்கும் மக்களின் உயர்வை உலகுக்கு அளித்தவர். உழைப்போர் இன்றி நாட்டில் உயர்வில்லை என்பதை உலகிற்கு உணர்த்தியவர்.

"மா மிகு பாதைகளே உமை இப்பெரு

வையமெல்லாம் வகுத்தார் -அவர்

ஆமை எனப் புலனைந்தும் ஒடுங்கி

அந்தியெல்லாம் உழைத்தார் "

ஆர்த்திடும் எந்திர கூட்டங்களே - உங்கள்

ஆதியந்தம் சொல்லவோ - நீங்கள்

ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்

உதித்தது மெய்யல்லவோ " "(ப. 102 : 1992)

தொழிலாளர் புரட்சி

தொழிலாளர்களுக்கு பணியாற்றும் நேரம் எவ்வளவு என்பது இப்போது சட்டம் ஆக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு உரிமையில்லை. உழைப்பு உறிஞ்சப்பட்டது. உரிய உயர்வு இல்லை. போராட்டம் மூலம் அனைத்தும் பெற முடியும் என்பதை கவிதை மூலம் உணர்த்தி உயர்வு பெறவைத்தார். உடலுழைப்பு உயர்ந்த உழைப்பு என்பதைச் சிந்தையில் கொண்டிருந்தார்.

"ஆடுகின்றாய் உலகப்பா யோசித்துப் பார்

ஆர்ப்பாட்டக்காரர் இதை ஒப்பாரப்பா !

தேடப்பா ஒரு வழியை என்று சொன்னேன்

செகத்தப்பன் யோசித்து சிந்தை சோர்ந்தான்

ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்

உதையப்பர் ஆகிவிட்டார் ஓர் நொடிக்குள்

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி

ஒப்பப்பர் ஆகி விடுவார் உணரப்பா நீ" "(ப. 97 : 1992)

உழைப்பவரும் ஊராள்பவரும்

உழைக்கும் மக்களுக்கு முன்னேற்றம் இல்லை. பெண் உழைப்பாளர்கள் ஆண் உழைப்பாளர்கள் இறுதிவரை உழைத்துக் கொண்டே இருக்க வேண்டி உள்ளது. முதலாளி ஒருவர் உயரே இருக்கிறார் தொழிலாளி உழைப்பை நல்கி தாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மாடாய் உழைக்கின்ற மக்களுக்கு வீடு இல்லை. நல்ல உணவு இல்லை. அணிகலன்கள் இல்லை. ஆனால் உழைக்காத ஊரை ஆளும் முதலாளி வீட்டில் பெண்ணுக்கு காது, கழுத்தில் நகைகள் உடலில் தங்கம் மின்னுகின்றன. உழைப்போருக்கு வேண்டும் அனைத்தும் என்பதில் உறுதி கொண்டிருந்தார்.

"மாடாய் உழைப்பார்க்கு வீடில்லை சோறில்லை

நாடோறும் அங்கம் வளையல் .ஆண்டை

மனைவி போட மட்டும் தங்க வளையல்" "(ப. 430 : 1992)

தொழிலாளர் மகிழ்வதற்கு வழி இல்லை. முதலாளி இருக்கும் வரை தொழிலாளிக்கு முன்னேற்றம் உண்டா? முதல் எல்லாம் பொதுவாக அமையுமானால்

தொழிலாளிக்கு ஏமாற்றம் ஏற்படாது என்று கூறும் பாரதிதாசன் அவர்களி சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன் என்றும் வீணன் என்றும் சாடுகிறார்.

சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன்

தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்

தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்

தொல்லுலக மக்கள் எலாம் ஒன்றே என்னும்

தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! (ப.86 : 1992)

ஒற்றுமை வெற்றிக்கு வழி

'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' எனும் கார்ல் மார்க்சின் அறைகூவலை ஏழைத் தொழிலாளர்களுக்குப் புரியும் மொழியில் எடுத்துச் சொல்கிறார்.

நாடிய ஓர் தொழில் நாட்டார் பலர் சேர்ந்தால்

கேடில்லை நன்மை கிடைக்குமன்றோ தோழர்களே!

பீடுற்றார் மேற்கில் பிறநாட்டார் என்பதெல்லாம்

கூடித் தொழில் செய்யும் கொள்கையினால் தோழர்களே!

கூடித்தொழில் செய்யாக் குற்றத்தால் இன்றுவரை

மூடிய தொழிற்சாலை முக்கோடி தோழர்களே!

கூடைமுறம் கட்டுதரும் கூடித் தொழில் செய்யின்

தேடிவரும் லாபம் சிறப்புவரும் தோழர்களே! (ப.88 : 1992)

பொதுவுடைமைச் சமுதாயத்தைப் போராடாமல் அடையமுடியுமென்று கார்ல் மார்க்ஸ் கருதவில்லை. எனவேதான் வர்க்கப் போராட்டத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தினார். முதலாளி வர்க்கத்தை வேரறுக்க வேண்டுமென்று லெனினும் எங்கல்சும் கூறினர். சமுதாயத்தின் மேல்மட்டத்திலிருப்போர்க்கு எதிராக வன்முறைகள் கையாளப்படவேண்டும் என்றும் அவர்களை வழிக்குக் கொண்டுவர வேறுவகையில் செயல்பட முடியாதென்றும் பாரதிதாசன் எந்தவிதமான ஒளிவு மறைவுமின்றி, வாளெடுக்க வேண்டியதின் தேவையை வெளிப்படையாகவும் பிரச்சாரம் செய்கிறார்.

"கொலை வாளினை எடடா மிகு

கொடியோர் செயல் அறவே "(ப. 110 : 1992)

பொதுவுடைமைத் தத்துவத்தைத் தத்துவமாகவே எடுத்துக்காட்டி வாதிடுவதில் பாரதிதாசன் ஈடுபாடு காட்டவில்லை. இதற்காக, மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்களை ஆழமாகப் பயின்று மாற்றார் சொல்லும் வாதங்களை மறுத்து, கோட்பாடுகளைக் கோட்பாடுகளாகவே தரும் முயற்சியில் அவருக்கு ஆர்வம் இல்லை. 'அரசியல் வகையின் அயல்மொழிப் பெயர்கள்' என்ற கவிதையில் தமக்கே உரிய முறையில் சில மேலைக் கோட்பாடுகளை விளக்குகிறார்.

"இரண்டு கறவைகள் உன்னிடம் இருந்தால்
அண்டை வீட்டானுக்கு ஒன்று அளித்தல் சோசலிசம்!
கறவைகள் இரண்டில் கடிதொன்றை விற்றுக்
காளை வாங்குவது காபிடலிசமாம்!
ஆவிரண்டையும் ஆள்வோர்க்கு விற்றுத்
தேவைக்குப் பால்பெறச் செய்யல் கம்யூனிசம்'
பகரிரு கறவையைப் பறித்த ஆள்வோரிடம்
தொகைதந்து பால்பெறச் சொல்வது பாசிசம்!
உரியவன் தன்னை ஒழித்தே
கறவை இரண்டையும் கைப்பற்றல் நாசிசம்'
இரண்டு கறவையால் திரண்ட பால் அனைத்தையும்
சாக்கடைக்காக்குலதுதான் நியூடிலிசம்!
எதனை இவற்றில் ஏற்பாய்
அதனை உன் நாட்டுக் காக்குக தோழனே"

(ப. 279, பாரதிதாசன் கவிதைகள் தமிழ்)

உடல் உழைப்பை உயர்த்திப் பேசும் போதும் சாதி, மத, நிறப் பாகுபாடுகளைச் சாடும் போதும், பொதுவுடைமையைப் பேசாமல் விடவில்லை. நம் நாட்டில் பொதுவுடைமைத் தத்துவத்திற்கு எதிரான கருத்துக்களின் தோற்றத்திற்கெல்லாம் ஆரிய சூழ்ச்சியே காரணம் என்பது அவரது அழுத்தமான கருத்தாகும்.

எந்தக் கவிதையாயினும் குறுங்காப்பியமாயினும் பெருங்காவியமாயினும் தமிழைப் பற்றியும் தொழிலாளர் மேன்மை பற்றியும் அவர் பேசாமல் இருப்பதில்லை. பொதுவுடைமை சிந்தனை கொண்ட படைப்பாளர்களுள் ஒருவராகப் பாரதிதாசன் சிறந்து விளங்குகிறார்.

துணைநூற் பட்டியல்

1. பாவேந்தர் பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், 1992, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 600001
2. ப. ஆறுமுகம் (பதி.), பாரதிதாசன் கவிதைகள் தமிழ் , 1992 பூம்புகார் பதிப்பகம், சென்னை - 108
3. முனைவர் ப. மருதநாயகம் & கவிஞர் பொன்னடியான், பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும் பாவேந்தரும் மொழிபெயர்ப்பும், 2003, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

4. முருகு சுந்தரம், இந்திய இலக்கியச் சிற்பிகள் பாரதிதாசன், 2007 சாகித்திய அகாடெமி, புதுடில்லி.

5. ம. சிங்காரவேலு. பொதுவுடைமை விளக்கம், 1974, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை -2

6. இ. சுந்தரமூர்த்தி, மா. ரா. அரசு (ப. ர்), பொதுவுடைமை இயக்க இதழ்கள், 2011, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பாவேந்தர் பாரதிதாசன் எழுத்துவழி திராவிட இயக்கச் சிந்தனைகள்

முனைவர் கா.மைதீன்,
உதவிப்பேராசிரியர் (மற்றும்) துறைத்தலைவர்,
இஸ்லாம் மற்றும் இஸ்லாமியத் தமிழியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை 21.
மின்னஞ்சல் : kmaideenmku@gmail.com

முகவுரை

பாமர மக்கள் அனைவரையும் பகுத்தறிவு உள்ளவர்களாகவும், தன்மானம் உடையவர்களாகவும் இருக்க பெரியார் விரும்பினார். அவருடைய சிந்தனையின் விளைவாகக் ‘குடிஅரசு’ என்னும் செய்தி இதழ் 02.05.1925 - இல் தொடங்கப்பட்டது. ‘குடிஅரசு தோன்றிய நாளே, ‘தன்மானத் தமிழர் இயக்கம்’ தோன்றிய நாளாகும்’ என்று பெரியார் முழக்கமிட்டார். ‘மனிதனுக்கு அவனுடைய சுயமரியாதை என்னும் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதுதான் பிறப்புரிமையே அல்லாமல், அரசியலான இராஜ்ஜியமென்னும் சுயராஜ்ஜியம் ஒருநாளும் பிறப்புரிமையாக மாட்டாது’ என்றும் பெரியார் கருத்துரைத்த காலமது. அக்காலகட்டத்தில்தான், சாதி, சமயம் ஆகியவற்றின் பெயரால் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளையும் சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் உற்ற ஏற்றத்தாழ்வுகளையும் அகற்ற பெரியார் எண்ணினார். மக்கள் அனைவரையும் ஒரு சமூகமாக, உடன்பிறப்பாக, சமமாக வாழவைப்பது தமது கடமை என்று கருதினார். பிறசமுதாய சீர்திருத்த இயக்கங்கள் நாட்டிலுள்ள குறைகளைக் களைய முயன்றன. தன்மான இயக்கம் குறைகளின் ஆணிவேரினைக் கண்டறிந்து அழிக்கப் பாடுபட்டது. பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறி அச்சமயம் ‘சுயமரியாதை இயக்கத்தையும்’ தோற்றுவித்திருந்தார். பெரியார் முன்னெடுத்த இந்நிகழ்வுகளையெல்லாம் தெளிவாகக் கவனித்து வந்த பாவேந்தர் பாரதிதாசன் அவ்வியக்கத்தில் 1928 ஆம் ஆண்டு தன்னையும் இணைத்துக் கொண்டு திராவிட உணர்வுடன் செயலாற்றத் தொடங்கினார். பின்னாட்களில் திராவிட இயக்க உணர்வுப் பற்றாளராக பாவேந்தர் பாரதிதாசனின் எண்ணங்களும் எழுத்துகளும் எவ்வாறு நீட்சி பெற்றன என்பதனை இக்கட்டுரை முன்வைத்துச் செல்கிறது.

பாரதிதாசனும் சுயமரியாதை இயக்கமும்

பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறிய முழுநிகழ்ச்சிகளையும் கண்ணாரக் கண்டுணர்ந்ததால் 1928 – ஆம் ஆண்டு 'சுயமரியாதைக் காரராக' பாவேந்தர் பாரதிதாசனும் மாறலானார். அவ்வாண்டு புதுச்சேரிக்குப் பெரியார் வருகை தந்தபோது பார்வையாளராகப் பங்கேற்ற பாரதிதாசன் அப்போதிருந்தே தமது இல்லத்தில் 'தீபாவளி' கொண்டாடுவதை நிறுத்திக்கொண்டார். 'நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்' என்று கையொப்பமிட்டு தம்மை முழுமையான நாத்திகவாதியாகவும் அடையாளப்படுத்திக் கொண்டார்.

பெரியாரை சமுதாயக் குருவாக ஏற்றுக்கொண்டு அவர் வழியில் செயலாற்றிய பாரதிதாசனை பெரியார் இயக்கவாதிகள் அப்போது பெரிதும் மதித்தனர். பாரதிதாசன் கவிதைகள் முதல்தொகுதி 1938 - இல் வெளியான போது சமகாலத் தமிழ்ப் புலவர்களும், பல்துறை சார்ந்த அறிஞர்களும், அரசியல் தலைவர்களும் கட்சி வேறுபாடின்றிப் பாரதிதாசனைப் பாராட்டினார்கள். இக்கவிதைத் தொகுப்பில் பகுத்தறிவுக் கொள்கைகளும், சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளும் மிகுதியாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இந்தியத் தேசியச் சிந்தனையிலிருந்து விடுவித்துக் கொண்டு சமூக விடுதலைக்கும், சமுதாயச் சீர்திருத்தத்திற்கும் பகுத்தறிவுக் கொள்கைளுக்கும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட இவரது கொள்கை மாற்றமே இவரை சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவியாகவும் புரட்சிக் கவிஞராகவும் அடையாளம் காணவைத்தது.

பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கருத்துகள் பாரதிதாசனைக் கவர்ந்தது போலவே மறைமலையடிகளின் தனித்தமிழ் பெரிதும் இவரை ஆட்கொண்டது. எளிய நடையில் வெளியான 'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதியில் பிறமொழிச் சொற்கள் மிகுதியும் இடம்பெற்றிருந்தன. அந்நூலில் 'பாரதிதாஸன்' என்றே நூலாசிரியர் பெயர் குறிப்பிட்டிருந்தார். மறைமலையடிகள், பொன்னம்பலம் போன்றோரின் தொடர்பு ஏற்படவே 'தனித்தமிழில் எழுதவேண்டும்' என்ற எண்ண வேட்கையும் இவருக்குள் உதயமானது.

தேசிய உணர்வும் - திராவிட உணர்வும்

இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இருபெரும் உலகப்போர்களின் விளைவுகளால் அடிமைப்பட்டிருந்த நாட்டு மக்களிடையே தேசிய உணர்ச்சி பரவலாக எழுந்தது. விடுதலை பெறத்துடித்த நாடுகள் தங்களுடைய பண்பாட்டு மரபுவழியில் நாட்டுப்பற்றினையும் மொழிப்பற்றினையும் உணரத் தொடங்கின. இந்தியா போன்ற நாடுகள் தங்களது கடந்தகால வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்து அவற்றின் சிறப்பியல்புகளுக்குப் புத்துயிர் கொடுக்க முயன்றன. அறிவியல் வளர்ச்சியின் காரணமான புதிய ஆராய்ச்சிகளுக்கு வழிவகுக்கப்பட்டன. தேசிய எழுச்சியும் விடுதலைக்கான செயலூக்கங்களும் விரைந்து நடக்கலாயின. தலைவர்களும் அறிஞர்களும், படைப்பாளர்களும் தங்களது நாட்டின் கடந்த காலத்தியப் பண்பாட்டுப் பெருமைகளை மக்களுக்கு உணர்த்தினர். இந்திய விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் ஒவ்வொரு தேசிய இனத்தவரும் தங்களது பண்பாட்டு மரபுகளை, பாரம்பரிய புத்துயிர்ப்பை மக்களுக்கு உணர்த்தி அதன் மூலமாக ஒன்றிணைந்து செயல்பட்டனர்.

விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் தமிழகத்தின் அரசியல், சமூகச்சூழல் ஆரியர் - திராவிடர் இனப்பாகுபாட்டினை முன்னிலைப்படுத்தி பிராமண எதிர்ப்பை அடிநாதமாகக் கொண்டு சுயமரியாதை இயக்கம் தோற்றம் பெற்றது. பிராமண எதிர்ப்பு ஆரிய எதிர்ப்பாகவும், இந்தி எதிர்;ப்பாகவும் முகிழ்ந்து திராவிட நாடு விடுதலை முழக்கமாக அவ்வியக்கத்தினரால் பிரச்சாரம் செய்யப்பட்டது. திராவிடத் தேசியக் கவிஞராகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட பாரதிதாசன் திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பாடல்களாக வடிவமைத்துக் கொடுத்தார். இதுவரை தமிழ்க்கவிதை கண்டிராத புதிய உள்ளீடுகள் இவ்வியக்கத்தின் தொடர்பால் பாரதிதாசனுக்குக் கிட்டின. திராவிடன், திராவிட நாடு, திராவிட நாட்டுப்பண் முதலானவற்றைத் தமது கவிதைகளில் எடுத்தாளத் தொடங்கினார்.

"இனப்பெயர் ஏன் என்று பிறன்எனைக் கேட்டால்
மனிதில் எனக்குச் சொல்லொணா மகிழ்ச்சியாம்
நான்தான் திராவிடன் என்று நவில்கையில்
தேன்தான் நாவெல்லாம்! வான்தான் என்புகழ்!"

(பாரதிதாசன் பாடல்கள். ப.211)

என்று பேரின்ப உணர்வோடு ‘திராவிடன்’ எனச் சொல்லிக் கொள்வதில் பாரதிதாசன் பெருமிதம் கொண்டார்.

“………….. என் உயிர் இனம் திராவிடம்!

ஆரியன் அல்லேன் என்னும் போதில்

எத்தனை மகிழச்சி! எத்தனை மகிழச்சி!”

(பாரதிதாசன் பாடல்கள். ப.211)

எனவரும் கவிதை வரிகள் பாரதிதாசனின் திராவிட உணர்வினைத் தெளிவுபடுத்துகின்றன. திராவிட நாடு என்ற கோரிக்கை சுயமரியாதை இயக்கத்தவரால் அரசியல் முழக்கமாக எழுப்பப்பட்ட போது பாரதிதாசனும் அதன் வழியில் தம் பாடல்களை எழுதினார். மேலும். திராவிடநாடு கோரிக்கை பிறக்கக் காரணங்களும் இருந்தது. தமிழகத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்க உணர்வும், வடமொழித் திணிப்புமேயாகும். வடமொழியும் மனுதர்ம சாத்திரங்களும் திராவிடர் வாழ்வில் புகுந்த பின்னால் திராவிடர்களின் தனித்தன்மைகள் வீழ்ந்துபோயின எனப் பாரதிதாசன் கருதினார்.

“இன்றல்ல, நேற்றல்ல பன்னுற் றாண்டாய்

இந்நிலத்தைப் பொன்னிலத்தைத் திராவிடத்தை

என்றேனும் எவ்வகையிலேனும் பற்றி

ஈடழிக்க வழிபார்த்தார் வடக்கு நாட்டார்…”

(பாரதிதாசன் பாடல்கள். ப.84)

என்றும்,

“ஒன்றல்ல அவர் சூழ்ச்சி மனுநூல் தன்னை

ஒழுக்கநூல் எனச் சொல்லி வலை விரித்தார்

திராவிடத்தை இழிவுறுத்தும் கதைகள் கோத்துத்

திராவிடத்தை நம்புவகை செய்து பார்த்தார்

……………………….. தெய்வ

மரபினர்கள் தாம் என்று கூறிப் பார்த்தார்”

(பாரதிதாசன் பாடல்கள். ப.84)

என்றும் குறிப்பிட்டார். இக்கவிதைகளின் வழி வடவர்களின் ஆதிக்க மனப்பான்மையினையும், திராவிடர்களை மொழியால், மதத்தால், சாதியால், உயர்வு, தாழ்வு எண்ணங்களால் வடவர்கள் அடிமைப்படுத்தினர் என்பதனையும் தெளிவுறுத்துகின்றார்.

“செந்தமிழ் கேரளம் ஆந்திரமும் - அவை

சேர்ந்திடும் கன்னடம் என்பதுவும்

நத்தம் திராவிட நாமெனல் அல்லது

வந்தவர் நாடாமோ? – அவை

வடவர் நாடாமோ?”

(பாரதிதாசன் கவிதைகள். தொகுதி-2 ப.98)

என்று குறிப்பிடுவதில் திராவிடநாடு என்பது தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் பேசப்படும் பகுதியெனத் தெளிவுறுத்துகின்றார். ‘தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களையும் உள்ளடக்கிய திராவிட நாட்டில், இவற்றில் பிரிந்தாலும் தீது’ என்று பாரதிதாசன் கருதினார். அவ்வாறு பிரிப்பது திராவிடர்களின் ஒற்றுமையை அழித்திட வடவர்கள் செய்யும் சூழ்ச்சியென்றும் அதனை முறியடிக்க வேண்டும் எனவும் குறிப்பிடும் பாரதிதாசன்,

“தமிழ்நாட்டைத் தமிழர்களைத்

தனியாக்கப் போராங்கோ

உமியடிக்கப் போராங்கோ நல்ல

உரல் உடைக்கப் போராங்கோ

……………………………

தமிழ் தெலுங்கு மலையாளம்

கன்னடரும் துளுவரும்

தனித்தனியாய்ப் பண்ணாங்கோ”

(பாரதிதாசன். வேங்கையே எழுக. ப.36)

என்றும் பாடுகிறார். இக்கவிதையில் தென் மாநிலத்தவரிடையே உள்ள ஒற்றுமையைக் குலைக்கும் செயலாக மொழிவழிப் பிரிவினையைக் கருதுகின்றார் எனலாம்.

திராவிட நாடு

மூவேந்தர் நாடு, தென்மறவர் நாடு, பழந்தமிழ் நாடு என்று வழங்கப்பெறும் பெயர்கள் திராவிடநாடு என்பதனையே குறிக்கும் என்பது பாரதிதாசனின் கருத்தாகும். இதனையே,

"நான் மூவேந்தர் நாடென நவில்வதும்
தென்மறவர் நாடென்று செப்பலும்
பழந்தமிழ் நாடெனப் பகர்வதும், இந்நாள்
வழங்கு திராவிடர் நாடென வரைவதும்
ஒன்றே! அதுதான் தொன்று தொட்டு
வென்று புகழோங்கு நம் அன்னை நாடு!"

(பாரதிதாசன். வேங்கையே எழுக. ப.37)

என்று பாடுகிறார். இத்திராவிட நாட்டில் திராவிடமொழிக் குடும்பங்களான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் ஆகியவை இருப்பதாகவும், அந்தந்த மொழியின் பெயராலேயே நாட்டையும் குறிக்கும் பழக்கம் இருப்பினும் அவை அனைத்தும் பழந்தமிழ் நாடு என்பதாகவும் கருதுகின்றார்.

திராவிட நாட்டின் கொடி வணக்கம்

திராவிடர் கழகத்தின் கொடியே திராவிட நாட்டுக் கொடியாகப் பாரதிதாசனால் கருதப்பட்டது.

"வைகறை இருட்டையும் செங்கதிர் நகைப்பையும்
திராவிடர் மணிக்கொடி குறிக்கும்
வாழ்விருள் தவிப்போர்
தனிப்பெரும் புரட்சியை
வரவேற்றல் கொடியின் நோக்கம்"

(பாரதிதாசன். வேங்கையே எழுக. ப.31)

என்பது பாவேந்தர் பாடல். திராவிட நாட்டுக் கொடியானர் வைகறை இருட்டைக் குறிக்கும் கறுப்பு வண்ணத்தையும், அதனுள் செங்கதிர் நகைப்பைக் காட்டும் சிவப்பு வண்ணத்தையும் பெற்று திராவிடர் மணிக்கொடியாகத் திகழ்கிறது என்கிறாh

பாரதிதாசன். இக்கொடியின் நோக்கம் மக்களின் வாழ்வு இருளை நீக்கி தனிப்பெரும் புரட்சியை வரவேற்பதாகும். திராவிட நாட்டுக் கொடிக்கு வணக்கம் செலுத்தும் பாவேந்தர், 'வானில் உயர்ந்த திராவிடர் நாட்டு மணிக்கொடியை வணங்குவோம், நானிலத்தில் அதன் மாண்பினைக் காண்பதில் அனைவரும் ஒன்றிணைந்து இணங்குவோம், ஊனுடைமையும் உயிரும் திராவிடர் மானத்தைக் காப்பது' எனவுரைக்கிறார்.

"விண்ணிடை ஏறிய எங்கள் மணிக்கொடி

வெல்க வெல்க வெல்க வெல்கவே!

மண்ணில் உயர்ந்த திராவிட நாட்டினர்

மாட்சி மணிக்கொடி வெல்கவே!

(பாரதிதாசன். வேங்கையே எழுக. ப.30)

என்று திராவிடர் மணிக்கொடியை வாழ்த்துகிறார். பாரதியார் இந்தியத் தாயின் மணிக்கொடியை வாழ்த்தி வணக்கம் செய்ய, பாரதிதாசன் திராவிட நாட்டின் மணிக்கொடியை வாழ்த்தி வணங்கும் நிலையினைக் காணமுடிகிறது.

பழந்தமிழர் வழித்தடத்தில் திராவிடர் நாடு

திராவிடர்களை அடிமைப்படுத்தியவர்கள் பார்ப்பனர்கள் என்பதாக சுயமரியாதை இயக்கத்தவர்கள் பிரச்சாரம் செய்தனர். 'கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக வடநாட்டவர்கள் தென்னாட்டை வீழ்த்துவதற்கு செய்த வஞ்சகங்கள் கணக்கிலடங்காது' என்கிறார் பாரதிதாசன். பன்னெடுங்காலத்திற்கு முன்பே திராவிடர்கள் இந்நாட்டை ஆண்டதாகவும், இந்நாள் பார்ப்பனர்கள் திராவிடர்களை அடிமைகளாக வைத்திருப்பதாகவும் பாரதிதாசன் கருதினார்.

"மன்னும் இமயத்தில் தன்வெற்றி நாட்டிய

மன்னன் திராவிட மன்னவன் - எதிர்

வந்திட்ட ஆரியரைப் புறம் கண்டதோர்

திராவிடம் மன்னவன் தோளே!"

(பாரதிதாசன் கவிதைகள். தொகுதி-2, ப.102)

எனப்பாடி பழம்பெருமைகளை வியந்துரைக்கிறார் எனவும் அறியமுடிகிறது. மூவேந்தர்கள் வழிவந்தர்கள் திராவிடர்கள் என்பதில் பாரதிதாசன் பெருமிதம் கொள்கிறார்.

"படிமன்னர் தொழும்மூன்று முடிமன்னர் வழிவந்தோம்

பழிமன்ன வாழ்ந்திடலாமா? – நாம்

தொடுத்தது போர்! பகை தொலைந்தது பார் என்று

சொல்லிட இரண்டு நாள் ஆமா?

....

ஆளாக வந்தவர் ஆள்வதும் ஆண்டவர்

ஆட்பட்டிருப்பதும் வெட்கம் - மறத்

தோளாய் இருந்தவை தோலாயின என்று

சொன்னால் இவ்வையகம் சிரிக்கும்"

(பாரதிதாசன். வேங்கையே எழுக. ப.17-18)

என மேற்கண்ட வரிகளின் மூலம், பழந்தமிழ் மன்னர்களின் வழியில் வந்த தமிழர்கள் எழுச்சிபெற வேண்டும் என்ற பாவேந்தரின் திராவிட அரசியல் வேட்கை அவர் எழுத்துகளின் வழி நன்கு புலனாகிறது.

"மூவேந்தரென மொழியப் பெறுவோர்

பாவேந்தர் புகழ் இயற்கொடிப் பாண்டியன்

போரில் நிகரிலாப் புலிக்கொடிச் சோழன்

சீருறு விற்கொடிச் சேரன் ஆவார்

இம்மூவேந்தர் இனத்தவர் தமிழர்

இம்மூவேந்தர் செம்மொழி தமிழே!"

(பாரதிதாசன். வேங்கையே எழுக. ப.37)

என்ற பாவேந்தரின் கூற்று மூவேந்தரைப் பற்றியும் அவர்கள் இனத்தாலும் மொழியாலும் தமிழராக இருந்ததையும் குறிப்பிடுகிறார்.

"அருமைத் திராவிடப் பெரிய நாட்டைப்

பழந்தமிழகத்தைப் பார், அறிந்ததென்

மறவர் வையகத்தை இறவாப் புகழ்கொள்

மூவேந்தர் நாட்டை முழுவதும் மீட்போம்"

(பாரதிதாசன். வேங்கையே எழுக. ப.39)

என்னும் வரிகள், பழம்பெருமைகளைப் பேசி அதன் வழியாகத் தமிழ்நாட்டு விடுதலையை வேண்டி நிற்கும் பாரதிதாசனின் நோக்கத்தை இன்றைய தமிழ்ச்சமூகம் அறிந்துணர வேண்டிதெனக் கொள்ளலாம்.

நிறைவுரை

புதுச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட பாவேந்தர் பாரதிதாசன் மகாகவி பாரதியார் மீது கொண்ட பற்றினால் சாதியொழிப்பினை உள்வாங்கிக் கொண்டு அதன்வழி தமது எழுத்துகளை சமூக மாற்றங்களுக்காக ஏவினார். இவர் பிறந்து வளர்ந்த புதுவையில் பிரெஞ்சுக்காரர்கள் பின்பற்றிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கோட்பாடுகளை சமூக விடுதலைக்கான முக்கியக் காரணிகளாக்கிக் கொண்டும் செயலாற்றினார். 'கதர் ராட்டினப்பாட்டும், தொண்டர் படைப்பாட்டும்' இவர் எழுதிய காலத்தில் தமிழகத்தின் காங்கிரசுத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய பெரியாரின் தொடர்பு எவ்வகையிலும் இல்லை என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது. ஆனால், பின்னாட்களில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் இணைந்ததால் திராவிட இயக்கச் சிந்தனைகளையும், சமூக விடுதலைச் சிந்தனைகளையும் தமது எழுத்து வழிப் பரப்பினார் என்பது உளங்கொளத்தக்க செய்தியாக இக்கட்டுரை பதிவிடுகிறது.

பார்வை நூல்கள்

1. பாரதிதாசன் - 'பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி' பாரிநிலையம், சென்னை, முதற்பதிப்பு - 1975.
2. பாரதிதாசன் - 'வேங்கையே எழுக' பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978.

3. ஆனைமுத்து.வே - ‘பெரியார் ஈ.வே.ரா சிந்தனைகள்’ தொகுதி 2, 3 சிந்தனையாளர் கழகம், திருச்சி, 1974.

4. கேசவன்.கோ - ‘திராவிட இயக்கத்தின் மொழிக்கொள்கை’ சென்னை புக் ஹவுஸ், சென்னை, 1982.

5. சிவத்தம்பி.கா - ‘தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் பின்னணி’ சென்னை புக் ஹவுஸ், சென்னை, 1972.

பாரதிதாசன் பாடல்களில் ஆளுமைச் சிந்தனைகள்

முனைவர் கோ.சுப்புலெட்சுமி

துணைமுதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முன்னுரை

மகாகவி பாரதியாரின் ஞான பரம்பரையில் வந்த முதன்மை சீடராக போற்றப்படுபவர் பாவேந்தர் பாரதிதாசன். அவருடைய எழுத்துக்கள் படித்தவருக்கு பலம் கொடுக்கும். பாமரனையும் பாவலராக்கும். இளம் வயதிலேயே கவி புனையும் ஆற்றல் பெற்றவர். திரைப்படத்துறையில் கால் பதித்து கதை, உரையாடல், பாடல் எழுதியவர். இதழ் ஆசிரியராக 'முல்லை' இதழில் பணியாற்றினார் குயில் இதழ் நடத்தினார். அரசியலில் ஈடுபாட்டு புதுவையில் அவைத் தலைமை ஏற்றார். இவரது பிசிராந்தையார் நாடகத்துக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. இங்கனம் பன்முக ஆளுமை உடைய பாவேந்தரின் பாடல்கள் காணப்படும் ஆளுமை சிந்தனைகள் கற்போரின் சுயமரியாதை தூண்டி களப்போராளிகள் ஆக்கும் வல்லமை நிறைந்தவை.

சுயமரியாதை சிந்தனைகள்

மனிதன் மனிதனாக வாழ அவனுக்கு இன்றியமையாத சுயமரியாதைச் சிந்தனைகள். பாரதிதாசன் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி என்றுதான் கூற வேண்டும் என்று தந்தை பெரியார் பாராட்டியுள்ளார்.

"நெருப்பில் துடித்திடும் மக்கள் எல்லாம்
நல்ல காப்பு நல்கும் நீதி சுயமரியாதை
என்னும் குளிர் தோப்பு"

என்று பாவேந்தர் பாடுகிறார். பாவேந்தர் பெரியாரைப் பார்த்து,

" சுயமரியாதை பெயர்கொள்
பயிர் செழிக்கத்
தொண்டு செய்யும் ராமசாமித் தலைவா"

என்று போற்றும் கவிதை குடியரசு இதழில் வெளியிடப்பட்டுள்ளது

மொழி ஆளுமை

பாரதிதாசன் மொழி ஆளுமை தனித்துவமானது. சமுதாய சிந்தனை நிறைந்தவர். இயற்கையை பாடும்போது சமூகச் சிந்தனையை விதைப்பார். கூண்டில் அடைபட்ட கிளியை நோக்கி,

> **"தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?**
> **அக்கா அக்கா என்று நீ அழைத்தாய்**
> **அக்கா வந்து கொடுக்கச்**
> **சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே?"**

கிளி சுதந்திரமாக பறந்து திரிவதில் தான் அதன் உண்மையான இன்பம் இருக்கிறது. அதைப்போல ஒரு நாட்டு மக்கள் தங்கள் அரசனை தாங்களே நிர்ணயிப்பதில் தான் அவர்களின் மகிழ்ச்சி இருக்கிறது என்பதைப் பாடுகிறார். சாதாரண பாமரர்கள் பயன்படுத்தும் எளிய சொற்களான சதமோ? சுக்கா? மிளகா? போன்ற சொற்களையும் தன் கவிதையில் வீரியமாக பயன்படுத்தும் ஆற்றல் பாரதிதாசனுக்கு உண்டு.

தமிழர்களின் ஆற்றல்

பாவேந்தர் தனது வீரத்தாயில் சுதர்மன் மூலமாக தன் கருத்தை எடுத்துரைக்கிறார்,

> **" என் நாட்டை நான் ஆளை ஏற்ற கலை உதவும்**
> **தென்னாட்டு தீரர் செழுந்தமிழர் ஆசிரியர்"**

தொல்காப்பியம், திருக்குறளுக்கு விளக்கம் தருபவன் தமிழாசிரியர் இல்லை. தமிழ்நாட்டு அரசியலில் சூழ்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் தமிழின் ஆக்கத்திற்கும் தமிழ்நாட்டின் ஆட்சிக்கும் தமிழர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துபவரே தமிழாசிரியர் என்று வீரத்தாயில் பாடுகிறார். இதன் மூலம் தமிழ் ஆசிரியர்களின் ஆளுமை பண்பு குறித்து எடுத்துரைக்கிறார்.

தமிழர்களின் வீரப் பாரம்பரியம்

பாவேந்தர் பாரதிதாசன் நம் தமிழர்கள் புறநானூற்று வீரப்பரம்பரையில் வந்தவர்கள். இங்குள்ள வீரர்களும் வீராங்கனைகளும் வீரப் புதல்வர்களை பெற்றவர்களாக காணப்படுகிறார்கள். அந்த வீரம் என்றும் தொடர்ந்து வரவேண்டும் என்று இளைஞர்களை பார்த்து,

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு

திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில்வா!

எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்

புலிஎனச் செயல்செய்யப் புறப்படு வெளியில்!"

என்று இளைய உள்ளங்களுக்கு வீரத்தை ஊட்டுகிறார்

பெண்களின் வீரம்

பாரதிதாசன் தான் படைத்த மூன்று காப்பியங்களிலும் வீர பெண்களை தலைமை பாத்திரமாக அமைத்துள்ளார். 'சஞ்சீவி பருவத்தின் சாரலில்' குப்பனின் மனைவி வஞ்சியும், 'புரட்சிக்கவி' யில் கவிஞனின் காதலி அமுதவல்லியும், 'வீரத்தாயி'ல் விசயராணியும் வீரம் செறிந்த கதை மாந்தர்களாக காணப்படுகின்றன. வீரத்தாயில் தாயே மகனை வீரனாக்குகின்ற வகையில் படைத்திருக்கிறார்.

"பறித்தெடுத்த தாமரைப் பூம் பார்வையிலே வீரம்

பெருக் கெடுக்க நிற்கின்றாய் பிள்ளையே"

என்று பாடியுள்ளார் அது போலவே விசயராணியில் வீரத்தை புலப்படுத்துவது போல,

"ஆவி சுமந்து பெற்ற அன்பன் உயிர் காப்பதற்குக்

கோவித்த தாயின் எதிர் கொல் படைதான்"

என்று பாடி பெருமைப்படுத்தியுள்ளார்.

பொதுவுடமைச் சிந்தனைகள்

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் ஆண்டான் அடிமை சிந்தனை மாற வேண்டும் ஏழை பணக்காரன் பாகுபாடு இருக்கக் கூடாது என்பதை,

"ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்

உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி

ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!"

என்ற கவிதையின் மூலம் சமூகத்தின் சமமான நிலை ஏற்பட வேண்டும் என்று பாடுகிறார்

உழைப்பாளரின் உயர்வு

இயற்கையை பாடாத கவிஞர்கள் இல்லை ஆனால் பாரதிதாசன் அழகான காட்சிகளை கண்டால் எப்போதும் அதனை உருவாக்கிய தொழிலாளரின் உழைப்பை பாடுகிறார்.

"சித்திரச்ச சோலைகளே - உமை நன்கு
திருத்த இப்பாரினில லே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ !
உங்கள் வேரினிலே."

என்று பாடுகிறார் நிலவைப் பற்றி பாடும் போதும் நிலவின் அழகை விடவும் சமுதாயத்தின் அவலமே அவர் நெஞ்சில் எழுகின்றது.

"நித்திய தரித்திரராய் உழைத் துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்"

என்று ஏழைகளின் துயரத்தையும் உழைப்பாளிகளின் அவலத்தையும் எடுத்துக்காட்டுகிறார்.

பெண்களின் ஆளுமை

பெண்களின் கல்வி, விடுதலை, முன்னேற்றம் குறித்து மிகச் சிறப்பாக பாடியுள்ளார் பாரதிதாசன். பெண் குழந்தை தாலாட்டு என்னும் கவிதைகள் பெண்களின் பெருமையைச் சிறப்பாக எழுதியுள்ளார்.

"மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே
வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய துலங்கும் பெருமாட்டி"

என்று அருமையாக பெண்களின் நிலை உயர வேண்டும் என்று எழுதி உள்ளார்.

தொழிலாளர் நலன்

தொழிலாளர்கள் நலனுக்காக பாவேந்தர் போல குரல் கொடுத்த கவிஞர்கள் எவருமில்லை. தொழிலாளர் உழைப்பு சுரண்டப்படுவது கண்டு கொதிக்கிறார் பாவேந்தர்.

"நடவு செய்த தோழர் கூலி
நாலணாவை ஏற்பதும்
உடல் உழைப்பு இலாத செல்வர்
உலகை ஆண்டு உலாவலும்
கடவுள் ஆணை என்று உரைத்த
கயவர் கூட்டம் மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலாளரை ஏவுவோம்"

என்று பாடுகிறார். அது மட்டுமல்லாமல் தொழிலாளர்கள் ஒற்றுமையோடு கூடி தொழில் செய்தால் அவர்கள் வாழ்வின் வளம் பெருகும் என்று உறுதியாக நம்புகிறார்.

"சிறுமுதலால் லாபம் சிறிதாகும்; ஆயிரம்பேர்
உறுமுதலால் லாபம் உயருமன்றோ தோழர்களே!"
"ஒருவன் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கிப்
பெரும்பே றடைவதுதான் வெற்றி என்க தோழர்களே!"
"வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் தோழர்களே!"
"கூடைமுறம் கட்டுநரும் கூடித்தொழில்செய்யின்
தேடிவரும் லாபம் சிறப்புவரும் தோழர்களே!"

என்றும் அடுக்கடுக்காக பாடி மனதில் பதிய வைக்கிறார் பாவேந்தர்.

மானிட சக்தி

மானிட சக்தி மகத்தானது. அதன் மேல் நம்பிக்கை வைத்துவிடல் வேண்டும் என்று பாடியவர் பாவேந்தர்.

> **"'மானிடம்' என்றொரு வாளும் - அதை**
>
> **வசத்தில் அடைந்திட்ட உன்இரு தோளும்**
>
> **வானும் வசப்பட வைக்கும் - இதில்**
>
> **வைத்திடும் நம்பிக்கை, வாழ்வைப் பெருக்கும்"**

என்று பேசுகிறார். மனிதர் உயர்வதற்கு நம் திறமையினை வெளிப்படுத்தி உயர்த்த வேண்டும் என்பதை அவர் சிந்தனை.

> **"கலையே வளர்! தொழில் மேவிடு!**
>
> **கவிதை புனை தமிழா!கடலே நிகர் படை சேர்;**
>
> **கடுவிட நேர் கருவிகள் சேர்!நிலமே உழு!**
>
> **நவதானியநிறையூதியம் அடைவாய்;**
>
> **நிதி நூல்விளை! உயிர் நூல் உரை நிச நூல் மிக வரைவாய்!"**

என கட்டளையிடுகிறார்.

உலகம் உன்னுடையது

உலகத்தையே வெல்லும் ஆற்றல் பெற்றவன் மனிதன். அதற்குத் தேவை தன்னம்பிக்கையும் முயற்சியும் உழைப்பும் தான் என்று கூறுகிறார் பாவேந்தர்.

> **"மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று!**
>
> **இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!**
>
> **தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!**
>
> **மீசையை முறுக்கி மேலே ஏற்று!**
>
> **விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!**
>
> **நகைப்பை முழக்கு! நடத்துலோகத்தை!"**

என்று உற்சாகத்தோடு ஊக்கத்தோடு செயல்பட்டால் உலகத்தையே வசப்படுத்தி விடலாம் என்று பாரதிதாசன் கூறுகிறார்.

நிறைவுரை

பாவேந்தர் பாரதிதாசனின் மொழியாளுமை, பொதுவுடமை சிந்தனைகள், சுயமரியாதை சிந்தனைகள், பெண் முன்னேற்றம், இளைஞர் நலன், தொழிலாளர் நலன் போன்ற எல்லாவற்றையும் தனது ஆளுமை நிறைந்த சொற்களால் சிந்தனைகளால் வெளிப்படுத்தி உள்ளார். இயற்கையிலும் சமூகச் சிந்தனையை கலந்து கூறிய பாவேந்தரின் சிந்தனைகள் தனித்துவமானது.

பாரதிதாசன் படைப்புகளில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

முனைவர் தி. மல்லிகா

உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை – 04

dr.mallikaramaraj@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பாரதியாருக்குப் பின் தமிழ்க் கவிதையுலகினை நடத்தி வந்த பெருமை பாரதிதாசனுக்கு உண்டு. பாரதியாரின் தொடர்பு பாரட்டுக்குப் புதுமுறை, புதுநடை காட்டியது. தந்தை பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் ‘நானொரு நிரந்தர நாத்திகன்’ எனப் பாவேந்தரை மாற்றியது. எனவே தமிழ்க் கவிதையுலகம் அதுவரை காணாத பல புதுக்பொருண்மைகளைப் பாவேந்தர் பாட்டில் வைத்துப் பாடினார். 1936-இல் வெளியான ‘பாரதிதாசன் கவிதைகள்’ என்ற நூல் பாவேந்தரைத் தமிழகம் முழுவதும் நன்கு அறிமுகம் செய்தது. தமிழகத்தில் ஏற்பட்ட பெரியாரின் கருத்துப் புரட்சியால் பாரதிதாசன் ஈர்க்கப் பெற்றுப் புராணங்களையும் மத குமார்களையும் திருமடத் தலைவர்களையும் கடுமையாக எதிர்த்தார். பெரியார் உரையாலும் பேச்சாலும் மக்களுக்குத் தேவையான கருத்துகளையும் சிந்தனைகளையும் படைப்புகள் மூலம் பரப்பினார். அவர்தம் கொள்கைகளைப் பாட்டு மூலம் பரப்பியவர் பாரதிதாசன்.

முன்னுரை

பாவேந்தரின் கவிதைகளில் சங்க இலக்கியத் தாக்கமும் சமய நூல்களின் தாக்கமும் நிறைந்துள்ளன. குறிப்பாக இராமலிங்க அடிகளாரின் எளிமைப் பண்பு பாவேந்தரிடம் உண்டு. பாவேந்தரின் பாடல்கள் இயற்கை,

காதல், பகுத்தறிவு, தொழிலாளர் மேன்மை, மொழி, இனம், நாடு பற்றி அமைந்தனவாகும். இப்பாடல்கள் பல்வேறு பொருண்மையில் இருப்பினும் பெரியாரின் சிந்தனைகள், கொள்கைகள் போன்றவை பொருண்மைகளாக உள்ளன. பெரியாரின் அனைத்துக் கருத்துக்களையும் குறுங்காப்பியம், தனிப்பாடல், நாடகம். தாலாட்டு, கும்மி முதலான வடிவங்களில் பாடியுள்ளார்.

பாவேந்தர் பாடல்களில் சுயமரியாதைச் சிந்தனைகள்

பாவேந்தர் எழுதிய பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்திற்காக எழுதப்பட்டதாகும். அக்காரணங்களையும் சூழல்களையும் ஆராய்ந்தால் புரட்சிக்கவி பாடல்களை முழுவதுமாகச் சுவைக்க முடியும். தமிழகத்தில் பெரியாரின் பேச்சும் எழுத்தும் மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது போலப் பாவேந்தரின் பாடல்களும் பெரியாரின் சிந்தனைகளை உலகம் முழுவதும் பரப்பின. “பைபிளின் துணை இல்லாமல் எப்படி மில்டனைப் புரிந்து கொள்ள முடியாதோ அதேபோல் பெரியாரின் சுயமரியாதைச் சிந்தனைகள் இல்லாமல் பாரதிதாசனின் பாடல்களைப் புரிந்து கொள்ள முடியாது. பெரியாரின் உரைநடைக் கருத்துக்களே பாரதிதாசனின் கவிதை வரிகளாகும்” எனும் மதிப்பீடு பெரியாரின் கருத்துக்கும் பாவேந்தன் கவிதைக்கும் இடையே உள்ள தொடர்பினைக் காட்டும்.

திராவிட இன மக்களின் நலனைக் காக்க வேண்டி 1916ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் “தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்” என்னும் ஓர் அரசியல் கட்சி தோற்றிவிக்கப்பட்டது. தமிழகத்தில் “நீதிக்கட்சி” தோன்றி பார்ப்பனரல்லாதார்க்குப் பாடுபட்டு வரும் நிலையில் அதன் தலைவர் ஒருவர் பின் ஒருவராக மறைய நீதிக்கட்சியில் இருந்தோர் பலருடன் 1926 ஆம் ஆண்டு, ஈ.வே.ராமசாமி அவர்களைத் தலைவராகக் கொண்டு “சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தி எதிர்ப்பு, ஆரியக்கொள்களை அடியோடு வெட்டல் முதலியவற்றை அடிப்படையான கொள்கைகளாக் கொண்டு போராட்டங்கள் நடத்திக் கொண்டு வந்தது. சுயமரியாதை இயக்கத்தில் உள்ளத்தைப் பறி கொடுத்த கவிஞர் தாம் சார்ந்திருந்த கட்சிக் கொள்கைக்காக பல பாடல்களைப் பாடிக்குவித்தார். அப்பாடல்கள் இயக்க மேடைகளில் ஒலிக்கப்பெற்றுக் கவிஞருக்குப் பெரும் புகழைத் தேடித்தந்தன. “சுயமரியாதை போதனை” “வீரத்தமிழன்” “உன்னை விற்காதே” முதலிய முதல் தொகுதியில் இடம் பெற்ற பாடல்களும் “இனப்பெயர்” திராவிடன் கடமை” “இனி எங்கள் ஆட்சி” “தமிழனுக்கு வீழ்ச்சியில்லை” “தமிழன்” “பகை நடுக்கம்” “கூவாய் கருங்குயிலே” “தீவாளியா?” முதலிய இரண்டாம் தொகுதிப் பாடல்களும் “கொடுங்கோல் முறிக்கும் பெரியார் வாழ்க” “விடுதலை பெறுவது முதல்வேலை” “தென்பாங்குக்காரி” “திராவிடர்க்கு விண்ணப்பம்” “தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்

” “சுயமரியாதை எங்காளம்” “திராவிட நாட்டுத் தொண்டால் வரும் இன்பம்” “மூடநமபிக்கை” “நாத்திகன்” “குரங்காட்டி” “கொடி ஆட்சி” “எங்கள் திராவிடம்” “ஞாலப் பெரியார் பாதை” “தமிழகம் மீள வேண்டும் ஆரியர் ஆட்சி ஒழிய வேண்டும்” “மக்கள் பாசறை” “கொலைப் படை வேண்டும்” “இராசாசி வயிற்றெரிச்சல்” “பெரியார் சொல் வெல்கவே” “பெரியார் அறப்போர்” “எவர் பெரியார் அவர் வாழ்க” முதலிய தலைப்புள்ள “பன்மணித்திரள்” பாடல்களும் அக்காலத்தில் பாடப்பட்டவைகளாகும்.

இவற்றுள் எண்சீர்ப்பாடல்களும் இசைப்பாடல்களுமே மிகுதியாக உள்ளன. விருத்தமும் இன்னிசைப் பாடல்களும் கவிஞர்க்கு கைவந்த பாக்களாகும். ஆனால் முன்னர் சுட்டியுள்ள இந்தத் தலைப்புடைய பாடல்களில் கவிஞர் தாம் சார்ந்திருக்கும் இயக்கத்தின் கொள்கையைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் பாடப்பட்டது. இத்தகைய பாடல்களை கவிஞர் பிறர்க்கு அறிவுறுத்தும் நோக்கத்திற்கே முதலிடம் தந்துள்ளார்.

“மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு

வஞ்சகர்க்கோ கொடிய நெருப்பு

மிக்க பண்பின் குடியிருப்பு

விடுதலைப் பெரும் படையின் தொகுப்பு!

அவர் தாம் பெரியார்” என்று பகுத்தறிவுக் கொள்கைவுடைய பெரியாரைப் பாடியுள்ளார்.

சுயமரியாதை இயக்கக் கருத்துக்களையும் பகுத்தறிவு எண்ணங்களையும் கொண்டவையாகப் சஞ்சீவிபர்வதத்தின்சாரல்’ ‘தாழ்த்தப்பட்டவர் சமத்துவப் பாட்டு’ ‘சுயமரியாதைச் சுடர்’ 1930 – 1931ல் வெளிவந்த சில கருத்துக்கள்.

சுயமரியாதை இயக்கப் பொருண்மையோடு வெளி வந்த முதல் நூலாகிய தாழ்த்தப்பட்டவர் சமத்துவப்பாட்டு, வேதச்சார்பு, ஆரியச் சார்பு முதலியவற்றை வன்மையாக எதிர்க்கிறது. சமுதாய சமத்துவத்திற்கு ஆதரவை ஆற்றலோடு வெளிப்படுத்தும் பாடல்

“பிறப்பி லுயர்வு தாழ்வு

பேசும் சமூகம் மண்ணில்

சிறக்குமோ சொல்வாயடி சகியே

சிறக்குமே சொல்வாயடி!

மனிதரில் தாழ்வுயர்வு

வகுக்கும் மடையர் வார்த்தை

இனிச் செல்ல மாட்டாதடி சகியே

இனிச் செல்ல மாட்டாதடி”

போன்ற கருத்துச் செறிவுள்ள வரிகள் காணப்படுகின்றன.

1930 இல் வெளிவந்த ‘சஞ்சீவிபர்வதத்தின்சாரல்’ மிகச் சிறந்த அங்கதக் குறுங்காப்பியம்

பெண்ணடிமை தீரு மட்டும் பேசுந் திருநாட்டு

மண்ணடிமை தீர்ந்துவரல் முயற்கொம்பே

ஊமை என்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கு

ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு

என்ற வரிகள் பெண்ணடிமைத்தன எதிர்ப்புக்குரல் ஓங்கி ஒலிக்கிறது.

பகுத்தறிவு இயக்கம் (சஞ்சீவிபர்வதத்தின்சாரல்)

“பேதம் வளர்க்க பெரும் பெரும் புராணங்கள்

சாதிச் சண்டை வளர்க்கத் தக்க இதிகாசங்கள்

கட்டி சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்

கொட்டி அளக்கும் குருக்கள் காணக்கற்றோர்”

என்று அக்காப்பியத்தில் தொடர்ந்து வரும் வரிகளில் பாரதிதாசன் பகுத்தறிவு நோக்கம் வெளிப்படுகின்றன.

1931இல் வெளிவந்த பாரதிதாசன் ‘சுயமரியாதைச்சுடர்’ என்ற சிறுநூலில் பெரியாரின் பகுத்தறிவு சிந்தனை வெளிப்படுகிறது.

“தலை, காது, மூக்குக், கழுத்து, கை, மார்பு, விரல்

தாள், என்ற எட்டுறுப்பும்

தங்க நகை, வெள்ளி நகை, ரத்னமிழைத்த நகை,

தையலர்கள் அணியாமலும்,

விலை குறையும் ஆடைகள் அணிந்துமே, கோயில் வர

வேண்டுமென்றே பாதிரி

விடுத்தவொரு சேதியால் விசமென்று கோயிலை

வெறுத்தார்கள் பெண்கள் புருசர்

நிலை கண்ட பாதிரியின் எட்டுறுப்பே யன்றி

நீள் இமைகள், உதடு நாக்கும்

நிறைய நகை போடலாம், கோயிலில் முகம்பார்க்க

நிலைக்கண்ணா டியும் உண்டென

இலைபோட் டழைத்ததும் நகைபோட்ட பக்தர்கள்

எல்லாரும் வந்து சேர்ந்தார்

ஏசுநாதர் மட்டும் அங்கு வரவில்லையே

இனிய பாரத தேசமே!

இங்கு போலி இறைநேயத்தைத் தோலுரித்துக் காட்ட எழுது கோலை எடுத்த பாரதிதாசனைப் பார்க்கிறோம்.

பாரதிதாசனின் தேசிய சிந்தனைகள்

தேசியம் என்பது மொழி, இனம், நாடு, பண்பாடு அடிப்படையில் உருவாகின்றது. பல குழுவினராக வாழும் மக்களினம் ஒன்று கூடித் தேசியம் அரும்பிச் சமூகமாகிப் பின்னர் நாடாக மலர்கின்றது. இதன் அடிப்படையில் இந்திய தேசியம் உருவானது. மொழி, மதம், சமயம் முதலானவற்றால் பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட இந்தியர் ‘நாட்டு’ அடிப்படையில் ஒன்றுபடுகின்றனர். இந்தியா ஆங்கிலேயரால் அடிமையாக்கப்பட்ட பொழுது நாட்டை மீட்கத் தேசிய இயக்கம் உருவானது. இவ்வியத்தின் செயற்பாடுகளையும், இவ்வியக்கத் தலைவர்களையும் புகழ்ந்தும் போற்றியும் தமிழ்க் கவிதைகள் எழுந்துள்ளன.

இதன் உலகப்போரில் பாரிஸ் வெற்றி புதுவை அரசு கொண்டாடியது. இதனை பாவேந்தர்

“வெண்ணிலா முகிலி மீண்டது போலே மீண்டாய்

எண்ணிலா மகிழ்ச்சி யூட்டும் எழில்பாரீஸ் நகரே நீதான்!

கண்ணிலா இட்லர் நின்பால் கால்வைத்தான்! தோல்வி பெற்றான்

மண்ணுளார் துயரி னின்று மீண்டனர் மகிழ்ச்சியுற்றார்”

என்ற வரிகளின் உலகப் பார்வையை அவரது படைப்புகளில் காணலாம்.

ஐக்கிய நாடுகள் சபையைப் போர் மூலத்தைப் பொசுக்க முடிவு எடுத்துச் செயல்படுமாறு தூண்டுகிறார்.

உயிர்க்குலம் அழிக்கும் ஈனர்

பலத்தினை ஒடுக்க வேண்டும்

வையப் பாராளு மன்றம்

புலம்பலில் பயனே இல்லை"

பாரதிதாசனிடம் உலகம் ஒன்றாகவும் நன்றாகவும் வாழவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது.

பாரதிதாசன் சகமக்கள் உணர்வதற்கு வேண்டிய இனிது இனிதான எண்ணங்களை எடுத்தெடுத்து வழங்கிய கவிஞர். தங்கள் மனத்தின் இறுக்கத்தைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டு உலகப் பார்வையுள்ள அவர் கவிதைகளில் பார்வையைப் படரவிடவேண்டும்.

"ஒவ்வொரு நினைவும் உன்றன் உலகிற்கே! செயல் ஒவ்வொன்றும்

இவ்வைய நன்மைக்கேஎன் றெண்ணுதல் பெற்றா யாகில்

செவ்வையாம் நினைவுண்டாகும் செயலெலாம் நல்ல வாகும்

அவ்வானின் நோக்கம் காண்பாய்! அதன்பெருஞ் செயலைக் காண்பாய்!

பிறநாட்டை எதிர்க்க வேண்டா பிழைநாட்டம் உலகின் வீழ்ச்சி!

அறமென்றால் நல்ல பாதை அதனை நீ வகுக்கும் போது"

இவ்வாறு பண்ணபட்ட பாரதிதாசனின் தேசிய சிந்தனைகள் கொண்ட உள்ளத்தைப் பார்க்க முடிகிறது.

பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி இரண்டாம் பதிப்பாக வெளிவந்த போது முதன் முறையாக மாற்றம் பெற்றதை முனைவர் ய.மணிகண்டன் "பாரதிதாசனின் அரிய படைப்புகள்' என்னும் நூலில்

"அறிவியக்கங் கண்ட அழகு பாரததேசமே - என்பது

அறிவியக்கங் கண்ட அழகு செந்தமிழ் வையகமே"

என்று வடிவங் கொண்டது. தமிழ்த் தேசியத் தளர்த்திற்கு பாரதிதாசன் நிகழ்வு நகர்வதைப் பார்க்க முடிகிறது.

“எதிர்பாராத முத்தம்” “தமிழச்சியின் கத்தி” இரண்டும் பல்வேறுபட்ட புரட்சிகள் பேசப்படுகின்றன. மக்களின் மகத்தான சக்தியை இவ்விரு இலக்கியங்களும் எடுத்துப் பேசுகின்றன. ‘கடல்மேற்குமிழிகள்’ ‘புரட்சிக்கவி’ ஆகிய இரண்டு நூல்களும் சாதிப்பேயை விரட்ட எழுதப்பட்டவையே. ‘பாண்டியன் பரிசு’ ‘காதலா? கடமையா? ஆகிய இரண்டு நூல்களிலும் மன்னர் குலத்துதித்த மங்கையரை மக்கள் குலத்துதித்த குடிமகன்கள் கடிமணம் செய்து கொள்ளும் தன்மையைக் காணமுடிகிறது.

இவைதவிர பாரதிதாசன் படைப்புகளில் ‘புதிய ஆத்திசூடி’ இளையார் ஆத்திசூடி என்ற இரண்டிலும் பெரியாரின் சிந்தனைகளை முன் வைக்கிறார் என்பதை அறியலாம்.

‘அனைவரும் உறவினர்’

‘ஆட்சியைப் பொதுமை செய்’

‘உடைமை பொதுவே’

‘ஒற்றுமை அமைதி’

‘கீழ்மகன் உயர்வெனும்’ – பிறப்பில் உயர்வு பேசுவோன் அறிவிலி

‘நீணிலம் என் (இ)ல்லம்’ – இவ்வுலகம் உன் இல்லம்

‘நைந்தார்க்கு உதவிசெய்’

‘பேயி(ல்)லை மதம(ல்)லால்’ – மதம் என்ற பேய் பிடியாதிருத்தல்

‘விடுதலை உயிhக்கு உயிர்’

‘வையம் வாழ வாழ்’

- புதிய ஆத்திசூடி

‘ஒற்றுமை வெல்லும்’

‘பிறர்நலம் நாடு’

‘நல்லவனாய் இரு’

‘சமமே அனைவரும்’

‘நாட்டின் பகை தொலை’

- இளையார் ஆத்திசூடி

பாரதிதாசன் உரைநடை ஆக்கத்தின் மகுடமாகத் திகழ்வது ‘மானுடத்தைப் போற்றி எழுதிய ஆக்கமாகும். மானுடத்தை எவ்வாறு போற்றிக் கொண்டாட வேண்டும்

என்பதை 'மானுடம் போற்றும்' என்னும் கட்டுரையின் இறுதியில் "நீ வருந்தி உழைத்ததைப் பிடுங்க நினைப்பவர்கள் வார்த்தையை நம்பாதே. பிறர் தயவுக்காக அன்றிச் சுதந்திர புரு~னாக யோசி. உன் யோசனையில் பட்டதைத் தைரியத்துடன் காரியத்தில் கொண்டு வா. அப்போது உன் செயல் எப்படி இருக்கும் தெரியுமா? நீ மனிதரை உயர்வு செய்யும் மனிதனாவாய். மானுடத்தை உயர்வுப் படுத்தி அதன் பால் நன்றி செலுத்தும் மேன்மகனாக விளங்குவாய்? என்று முடிக்கிறார்". இவ்வாறு "மானுடம் உயர்வதற்கு அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்பிய பேரறிஞன்" பாவேந்தர் என்ற பகுத்தறிவாளன் ஆவார்.

முடிவுரை

இயற்கை கவிஞர், தமிழ் நாட்டு இரகல் கம்சதேவ், பகுத்தறிவு கவிஞர், புதுவைக்குயில், புரட்சிக்கவிஞர், பாவேந்தர் என அடைமொழிகளுடன் அடையாளப்படுத்தப்பட்டவர் பாரதிதாசன். மன்னர் குலத்திலே உதித்தவர்கள் மன்னர் குலத்தோடுதான் உறவு கொள்ள வேண்டும் என்ற மரபிலே தோன்றியவர்களே நாடாள வேண்டும் என்ற கொள்கைளை எதிர்த்து எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிலை என்பதை வலியுறுத்துகிறார். தமிழ் நாடு விரைந்து முன்னேற்றம் பெற அயலவரின் ஆதிக்கம் அறவே ஒழிய வேண்டும். தமிழர்கள் அனைவரும் ஆற்றலுடன் சிறப்பெய்தித் திகழ வேண்டும் என்ற வகையில் அவரது படைப்புகளை படைத்துத் தந்துள்ளார் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

ஆய்வுக்கு துணை நின்ற நூல்கள்

1. பாரதிதாசன் கவிதைகள், தொகுப்பு, ஈரோடு தமிழன்பன், சாகித்திய அகாதெமி
2. பாரதிதாசன் கவிதைகள், வானவில் பிரசுரம்
3. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம் சென்னை
4. பாரதிதாசன் கவிதைகள், முதற்தொகுதி, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம்
5. முனைவர் ய. மணிகண்டன், பதிப்பு – தொகுப்பு – ஆய்வு பாரதிதாசனின் அரிய படைப்புகள், அம்மா நிலையம், தஞ்சை
6. பாரதிதாசன் திரைப்பாடல்கள் - தொகுப்பாசிரியர், மணிவாசகர் பதிப்பகம், வாமனன், சென்னை
7. பாரதிதாசன் - ஆத்திசூடி, பூம்புகார் பதிப்பகம், சென்னை

திரைத்துறையில் பாரதிதாசனாரின் பங்களிப்பு

முனைவர் பிரியாகிருஷ்ணன்,

முதன்மை ஆசிரியர், அரண் பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ், சென்னை

முன்னுரை:

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்கள் மொழியில் மக்களுக்காக எழுதியவர். தமிழ்த் தேசிய எழுச்சிக்கு அடித்தளம் அமைத்து புரட்சிப்பண் பாடியவர். தமிழ்மொழியைக் கல்வி மொழியாக, வழிபாட்டு மொழியாக, இசை மொழியாக, அலுவல் மொழியாக, சட்டமன்ற மொழியாக, வணிக மொழியாகக் கொண்டு வருவதற்கு தன் வாழ்வின் இறுதிவரை போராடியவர். தமக்கென வாழாது தமிழுக்கென வாழ்ந்தவர். பாவேந்தரின் படைப்புகள் அவருக்கு பாட்டுக்கொரு பாரதிதாசன் என்ற பெயரைப் பெற்றுத் தந்தது. புகழின் உச்சத்திலிருந்தபோதுதான் அவர் திரைத்துறையில் காலடி எடுத்து வைத்தார். அங்கும் அவரது பங்களிப்பு அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது. திராவிட இயக்கத் தலைவர்களுள் முதன்முதலாகத் திரையுலகில் அடி எடுத்து வைத்தவர் பாவேந்தர். அத்தகைய சிறப்பு வாய்ந்த அவரது திரையுலகப் படைப்புகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

பாவேந்தர் பாரதிதாசனாரின் இலக்கியப்பணிகளில் திரைத்துறை:

பாவேந்தரின் இலக்கியப்பணிகள் அளப்பரியது. இறைமை இலக்கியம், நாட்டுப் பாடல் இலக்கியம், காப்பிய இலக்கியம், கதை, கவிதை, நாடக இலக்கியம், உரைநடை இலக்கியம், கதை இலக்கியம், திரை இலக்கியம், பாட்டு இலக்கியம், மடல் இலக்கியம், கட்டுரை இலக்கியம் என அவரது படைப்புகள் பரந்து விரிந்து இருந்தன. பாவேந்தர் வாழ்ந்த காலநிலைகளுக்கேற்ப அவர் கருத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் அவரது படைப்புகளில் வெளிப்பட்டன. அவர், திரை உலகிற்கும் தனது இலக்கியப்பணியினைப் பரிசளித்தார். திரைப்படக் கலையைக் குறித்து,

"உருவினையும் ஒலியினையும் ஒன்றாகச் சேர்த்தே

ஒளிபெருகத் திரையினிலே படங்காட்டும் கலை"

என்று குறிப்பிடுவார்.

திரைப்படம் மக்களுக்கு உயரிய நற்கொள்கைகளை புகட்ட வேண்டும் என்பதை, ”சீரியநற் கொள்கையினை எடுத்துக் காட்டச் சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்” என்று குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

திரைத்துறையில் பாவேந்தரின் திரைக்கதை,வசனம்:

”பாரதிதாசனுக்கு இளமையிலிருந்தே நாடகத்தின் பாலும் நடிகர்கள் பாலும் அன்பும் ஈடுபாடும் அதிகம். தம் குழந்தைகளான சரசுவதியும், கோபதியும் நடிக்க 'வீரத்தாய்' என்ற கவிதை நாடகத்தை எழுதினார். தம் நண்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் நடிப்பதற்குச் 'சிந்தாமணி' என்ற நாடகத்தை எழுதிக் கொடுத்தார். சேக்ஸ்பியரின் ‘வெனிசு நகர வணிகன்‘ என்ற நாடகத்தையும் தமிழ்ப்படுத்திக் கொடுத்தார் “ என்கிறார் முருகு சுந்தரம்.

பாவேந்தர் 1944 ஆம் ஆண்டில் 'இன்ப இரவு' என்ற பெயரில் ஒரு நாடகக் குழுவைத் துவக்கினார். நாமக்கல் செல்லப்ப ரெட்டியார் என்பவர் அக்குழுவை முன்னின்று நடத்தினார். முதன்முதலாகச் சேலம் நகரில்தான் 'இன்ப இரவு' அரங்கேறியது. நாடகத்தில் ஈடுபாடு கொண்ட பாவேந்தரின் கவனம் திரைத்துறை பக்கமும் திரும்பியது. பாவேந்தர் திரைத்துறையை ஒரு ஆற்றல் வாய்ந்த துறையாக வளரும் என்று நம்பினார். அதன் மூலம் பல நற்கருத்துக்களையும் , தமிழ் சார்ந்த மேம்பாட்டுப் பணிகளையும் எளிதாக மக்களிடையே கொண்டு சேர்க்க முடியும் என்று நம்பினார். தாம் எழுதிய திரைக்கதை வசனம் மற்றும் பாடல்களில் வடமொழி நீக்கி தூயத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தினார். எங்கும் எதிலும் தமிழ் அவரது உயிர்ப்பாகக் கண்டார்.

பாவேந்தர் திரை உலகில் திரைக்கதை, வசனம், பாடல்கள், விமர்சனம், தயாரிப்பு என எல்லாப் பிரிவுகளிலும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். பாவேந்தர் பாரதிதாசன் முதன்முதலில் பாடல்கள் எழுதி வெளியான திரைப்படம் **'பாலாமணி அல்லது பக்காத் திருடன்'**. இது 1937 ஆம் ஆண்டு வெளிவந்தது. திராவிட இயக்கத் தலைவர்களில் முதன்முதலாகத் திரைப் படத்திற்கென்று கதை வசனம் பாடல்கள் எழுதிய பெருமை பாரதிதாசனையே சாரும். 1947 இல் வெளிவந்த **'ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி'** மாபெரும் வெற்றி பெற்றது. தமிழிலேயே மிக நீளமான படம் என்ற பெயரும் இதற்குண்டு. நடைமுறையில் நம்பமுடியாத , பல

கற்பனைகள் கொண்ட நீண்ட கதையைத் திரைப்படத்திற்கு ஏற்றவாறு சுருக்கி அதன் சுவை குன்றாது திரைக்கதை வசனம் எழுதி வெற்றிப் படமாக்கச் செய்தவர் பாவேந்தர். பாவேந்தரின் 'எதிர்பாராத முத்தம்' என்னும் காவியம் **'பொன்முடி'** என்னும் பெயரில் 1950 இல் மாடர்ன் தியேட்டர்சு பாவேந்தரின் திரைக்கதை வசனத்துடன் வெளியிட்டது. 1952 இல் **வளையாபதி**யைச் சேலம் மார்டன் தியேட்டர்சு பாவேந்தரின் கதைவசனத்துடன் வெளியிட்டது.

திரைப்படங்களில் பாவேந்தரின் பாடல்கள்:

1. பாலாமணி அல்லது பக்காத் திருடன்(1937)
2. ஸ்ரீராமானுஜர்(1938)
3. கவி காளமேகம்(1940)
4. வளையாபதி(1952)
5. பெற்றமனம்(1960)

ஆகிய திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதினாலும் வளையாபதிக்குப் பிறகு பாவேந்தர் திரைப்படத்திற்கென்று பாடல் எழுதுவதை முற்றிலும் நிறுத்திவிட்டார். முன்னரே வெளிவந்த கவிதைத் தொகுதிகளிலிருந்து ஏதேனும் ஒரு பாடலை தங்களது படைப்புகளில் பயன்படுத்திக் கொள்ளமாறு அனுமதி மட்டும் கொடுத்தார். அவரது

கவிதைத் தொகுதியிலிருந்து எடுத்து சில திரைப்படங்களில் பாடல்கள் பயன்படுத்தப்பட்டது. அவை,

1.பொன்முடி – வெண்ணிலாவும் வானும் போல என்னும் பாடல்.

(பொன்முடி 1950 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். எல்லிஸ் டங்கன் இயக்கத்தில் வெளிவந்த மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட் கமெனியில் வெளிவந்த இத்திரைப்படத்தில் பி. வி. நரசிம்ம பாரதி, ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் பலரும் நடித்திருந்தனர். இப்படத்தின் கதையானது கவிஞர் பாரதிதாசனின் எதிர்பாரத முத்தம் என்னும் குறுங் காப்பியத்தைத் தழுவியது. இது ஒரு வெற்றிப்படமாக ஆனது.)

2. ஓர் இரவு – துன்பம் நேர்கையில் என்னும் பாடல்.

(ஓர் இரவு 1951 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படம் ஆகும். ப. நீலகண்டன் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் ஏ. நாகேஸ்வர ராவ், பி. எஸ். சரோஜா மற்றும் பலர் நடித்திருந்தனர். இப்படமானது அண்ணாதுரை அவர்கள் எழுதிய நாடக ஒரிரவு என்னும் நாடகத்தை அதே பெயரில் படமாக தயாரிக்கப்பட்டது. நாடகம் வெற்றியடைந்த அளவுக்கு திரைப்படம் வெற்றியடையவில்லை .இபடத்தில் தும்பம் நேர்கையில் என்னும் பாடலை பாவேந்தர் எழுதினார். இப்பாடலை எம். எஸ். ராஜேஸ்வரி, வி. ஜே. வர்மா ஆகியோர் பாடியிருந்தனர். இலங்கையில் இத்திரைப்படம் மே 18, 1951 இல் பல முக்கிய நகரங்களிலும் திரையிடப்பட்டது.)

3.கல்யாணி – அதோ பாரடி என்னும் பாடல்.

(கல்யாணி 1952 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். ஆசார்யா-மஸ்தான் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் நம்பியார், எம். ஜி. சக்கரபாணி மற்றும் பலரும் நடித்துள்ளனர்.)

4.பராசக்தி - வாழ்க வாழ்கவே என்னும் பாடல்.

(1952 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். மு. கருணாநிதி வசனம் எழுத, கிருஷ்ணன்-பஞ்சு ஆகியோர் இயக்கிய இத்திரைப்படத்தில் சிவாஜி கணேசன், பண்டரி பாய், எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், ஸ்ரீரஞ்சனி மற்றும் பலரும் நடித்திருந்தனர்)

5.பணம் - பசியென்று வந்தாள் என்னும் பாடல்.

(பணம் என்னும் தமிழ்த் திரைப்படம் 1952 ஆம் ஆண்டு வெளிவந்தது. என். எஸ். கிருஷ்ணன் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்திற்கு மு. கருணாநிதி திரைக்கதை உரையாடலை எழுதினார். இதில் சிவாஜி கணேசன், பத்மினி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், எஸ். எஸ். ராஜேந்திரன், வி. கே. ராமசாமி, பி. ஆர். பந்துலு ஆகியோர் நடித்திருந்தனர்.)

6.அந்தமான் கைதி – அந்த வாழ்வுதான் என்னும் பாடல்.

(அந்தமான் கைதி (மொழிபெயர்ப்பு. அந்தமான் குற்றவாளி) என்பது 1952 ஆம் ஆண்டு வெளியான இந்திய தமிழ் மொழி குற்ற நாடகத் திரைப்படமாகும், இது வி .கிருஷ்ணன் இயக்கியது மற்றும் கு. சா. கிருஷ்ணமூர்த்தி . எம்.ஜி. ராமச்சந்திரன் நடித்த, அதே பெயரில் கிருஷ்ணமூர்த்தியின் நாடகத்தை அடிப்படையாகக் கொண்டது. இப்படம் 1952 மார்ச் 14 அன்று வெளியானது.)

7. என் தங்கை – காதல் வாழ்விலே என்னும் பாடல்

(என் தங்கை 1952 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். சி. எச். நாராயணமூர்த்தி, எம். கே. ஆர். நம்பியார் ஆகியோரின் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எம். ஜி. இராமச்சந்திரன், பி. வி. நரசிம்ம பாரதி மற்றும் பலரும் நடித்திருந்தனர் இதில் எம்.ஜி.ஆர் ஜோடி இல்லாமல் நடித்தார்.)

8. பூங்கோதை – தாயகமே நீ வாழி என்னும் பாடல்.

(பூங்கோதை 1953-ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். இது ஓர் இருமொழித் திரைப்படமாகும். தமிழில் "பூங்கோதை" என்றும், தெலுங்கில் "பரதேசி" என்றும் தலைப்பிடப்பட்டது. எல். வி. பிரசாத் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் சிவாஜி கணேசன், ஏ. நாகேஸ்வர ராவ் மற்றும் பலர் நடித்திருந்தனர்.)

9. திரும்பிப் பார் - பாண்டியன் என் என்னும் பாடல்.

(1953 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும் மாடர்ன் தியேட்டர்ஸின் டி.ஆர்.சுந்தரம் தயாரித்து இயக்கிய பின்னர் தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்ற மு. கருணாநிதியால் எழுதப்பட்டது.)

10. ரத்தக்கண்ணீர் – ஆலையின் சங்கே என்னும் பாடல்.

(1954 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். கிருஷ்ணன்-பஞ்சு இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எம். ஆர். ராதா, எஸ். எஸ். ராஜேந்திரன், சந்திரபாபு மற்றும் பலரும் நடித்திருந்தனர்.)

11. என் மகள் –எங்கள் வாழ்வும் என்னும் பாடல்.

(1954 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். கே. வி. ஆர். ஆச்சார்யா மற்றும் எம். கே. ஆர். நம்பியார் ஆகியோரின் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் ரஞ்சன், எம். என். நம்பியார், எம். ஜி. சக்கரபாணி மற்றும் பலரும் நடித்திருந்தனர்.)

12. கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி – வெண்ணிலாவும் வானும் என்னும் பாடல்.

(1954 ஆம் ஆண்டு வெளியான இந்திய தமிழ் மொழி நகைச்சுவைத் திரைப்படம், இது பி. நீலகண்டன் இயக்கியது மற்றும் பி.ஆர்.பந்துலு தயாரித்தது. இப்படத்தில் டிஆர் ராமச்சந்திரன் , சிவாஜி கணேசன் , பத்மினி , ராகினி ஆகியோர் நடித்துள்ளனர் . இது 13 ஏப்ரல் 1954 இல் வெளியிடப்பட்டது)

13. கோமதியின் காதலன் - நீலவான் ஆடைக்குள் என்னும் பாடல்.

(1955 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். பி. நீலகண்டன் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன், சாரங்கபாணி மற்றும் பலரும் நடித்துள்ளனர்)

14. ரங்கோன் ராதா – தலைவாரிப் பூச்சூடி என்னும் பாடல்.

(1956-இல் வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். ஏ. காசிலிங்கத்தின் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் சிவாஜி கணேசன், எஸ். எஸ். ஆர் மற்றும் பலரும் நடித்திருந்தனர். கா. ந. அண்ணாதுரையால் எழுதப்பட்ட ரங்கோன் ராதா எனும் புதினத்திற்கு, மு. கருணாநிதி திரைக்கதை வசனம் எழுதினார்.)

15. குலதெய்வம் – கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே என்னும் பாடல்.

(1956 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படம். கிருஷ்ணன்-பஞ்சுவின் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எஸ். வி. சகஸ்கரநாமமும் பண்டரிபாயும் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். எம். ஆர். சந்தானலட்சுமி, எம். என். ராஜம், எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, குலதெய்வம் ராஜகோபால் ஆகியோரும்

இதில் நடித்தனர். இத்திரைப்படம் 1956 ஆம் ஆண்டிற்கானச் சிறந்த தமிழ்த் திரைப்படத்துக்கான தேசிய விருதுக்குரிய தகுதிச் சான்றிதழ் பெற்றது.)

16. நானே ராஜா - ஆடற்கலைக்கழகு என்னும் பாடல்.

(1956-இல் வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். ஆர். ஆர். சந்திரனின் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் சிவாஜி கணேசன், ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம், டி. எஸ். பாலையா எஸ். வி. சுப்பையா மற்றும் பலரும் நடித்திருந்தனர்.[2] டி. ஆர். ராம்நாத் இசையமைத்திருந்தார்)

17. **பஞ்சவர்ணக் கிளி – தமிழுக்கும் அமுதென்று என்னும் பாடல்.**

(1965 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். கே. சங்கர் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் ஆர். முத்துராமன், ஜெய்சங்கர், கே. ஆர். விஜயா, நாகேஷ், மனோரமா, மேஜர் சுந்தரராஜன், எஸ். என். லட்சுமி மற்றும் பலரும் நடித்திருந்தனர். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் கவிஞர் வாலியும் இயற்றிய இத்திரைப்படத்தின் பாடல்களை டி. எம். சௌந்தரராஜனும் பி. சுசீலாவும் பாடியிருந்தனர்.)

18. கலங்கரை விளக்கம் -எங்கள் வாழ்வும் என்னும் பாடல்.

(1965 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ் அதிரடித் திரைப்படமாகும். கே. சங்கர் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எம். ஜி. ஆர், பி. சரோஜாதேவி மற்றும் பலரும் நடித்துள்ளனர். இது வெர்டிகோ (1958) என்ற அமெரிக்க திரைப்படத்தின் பாதிப்பில் உருவானது. இப்படம் 28 ஆகத்து 1965 அன்று வெளியானது.)

19. **சந்திரோதயம் – புதியதோர் உலகம் என்னும் பாடல்.**

(1966 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். கே. சங்கர் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எம். ஜி. ஆர், ஜெயலலிதா மற்றும் பலரும் நடித்திருந்தனர்.)

20. **மணி மகுடம் - கொலை வாளினை என்னும் பாடல்.**

(1966 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். மு. கருணாநிதி கதை, திரைக்கதை, வசனம் எழுத.எஸ். எஸ். ஆர் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எஸ். எஸ். ஆர், விஜயகுமாரி, ஜெ. ஜெயலலிதா மற்றும் பலரும் நடித்திருந்தனர்.)

21. **நம்ம வீட்டுத் தெய்வம் - எங்கெங்குக் காணினும் சக்தியடா என்னும் பாடல்**

(1970 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். ஜி. என். வேலுமணி இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் முத்துராமன், கே. ஆர். விஜயா மற்றும் பலரும் நடித்துள்ளனர்.)

22. **நான் ஏன் பிறந்தேன் – சித்திரைச் சோலையிலே என்னும் பாடல்.**

(1972 ஆம் ஆண்டு எம். கிருஷ்ணன் இயக்கியத் திரைப்படமாகும் . இப்படத்தில் எம்.ஜி.ராமச்சந்திரன் , கே.ஆர்.விஜயா , காஞ்சனா ஆகியோர் நடித்துள்ளனர் . இது 1953 ஆம் ஆண்டு தெலுங்கில் வெளியான பிரடுகு தெருவு படத்தின் ரீமேக் ஆகும். படம் 9 ஜூன் 1972 இல் வெளியிடப்பட்டது மற்றும் வணிக ரீதியாக தோல்வியடைந்தது.)

23. **பல்லாண்டு வாழ்க – புதியதோர் உலகம் என்னும் பாடல்.**

(1975 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். கே. சங்கர் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எம். ஜி. ஆர், லதா மற்றும் பலரும் நடித்திருந்தனர்.)

24. **கண்ணன் ஒரு கைக்குழந்தை - காலையிளம் என்னும் பாடல்.**

(1978 ஆம் ஆண்டு வெளிவந்த இந்திய தமிழ் மொழித் திரைப்படமாகும், இது என். வெங்கடேஷ் இயக்கியது மற்றும் திருப்பூர் மணி தயாரித்தது. இப்படத்தில் சிவகுமார் மற்றும் சுமித்ரா நடித்துள்ளனர் . இது செப்டம்பர் 8, 1978 இல் வெளியிடப்பட்டது, மேலும் இது பாக்ஸ் ஆபிஸில் வெற்றிபெறவில்லை.)

25. **நிஜங்கள் – அம்மா உன்றன் என்னும் பாடல்.**

(1982-ஆம் ஆண்டு வெளியான தமிழ்த் திரைப்படம். இதில் சிவகுமார், மேனகா முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.)

26. **புரட்சிக்காரன் - தூங்கம் புலியைப் பறை என்னும் பாடல்.**

(2000 இல் வெளிவந்த திரைப்படமாகும். சத்யராஜ், ரோஜா, குஷ்பூ, மன்சூர் அலிகான் ஆகியோர் நடித்த இப்படத்தை வேலு பிரபாகரன் இயக்கினார்)

27. **சிவப்பதிகாரம் – வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா என்னும் பாடல்.**

(2006-ஆம் ஆண்டு வெளியான ஓர் இந்தியத் தமிழ்த் திரைப்படமாகும். இத்திரைப்படத்தை கரு பழனியப்பன் எழுதி, இயக்கினார். இத்திரைப்படத்தில் விஷால், மம்தா மோகன்தாஸ், ரகுவரன், உபேந்திரா, மணிவண்ணன், ராஜன் பி.தேவ்,

கஞ்சா கருப்பு மற்றும் பலர் நடித்துள்ளனர்.) ஆகிய திரைப்படங்களில் மேலே குறிப்பிட்ட பாவேந்தரின் பாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

பாவேந்தரின் திரைப்படத் தயாரிப்புப் பணி:

நாடகத்திலும் திரைப்படத்திலும் கொண்ட ஈர்ப்பால் திரைப்படம் தயாரிக்கும் எண்ணம் அவருக்கு வந்தது. 1961 ஆம் ஆண்டு புதுவையில் இருந்த தன் வீட்டை அடகு வைத்துக் கிடைத்த பணத்தைக் கொண்டு திரைப்படம் தயாரிக்கும் நோக்கோடுச் சென்னையில் குடியேறினார். **'பாரதிதாசன் பிக்சர்ஸ்'** என்னும் பெயரில் திரைப்படக் கம்பனியைத் துவக்கினார். முதலமைச்சர் காமராசரை அழைத்துப் பாரதிதாசன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் சார்பில் துவக்கவிழாவும் நடத்தினார். சிவாஜி கணேசனும் சரோஜா தேவியும் எம் ஆர் ராதாவும் ஆகியோர் நடிக்க ஏற்பாடும் செய்யப்பட்டது. ஆனால் அத்திரைப்படம் ஆரம்பிக்கப்படாமலே நின்று போனது. காரணம் பாண்டியன் பரிசு வரலாற்று நாடகம் என்பதால் அதற்கான செலவுகளை செய்யுமளவு போதிய பணவசதி பாவேந்தரிடம் இல்லை. அந்த முயற்சியை வேறுவழியின்றி கைவிட வேண்டியிருந்தது. பவேந்தரின் நெருங்கிய நண்பர்களாக இருந்த சிவாஜி கணேசன், எம் ஆர் ராதா ஆகியோர் பாவேந்தருக்குத் தக்க ஆலோசனை கூறினர். எதார்த்ததைப் புரிந்துகொண்ட பாவேந்தர் மீண்டும் எழுத்துலகிற்குத் திரும்பினார். பாவேந்தர், பாரதியின் வரலாற்றையும், பாண்டியன் பரிசையும் திரைப்படமாக்கப் பெரிதாக முயன்றும் முடியாமல் தோல்வியுற்றார் என்றே சொல்லலாம். அது அவருக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. இன்று போல் அன்றும் திரைத்துறை பணம் படைத்தவர்களுக்கே துணையாக நின்றது போலும்.

பாவேந்தரின் தமிழ்ப்பற்றும் பிடிவாதமும்:

”சேலம் மார்டன் தியேட்டர் தயாரித்த ‘வளையாபதி’(1952) படத்துக்காக ‘கமழ்ந்திடும் பூவில் எல்லாம் தேனருவி’ என்ற பாடலை எழுதினார். ஆனால் ‘கமழ்ந்திடும்’ என்ற சொல் இசையமைப்புக்கு இடைஞ்சலாக இருப்பதாகக் கூறி அதற்குப் பதிலாக ‘குலுங்கிடும்’ என்ற சொல்லைப் போட்டுப் பாடலைப் பதிவு செய்துவிட்டார் இசையமைப்பாளர் எஸ். தட்சிணாமூர்த்தி. இதையறிந்த பாவேந்தர், “ எவன்டா என் பாட்டை மாத்தியவன்? குலுங்கிடும் பூவில் எப்படி தேனருவி வரும்?” என்று கொதித்தவர், மார்டன் தியேட்டருடன் 40 ஆயிரம் ரூபாய்க்குப் போட்டிருந்த

ஒப்பந்தத்தைக் கிழித்து ஸ்டூடியோ வளாகத்திலேயே வீசிவிட்டு புதுவை வந்துவிட்டார். " இசையமைப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்கி 'குலுங்கிடும்'என்று மாற்றியது நான்தான்" என்று பின்னாளில் எழுதினார் கண்ணதாசன்" என்று இந்து நாளிதழில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற செய்தியின் வழியாகப் பாவேந்தரின் தமிழ்ப்பற்றையும் பிடிவாதத்தையும் அறியமுடிகிறது.

நிறைவுரை:

பகுத்தறிவுவாதியான பாவேந்தர் ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி போன்ற கதைகளுக்கு எழுதலாமா என்று கேள்வி எழுந்தது. அதற்குப் பாரதிதாசன், "மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றுவரும் திரைப்படத்துறையில் ஒரு நுழைவு ஏற்படுத்தியிருக்கிறேன். பிராண நாதா, ஸ்வாமி , சஹியே, தவசிரேஷ்டரே, போன்ற சொற்களை நீக்கி அருந்தமிழில் அத்தான், தோழி, குருவே என்று அழைக்க வைத்திருக்கிறேன். அசுரர்களாகக் காட்டப்பட்டு வந்தவர்களை தமிழ் அறிந்த இரக்கச் சிந்தை உடையவராகப் படைத்திருக்கிறேன். இந்தத் தொடக்க நிலையில் இதைத்தான் செய்யமுடியுமின்னும் முன்னேறி முற்போக்கு கருத்துக்குச் சிறப்பான இடம் அளிக்க முடியும் " என்று சொன்னாராம்.

'நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்

நான் நான் நான் 'என்று தன் தோற்றத்தை விளக்கும் பாவேந்தர் வெறும் பாரதிதாசனாக இல்லாமல் தமிழ்ப் புரட்சி செய்தவர். தமிழ் உள்ள வரை நிலைத்து நிற்கும் புகழுக்குரியவர். அவரது உண்மைக்கும் நேர்மைக்கும் உயர்வுக்கும் பறைசாற்றப் பல படைப்புகள் இருக்கின்றன. பழகுவதற்கு எளிமையானவர். இனிமையாகப் பேசுபவர். அன்பானவர். தனக்குத் தோன்றுவதை முகத்திற்கு நேராக பேசுபவர் . எதிர்கால தலைமுறையினர் பாவேந்தர் பாரதிதாசன் போன்ற சான்றோர்களின் படைப்புகளோடு அவர்களது வாழ்க்கை வரலாற்றையும் முழுமையாகப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்வியலை எளிதாக அணுக முடியும். எதிர்கொண்டு வெற்றியும் பெற முடியும்.

துணை நின்ற நூல்

1. பாரதிதாசன் ஆய்வுக்கோவை – முனைவர் சாயபு மரைக்காயர் (தொ)
2. பாரதிதாசன் – முருகுசுந்தரம்
3. பாவேந்தர் பாரதிதாசன் – பெருஞ்சித்தரனார்.
4. பாவேந்தரின் பாட்டுத்திறன் – பேரா.டாக்டர் ந.சு சுப்புரெட்டியார்.
5. பாவேந்தர் பாரதிதாசன் அறுசுவை விருந்து –முல்லை முத்தையா

இணையத் தரவுகள்:

1. https://www.hindutamil.in/news/supplements/hindu-talkies/75625--3.html.

பாரதியின் வழியில் பாரதிதாசனாரின் பன்முகப்பார்வைகள் எழுத்து:

முனைவர் ச.கவிதா
பேராசிரியர்(ம) நெறியாளர்
இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

எம்.சேகர் முனியான்டி, ஆசிரியர்
யுவான் சிங் மேல்நிலைப்பள்ளி, சிங்கப்பூர்,
முனைவர்பட்டஆய்வாளர் இந்திய மொழிகள்(ம)ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

"யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்",

என்றும்,

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்",

என்றும் பாடிய ஞானக்கவிஞனை, மகாகவி எனவும், பாட்டுக்கொரு புலவன் எனவும் தமிழ் அறிந்த தமிழினம் பாரெல்லாம் போற்றிப் பாடுகிறது. தேசிய உணர்வையும் நாட்டுப்பற்றையும் தனிமனித அகவாழ்வைப்பற்றியும் புறவாழ்வைப்பற்றியும் தம் பாடல்களின் வழி மக்களுக்கு ஊட்டியவன். அரச சபையிலும் புலவர், சான்றோர் சபையிலும் புகழாரமாய் வீற்றிருந்த கவிதை மாலையை சாதாரண நாட்டு மக்களுக்கும் சூட்டி அழகுப் பார்த்த மகாகவிஞன். சங்க காலம், காப்பியக் காலம், ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலம், கம்பனின் இராமாயணம் எனப் பல இலக்கிய அணிகள் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்திருப்பினும், இவையனைத்தும் குறிப்பிட்ட ஒரு சாரார் மட்டுமே படித்தும் பாடியும் போற்றியும் வந்துள்ளனர். ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் சிறைப்பட்டிருந்த தமிழ் மொழியை சுதந்திரப் பறவையாக தன் சிறகுகளை விரித்துப் பறந்திட வைத்தான் பாரதி.

இரண்டாயிரம் ஆண்டுகளாகச் சேமித்து வைத்திருந்த இலக்கியச் செல்வங்களை இந்தப் புதுப்புனல் சீரழிக்கவில்லை. அவ்விலக்கியச் செல்வத்தில் மேலைநாட்டுத் தென்றலைத் தவழவிட்டு ஒரு புதுமையான எளிய இலக்கியத்தைப் படைத்து வெற்றி கண்டது. இப்புதுத் தமிழ்க் கவிதை தேசிய உணர்வைத் தட்டி எழுப்பி, விடுதலை மேன்மையை உலக மக்களுக்கு எடுத்தியம்பி, தமிழின் பொலிவுகளை எடுத்தரைத்து தமிழரின் அகவாழ்வினுக்கு மேலும் அழகூட்டித் தமிழரின் ஆத்ம சிந்தனையை

எளிமையான செல்லாடல்களில் வரைந்து இன்றுவரை தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது.

இலக்கிய உலகில் தனக்கு முன்னால் வாழ்ந்த படைப்பாளன் ஏற்றி வைத்தக் கருத்துகளையும் சொல்லையும் பின்னாளில் வருபவர்கள் மீண்டும் சொல்வதில் தவறேதும் இல்லை. இதன் அடிப்படையில் இக்காலக் கவிதை இலக்கியத்தில் பாரதியின் தாக்கம் இருப்பதில் தப்பேதுமில்லை. இக்கால இலக்கியத்தில் பாரதியின் யுகமே வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கிறது என்றும் தைரியமாக முன்மொழியலாம் வழிமொழியலாம். இக்கூற்றை மேலும் வலிமையாக்கினார் பாவேந்தர் பாரதிதாசன் என்றால் அது மிகையாகாது.

இருபதாம் நூற்றாண்டில் எத்தனையோ தமிழ்க் கவிஞர்கள் தோன்றியிருந்தாலும் அவர்களில் முதன்மையானவன் பாரதி. தமிழ்ப் புலவர்கள் தமிழால் தகுதிப் பெறுகிறார்கள் என்பது போல்,

> "தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
> பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும்",

எனலாம். சிறந்த பாரதியியல் அறிஞர் எம். ஏ, நுஃமான்,

> "என்னைப் பொருத்த வரை தமிழர் வரலாற்றிலேயே முதலாவது தீவிர நவீன சிந்தனையாளன் பாரதியே",

என்கிறார். மேலும், பாரதியின் இயக்கவியல் உணர்வு, பழமை – புதுமை முரண்பாட்டில் புதுமைச்சாய்வு, வெகுஜனங்களின் நம்பிக்கை கொண்டு அவர்களின் எழுச்சிக்காக இதய சுத்தியோடு அர்ப்பணித்தல், எதற்கும் அஞ்சாமல் போராடும் குணம் போன்ற பண்புகளால் கவர்ந்திழுக்கப்பட்ட பாவேந்தர், கனக சுப்புரத்தினம் என்ற தனது பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். பாரதியைப்போன்று தனது பன்முகப் படைப்பாற்றலால் தமிழை உயிராய், உணர்வாய்க் கொண்டு வாழ்ந்தவர். இனி பாரதியின் வழியில் பாவேந்தரின் பன்முகப் பார்வைகளை காண்போம்.

தமிழ்மொழி

பாரதியின் கவிதைகள் வாயிலாகத் தமிழ்மொழியின் இனிமை, பெருமை, சிறப்பு ஆகியவற்றை அறிவதோடு மட்டுமன்றி தமிழ் இலக்கியங்களின் சிறப்பினையும் உள்ளாய்ந்து உணரமுடிகிறது. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை, என்று பாடி தமிழ்க்கவிஞர்களின் தனித்தன்மையை உலகுக்கு உரக்க முரசு கொட்டியவர்.

இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும் என ‘பிங்கல நிகண்டு’ உரைப்பது போன்று,

“தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவை கண்டார் அமரர் சிறப்பு கண்டார்”

என தமிழின் சுவை அமுதத்திற்கு நிகரானது என்று எடுத்துரைக்கின்றார்.
தமிழின் இனிமையையும் செம்மையையும் தனது கவிதைகளில் முன்நிறுத்திய பாரதியின் வழியில், கனக சுப்புரத்தினம் என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,

“தமிழுக்கு அமுதென்று பேர் – அந்த

தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிரிருக்கு நேர்....”

என்று பாடினார். பாரதி கண்ட மொழியின் தித்திப்பை, பாவேந்தர் அமுதமாகவும் உயிரினும் மேலானதாகவும் பார்க்கின்றார். இருபதாம் நூற்றாண்டு கவிஞர்களில் பாரதிதாசன் தமிழுக்கு நிறைய அடைமொழிகளைத் தந்து சிறப்பித்துள்ளார்.

எளிய தமிழில் பாரதி ஆரம்பித்த கவிதைச் சொற்கள் இன்று பல பரிமாண வளர்ச்சிப் பெற்று புதுப் புது வடிவங்களை நமக்கு இன்றளவும் ஈன்றுக்கொண்டிருக்கிறது. பாரதியின் வசன கவிதைகள்தான் இன்றைய புதுக்கவிதையின் முன்னோடி என பல இலக்கிய ஆய்வாளர்களின் கருத்தாகும் என்பதும் நாம் அறிந்ததுதான்.

தெய்வப் பாடல்கள்

“நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்

நிறைந்த சுடர்மணிப் பூண்......”

எனத் தொடங்கும் ஓம் சக்தி பாடலையும்,

“கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்

காவி யம்பல நீண்டன கட்டென்பார்”

எனத் தொடங்கும் பராசக்தி பாடலையும் பாடினான் பாரதி. அந்தப் பாரதியின் முன்னமர்ந்து,

“எங்கெங்கும் காணிலும் சக்தியடா”,

என்றுப் பாடினார் புரட்சிக்கவி. அதன் அழகும் பொருளும் அவரைப் பாரதிதாசன் என்று தமிழ்நாட்டிற்கு உணர்த்திற்று. கடவுள் மறுப்பு கொள்கையாளரான பாவேந்தர் ஆரம்ப காலங்களில் அம்மன் பாடல்களையும் முருகன் பக்திப்பாடல்களையும் பாடினார் என்றால், இன்றைய இளைஞர்கள் பலருக்கும் இது நம்ப முடியாத செய்தியாகவே இருக்கும்.

நாட்டுப்புறப் பாடல்கள்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்

தேன்வந்து பாயுது காதினிலே",

என்று தொடங்கும் பாடலில் தமிழ்நாட்டின் சிறப்பையும் பெருமையையும் மிகவும் அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருப்பார் பாரதி. அவர் தாம் வாழ்ந்த சூழலுக்கேற்ப விடுதலை முழக்கமிட்டார். அதில் மொழி உணர்வும் விடுதலை வேட்கையும் புதுப்புனலாய்ப் பொங்கி பாய்ந்தன. பாரதிதாசன் காலத்தில் மொழி விடுதலையைப் பற்றி பாடவேண்டிய சூழல் மிகுந்திருந்தது. விடுதலைக்குப் பின் தமிழகத்தில் மொழியடிமைத்தனம் குடிகொண்டது. இதைக்கண்டு வெகுண்டெழுந்த பாவேந்தர்,

"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை - என்

தாய் தடுத்தாலும் விடேன்",

என முழங்கினார். இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்றான் பாரதி. புதியதோர் உலகம் செய்வோம் என்றார் பாரதிதாசன்.

பெண்ணியம்

அக்காலத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டுமனம் வெதும்பிய பாரதி, புதுமைப்பெண்களைப் புரட்சிநாயகிகளாய் தம் கவிதைகளில் வாழவைத்தார்.

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

என்றும்,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவி லோங்கி இவ் வையம் தழைக்குமாம்"

என்றும்,

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்திவோம்"

எனவும் பெண்ணியத்தைப் பற்றி அன்றே நிறையவே எழுதியுள்ளார்.

ஆண் எப்படியும் வாழலாம் என்றும் பெண் என்பவள் இப்படித்தான் வாழவேண்டும் என்றும் ஆணாதிக்க வர்க்கம் எழுதாத சட்டங்களை உருவாக்கி, பெண் இனத்தை அடிமைப்படுத்தி வைத்திருந்த காலகட்டத்தில் பாரதிதாசன்,

“பெண்ணுக்கும் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ

மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை”,

என பெண்களுக்காக முழக்கமிட்டார். மேலும்,

“ஆண்உயர் வென்பதும் பெண் உயர் வெண்பதும்

நீணிலத் தெங்கனும் இல்லை”

எனத் தொடங்கும் பாடலில் பெண்ணியத்திற்கு விளக்கம் தந்துள்ளார்.

“கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு

வேரிற் பழுத்த பலா”,

எனக் கணவனை இழந்த பெண்களைப் பற்றி, தன் கவலையைச் சொன்னவர், விதவைகள் மறுமணம் செய்துகொள்ள வேண்டும் எனக்கூறிய அவர், கைம்மை என்ற சொல்லே தமிழில் கூடாது என்கிறார் ஆசிரியர்.

“பைந்தமிழைச் சீராக்க
கைம்மை என்னுஞ்சொல் நீக்கப்
பறந்து வாடி அழகிய மயிலே
இறந்த கால நடைமுறை தொலையவே”

தொழிலாளர் பாடல்கள்

“கரும்புத் தோட்டத்திலே – அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்துகின்றனரே”,

என்று தனது கரும்புத்தோட்டத்திலே பாடலில், பாரதி தொழிலாளர்களின் அவல நிலையை எண்ணி வருந்துவதாகப் பாடல் அமைகிறது. பாரதிதாசனும்,

“சித்திரச் சோலைகளே உமை நன்கு
திருத்த இப்பாரினிலே முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரே
உங்கள் வேரினிலே”

எனப் பாடினார்.

சிறுவர் பாடல்கள்

மகாகவி,

> "ஓடி விளையாடு பாப்பா – நீ
> ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
> கூடி விளையாடு பாப்பா – ஒரு
> குழந்தையை வையாதே பாப்பா"

என்றார். அவ்வழியில், பாரதிதாசனின் இசைப்பாடல்களில் சிறுவர்களுக்கான பாடல்களும் புனையப்பட்டுள்ளன.

> "தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
> சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை
> சிலைபோல் ஏனங்கு நின்றாய் – நீ
> சிந்தாத கண்ணீரை என் சிந்துகின்றாய்"

அன்று, பெண் குழந்தைகளுக்குக் கல்வித் தேவையில்லை என்று வீட்டு வேலைக்கு வைத்திருக்கும் வழக்கம் இருந்த காலம். அந்தக் காலத்தில் ஒரு தந்தை தன் பெண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு வற்புறுத்தி அனுப்புவதைப் போல இந்தப் பாடலைப் இயற்றியிருப்பார் பாவேந்தர் பாரதிதாசனார்.

ஆத்திசூடி

பாவேந்தர் பாரதிதாசன் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தவர். மாணவர்களுக்கு வகுப்பில் தமிழைக் கற்பிக்கும்போது ஔவையார், பாரதியார் ஆத்திசூடிகளையும் போதித்தார். மேலும், பாரதியார், 'ரஸத்திலே தேர்ச்சி கொள்' என்ற ஆத்திசூடி வரி எழுதும்போது உடனிருந்தவர் பாரதிதாசன். இதுவே பிற்காலத்தில் குயில் இதழ்களில் இவரையும் ஆத்திசூடி எழுதத் தூண்டியது.

பாரதிதாசன் ஆத்திசூடி

பாரதிதாசனின் முற்போக்குக் கருத்துகளின் குவியலாகத் துலங்கும் 'ஆத்திசூடி', ஔவையர், பாரதியார் ஆத்திசூடிகளிலிருந்து வேறுபட்டது. சுருக்கமும் தெளிவும் உடையது.

> அனைவரும் உறவினர்
> ஆட்சியைப் பொதுமை செய்
> இசைமொழி மேலதே
> ஈதல் இன்பம்
> உடைமை பொதுவே

ஊன்றுளம் ஊறும்
எழுது புதிய நூல்
ஏடு பெருக்கு
ஐந்தொழிற்கிறை நீ
ஒற்றுமை அமைதி
ஓவியம் பயில்
ஔவியம் பெருநோய்
கல்லார் நலிவர்

'காற்றைத் தூய்மை செய்' ஆகிய பதினான்கு ஆத்திசூடி வரிகள் பாயிரத்துடன் வெளியிடப்பட்டுள்ளன. பின்பு முழுமையாக எழுதித் தொகுத்து, 'பாரதிதாசன் ஆத்திசூடி' என்ற தலைப்பில் 1949 இல் உரையுடன் வெளியிட்டார் பாவேந்தர்.

சிறுகதை

பாரதியார், சில வேடிக்கைக் கதைகள், கிளிக் கதை, குதிரைக் கொம்பு, தேவ விகடம், மழை, காக்காய் பார்லிமெண்ட், புதிய கோணங்கி, கலியுக கடோற்கசன், மிளகாய் பழச் சாமியார், சந்திரத் தீவு போன்ற கதைகளை எழுதியுள்ளார். அவர் வழியில் பாரதிதாசனாரும்,

'மனச்சாட்சி, தேசிய பத்திரிக்கைகள், தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது, திருந்திய இராமயணம், கடவுள் மகத்துவம், வைத்தால் குடுமி, கண்ணுக்குத் தெரியாத சுமை போன்ற கதைகளையும் எழுதியுள்ளார். அதில் பல கதைகள் அங்கத உணர்வுடனும் பகுத்தறிவு சிந்தனைகளை அறிவுறுத்துவதாகவும் அமைந்திருக்கின்றன.

இதழியல்

மகாகவி பாரதியாரை இதழியல் புதுமையாளர், பத்திரிக்கைத் துறை பகவலன் என்றும் போற்றுவதுண்டு. சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியைப் புரிந்த பாரதியார், 'எழுதுகோல் தெய்வம். இந்த எழுத்தும் தெய்வம்' என்று இதழியலைக் கொண்டாடினார். அவர் சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதா, விஜயா, கர்மயோகி, தர்மம், சூரியோதயம் போன்ற இதழ்களில் சிலவற்றில் ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். பாரதிதாசனும் தேன்மழை, குயில், தென்றல், இந்தியா போன்ற இதழ்களை வெளியிட்டுள்ளார்.

சென்னையிலும் புதுச்சேரியிலும் தொடங்கிய 'இந்தியா' இதழுக்குப் பாரதியார் மறைமுக ஆசிரியராக இருந்தார் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

இவரைப்போன்றே பாவேந்தர் அவர்களும் 'புதுவை முரசு' வார இதழுக்கு மறைமுக ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப் பொண்ணோ உன்
நலம்காணார் ஞாலம்காணார்'

என்று இதழ்த்துறை வளர்ச்சிக்கு உயர் கருத்து வழங்கிய வள்ளல் பாவேந்தர் பாரதிதாசனாரின் பார் போற்றும் வரிகளைப் பார்ப்போம்.

ஏற்றமுறச் செய்வதுவும்
மாற்றமுற வைப்பதுவும்
ஏடே யாகும்'.

பாவேந்தரின் இதழ்கள், அவருடைய இலக்கிய வளர்ச்சிக்கும் இலக்கிய மலர்ச்சிக்கும் இலக்கிய உலகில் அவர் பெற்ற வீறு சார்ந்த புலமைக்கும் புகழுக்கும் வித்தாகியிருக்கிறது என்றால் அது மிகையாகாது. மேலும், அவரின் பன்முகப் படைப்புகள் எக்காலத்தின் தேவைக்கேற்பவும் தமிழ் மொழிக்கும் தமிழினத்திற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் புத்தொளி தரத்தக்க சிந்தனை வளத்தை வழங்கியுள்ளன.

இவ்வாறாகப் பாரதியின் கனவுகளைத் தன் இலட்சியக் கனவுகளாகக் கொண்டு புரட்சிக்கவி பாரதிதாசனும் தன் எழுத்தாளுமையின் செம்மையில் பாரதிக்குப் பின்னும் அவர் ஏந்திய புரட்சித் தீபத்தை அடுத்த தலைமுறைப் படைப்பாளருக்குள்ளும் கடத்திச் சென்றுள்ளார் என்பதும் இன்றளவும் வரும் படைப்புகளின்மூலம் நம்மால் உணர்ந்து கொள்ளமுடிகிறது.

இருண்ட வீடும் – சமூகமும்

முனைவர் ச.கவிதா
பேராசிரியர்(ம) நெறியாளர்
இந்திய மொழிகள் (ம) ஒப்பிலக்கியப்பள்ளி
, தமிழ்மொழி நிலையம், சிங்கப்பூர்
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
skavithatamil@gmail.com

திரு.த. அன்பழகன் எம்.ஏ, பி.எட்
தமிழாசிரியர், உமறுப்புலவர்
முனைவர்பட்டஆய்வாளர் இந்திய
மொழிகள்(ம)ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
ahilarmi02@gmail.com
+6597270267

முன்னுரை

சமூகத்துக்கான தேவைதான் படைப்பாளர்களை உருவாக்குகிறது. ஒவ்வொரு காலகட்டத்திற்கு ஏற்பவும் அந்தந்தக் காலக்கட்டத்தில் மக்களிடம் உள்ள பெரும் பிரச்சனைகளையும் அவர்களுக்கானத் தேவைகளையும் படைப்பாளர்கள் கையிலெடுத்துப் பேசத் தொடங்குகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிகளிலும் இந்தியச் சமூகம் குறிப்பாகத் தமிழ்ச் சமூகம் சந்தித்த அவலங்கள் மிகுந்த கவனத்திற்குரியதாகவே இருந்தன. சாதி, சமயம், இன ஒற்றுமையின்மை இவற்றோடு கல்வி அறிவின்மை போன்ற பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக அவலமுற்றிருந்ததாகவே அறிய முடிகிறது. குறிப்பாகக் கல்வியறிவு அடிப்படைத் தேவை என்ற எண்ணமே அனைத்துத்தரப்பினருக்கும் முற்றிலுமாக இல்லாதிருந்தது. அதன் காரணமாக மூடப் பழக்கவழக்கங்கள் தலைத்தூக்க ஆரம்பித்து விட்டன. இத்தகைய சூழலில்தான் பாரதிதாசன் இருண்டவீடு என்னும் காவியத்தைப் படைக்கிறார்.

கல்வி என்னும் பேரறிவு.

அறங்களில் எல்லாம் தலைசிறந்த அறமாகக் தன்மை மற்றும் பயன்கள் கருதிக் கல்வியும் கல்வி வழங்குதலுமே கருதப்படுகிறது. "ஒரு சமுதாயம் பெற்றுள்ள அறிவின் அளவு, ஆழம், இயல்பு, நுண்மை, இவற்றுக்கேற்ப சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியும் பண்பாடும் அமைகின்றன." **(க.நாராயணன். 2003, பக்: 40)**[1] கடற்கரை ஓரத்தில்

பசியோடு திரிகின்ற மக்களை கண்ட இயேசு இந்தக் கடலில் எல்லாம் இருக்கிறது, 'தங்கக் கட்டிகளை விடவும் மேலானது கல்வி' என்கிறார் முகம்மது நபிகள். கேடு விளைவிக்காத மிக உயர்ந்த செல்வம் கல்வி. **(திருக்குறள்: 400)**[2] ஒருமுறை ஒரு மனிதன் தான் கல்வி கற்று அதன் வழியிலான அறிவைப் பெற்றால் அதனாலான பயன் அவனுக்குப் பிறகு ஏழு தலைமுறைகளுக்கும் பயன்படும் **(திருக்குறள்:398)**[3] என்கிறார் திருவள்ளுவர். "அன்ன சத்திரங்கள் ஆயிரம் எழுப்பினும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல் மேலானது" என்கிறார் பாரதியார். இத்தகைய சிறப்பு மிக்க கல்வி சமூக வளர்ச்சிக்கும், குடும்ப வளர்ச்சிக்கும், தனிமனித வளர்ச்சிக்கும் பயன்பாடுடையதாக விளங்கக்கூடியது. தானாகவோ அல்லது பிறரிடமிருந்தோ ஒரு விசயத்தைக் கற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றல் படைத்த அனைவரும் அறிவுள்ளவர்கள்தாம். ஆயினும் கல்வி கற்றல் வழிப் பெறக்கூடிய அறிவு பேரறிவாகக் கருதப்படுகிறது.

பாரதிதாசன்

1891 ஆம் ஆண்டு புதுவையில் பிறந்த பாரதிதாசன், பாரதியாரின் தேசிய மற்றும் மொழிப்பற்றுகளால் ஈர்க்கப்பட்டதைப் போல், தந்தைப் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளாலும் ஈர்க்கப்படுகிறார். அன்றைய சூழலில் சமூகத்துக்குப் பெரிதும் பயனுடைய அதே நேரத்தில் கைக்கெட்டாத இடத்துக் கல்வியையும், அதனாலான பயனையும் வைத்திருக்கும் அரசியல் சூழலையும் பற்றற்று இருக்கும் மக்களையும் கண்டுக் கோபமுற்று, இக்காவியத்தைப் படைக்கிறார். அனைத்தையும் மீறிக் கல்வி கற்குமாறு மக்களைத் தூண்டுகிறார்.

எளிய நடை, எளிமையான சொற்கள், பொதுமக்கள் விரும்பும் மெட்டு, ஆகியன கொண்டு கவிதைகள் எழுத வேண்டும் என்றெண்ணிப் பாரதியின் குறிக்கோளைப் பின்பற்றி எழுதுகிறார். தமிழ்க் கவிதை வரலாற்றில் தமக்கு முன்னும் பின்னும் வேறெந்தப் படைப்பாளியும் பாடாத அளவிலும், முறையிலும் அவர் தமிழையும், பகுத்தறிவையும் பாடியுள்ளார். சமுதாயம் குறித்த கவிதைகளில் மூடநம்பிக்கை எதிர்ப்பு, சமய எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, பிராமணிய எதிர்ப்பு ஆகியன முன்னிறுத்தப்படுகின்றன. குறிப்பாகப் பெண் கல்வியையும், அவளுக்கான சமூக மதிப்பையும், கைம்பெண் திருமணத்தையும் வற்புறுத்துகிறார். கல்வியில்லையேல்

மக்களுக்கு அறிவு வளர்ச்சி இல்லாமல் போய்விடும்; ஒழுக்கமில்லாத சமூகமாக இந்தச்சமூகம் மாறிவிடும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

இருண்ட வீடு - கதைச் சுருக்கம்

இருண்ட வீடு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்ட செய்யுளாகும். கதை ஒரே ஒருநாள் ஒரு வீட்டுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகளாகும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் நாடகக் காட்சி என்னும் முறையில் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இது முப்பத்திரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முப்பத்து மூன்றாவது பகுதியில் கல்வியின் இன்றியமையாமை குறித்து மிகச் சிறந்த விளக்கம் ஒன்றினை வழங்குகிறார். “தலைமுறைக்குத் தலைமுறை அறிவு வளர்ச்சி காணும் சமுதாயம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடையும் என்பதில் ஐயமில்லை. தலைமுறை மாற்றத்தைத் தலையான கடமையாகக் கொண்ட ஒரு சமுதாய அமைப்பே குடும்பம்.” **(க.நாராயணன். 2003, பக்:43)**[4] என ஒரு சமூகத்துக்கான குடும்பத்தின் அமைவு குறிப்பிடப்படுகிறது.

கதை சொல்வதில் பாரதிதாசன் மிகவும் கெட்டிக்காரர். இருண்ட வீட்டின் கதை இப்படித்தான் தொடங்குகிறது. அதிகாலையில் எழும் சூரியன் அதிகாலையில், குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி எழாமல் உறங்கிக்கொண்டிருக்கும் பெண்ணைக் கவனத்தில் கொண்டு தொடங்கப்படுகிறது. “வீட்டின் தலைவியைக் காலைக்கதிரவன் எழுப்ப முயன்றான். அவள் கண்ணைத் திறந்து பார்த்து விட்டு மறுபடியும் தூங்கினாள். பால்காரன் வந்து பாலைக் கறந்து, அப்பாத்திரத்தைத் தினமும் வைக்கவேண்டிய இடத்தில் வைத்து விட்டுப் போகிறான். நோயால் தலிவுற்றிருந்த குழந்தை சுத்திக்கொண்டிருந்தது. அதனைப் பொருட்படுத்தாமல் தாய் தூங்கிக் கொண்டிருந்தாள். சொத்தைப் பல்லைச் சுரண்டிக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த தந்தையும் அதைக் கவனிக்கவில்லை. ஆறரை மணிக்கு இரிசன் என்பவன் பாலைக் கொணர்ந்து வைத்தும் சென்றான். பெரிய பையன் எழுந்தான். பிட்டுத் தின்னும் ஆசையில் அவசரமாகப் பல் துலக்கினான். தண்ணீர் என நினைத்துப் பால் செம்பை எடுத்து முகம் கழுவினான். பால் எனத் தெரிந்ததும் 'இடையன் இவ்வாறு சிந்தினான் என்று தந்தையிடம் கோள் மூட்டினான். அவரும் அவன் வந்தால் உதைப்பதாய் வாய் மலர்ந்து அருளினார்.

தூக்கத்திலிருந்து உடலை நெலித்துக்கொண்டு தலைவி எழுந்தாள். தூக்கக் கலக்கத்தில் அவள் செய்வதெல்லாம் முட்டாள்தனமாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது. தேய்ந்து பிய்ந்த துடப்பம் போல் அலங்கோலமாகக் கோலமிட்டாள். அவனைக் கண்டு பரிதியின் கண்கள் நடுங்கின என்கிறார் ஆசிரியர். பெரிய பையன் அம்மாவிடம் வீங்கிய தன் உதடுகளைக் காண்பிக்கிறான். அதற்கவள் பொறுப்பற்றவளாக சாணியைப் பூசினால் குணமாகும் எனக் கூறுகிறாள். அவன் மீண்டும் பிட்டினை உண்ணச் சென்றான். ஆனால் அதற்குள் அதனை நாய் உண்டுவிட்டது. மீதமிருந்த பிட்டினை நோயுற்றுக் கிடந்த குழந்தையின் வாயில் திணித்தாள்அம்மா. பாவம் குழந்தை, 'தாயே எனக்கிது சாகும் நேரம் என்று வாயால் சொல்லும் வல்லமை இல்லை அறிவெனும் வெளிச்சம் அங்கே இல்லை மடமை மட்டுமே மகிழ்ந்து கிடந்தது.

'இந்த வீட்டில் இருளன் புகுந்ததால் தான் குழந்தை நோயால் நொந்தது. எனக் கண்டறிந்த தலைவி மந்திரவாதியை அழைக்க வேண்டும் என்று வேலைக்காரியிடம் சொன்னாள். அதற்கும் இராகுகாலம் தடையாயிற்று. 'வேண்டாம் என முடிவு செய்து காப்புக்கட்ட வேப்பிலை ஒடித்தனர். தாங்கள் குடியிருக்கும் அழகிய வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளத் தெரியவில்லை. ஒட்டடையும் குப்பையுமாக இருந்த வீட்டில் எலிகளும் பூனைகளும் மகிழ்ந்திருந்தன. வெளியூர் செல்ல ஏற்பாடு செய்திருந்தார் தலைவர். அந்த நேரத்தில் அவருடைய மைத்துனர் வீட்டுக்குள் நுழைகிறார். படியில் கால் இடறிற்று. நல்ல குறி தோன்றும் வரையில் வீட்டினுள் வர வேண்டாம் என்று தடுத்தார் தலைவர். அதனால் அவர் மாட்டுக் கொட்டிலில் கொசுக்களால் முடுண்டு கிடந்தார். தலைவர் வெளியூர் சென்றார். மைத்துனர் தாம் வாங்கி வந்த தின்பண்டங்களைக் குழந்தையைச் சுற்றிப் பரப்பினார். 'வேம்பின் பழம்பூ விரிதரை போலவும், ஈயின் காடும் எறும்பின் காடும் ஆயிற்று. பெரிய பையனுக்கு விளையாட்டுத் துப்பாக்கி வாங்கி வந்திருந்தார். அவனுக்கு மகிழ்ச்சி ஆனால் அவனால் வீங்கிய உதடுகளால் சிரிக்க இயலவில்லை. 'வெள்ளைப் பற்கள் வெளித் தோன்றாமல் பிணம் சிரிப்பது போல் பெரிதும் சிரித்தான்.' தலைவி அதனை வாங்கிப் பெட்டியின் மீது வைத்தாள். 'தான் சாதகம் பார்த்ததாகவும், பெரிய பையனுக்கு பத்தொன்பது வயது வரை படிப்பு வராதெனவும், அதன் பின் உலகையே என்னென்று கேட்குமளவுக்கு அறிவாளியாவான் எனவும், சிறுகுழந்தைக்குத் தொண்ணூறு வயதுவரை ஆயுள்

எனவும், தற்போது கல் மீது போட்டால் கூட உயிர் போகாதாமெனவும்' தலைவி கூறினாள். அண்ணன் தனது பசியைப் பலமுறை தெரிவித்தும், தங்கை அவன் வந்த வண்டியையே புகழ்ந்து கொண்டிருந்தாள். அண்ணனும் தங்கையும் உரையாடியிருந்தனர். திரும்பிவந்த தலைவர் தம்மிடம் கடன்பட்டிருந்தவன் "ஐதராபாக்கம் ஓடிவிட்டதாகக் கூறினார். அப்போது திருமண அழைப்பிதழ் என்று நினைத்திருந்த கடிதத்தை அண்ணன் வாசித்தார். அதில் 'கடன் வாங்கியவன் ஓட முடிவு செய்துள்ளான். விரைவில் வந்தால் பணம் பெறலாம்' என்றிருந்தது. கொதித்துப்போன தலைவர் தம்மிடம் கடிதத்தைக் காட்டாதிருந்தமைக்காகத் தலைவியைத் திட்டினார். அவளும் பதிலுக்குத் திட்டினாள். 'வந்த அண்ணள் வந்த வழியே சந்தடியின்றிச் சடுதியில் சென்றார்.

திட்டியும் கோபத்தில் குதித்தும் சண்டையிட்ட தந்தை கோபித்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டார். தம்மை யாராவது தடுப்பார்கள் என்று எதிர்பார்த்தார். ஆனால் யாரும் ஏதும் செய்யாததால் 'திரும்பிப் பார்த்துத் தெருவொடு சென்றார். தலைவியும் பெரிய பையனும் மண்ணெண்ணெய்யான கையோடு உணவை உண்டனர். மீந்த சோற்றினை வேலைக்காரிகள் தங்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்றனர். தலைவியும் பெரிய பையனும் தூங்கத் சென்றனர். தலைவர் திரும்பி வந்து, தனது கைவிரல் பதியும்படி கதவைத் தட்டினார். பிறகு அழுந்தத் தட்டினார். அங்கையாலே அடித்தார், இடித்தார், படபடவென்று எட்டி உதைத்தார். இருநூறு தடவை முதுகைத் திருப்பி முட்டியும் பார்த்தார். அண்டை வீட்டில் இருந்தோர்களும் எழுந்து வந்தனர்; ஆனால், தலைவியின் தூக்கம் கலையவே இல்லை. பின்னர் எலிகடித்ததால் எழுந்த தலைவி 'மெதுவாய் எழுந்து நின்று பின்னர் நடந்து சென்றுக் கதவைத் திறந்தாள். உணவில்லாமல் இருப்பதைப் பார்த்துப் பசியால் வருந்திய தந்தை என்னும் தலைவர் சாப்பிட மாட்டேன் சத்தியம் என்றார். இரவு அனைவரும் தூங்கியிருந்தனர். திருடன் ஒருவன் வீட்டுக்குள் நுழைந்து சாவியைத் தேடி எடுத்து அலமாரியைத் திறந்தான். ஓசைகேட்டு நாய் குரைத்தது. வீட்டில் உள்ளோர் அனைவரும் அது தெருவில் எதையோ கண்டு குரைத்ததாக எண்ணி மீண்டும் தூங்கினர்.

திருடனைத் தேள் ஒன்று நன்றாகக் கொட்டிவிட்டது. தலைவர் விலக்கை ஏற்றினார். திருடனைப் பார்த்தவுடன் பெட்டியின் மேலிருந்த பொம்மைத் துப்பாக்கியை

எடுத்தார் பயந்து போன திருடன் "என்னைச் சுடாதீர் என்று கூறி. எடுத்த பணத்தைக் கொடுத்துவிட்டுத் தப்பியோடவும் முடிவு செய்தாள். "எடுத்ததை வைத்துவிட்டு ஓடு; இல்லையேல் சுடுவேன் என்று மிரட்டினார். தலைவர். விழித்தெழுந்த பையனோ அப்பா, அப்பா அத்துப்பாக்கி பொய்த் துப்பாக்கி, தங்கை வெடிப்பது என்னிடம் கொடு என்றான். திருடனுக்கு அச்சம் தீர்ந்து போயிற்று "இதுவா தெருவுக்கு ஏற்ற வழி என்று கேலி பேசுவதுபோல் கேட்டுத் தப்பித்துச் சென்று மறைந்தான்.

கோபமடைந்த தந்தை கல்லைத் தூக்கிப் பையன் மீது எறிந்தார். அது குறிதவதி மனைவியின் மார்பில் விழுந்து. தாயால் மகனும் மடிகிறான். யாரும் கவனிக்காத சூழலில் சிறு குழக்கையும் இறந்துபோயிற்று. ஊரோர் கூடினர் காவலர்கள் விஜாரணைக்கு வந்தனர்.

கல்வியறிவு இல்லாத கதைத் தலைவன்

இக்கதையில் தலைவனுக்குப் பெயர் குறிப்பிடப்படவில்லை. பெயர் வைக்கும் அளவுக்கு அவர் மனிதர் இல்லை என ஆசிரியர் விட்டுவிடுகிறார். வீட்டுக்காரர் எனக் குறிக்கப்பெறும் இவர் பகுத்தறிவற்ற மூடத்தனத்தின் மொத்த உருவமாகவும், செயலாற்றும் திறனற்றவராகவும் இருக்கிறார். வீட்டிலேயே வட்டித் தொழில் செய்யும் அவர், அதிலும் கவனமில்லாதவராக இருக்கிறார். வீட்டிலுள்ள சுணக்குப்பிள்ளை வேலை செய்வதையும் மேற்பார்வையிடவில்லை. குழந்தை நோயுற்றிருப்பதையும் படிக்காமல் இருப்பதையும் குறித்து எந்தக் கவலையும் இல்லாதவராக இருக்கிறார். மூத்த மகன் தன தவறை மறைப்பதற்காக இடையனை உதைப்பதாகக் கூறுகிறான். ஆனால் அதை அவர் கண்டிக்கவில்லை . தன் வீட்டுக் சுடி காரத்திற்கும் அடுத்த வீட்டுக்காரனை அழைத்துச் சாவி கொடுக்கச் சொல்பவர், வீட்டில் தலைவி சோம்பி இருப்பதையும் வேலைக்காரர்கள் வேலை செய்யாமலிருப்பதையும் அவர் கண்டிக்கவில்லை. குடும்பத்தின் அழிவிற்கு இவரே காரணமானார், சிக்கல்கள் நேரும்போது மனைவியை, 'எங்கிருந் தாயடி என்குடிக் கிப்படி மங்கிப் போக வைத்தாய் காலடி பொங்க லாண்டி யாகப் போம்படி புரிவ தெல்லாம் மிகவும் அழும்படி' எனத் திட்டுகிறார். ஆனால் என்றும் தம் குறையை உணராதவராக இருக்கிறார்.

சினந்துகொண்டு சாப்பிடாமல் வீட்டை விட்டுச் செல்கின்ற அவர் இரவு திரும்பி வந்து கதவைத் தட்டுகிறார். திறப்பதற்கு இரண்டு மணி நேர மாகிறது. உணவுக்காகக்

கூச்சலிடுகிறார். சட்டி பானைகளை உருட்டுகிறார். வெண்ணெய்த் தாழியைத் தள்ளுகிறார். எல்லாம் முடித்தும் ஏதும் நடக்காததால் சாப்பிட மாட்டேன்' எனச் சத்தியம் செய்கிறார்.

தலைவர் கல்வி அறிவற்றவர். ஆதலால் எதனையும் அறிவுக்கள் கொண்டு காண அவருக்கு இயலவில்லை. உணவு உண்ண வரும்போது பல்லிகள் ஓசையெழுப்புகின்றன. அதனால் சாப்பிடாமல் எழுந்து விடுகிறார். மைத்துனர் விருந்தினராக வருகிறார். அப்போது வாயிற்படியில் கால் இடறுகிறது. உடனே இவர் உள்ளே வரவேண்டாம் எனக் கூச்சலிடுகிறார். மைத்துனரோ நல்ல நேரம் வரும்வரை கொசுக்கடியில் கொட்டடியில் படுத்துக் கிடக்கிறார். இவ்வாறு முடத்தனத்தின் மொத்த காட்சி தருகிறார்.

இரவு தூங்குவதும் விழிப்பதுமாகத் தலைவர் படுத்துக்கிடக்கிறார். அப்போது திருடன் உள்ளே நுழைகிறான். விளக்கை அணைத்துவிட்டு அலமாரியைத் தேடுகிறான் தலைவியின் தலைமாட்டில் சாவியைத் தேடுகிறான். சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த தலைவரின் அருகில் இருந்த பெட்டியின் மேலிருந்த சாவியை எடுக்கிறான் எதையும் தலைவர் அறியாதவராக இருக்கிறார். நாய் குரைக்கிறது எதனையோ பார்த்து அது குரைப்பதாக எண்ணி எழாமல் படுத்துள்ளார். பணத்தை எடுத்தத் திருடன் அதனையோர் பொத்தல் பையில் இடுகிறான் காசுகள் கீழே விழுந்து ஒனை யெழுப்புகின்றன. தலைவி பற்களைக் கடிப்பதாகத் தலைவர் நினைக் கிறார். திருடன் காலில் தேன் கொட்டுகிறது. அவன் காலிலை உதறுகிறான். அது தகரப்பெட்டியின் மீது படுகிறது. ஒசைகேட்ட தலைவர் விளக்கேற்று கிறார். திருடனைக் கண்டு அச்சுறுத்த எண்ணி, மைத்துனர் வாங்கிக் கொடுத்த பொம்மைத் துப்பாக்கியை எடுத்துக்காட்டித் திருடனை மிரட்டுகிறார்.

எடுத்ததை வைத்துப் பிடியடாஓட்டம்

சுடுவேன் பாரடா சுடுவேன்

என்று கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டுகிறார். ஆனால் இவருடைய மூத்த மகன் சூழ்நிலை அறியாமல்,

..... அப்பா ...

அத்துப்பாக்கி பொய்த்துப்பாக்கி,

தங்கை வெடிப்பது என்று உளறிக் கொட்டி விடுகிறான். .

திருடனுக்கு அச்சம் தீர்த்து போயிற்று

மெதுவாய் நடந்து வெளியிற் செய்கையில்

இதுவா தெருவுக்கு ஏற்ற வழியென்று

திருடன் கேட்டுச் சென்று மறைந்தான்.

(இருண்டவீடு, பாடல்: 29-31) [5]

இவ்வாறு பையனுடைய அறியாமையால் பணம் போயிற்று, திருடன் வெளியேறும் வரை அச்சத்துடன் இருந்தனர். அவன் தெருவைக் கடந்துசென்ற பின்னர் தலைவர் அலறினார். கடுமையான சினம வந்தது. சந்தனக் கல்லைத் தூக்கிப் பையன்மீது எறிந்தார். அது குறிதவறிப் போய் மனைவி மீது விழுந்தது. அவள் 'ஆ' என்று கதறினாள். அது அவளது கடைசிக் கூச்சல்! அடுத்ததாக அவர் குறிதவறாமல் எறிந்த முக்காலியால் பெரியவன் முடிவை அடைந்தான் நோயுற்ற குழந்தையோ முன்பே இறந்து போனது. இவ்வாறு குடும்பம், தொழில் எதனையும் நடத்தத் தெரியாதவராக தலைவியைத் திருத்த இயலாதவராக, குழந்தைகளை வளர்க்கும் அறிவற்ற வராக அவ்வீடு இருண்டு போவதற்குக் காரணமாக அமைகிறார் தலைவர்.

கல்வியறிவும் குடும்பப் பொறுப்பும் இல்லாத கதைத் தலைவி

இருண்ட வீட்டின் கதைத் தலைவிக்கும் பெயர் சூட்டப் பெறவில்லை. படிப்பறிவற்றவளாகவும் தன்னைக்கூடப் பேணிக்கொள்ளவியலாத வளாகவும் இருக்கிறாள். ஓர் இல்லத் தலைவிக்குரிய பணிகளில் எதனை யும் முறையாகச் செய்யும் வினைத் திட்பமும் அழகியலும் இல்லாதிருக் கிறாள். மனைவியாக இருக்கிறாள், ஆனால் கணவனுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்வதில்லை. குழந்தை பெற்றவள். ஆனால் அவை நோயுறும் போது காக்கத் தெரியாதவள் குழந்தைகட்குக் கல்வியறிவு புகட்டும் எண்ணமும் இல்லாதவள். அவளுக்குக் கோலமிட வேண்டும் என்பது மட்டும் தெரிகிறது. ஆனால் ஒரு சிரத்தையுமின்றி அலங்கோல மாக மட்டுமே அவளால் இடமுடிகிறது.

கணவனுக்கும் மனைவிக்குமிடையே நல்லன்பே இல்லை. சுணவனுக்கு உணவினைக் கூட வேலைக்காரியே பரிமாறுகிறாள் ஈ மொய்த்த பண்டத்தைத் தின்று

தலைவர் வாந்தி எடுக்கும்போது கூடக் கலங்காத வளாக இருக்கிறாள். கணவனுக்கு உணவு வைக்காமல் உண்டுவிட்டு உறங்கு கிறாள்.

தலைவர், உரிய நேரத்தில் தமக்கு வந்த கடிதத்தைக் கொடுக்கவில்லை எனத் தலைவியை அவளது அண்ணன் முன்பே திட்டுகிறார். 'பதரோ என்கிறார். அதற்கவள் 'அடக்கு' என்று எதிர்மொழி கொடுக்கிறாள். இனி நீ உருப்பட மாட்டாய் எனச் சபிக்கிறார் அவருக்குச் சார்பாகப் பேசும் வேலைக்காரியிடம் 'சீச்சீ இவரொரு சின்னப் பிறவி' என்கிறாள். தனக்குச் சோறிடும்படி வேலைக்காரியைக் கேட்கிறாள் ஒரு சிறிதும் அன்பற்ற நிலையில் அவளது குடும்பம் அழிகிறது.

சோம்பலின் மொத்த உருவமாக இருக்கிறாள். காலையில் எட்டரை மணிக்கு மேல் எழுகிறாள். நாயும், பகவும் கதறுவதையோ, நோயில் குழந்தை அழுவதையோ அவள் பொருட்படுத்தவில்லை. தூக்கக் கலக்கத்தில் சாணத்தைப் பாலில் கலந்து வாசலில் தெளிக்கிறாள். தன் வீட்டு மணிப் பொறிக்கு அண்டை வீட்டுக்காரன் சாவி கொடுக்கவில்லை எனக் கூறித் திட்டுகிறாள்.

'வேலைக் காரி விடிந்தபின் வருவாள்

பாலைக் காய்ச்சிப் பருகலாம் என்றாள்

எட்டரை அடிக்கையில் இப்படிச் சொன்னாள்'

(இருண்டவீடு, பாடல்: 5) [6]

என்று. பாலைக் காய்ச்சக் கூட வேலைக்காரியின் வருகையை நாடும் அவளது சோம்பல் தனத்தைச் சுட்டுகிறார் கவிஞர்.

வேலை செய்ய வேலைக்காரர்கள் பலர் இருந்தும் வீடு தூய்மையாக இல்லை பழங்கால அறைக்குள் பதுங்கியிருந்த கிழ எலிகள் வீடு முழுதும் ஆடல் செய்தன. பாளையை உருட்டித் தயிரினைப் பூனை குடித்தது. காக்கைகள் வட்டிலில் இருந்த சோற்றை வீட்டுக்குள் வந்து தின்றன. ஒட்டடை மழையாகக் கொட்டியது. வேலைக்காரர்கள் வீட்டுப் பொருட்களைக் கொண்டு சென்றனர். குடும்பக் குறைபாடுகளுக்குத் தலைவியின் சோம்பலே காரணமாகும்.

வீட்டு வேலையில் மட்டுமன்றி, தான் ஒரு தாய் என்ற நிலையில் குழந்தை கட்குச் செய்ய வேண்டிய சுடமைகளிலிருந்தும் அவள் தவறுகிறாள். காலைக்கடனைக் கூடக் கழிக்காமல் வடை தின்று, மாட்டின் மீது தடுக்கி விழுந்து பற்களை இழந்து வந்து

நிற்கின்ற பையனுக்குப் புண்ணிற்குச் சாணியைப் பூசினால் சரியாகும் என்கிறாள் தலைவி. அந்த மருத்துவமும் உடனே செய்ய வேண்டியது அவசியமில்லை என்கிறாள்.

விருந்தினர் வரும்போது வரவேற்பது பண்பு. ஆனால் இவ்வீட்டிலோ தன் உடன்பிறந்தார் விருந்தாக வர அவரை நாய்தான் குரைத்து வரவேற் கிறது. தலைவி சென்று அவரை வரவேற்கவில்லை.

அவளது குடும்ப நடப்புகள் குறித்தும் குழந்தைகள் மற்றும் அவளது நலம் குறித்தும் அடுக்கடுக்காக அவர் வினவுகிறார். ஆனால் அவளோ 'இருக் கிறேன் நான்' என்று சலிப்புடன் கூறுகிறாள். வந்தவருக்குப் பசிக்கிறது. சமையல் ஆயிற்றா?" என வாய்விட்டுக் கேட்கிறார். ஆனால் அவளோ அவர் வந்த வண்டியைப் புகழ்ந்துரைக்கின்றாள். இறுதியாக அவர் வெளியே சென்று உணவு விடுதியில் உண்டுவிட்டு வருகிறார். தலைவியோ சுவலைப்படவில்லை. மாலையிலும் சாப்பாடு கொடுக்கவில்லை. தான் மட்டும் உண்ணுகிறாள்; குடிக்கிறாள். அவள் தலைவருடன் சண்டை யிடுவது கண்டு அண்ணன் சந்தடியின்றி வந்த வழியே சென்று மறைகிறார்.

அவளது மூடத்தனம் குடும்பத்தை அழிக்கிறது. குழந்தைக்கு மருத்துவம் பார்க்காமல் 'இருளன்' தான் காரணம் என்கிறாள். தலைவியும், வேலைக் காரியும் வாலன் என்னும் மந்திரக்காரனை அழைப்பதற்கு எண்ணுகின் றனர். காப்புக்கட்டி, வேப்பிலை ஒடிக்கத் தொடங்குகின்றனர். குழந்தை நிலை கவலைக்கிடமாக இருப்பதைப் பார்த்து அண்ணன் வினவுகின்ற போது "தொண்ணூறு வயது வாழும் என்று சோதிடன் சொல்லிவிட்டான். கல்லைத் தூக்கிப் போட்டாலும் போகாது"என்று மறுமொழி கூறுகிறாள். 'இந்த தலிவு மந்தத்தால் வந்தது.நாளையே போய் விடும்' என்று மருத்து வரிடம் போகாமலேயே முடிவு செய்கிறாள். அதுபோலவே முத்த மகனுக்கும் பத்தொன்பது வயதுவரை படிப்பு வராது. ஆனால் இருபதாம் வயதில் உலகையே என்னது என்று கேட்பான்' என்று சோதிடன் சொல்லி விட்டதாகக் கூறுகிறாள்.

சோதிட நம்பிக்கை எவ்வாறு அறிவியலுக்கும் செயலாக்கத்திற்கும் தடையாக உள்ளது என்பதைத் தலைவியின் மூலம் எடுத்துரைக்கிறார் பாவேந்தர்.

நாள் முழுதும் பெரும்பகுதி தூங்குகின்ற தலைவி இரவில் கணவர் கதவினைத் தட்டியும் விழிப்பதில்லை. நெடுநேரம் கழித்து விழித் தெழுந்து கதவினைத் திறந்துவிட்டு மறுபடியும் தூங்குகிறாள். திருடன் வந்தபோதும் கண் திறப்பதில்லை. பணம் பறிபோன

ஆத்திரத்தில் தலைவர் பையன் மீது எறிந்த கல் தலைவியின் உயிரைக் குடித்து விடுகிறது. சகோதரி, மனைவி, தாய் என்னும் எந்த நிலையிலும் தன் கடமைகளைச் சரியாகச் செய்யாத தலைவி சோம்பலாலும் மூடத்தனத்தாலும் தன் குடும்பத்தை அழிப்பதுடன் தன்னையும் அழித்துக் கொள்கிறாள் என்னும் அவலம் படிப்போர் நெஞ்சில் பாடமாகப் பதிகிறது.

பாவேந்தனின் பகுத்தறிவுச் சிந்தனை

பழந்தமிழர் தம் அறச் சிந்தனைகளில் கல்விக்கும் கல்வி கற்றோருக்கும் உயர்ந்த மதிப்பினை வழங்கியுள்ளனர்.

> **"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தான்**
> **பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே**
> **பிறப்பு ஓர் அன்ன உடன்வாயிற்று உள்ளும்**
> **சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்**
> **ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்**
> **மூத்தோன் வருக என்னாது அவருள்**
> **அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்**
> **வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்.**
> **கீழ்பால் ஒருவன்கற்பின்." (புறநானூறு-183) [7]**

என்று கல்வியின் சிறப்பையும் கல்வி கற்றவனுக்கான மதிப்பையும் மிகச் சிறப்பாக விளக்குகிறது. தமிழ்ச் சமுதாயம் கல்வியினை என்றென்றும் போற்றி வந்துள்ளது. கீழ்ப்பாலொருவன் கற்பின் மேற்பாலொருவன் அவன் வழிநடப்பான் என்றும் சுற்றறிந்தவன் அவன் வழிநடப்பான் என்றும் சுற்றறிந்த வனை அரசும் மதிக்கும் என்றும் புறநானூறு சுட்டுகிறது. 'கற்றோரே கண்ணுடையவர்' என்பது வள்ளுவருடைய கருத்து. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல என்று கல்விதான் ஒரு மனிதனுக்கான தலைசிறந்த செல்வம் எனக்குறிப்பிடும் வள்ளுவர், கல்வி கற்காமல் கற்று அறிவு பெறாமல் இருப்பவர்களை மிகக் கடுமையாகச் சாடுகிறார். கல்லாமை என்னும் அதிகாரத்தில்,

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து

சொல்லாடச்சோர்வு படும். (திருக்குறள்-405) [8] என்கிறார்.

இருப்பினும் பல்வேறு அரசியல், சமுதாய மாறுபாடுகளால் பெரும் பான்மையான மக்கள் கல்வியறிவு பெறும் வாய்ப்பற்றுப் போயினர் அறியாமையும் மூடத்தனமும் மிகுந்த சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் மாறியது. இதனால் சமுதாய மேம்பாடு மட்டுமன்றித் தனிமனித வாழ் வியலும் மிக்க கடுமையான பாதிப்புக்குள்ளாயிற்று. கல்வி கற்காத ஒருவனை அறியாமையும் பகுத்தறிவற்ற மூடத்தனமும் விரைவில் ஒட்டிக்கொள்கிறது.

முடிவுரை

இருபதாம் நூற்றாண்டில் தேசிய இயக்கம், திராவிட இயக்கம், பொதுவுடைமை இயக்கம் முதலியன மக்களின் கல்வியறிவு மேம்பட உழைத்தன. தந்தை பெரியார் தமிழ்ச் சமுதாயம் கல்விச் சமுதாயமாக மாற அழைத்தார். 'ஆலயம் பதினாயிரம் நாட்டுவதைவிட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல் உயர்ந்தது' என்றும் 'தேடு கல்வி இல்லாத ஊரைத் தீக்கிரையாக்க வேண்டும் என்றும் கூறிய பாரதி வழியிலும் வந்த பாவேந்தர் அதனை அறிவுறுத்தப் படைத்த இலக்கியமே இருண்ட வீடாகும்.

ஆண்கல்வி மட்டுமன்றிப் பெண் கல்வியின் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினார். ஏனெனில் கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்; அங்கே புல் விளைத்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை" என்பது அவர்தம் அசைக்க வொண்ணாக் கருத்து. ஒரு பரம்பரையை அறிவோடு உயர்த்துகின்ற ஆற்றல் கல்விகற்ற பெண்ணுக்கே உண்டு என்கிறார். இதனையே இருண்ட வீட்டின் ஈற்றுப் பகுதியில், கதை முடிவில் தன் அறிவுரையாக, எல்லா நலமும் ஈந்திடும் கல்வி இல்லா வீட்டை இருண்டவீ டென்க! படிப்பிலார் நிறைந்த குடித்தனம், நரம்பின் துடிப்பிலார் நிறைந்த சுடுகா டென்க! அறிவே கல்வியாம், அறிவிலாக் குடும்பம் நெறி காணாது நின்ற படிவிழும்! சொத்தெலாம் விற்றும் கற்ற கல்வியாம் வித்தால் விளைவன மேன்மை, இன்பம்! செல்வம் கடல்போல் சேரினும் என்பயன்? கல்வி இல்லான் கண் இலான் என்க இடிக்குரற் சிங்கநேர் இறையே எனினும் படிப்பிலாக் காலை நொடிப்பிலே வீழ்வான்! கல்லான் வலியிலான், கண்ணிலான். அவன்பால் எல்லா நோயும் எப்போது முண்டு. கற்க எவரும், எக்குறை நேரினும் நிற்காது கற்க நிறைவாழ் வென்பது கற்கும் விழுக்காடு

காணும்; பெண்கள் கற்க! ஆடவர் கற்க! கல்லார் முதிய ராயினும் முயல்க கல்வியில்! எதுபொருள் என்னும் இருவிழி யிலாரும் படித்தால் அவர்க்குப் பல்விழி கள்வரும். ஊமையுங் கற்க ஊமை நிலைபோம்! ஆமைபோல் அடங்கும் அவனும் கற்க அறத்தைக் காக்கும் மறத்தனம் தோன்றும்! கையும் காலும் இல்லான் கற்க உய்யும் நெறியை உணர்ந்துமேம் படுவான் இல்லார்க் கெல்லாம் ஈண்டுக் கல்விவந் ததுவெனில் கடைத்தேறிற்றுலகே! இந்தக் காவியம் எதற்காக உருவாகாப்பட்டதோ அதன் நோக்கத்தைப் பாவேந்தர் மிகச் சிறப்பாக இறுதியில் தாமே முன்வந்து கூறியிருப்பது கவனத்திற்குரியது.

அடிக்குறிப்புகள்

1. க. நாராயணன். 2003, பக்: 40
2. திருக்குறள்: 400
3. திருக்குறள்: 398
4. க. நாராயணன். 2003, பக்: 43
5. இருண்டவீடு, பாடல்: 29-31
6. இருண்டவீடு, பாடல்: 5
7. புறநானூறு-183
8. திருக்குறள்-405

துணை நூல்கள்.

1. பாரதிதாசன் கவிதைகள் தொகுப்பு.
2. திருக்குறள், பரிமேலழகர் உரை. கழக வெளியீடு. திருமகள் அச்சு நிலையம் சென்னை.
3. புறநானூறு ,1972, கழக வெளியீடு, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி
4. நாராயணன், 2006, தமிழர் அறிவுக் கோட்பாடு , மாரி பதிப்பகம் ,புதுச்சேரி.

பன்முகப் பார்வையில் பாரதிதாசனின் தமிழ் உணர்வு

செந்தூரான் வாசுதேவன்
தமிழாசிரியர், யுவான் சிங் உயர்நிலைப்பள்ளி
சிங்கப்பூர்
vasudevan.senduran@gmail.com

முன்னுரை

தமிழ் மொழியைப் பாரதிதாசன் உயிருக்கு நிகராகக் கருதினார். தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்பைத் தமிழ் மக்களும் பிறரும் உணர வேண்டும் என்னும் நோக்கத்துடன் தமிழ்மொழியின் பழைமைச் சிறப்பைத் தமது படைப்புக்களின் வழிப் படைத்துள்ளார். தமிழ் மக்களை ஒன்று சேர்க்கும் கருவி, தமிழ் மொழியைத் தவிர வேறு எதுவும் இல்லை என்றும், தமிழ்நாட்டின் கல்விச் சாலைகளிலும், ஏடுகளிலும், வழக்கு மன்றங்களிலும் தமிழ் முழங்க வேண்டும் என்பதில் குறிக்கோளாக்கொண்டு பணியாற்றியுள்ளார். தமிழ்நாட்டில் ‘எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்’ என்ற நிலை உருவாக வேண்டும் என்று பாரதிதாசன் தெரிவித்த கருத்துகளை நாம் மறக்க இயலாது. பாரதிதாசன், தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ்மக்கள் ஆகியவற்றின்பால் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுதலையும் உணர்வுபூர்வமான மதிப்பையும் அவற்றிற்குச் சான்றாகப் பாரதிதாசனின் கவிதை வரிகள் சிலவற்றை மேற்கோள் காட்டவும். அத்துடன், பாரதிதாசன் கவிதைகளில் காணும் உணர்ச்சி வேகம், சொல்லாட்சி, வருணனைச் சிறப்பு ஆகியவற்றைப் பற்றிக் இக்கட்டுரை வழிக் காண்போம்.

பாவேந்தரும் தமிழும்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
***மங்காத தமிழென்று சங்கே முழங்கு* – (சங்கநாதம்: பாடல் 1-2)**

எனும் முழக்கம், தமிழக மேடைகளிலும், தமிழ் உணர்வு கொண்ட ஏடுகளிலும், தமிழர்களிடையேயும் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கும் ஓர் எழுச்சிக்குரல்; தமிழ் உணர்ச்சியின் வெளிப்பாடு. இந்த உணர்ச்சியின் பிறப்பிடம் பாவேந்தர் பாரதிதாசனின் உள்ளம். பாரதிதாசனின் இந்த உள்ள உணர்ச்சியை அவரது பாடல்களில் பெரும் அளவில் பார்க்கலாம். தமிழ் மீதுகொண்ட பற்றால், அதைத் தன் உயிரினும் மேலாக நேசித்தமையால், தமிழை என் உயிரே என்று அழைத்து மகிழ்ந்தார். அதன் இனிமையின் சிறப்பினையும் பல பாடல்கள் மூலம் எடுத்துக்காட்டுகின்றார்.

விருப்பத்துக்குரிய பொருளை, தேன், பால், என்றும் கண், உயிர் என்றும் கூறும் மரபைக் கவிஞர்களிடம் காணலாம். அடியார் பலர் இறைவனை இவ்வாறு பாடியுள்ளனர். பாரதிதாசன் தமிழ் மொழியைத் தேன், பால், கண், உயிர் என்று கருதிப் பாடியுள்ளார். மொழியை இவ்வாறு வருணித்துப் பாடும் மரபும் புதியது. இம்மரபுக்கு முன்னோடியாய்த் திகழ்ந்தவர் பாரதிதாசன்.

தமிழ் உயிர் போன்றது

தமிழ் மொழி மீது பாரதிதாசனுக்கு அளவு கடந்த பற்று உண்டு. இதனை அவரது பாடல்களில் பரவலாகக் காணலாம். வாய்ப்புக் கிடைக்கும் இடங்களிலெல்லாம், அவர் தமது தமிழ்ப் பற்றை வெளியிடுவார். தமிழைத் தன் உயிரினும் மேலாக மதித்தார், போற்றினார். எனவே,

செந்தமிழே ! உயிரே ! நறுந்தேனே !
செயலினை மூச்சினை உனக்களித்தேன்

(இசையமுது, தமிழ்: **5)**

என்று பறை சாற்றுகின்றார். இனிய தேன்போன்ற தமிழ்மொழிக்குத் தன் வாழ்வையே, வாழ்க்கையின் செயல்பாடுகள் முழுவதையுமே அர்ப்பணித்தார். எனவே தான், ‘செயலினை மூச்சினை உனக்களித்தேன்’ என்று கூறுகிறார்

தமிழெனும் அமிழ்தம்

பொதுவாக, அமிழ்தம் (அமுதம்) என்றால் உணவு என்று பொருள். வானுலகில் வாழும் தேவர்கள் உண்ணும் உணவிற்கும் அமிழ்தம் என்று பெயர். அது மிகவும் சுவை உடையது என்றும், அதை உண்பதினால் தான், தேவர்கள் சாகா வரத்துடன் வாழ்கிறார்கள் என்றும் ஒரு நம்பிக்கை உண்டு. நல்ல சுவையான உணவை உண்ணும் போதுகூட, "ஆகா! என்ன சுவை! என்ன சுவை! ‘அமிழ்தம்’ போன்றல்லவா இருக்கிறது” என, தேவர்கள் உண்ணும் உணவை மனத்திற்கொண்டு, கூறுகிற மரபு உண்டு. பாரதிதாசனுக்கோ தமிழே அமிழ்தமாகின்றது. எனவே

தமிழுக்கும் அமுதென்று பேர் ! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் **- இன்பத் தமிழ்: 1-2**

என்று பாடுகிறார். பாரதிதாசன் இன்றும் நம்மிடையே உயிர்ப்புடன் உலவவும், நம் உணர்வினைத் தூண்டவும் அவர் படைப்புகள் தானே காரணம்! எனவே தமிழை அமிழ்தம் என்றும் உயிர் என்றும் சொன்ன சொற்கள் மிகை அல்லவே!

தமிழெனும் உயிர்

இயற்கையில் பல்வேறு வகையான சுவைகள் இருக்கின்றன. நன்கு பழுத்த பழத்தின் சுளையில் இனிமை இருக்கிறது. கரும்புச் சாற்றிலும் இனிமை உண்டு.

தேனிலும் இனிமை உண்டு. காய்ச்சிய வெல்லப் பாகிலும் இனிமை இருக்கிறது. பசுவின் பாலிலும் இனிமை இருக்கிறது. தென்னையின் இளநீரிலும் இனிமை இருக்கிறது.

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர் !

(பாரதிதாசன் கவிதைகள் - முதல் தொகுதி 19. தமிழின்இனிமை, முதல் பாடல்)

'இனிப்புடையதாயிருத்தல்'. 'உயிர்ப்பு உடையதாயிருத்தல்' - இவற்றுள் எது மிகுதியும் விரும்பத்தக்கது? உயிர் இல்லையேல் சுவைப்போருக்கு இனிப்பு ஏது, நுகர்ச்சி ஏது? கனி, கரும்பு, தேன், பாகு, பால், இளநீர் - அனைத்தின் சுவையும் உயிர் என்ற ஒன்று இருந்தால் தானே நுகரமுடியும். தமிழ் மொழியின்பால் கவிஞர் கொண்ட ஆழ்ந்த பற்று இதில் தெரிகிறதல்லவா!

பாரதிதாசனுக்கு அந்த உணர்வை, இனிமையைத் தமிழ் தந்திருக்கிறது. ("சோலையினுள் மலர்களின் தேன் அருந்தவரும் வண்டின் ஒலியையும், புல்லாங்குழல் (Flute) ஒலியையும், வீணையின் இசையையும், குழந்தைகளின் மழலைப் பேச்சினையும் கேட்டு மகிழ்ந்து, அவற்றோடு மெய்மறந்து ஒன்றி இருக்கிறேன். ஆனால் அவற்றிடமிருந்து என்னை நான் விடுவித்துக் கொள்ள இயலும். தமிழை விட்டு என்னால் பிரிய முடியாது. ஏன் என்றால், தமிழும் நானும் உடலும் உயிரும் போன்றவர்கள்" இதனைத்,

தமிழும் நானும் மெய்யாய் உடல் உயிர்கண்டீர்
தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லும்
தரமுண்டு தமிழருக்குப் புவிமேலே **- பாரதிதாசன் கவிதைகள் முதல்பகுதி**

தமிழ் மொழி தமிழ்மக்களின் உயிராக இருப்பதால், உலகிலுள்ள அனைத்தையும் வெல்லும் ஆற்றல் தமிழுக்கு உண்டு என்று பறைசாற்றுகின்றார். ஒவ்வொரு மனிதனும், தன் உயிரைப் பேணிப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும், மேம்பாடு அடையச் செய்வதற்கும், எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வான். அதைப்போல நம் உயிர் போன்ற தமிழைப் பாதுகாப்பதற்கும் வளர்ச்சியடையச் செய்வதற்கும் நாம் எல்லாவித

முயற்சிகளையும் தியாகங்களையும் செய்வதற்குத் தயார் ஆக வேண்டும் என்று கூறுகிறார் பாரதிதாசன்.

தமிழின் இனிமை

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ஒவ்வொரு வகையான இன்பம் கிடைக்கும். சிலருக்குப் பொருள் ஈட்டுதல் இன்பம் தரும். ஒரு சிலருக்கு அவர்கள் வகிக்கும் பதவி இன்பம் நல்கும். புகழ் இன்பம் வழங்கும். ஆனால் பாரதிதாசனுக்கு எது இன்பம் தருகிறது தெரியுமா? தாய்மொழியாம் தமிழ் இன்பம் தருகிறது. தமிழ் தரும் இன்பத்தைத் தம் பாடல்களின் பல இடங்களில் வெளிப்படுத்துகிறார். தமிழுக்கு இன்னொரு பெயர் உண்டு. அது உங்களுக்குத் தெரியுமா? என்று வினவும் பாரதிதாசன்

இன்பம் எனப்படுதல் - தமிழ்

இன்பம் எனத் தமிழ்நாட்டினர் எண்ணுக. **(முதல் பகுதி: தமிழ் உணவு)**

என்று குறிப்பிடுகிறார். எனவே, தமிழுக்கு இன்பம் என்று இன்னொரு பெயருண்டு. தமிழ் நாட்டினரே அதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறுகிறார். தமிழ் என்ற உடனே, இன்பம் தானாக வந்து கிட்ட வேண்டும். அந்த இன்பத்தை நீங்கள் நுகர வேண்டும் என்று கூறுகிறார்.இயற்கையில் அமைந்துள்ள பல பொருள்களை நாம் நுகரும் போது அவை நமக்கு இன்பம் தருகின்றன. அவற்றை மனத்தில் நினைத்த உடனே, இன்ப உணர்வு ஏற்படும். அதைப்போல் தமிழைப் பற்றி நினைத்த உடனேயே இன்ப உணர்வு வரும்.

தமிழ் இன்பம் தருவதால், அது அமுதம் போன்றது என்று குறிப்பிடுகிறார். அமுதத்தை உண்ணும் போது கிடைக்கும் மகிழ்ச்சி, அல்லது இன்பம், தமிழைப் படிக்கும் போது கிடைக்கும். எனவே, ***இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது!*** _ என்று இனிமையின் எல்லை எனக் கருதப்படும் அமுதத்தையே தமிழ் இன்பத்திற்கு இணையாகக் கூறுகிறார் பாரதிதாசன்.

தமிழரின் தொன்மைச் சிறப்பு

நில உலகு தோன்றிய காலத்திலேயே தமிழ் இனம் தோன்றிவிட்டது. மனித வாழ்வை உருவாக்கியதே தமிழ்மொழி என்று தமிழினத் தொன்மைச் சிறப்பை எடுத்துரைக்கிறார்.

புனல்சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே புதிய நாளை
மனிதப் பைங்கூழ் முளைத்தே
வகுத்தது மனித வாழ்வை
இனிய நற்றமிழே நீதான் எழுப்பினை –

(அழகின்சிரிப்பு:தமிழ் -முதல்பாடல் வரிகள்:1-6)

மேலும் தமிழ்மொழியின் தொன்மையினையும், தமிழர்கள் தொன்மை நாகரிகம் கொண்டவர்கள் என்பதனையும்,

மொழியில் உயர்ந்தது தமிழ்மொழியே - பண்டு
முதல் நாகரிகமும் பழந்தமிழ் மக்களே

(தேனருவி, தமிழன், வரிகள்: 11 - 13)

என்று சுட்டுகிறார்

விருந்தோம்பல்

தொன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழ் இனமக்கள் நல்ல பண்புகள் பொருந்தியவர்கள். அவர்களின் பண்புகளில் சிறந்தது விருந்தோம்பல். சங்ககாலம் முதற்கொண்டே விருந்தினரைப் போற்றி வாழ்கிறார்கள். விருந்தினர்களைப் போற்றி வாழ்வதினாலேயே உலகம் முழுவதும், புகழுடன் வாழ்கிறார்கள் தமிழர்கள் என்கிறார் பாரதிதாசன்.

நற்றமிழர் சேர்த்த புகழ்
ஞாலத்தில் என்னவெனில்
உற்ற விருந்தை
உயிரென்று - பெற்று உவத்தல்

(குடும்பவிளக்கு, இரண்டாம் பகுதி - விருந்தோம்பல் - மாமன் மாமி மகிழ்ச்சி, 5வதுபாடல்)

தம்மை வந்து அடைந்த விருந்தினர்களுக்குத் தமிழர்கள், விருந்தோம்பலைத் தம் உயிருக்கும் மேலாகக் கருதினர். எனவே விருந்தினரைப் பேணும் பொழுது பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள் எனக் குறிப்பிடுகிறார் பாரதிதாசன்

இசைத்தமிழ்

இசையில் - தமிழ் இசையில் தமிழர்கள் எந்த வகையில் ஈடுபாட்டுடனும், புலமையுடனும் இருந்திருக்கிறார்கள் என்பதையும் பாரதிதாசன் விளக்கிக் கூறியுள்ளார்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழ்மக்கள், இயற்கையின் பொருள்களிலிருந்து - அவற்றின் ஒலிகளிலிருந்து இசையை அமைத்துக் கொண்டனர். குயிலின் குரல் இனிமையைக் கேட்டு மகிழ்ந்ததைப் போல், தாம் கேட்டு இன்புற்ற பறவைகளின் இனிய ஒலிகளிலிருந்தும், வண்டுகளின் ரீங்காரத்திலிருந்தும், மூங்கிலின் ஒலியிலிருந்தும் பெற்ற இன்னிசையைத் தமிழ் இசையாக மாற்றிய பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள். எனவே தமிழருக்கே உரிய தமிழ் இசை என்பது, இயற்கையிலிருந்து பிறந்தது என்கிறார் பாரதிதாசன்.

பழந்தமிழ் மக்கள் அந்நாள்

பறவைகள் விலங்கு வண்டு

தழை மூங்கில் இசைத்ததைத் தாம்

தழுவியே இசைத்த தாலே

எழும் இசைத்தமிழே. - அழகின் சிரிப்பு: 57

இயற்கையிலிருந்து பெறப்பட்ட இந்தத் தமிழ் இசை, தனிச்சிறப்பு வாய்ந்தது. இசையமுதில் தமிழன் வாழ்ந்த இன்ப வாழ்வின் அடையாளம் இசைத்தமிழே என்கிறார். இதனைக்

குறைவற்ற செல்வம், வாழ்வில் இன்பவாழ்வு

கொண்ட தமிழனுள்ளம் கண்ட தமிழிசை

(இசையமுது. எந்த நாள்: 9-10)

என்று குறிப்பிடுகிறார். இசைத்தமிழ் தமிழர்களின் குறைவில்லாத செல்வம்.; தமிழர்கள் நெஞ்சில் நிறைந்த செல்வம்.

தமிழரின் கடமைகள்

தாய்மொழியாம் தமிழ் வளம் பெற்றால்தான், தமிழன் வளம் பெறுவான். தமிழ் வாழ்ந்தால்தான் தமிழன் வாழ்வான் என்ற நம்பிக்கை பாரதிதாசனுக்கு இருக்கிறது. எனவே, தமிழுயர்ந்தால் தான் தமிழன் உயர்வான், தமிழ்ப் பகைவனும் தானே மறைவான் என்று குறிப்பிடுகிறார். தமிழை வளப்படுத்த என்ன வழி? அது எவ்வாறு வாழும்? தமிழ் எங்கும் நீக்கம் அற நிலைத்து நிற்க வேண்டும்; அதற்கான பணிகளைச் செய்ய வேண்டும். கலைச் செல்வங்கள் யாவும் தமிழாய் நிலைக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார் பாரதிதாசன். எனவே

நன்று தமிழ் வளர்க ! தமிழ்

நாட்டினில் எங்கணும் பல்குக ! பல்குக

என்றும் தமிழ் வளர்க - கலை

யாவும் தமிழ்மொழியால் விளைந்தோங்குக ! -

என்று வேண்டுகிறார் கவிஞர்.

தமிழும் தமிழரும்

தமிழ் வாழ்ந்தால் தமிழர்கள் வாழ்வார்கள் என்று கருதிய பாரதிதாசன், தமிழையும் தமிழரையும் பிரிக்க முடியாது என்று உணர்ந்தார். எனவே,

தமிழ்மொழி வாழ்க !
தமிழர் வாழ்க !

(இளைஞர் இலக்கியம், வாழ்க வரிகள்: 1 - 2)

என வாழ்த்துகிறார். தான் பெற்ற தமிழ் உணர்வைத் தமிழர்கள் எல்லாம் பெற்று, தாய் மொழியாம் தமிழைப் பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்று விரும்பினார் பாரதிதாசன்.

தமிழ்நாட்டின் பெருமை

சேர, சோழ, பாண்டியர்களால் ஆளப் பெற்ற தமிழ்நாட்டின் எல்லை வடக்கே வேங்கட மலை முதல், தெற்கே கன்னியாகுமரி வரையிலும் பரந்து காணப்பட்டது. இமயமலை வரையிலும் தமிழர் படையெடுத்துச் சென்றனர். கடல் கடந்து சென்று, இலங்கை, கடாரம் போன்ற இடங்களையும், கைப்பற்றித் தம் ஆட்சிக்கு உட்படுத்தி ஆண்டு வந்தனர். அத்தகைய பெருமை வாய்ந்த தமிழ்நாட்டைப் பற்றி, அதன் எல்லையைப் பற்றிக் குறிப்பிடும் போது,

கோடுயர் வேங்கடக் குன்றமுதல் - நல்
குமரிமட்டும் தமிழர் கோலங்கண்டே
நாம் ஆடுவமே ! பள்ளுபாடுவமே !

(இசையமுது, தமிழ்ப்பள்ளு: 1)

என்று கூறுகிறார்.

தமிழ்நாட்டில் தமிழ்

எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்று முழங்கியவர் பாரதிதாசன். தமிழ்நாட்டின் கல்விக் கூடங்களிலும், ஏடுகளிலும், கூத்துகளிலும், இசையிலும், தெருக்களிலும், தமிழ் உரிய இடத்தைப் பெறவில்லையே என்று மிக வருந்தியவர் பாவேந்தர். எனவே, தமிழ்நாட்டின் இன்றைய நிலையையும் சுட்டிக்காட்டி, அந்த நிலையை மாற்றியமைத்து, புதியதோர் உலகம் செய்வோம், தமிழுக்குப் புத்துயிர் ஊட்டுவோம் என்று கூறுகிறார் பாரதிதாசன். அதற்கு ஒரே வழி, எல்லாத் துறைகளிலும் தமிழுக்கு உரிய இடத்தைப் பெறச் செய்வதாகும் என்று கூறுகிறார்.

நன்று தமிழ் வளர்க! தமிழ்
நாட்டினில் எங்கணும் பல்குக! பல்குக!
என்றும் தமிழ் வளர்க - கலை
யாவும் தமிழ்மொழியால் விளைந்தோங்குக!

தமிழ்நாட்டில் தமிழுக்கு உரிய இடத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கான முயற்சிகளை எல்லாம் தமிழ்த்தொண்டு மூலம் வெளிப்படுத்த வேண்டும். அதை இளைய தலைமுறை செய்ய வேண்டும். எனவே, இளைஞர்களைப் பார்த்து,

தொண்டு செய்வாய் ! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெழுந்தே (தமிழ் இயக்கம். பாடல் 11)

என்று வேண்டுகிறார்.

இனிய தமிழ்

தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யவேண்டுமென்று பாடிய பாரதிதாசன், பிறமொழியைப் பயன்படுத்திய இல்லற விழாவில், இனிய தமிழை ஒலிக்க வேண்டுமென்று வேண்டுகிறார். இல்வாழ்க்கையைத் தமிழர்கள், இனிய இல்லறம் என்றே குறிப்பிடுகின்றனர். இனிமையின் தொடக்கம் இல்லறம். மனைவி, மக்களுடன், உற்றார் உறவினருடன் வாழும் போது கிடைக்கும் இன்பத்திற்கு இணை ஏது? இன்பம் தரும் இத்தகைய இல்லற வாழ்க்கையில் புகும் போது புரியாத மொழியில், புரியாத மந்திரங்களை ஓதுவதால் என்ன பயன்? புரியும் மொழியில் இனிமைத் தமிழில் வாழ்த்தினால் அந்த இல்லற வாழ்வில் இனிமை பொங்கும் ; மகிழ்ச்சி தங்கும் என்பதனை

மணமக்கள் இல்லறத்தை
மாத்தமிழில் தொடங்கிடுக
மல்கும் இன்பம்.

(தமிழ் இயக்கம், விழாநடத்துவோர் :20)

என்று குறிப்பிடுகிறார்.இன்பம் தரும் இல்லற வாழ்க்கையை, இன்பம் தரும் தமிழில் தொடங்குங்கள் என்று வேண்டுகிறார். தாய் மொழியின் மீது கவிஞர் கொண்ட பற்றைத் தமிழ் உணர்வை வாழ்நாள் முழுவதும் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்பதே பாரதிதாசன் ஆசை.

தமிழ் வாழ்க! நாடு வாழ்க!

மொழித் தொன்மையும், இலக்கிய வளமையும், பண்பாட்டுச் சிறப்பும் பொருந்திய தமிழ் நாட்டின் மீது கொண்ட அளவுகடந்த பற்றை வெளிப்படுத்தும் பாரதிதாசன்,

தமிழ் நாடே வாழ்க - எம்

அமிழ்தாகிய இயல், இசை, கூத்தென்னும்

தமிழாகிய உயிர்தழையும் விழுமிய

தமிழ் நாடே வாழ்க ! –

(தேனருவி, தமிழ்நாட்டு வாழ்த்து வரிகள்: 1- 4)

என்று தமிழ் நாட்டை வாழ்த்துகின்றார். அமிழ்தம் போன்ற சிறப்பு வாய்ந்த, இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் உயிர் போன்ற சிறப்புடையது. அத்தகைய சிறப்புக்குரிய மொழி பிறந்த தமிழ் நாடே வாழ்க என்று வாழ்த்துகின்றார்.

முடிவுரை

பாரதிதாசன் தமிழ்மொழி மீதும், தமிழர் மீதும் தமிழ்நாட்டின் மீதும் பாடிய பல கவிதைகளில் அவர் உணர்த்தும் தமிழ் உணர்வு வெளிப்படுகிறது. இக்கவிதைகளில், தமிழ்மொழியின் சிறப்புக் கூறுகளையும், தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பினையும், தமிழ்நாட்டின் பெருமைகளையும் எடுத்துரைக்கிறார். இக்கட்டுரையில் சொல்லப்பட்ட கருத்துகளில் இருந்து, பாரதிதாசன், தமிழைத் தன் உயிர்போல் நேசித்தமை புலப்படும். தமிழ் எத்தகைய இனிமையான மொழி என்பதும், தமிழ் மக்களின் வீரம், கற்பு ஆகியவற்றில் கவிஞருக்கு இருந்த மதிப்பு எத்தகையது என்பதும் புலப்படும் என்பதில் ஐயமில்லை.

பாரதிதாசனின் பெண்ணுரிமைச் சிந்தனைகள்

Bharathithasan’s feminist thoughts

முனைவர் மு.நளினி,
இணைப் பேராசிரியர் & தமிழ்த்துறைத்தலைவர், எஸ்.ஐ.வி.இ.டி.கல்லூரி,
கௌரிவாக்கம், சென்னை-73
மின்னஞ்சல்:dr.nalini.m@gmail.com, கைப்பேசி:9940203960

Abstract:

Bharathi dasan, a renowned Tamil poet, raised his voice for various issues concerning women. He advocated for women's freedom, education, child marriage prevention, empowerment of widows and remarriage rights for women who lost their husbands. Bharathi dasan was a pioneer in paving new paths for women's progress.

Key words:

Proprietary society- Women's freedom - Patriarchal society- Mind job.

ஆதித் தமிழ்த்தாயகத்தில் தலைமைத்துவம் வகித்த பெண்இனம் இடைக்காலத்தில் நடந்த அந்நியப் பண்பாட்டுப் படையெடுப்பினாலும் இனக்கலப்பினாலும் வீழ்த்தப்பட்டது; தாழ்த்தப்பட்டது. உலகில் உடைமைச் சமூகம், உருவெடுத்த காலந்தொட்டே பெண் இனத்தை ஒடுக்கு முறைக்குள்ளாக்கி பல்வேறு இன்னல்கள் இழைத்து வந்துள்ளது. இவை யாவும், இவ்வுலகை ஆணுக்கே உரியதாக்கி உலகப்போக்கையே மாற்றியமைத்தோடு மனித இனப் பரிணாம வளர்ச்சியில் மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தின. பாதுகாப்பற்ற சூழலில் மனித இனம் கடந்து வந்ததற்கு ஆண்மையச் சமூகம் உருவானதே காரணம்.

தாய் வழிச்சமூகம் நிலவிவந்த காலத்தில் குடும்பம் என்ற நிறுவனம் இல்லை. பெண் எனும் பேராற்றலை குடும்பம் எனும் பெருந்தூணில் புனிதங்களாலும் மரபுகளாலும் கட்டிவைத்துத் திரையிட்டதோடு மரபார்ந்த கலை இலக்கிய இலக்கணங்களால் போற்றிக் காத்தும் வந்துள்ளது உடைமைச்சமூகம். தலைமை ஏற்கவேண்டியவள் குடும்ப அடிமையானாள். அதிக எண்ணிக்கையில் குழந்தை பெற்று, விவசாயத்துக்குத் தேவையான மனித ஆற்றலை (man power) ஈட்டித்தந்து

குடும்பத்தைப் பராமரிக்கின்ற எந்திரமாக்கப் பட்டாள். கல்வி மறுக்கப்பட்டு, இருப்பு மறுதலிக்கப் பட்டு, சுயம் மறக்கடிக்கப்பட்டு ஆண்மையச் சமூகம் நிர்மானித்த அச்சில் ஊற்றி வார்த்தெடுக்கப்பட்டாள். பெண் தன் சுயம் உணரவும், இருப்பை உணர்த்தவும் தன் விடுதலைக்காகத் தான் குரல் கொடுக்கவும் எழுச்சியூட்டியவர் பலர்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, அண்ணல் அம்பேத்கர், பெரியார், சிங்கார வேலர், பாரதியார், பாரதிதாசன், திரு.வி.க போன்றோரைத் தொடர்ந்து பலர் பெண்ணினத்துக்காகப் போராடி வருகின்றனர். இவர்களுள் குறிப்பிடத்தக்க இடத்தைப்பெற்றவர் பாரதிதசன். இவரது பெண்ணியச் சிந்தனைகள் உலகை மாற்றியமைக்கும் உத்திக்கு வித்தாக அமைபவை.

பெண் சுதந்திரம்

மனித இனத்தில் ஒருபாதி ஆண்; மறுபாதி பெண். இரண்டில் எது தாழ்ந்தாலும் வளர்ச்சி, முன்னேற்றம் பாதிக்கும். எனவே பெண்சுதந்திரம் அவசியமானதும் அவசரமானதும் என்பதை வலியுறுத்தினார் பாரதிதாசன்.

பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே (பா.பா.ப.3)

சமத்துவம் நிலவியிருந்தால் நாடு அந்நியருக்கு அடிமைப் பட்டிருக்காது. பெண்சுதந்திரம் இருந்திருந்தால் இந்திய நாடு விரைவில் விடுதலை பெற்றிருக்கும்.

----------------------------பெண் ஆண் என்ற
இரண்டு உருளையில் நடக்கும் இன்பவாழ்க்கை (பா.பா.ப.79)

என்று சமத்துவம் பேணும் சுதந்தரத்தை முன்வைக்கிறார் பாரதிதாசன்

ஆண்மையச் சமூகம் பெண்ணுக்கு எதை நிர்பந்திக்கிறதோ அதுவே பெண்ணுக்கு சுதந்திரம்; கொடுப்பதைப் பெற்றுக்கொள்வதே உரிமை என்பதை எழுதப்படாத சட்டமாக இன்றுவரை வைத்துள்ளது.

சுதந்திரத்தை, உரிமையை நானே எடுத்துக்கொண்டால் என்ன? (பா.பா.ப.85)

என்று ஒட்டுமொத்தப் பெண்சமூகத்தின் குரலாகப் பதிவு செய்கிறார். கொடுக்கப் படுவதல்ல சுதந்திரம் எடுக்கப்படுவது என்ற பாதையைக் காட்டுகிறார் பாவேந்தர்.

திருமணமும் திருந்தா மனங்களும்

பெண்வாழ்வைக் காலச்சுழலில் சிக்கவைக்கும் வஞ்சக நிகழ்வே திருமணம் ஆகும். இவ் வஞ்சக மணம் ஆரியக் கலப்பால் ஏற்பட்டது.

'விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்
பெருந்தகை நின்னோடு உண்டலும் புரைவது'

குறிஞ்சிப்பாட்டு **(206-207)**

என்று குறிஞ்சிப்பாட்டுத் தலைவன் தன் காதலைத் தலைவியிடம் வெளிப்படுத்துவதிலிருந்து தமிழர் திருமண முறையையும்' நீ இட நான் உண்ணவேண்டும்' என்று கூறாது 'உன்னுடன் உண்டல் உயர்வானது 'என்றதால் பெண்ணுக்கு உரிய மதிப்பு இருந்துள்ளதையும் அறியமுடிகின்றது.

தமிழர் (திராவிடர்) திருமணம் என்றால் என்ன என்ற கேள்விக்குத் தந்தை பெரியார் கூறும் பதில்; 'புருஷனுக்கு மனைவி அடிமை (தாழ்ந்தவள்) என்றும், புருஷனுக்கு உள்ள உரிமைகள் மனைவிக்கு இல்லை என்றும் உள்ள, ஒரு இனத்துக்கு ஒரு நீதியான மனுநீதி இல்லாமல், வாழ்க்கையில் கணவனும் மனைவியும் சரி சம உரிமை உள்ள நட்பு முறை -வாழ்க்கை ஒப்பந்தமாகக் கொண்ட திருமணம் தமிழர் திருமணம்' என்று 'விடுதலை'யில் 14.3.1950' அன்று விளக்கம் தந்துள்ளார் (பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி ப.55).

'திருமணமே கிரிமினல் குற்றமாக்கப்பட வேண்டும் என்கிற அளவுக்குக்கூட அவர் சென்றார்' (விடுதலை 16.3.1970.) 'திருமணமே செய்யாத சர்வ சுதந்திர வாழ்வே பெண்ணடிமையை ஒழிப்பதற்கு இறுதிவழி. சுயமரியாதைத் திருமணத்தைக்கூட விரும்பாத காலம் ஒன்று வரும்' என்றார் பெரியார் ('விடுதலை '14.12.1970.) புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும்

ஒருத்திக்கும் ஒருவனுக்கும்
வாழ்க்கையின் உடன் பாடென்னும்
திருமணம் ஒழிய வேண்டும்
தெரிந்தவர் கூடி அன்பு
புரிவதால் தோன்றும் மக்கள்
பொதுமக்கள் ஆதல் வேண்டும்
அருந்துதல் உறைதல் எல்லாம்
பொதுவென அமைதல் வேண்டும். (பெண்கள் விடுதலை)

என்கிறார். ஆனாலும் இன்றளவும் திருமணம் குறித்த போதுமான விழிப்புணர்ச்சி மக்களிடையே ஏற்படவில்லை. பெண்ணெனும் பேராற்றலை வசப்படுத்தி ஆட்கொண்டு அடிமைப்படுத்தும் உத்தியாகத் திருமணத்தைப் பயன்படுத்துகிறது உடைமைச்சமூகம்.

பாலியல் சீண்டலை எதிர் கொள்ளும் பெண்வீரம்

புதுமை ஆக்கலும் புன்மை அழித்தலும் மானுடம் காத்தலுமான முச்செயல் புரியும் ஆவலும் ஆற்றலும் கொண்டவர்கள் கலை இலக்கியப் படைப்பாளிகள்.

தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம் -என்பார் பாரதியார்

சமூகக் கொடுமைகளுக்கு எதிராகக் கொடிபிடித்துப் போராடுவதல்ல பாவேந்தர் பாதை; கவிதை வாளெடுத்துக் களமிறங்கிப் போர்புரிவது.

புதியதோர் உலகம் செய்வோம் கெட்டப்
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம். (பா.பா.ப.117)

என்று பொதுப்படையாகவும்,

கொலை வாளினை எட்டா மிகு
கொடியோர் செயல் அறவே (பா.பா.ப.125)

என்று ஆணுக்கும் கூறியவர், வாளெடுக்கும் பெண்ணின் வீரத்தைத் திரை விலக்கிக் காட்டுகிறார்.

தனியொருத்தியாகப் பாலியல் சீண்டலை எதிர்கொள்ளும் பெண், அஞ்சவில்லை கெஞ்சவில்லை, ஓடிஒளியவில்லை, ஓங்கிய குரலெடுத்து உதவிகோரவில்லை.

‘--இமைக்கும் முன்னே
ஒருகையில் உடைவாளும் இடது கையில்
ஓடிப்போ! என்னும் ஒரு குறிப்புமாகப்
புருவத்தை மேலேற்றி விழித்து-------------- (பா.பா.ப.86)

வீரம் கொப்புளிக்கப் பேசுகின்றாள். பின்னங்கால் பிடரியில் பட, ‘தப்பித்தோம் பிழைத்தோம்’ என்று ஓடி ஒளிகின்றான் காமுகன். தன் வாழ்வில் அவன் இனியொருமுறை பெண்ணைத் துச்சமாகக் கருதமாட்டான். உயிர் பிழைத்தது அவன் ஓடியதால் அன்று; அவள் ‘ஓடிப்போ’ எனறதால்.

பெண்கள் வாளெடுத்தல் புதிதன்று. சங்க காலத்தில் போர்ப் பாசறையில் கச்சிலே வாளணிந்தவர்களாக வீரர்களுக்கு இரவுக்காவல் புரிந்துள்ளதை,

குறுந்தொடி முன்கைக் கூந்தலம் சிறுபுறத்து
விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரி கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட (45-49)

என்று முல்லைப்பாட்டு பதிவு செய்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்திய விடுதலைப் போரிலும் வாளேந்திய பெண்களின் பங்கு மகத்தானது. ஆதித் தாயின் குறியீடான கொற்றவையின் குணத்தை மீட்டுருவாக்கிக் காட்டுவதுபோல் உள்ளது. அறிவும், ஆற்றலும் வீரமும் கருணையும் ஒன்றையொன்று விஞ்சி நிற்பதே பெண்மை.

மனவசியம் (மைன்ட் ஜாப்)

சிக்கலுக்குள் லாவகமாக மனம் ஆட்படுத்தப்படுவதும் சிக்கலுக்குள் இருப்பதையே அறியாமல், தீர்வுகாணும் எண்ணமே இல்லாமல் சிந்தனை மயங்கி, அதிலேயே மனம் இயக்கப்படுவதும் மைன்ட் ஜாப் என்று கூரப்படுகிறது. இதனை மனவசியம் என்று கூறுதல் பொருந்தும். பெண், திருமணம் ஆகும்வரை பெற்றோர்க்கும் தன் உடன் பிறந்த அண்ணன் தம்பிகளுக்கும் பின் கணவனுக்கும் தான் பெற்ற ஆண் பிள்ளைகளுக்கும் அடிமையாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் மனதாலும் உடலாலும் கட்டமைக்கப்பட்டாள். தன் அடிப்படைத் தேவைகளுக்கும் பாதுகாப்பிற்கும் ஒவ்வொரு கட்டத்திலும் ஆணையே சார்ந்து வாழவேண்டிய மனநிலைக்கு ஆட்படுத்தப்பட்டாள். பெண் எப்படிப் பேச வேண்டும், எப்படி உடை அணியவேண்டும், நிற்கவேண்டும், நடக்கவேண்டும் என்று பெண்ணின் ஒவ்வொரு அசைவையும் சமூகமே தீர்மானித்து அவற்றைப் பல யுகங்களாக நிலைப்படுத்தியும் வைத்துள்ளது.

'திருமணமாகா தவள்தான் பெற்றோ ரின்றிச்
செயல் ஒன்று தான் செய்தல் அதர்மம் ------------' (பா.பா.ப.85)

என்று கீழ்மகன் ஒருவன் கூற்றாகப் பதிவு செய்வதன் மூலம் பெண்களின் சுய சிந்தனையைத், தற்சார்பைத் தகர்க்கும் கீழ்மைச் சமூகத்தின் குறியீடாக அவனை முன்னிறுத்திக் காட்டுகிறார் பாவேந்தர்.

கணவன் இறந்து விட்டால் மனைவி, உயிரோடு தீயில் இறங்கி உயிர்விட்டு, தான் அவன் மனைவி (சதி) என்னும் முழுமையான சமூக அங்கீகாரத்தைப்

பெறவேண்டும் (புறம் மகளிர் தீப்பாய்தல் குறித்த பாடல்கள்); இன்றேல் உயிருள்ளவரை கைம்மைநோன்பு நோற்க வேண்டும். இக்கொடுமை சங்க காலம் முதற்கொண்டே இருந்து வந்துள்ளதையும் அதற்கு அரசியும் விதிவிலக்கல்ல என்பதையும் பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு புறநானூற்றுப் பாடலாலும் (246)அறியலாம்.

நல்லோள் கணவனொடு நளியழல்புகீஇச்

சொல்லிடை யிட்ட மாலைநிலை (தொல்.புறத்.காஞ்சி.நூற்.19)

என்று தொல்காப்பியரும் இலக்கணம் வகுத்துள்ளார்.

கைம்மை நோன்பு நோற்பதைக் காட்டிலும் எரி படுதல் மேலானது என்று உடன் கட்டையேறிய பெருங்கோப்பெண்டு கைம்மை நோன்பின் கொடுமையை எடுத்துரைக்கிறார். கைம்மை நோன்புக்கும் உடன் கட்டை யேறுதலுக்கும் ஏதிரான முதல் குரல் இவருடையது.

அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிபெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவர் பெண்டிர்------------------------------------ (246)

நீர் சோற்றைப் பிழிந்து, வெள்ளெள் துவையலுடன் வேளைக்கீரையை உணவாகக் கொண்டு பரற்கற்கள் பரப்பப்பட்ட படுக்கையில் பாய் இன்றிப் படுத்துறங்க வேண்டிய கொடுமைக்கு ஆளாயினர் கணவனை இழந்த பெண்டிர். இந்த சமூகக் கொடுமை 20 ஆம் நூற்றாண்டு வரையிலும் தொடர்ந்தது.

கூண்டிற் கிளிவளர்ப்பார்- இல்லத்தில்
குக்கல் வளர்த்திடுவார்
வேண்டியது தருவார்-அவற்றின்!
விருப்பத்தை அறிந்தே!
மாண்டவன் மாண்ட பின்னர்-அவனின்
மனைவியின் உள்ளத்தை
ஆண்டையார் காண் பதில்லை- ஐயகோ,

அடிமைப் பெண் கதியே!

கைம்மை எனக் கூறி-அப்பெரும்

கையினிற் கூர் வேலால்

நமினப் பெண் குலத்தின்-இதய

நடுவிற் பாய்ச்சுகின்றோம். (பா.பா.ப.82)

என்று சமூகத்தின் மனசாட்சியை உலுக்கியவர் பாரதிதாசன். ஆண், ஆதிக்க வர்க்கமாகவும் பெண், அடிமை வர்க்கமாகவும் வகுக்கப்பட்டுப் புனிதமும் மரபும் பூசப்பட்ட நச்சுக்கருத்தியல் தலைமுறைதோறும் கூடுபாய்ந்து கொண்டே இருந்து வந்தது.

பெண் தலைமையும் தலைமுறைப் பொறுப்பும்

வீட்டுக்கும் நாட்டுக்கும் உலகுக்கும் பெண்தான் மிகச் சரியானக் காப்பு அரணாக விளங்கத்தக்கவள். குடும்பங்களில் பெண் குழந்தைகளுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து வளர்ப்பதால் மனித இனத்துக்கே நன்மை விளையும். பெண்களுக்குச் சொத்துரிமை என்பது சட்டத்தில் மட்டும் இல்லாமல் சமூகத்தாலும் மனமுவந்து அங்கிகரிக்கப்பட வேண்டும். ‘சமூகத்தால் அனுமதிக்கப்பட்டவைகளே உண்மையான உரிமைகளாகும். சட்டம் வழங்கிய உரிமைகளை அனுபவிப்பதற்குச் சமூகம் தடையாக இருக்குமானல் சட்டத்தால் வழங்கப்பட்ட அந்த உரிமை எதற்கும் பயன்படாது என்பார் அண்ணல் அம்பேத்கர்’ (விடுதலைக்கு வழி ப.26). பெற்றோர்களைப் பாதுகாக்குப் பொறுப்பிலும் நீத்தார் கடன்களிலும் பெண்பிள்ளைகளை முதன்மையாக்குவதன் மூலம் முதியோர்கள் அத்துணை பேருக்கும் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும். ‘பெண்ணடிமை என்பது மனித சமூக அழிவு என்பதை நாம் நினைக்காதாலேயே வளர்ச்சி பெற வேண்டிய மனித சமூகம் பகுத்தறிவு இருந்தும் நாள்தோறும் தேய்ந்து கொண்டே வருகிறது (குடியரசு 16.6.1935)’ என்பார் பெரியாரும்.

பெண்கள் ஞானமும் கல்வியும் வாய்க்கப்பெற்று வீரத்துடனும் பொருளாதாரத் தற்சார்புடனும் ’தன் கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவனை’ (பா.பா.ப.88) சுயமரியாதை மணம் முடித்துத் தன் இல்லத்தில் பெற்றோருடன் வாழ்வதற்கு இந்தச் சமூகம் தடையாக இல்லையாயின் முதியோர் இல்லங்கள் இருக்காது. அநாதை இல்லங்கள் தேவைப்படாது.

பெண் குடும்ப அடையாளத் தகர்ப்பு

குடும்பம் பெண்ணுக்கானது. குடும்பத்தைக் கட்டியமைப்பவள் பெண். ஆனாலும் ஆண் தலைமைத்துவத்தை அவள் ஏற்றுக்கொண்டு தன் இருப்பு இருட்டடிக்கப்படுவதைச் சகித்துக்கொள்ள வேண்டும். பெற்ற குழந்தைகளுக்குத் தான் அடையாளமாக இருப்பதில் கூட சமூகம் அக்கறை கொள்ளவதில்லை. பரம்பரை வரலாறு ஆணை முன் வைத்தே அங்கீகரிக்கப் படுகிறது. குழந்தைக்குத் தகப்பன் யார் என்பதைப் பெண் ஆண்மையச் சமூகத்துக்கு அடையாளம் காட்டியாக வேண்டும் என்ற சமூகதின் எழுதப்படாத சட்டத்தால் குடும்பம் ஆணுக்குரியதாக ஆக்கப்பட்டுள்ளது.

கருவுற்று குழந்தையைப் பெற்றுக்கொள்ளமுடியாத ஆணின் வாய்ப்பின்மை குறித்த தாழ்வுணர்ச்சிதான் பெண் மீது இத்தனை வன்மங்களைப் பிரயோகிக்கிறது.

முதல் உயிரியும் இரண்டாம் இடமும்

வேதங்கள் பலவும் குறிப்பிடுவதைப்போல ஆணிலிருந்து பெண் படைக்கப்படவில்லை என்பதே அறிவியல் உண்மை. உலகின் முதல் உயிரி பெண். தொடக்கத்தில் ஒரு செல் உயிரி இரண்டாக நான்காக பலவாகப்பிரிந்து தன் இனத்தைப் பெருக்கின. மரபணு வீரியத்துக்கு- வெவ்வேறான மரபணு குறியீட்டுத் (Genetic code) தேவைக்கு ஆண்ணினத்தை உற்பத்தி செய்தது பெண் உயிரி. ஒரே மரபியல் பொருள் **(genetic material)** கொண்ட பல உயிர்கள் நோய்த்தாக்குதலுக்கு மொத்தமாக ஆளாகக் கூடும் என்பதற்காக இந்த ஏற்பாடு. இயற்கையைப் பொருத்தவரை பெண்ணுக்குத் தான் சிறப்பு. Female is indispensable; Male is Extendable. மனிதக்கரு உருவாகி எட்டு வாரங்களுக்கு அது ஆணா பெண்ணா என்று கண்டறிய முடியாது. பெண்சிசுவின் வடிவாகவே இருக்கும். பின்னரே ஆணின் வடிவத்தைப் பெறும். Female is original; male is next version என்பார் மருத்துவர் ஷாலினி (உரை:வலையொலி)

முதல் உயிரி தன் இனத்தைப் பெருக்கவும் புதிய புதிய வகைமாதிரிகளை உருவாக்கவும் ஆர்வமும் பொறுப்புணர்வும் கொண்டு செயல்பட்டுள்ளது. இதனால் ஆண் இன உருவாக்கம் நிகழ்ந்துள்ளது. இந்தப் பொறுப்புணர்வு மனிதப் பெண் இனத்திலும் மரபணுவில் பதிவாகியுள்ளது. ஆண் மையச்சமூகத்தின் அணுகுமுறை இந்தப் பதிவை உணர்வுபூர்வமாகத் தாக்குவதாக அமைவதால் பெண் இனம் தியாகத்தின் உச்சநிலையைச் சாதாரணமாக எட்டிவிடுகிறது. பெண்ணின் தியாகம் ஆணை வாழ்விக்கிறது.

அவனியிலே ஒருவனுக்கு மனைவி யின்றேல்
அவனடையும் தீமையை யார் அறியக்கூடும் ?
கவலையுற ஆடவர்கள் நாளும்செய்யும்
கணக்கற்ற ஊழல்களை யெல்லாம் அந்த
நவையற்ற பெண்களன்றோ விலக்குகின்றார்!
நானிலத்தில் மார்தட்டும் ஆடவர்கள்
சுவைவாழ்விற் கடைத்தேறத் தக்கதான
சூக்ஷுமமும் பெண்களிடம் அமைந்தன்றோ!

என்று கூறும் புரட்சிக்கவிஞர், ஜார்ஜ் பெர்னாட்ஷாவின் பெண்ணியச் சிந்தனைகளையும் கவிதையில் மேற்கோள் காட்டுகிறார்.

புவிப்பெரியான் ஜார்ஜ் பெர்னாட் ஷாவுரைத்த
பொன்மொழியைக் கேளுங்கள் நாட்டில் உள்ளீர்!
''உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்.
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்
அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்''
குவியுமெழிற் பெண்களுக்கே ஊறு செய்யும்
குள்ளர்களே, கேட்டீரோ ஷாவின் பேச்சை! (பா.பா.ப.82)

தாயாக, சகோதரியாக மனைவியாக, மகளாக பெண் ஆணை வாழ்விக்கிறாள் என்பது மறுக்க முடியாத உண்மை.

காலந்தோறும் செய்த தொடர்முயற்சியின் விளைவாகப் பெண், தன் வீரத்தை மீளப்பெற்றுள்ளாள். தன் சுதந்தரத்தை மீட்டெடுக்கும் தார்மீகப்பாதையில் களம் இறங்கியுள்ளாள். இன்று கைம்மை நோன்பு இல்லை; கணவனை இழந்த பெண்டிற்கு பரவலாக மறுமணம் நடைபெறுகிறது. ஆனாலும் கணவனை இழந்த பெண்டிரை சடங்கு சம்பிரதாயம் எனற பெயரில் அமங்கலப்படுத்திக் கொடுமை செய்வது இன்றுவரை தீரவில்லை. பெண்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவை அரசாலும் சமூகத்தாலும் உறுதி செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் முழுமையான பொருளாதாரத் தற்சார்பு-பொருளாதார விடுதலை பெறவில்லை. பணம் ஈட்டும் உரிமை இருந்தாலும்

தன் வருமானத்தைத் தான் திட்டமிட்டுத், தன் சுயவிருப்பத்தில் பயன்படுத்தவும் எதிர்காலத் திட்டமிடவும் பெண் சுதந்திரம் பெறவில்லை.

பெண் விடுதலைப் போராட்டம் என்பது பன்முகத்தன்மை கொண்டது. எல்லாத் தளத்திலும் சமத்துவம் பெற பெண்கள் இன்னும் சில நூற்றாண்டுகள் போராடித்தான் ஆகவேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்தே ஆகவேண்டும். இந்தப் போராட்ட வரலாற்றில் பெண்ணினத்துக்கு உரமூட்டிய, சமூகத்துக்கு நல்லறிவு புகட்டிய பெருமை பாவேந்தருக்குக் கணிசமாக உண்டு என்பது எவராலும் மறுக்க முடியாது.

துணை செய்தவை:

1. ஆம்ஸ்ட்ராங் K.(ப.ஆ), விடுதலைக்கு வழி-அம்பேத்கர் ஆற்றிய உரை, தென்னிந்திய புத்த விஹார் அறக்கட்டளை வெளியீடு, டிசம்பர் 2022.
2. சாமிநாதையர் உ.வே (ப.ஆ), புறநானூறு, உ.வே.சா நூல்நிலைய வெளியீடு.
3. சுப்பிரமணியன் ச.வே.(ப.ஆ), சங்க இலக்கியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2006
4. சுப்பிரமணியன் ச.வே.(ப.ஆ), தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, டிசம்பர் 1999
5. பரமசிவம் தொ.(ப.ஆ), பாரதிதாசன் பாடல்கள், NCBH வெளியீடு, சென்னை, டிசம்பர் 2018.
6. மெய்யப்பன் ச.(ப.ஆ), பாரதியார் கவிதைகள் , மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பிப். 2000
7. வீரமணி கி., பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி, உ.த.நி. வெளியீடு, 2002.
8. #drshalini #men #women ஆண் எதற்காக படைக்கப்பட்டான்?

பாரதிதாசனின் பெண்ணுலகு
BHARATHIDASAN'S WORLD OF WOMAN

திருமதி.ஜெ.சரஸ்வதி,

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, எஸ்.ஐ.வி.இ.டி.கல்லூரி,

கௌரிவாக்கம், சென்னை – 73.

அலைபேசி எண் : 98407 39334, மின்னஞ்சல் : saraswathi@sivet.in

ABSTRACT:

Bharathidasan was an admirable 20th Century Tamil Poet and Rationalist writer. His literary works handled mostly socio - politcal issues faced by women. He had the deep urge to liberate women especially the women of Tamilnadu from the manacles of social slavery. As a solution for women, he states that each and every women has to get rid these problems by their own, inculcating education, awareness and brilliance which will be a qualitative improvement in their lifestyle.

KEYWORDS:

Introduction – Quotes of Bernard Shaw about women – Widow Status of women in society – Childhood marriage – Incompatible marriage – Slavery of women – Awareness of social problems – Women empowerment – Women's revolution – Justice for women – Conclusion.

முன்னுரை:

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் புதுவை தந்த புரட்சிக்கவி பாரதிதாசன் ஆவார். 1891 ஆம் ஆண்டு கனகசபை, இலக்குமி அம்மாள் தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் கனக சுப்புரத்தினம். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் மகாகவி பாரதியாரின் பாடல்களால் ஈர்க்கப்பட்டார். தம்முடைய முன்னோடிக் கவிஞரான பாரதியார் மீது கொண்ட பற்று நாளடைவில் பெருக, அவர் தம் பெயரையே பாரதிதாசன் என மாற்றிக் கொள்ளும் அளவிற்குக் கொண்டு சென்றது. **"பாரதிதாசன், பாரதியாரை நேரில் பழகி அறிந்தவர். 39 வயதில் பாரதி மறைந்து போனதால் அந்த நட்பு நீண்ட காலம் நீடிக்கவில்லை. தான் பாரதிக்குத் தாசனான கதையை**

‘சுப்பிர மணிய பாரதி தோன்றி என்

பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்’

என்று சுருக்கமாகச் சொல்லி வைக்கிறார் பாரதிதாசன்”[1]. மகாகவி பாரதிக்கு நிகராக, அவரைப் பின்தொடர்ந்து, நமக்குக் கிடைத்த மற்றொரு மாபெரும் கவிஞர் புரட்சிக்கவி பாரதிதாசன். இவ்விரு கவிஞர்களையும் தமிழ்க் கவிதை உலகம் என்றென்றும் தலை வணங்குகிறது; பெண்ணுலகம் போற்றுகிறது. புதுமைப் பெண்ணைக் கண்ட பாரதியை அடியொற்றி - பெண்ணுரிமைக்கு, பெண் விடுதலைக்குப் போராடிய புரட்சிச் சிந்தனையாளர் பாவேந்தர் பாரதிதாசன். மேலும், இவர் பெரியாரின் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடுடையவர். பெரியார் அவர்கள், “**பெண்ணியத்தைப் பேணவும் பல மூட நம்பிக்கைகளை அகற்றவும் பாடுபட்டார். அவருடைய கொள்கையைப் பின்பற்றிப் பல கவிஞர்கள் பல கவிதைகளை எழுதியுள்ளனர். அவர்களுள் பாரதிதாசன் குறிப்பிடத்தக்கவர்”**[2]. இவரது ‘பெண்ணுலகு’ குறித்த பார்வை அவருடைய பாடல்களிலிருந்து எடுத்துக்காட்டப்பட்டு, பெண்கள் குறித்த பாவேந்தரின் சிந்தனைகள் பறைசாற்றப்படுகின்றன.

பெண்களைப் பற்றி பெர்னாட்ஷா :

பெண்கள் பற்றி உரைத்த ஜார்ஜ் பெர்னாட்ஷா அவர்களின் பொன்மொழியைத் தம்முடைய கவிதையில் எடுத்துக்காட்டுகிறார் பாரதிதாசன்.

“உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த

உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்.

அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்!

அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்!”

குவியுமெழிற் பெண்களுக்கே ஊறு செய்யும்

குள்ளர்களே, கேட்டீரோ ஷாவின் பேச்சை!

என்று உரைக்கிறார். பெண்களுக்குக் கெடுதல் செய்யும் வஞ்சகர்களைக் குள்ளர்கள் எனச் சாடுகின்றார். ஓர் ஆணின் வாழ்க்கைப் பாதை சீராக அமைவதற்கு உறுதுணையாக இருப்பவள் பெண் என்ற கவிஞரின் உள்ளம் இப்பாடலில் தெளிவாகிறது.

சமுதாயத்தில் பெண்கள் பல துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள். கடைத்தேற வழியின்றித் தவிக்கிறார்கள். மனைவியரைப் புல்லென்று (கேவலமாக) நினைக்கும் புருஷர்களிடம் ஷாவின் பேச்சைக் கேட்குமாறு வலியுறுத்துகிறார். சமூகத்தின் இந்த மனோபாவம் இனியாவது திருந்தட்டும்; ஆண், பெண் என்ற சமமான இரண்டுருளைகளால் மட்டுமே இன்பமான வாழ்க்கை நடக்கும் என்று கூறுகிறார். கவிஞரது இப்பாடல் ஆண் – பெண் சமத்துவத்தை வலியுறுத்துகிறது.

கைம்மை :

கைம்மை என்பது விதவை நிலையைக் குறிக்கிறது. மனைவியை இழந்த கணவருக்கும், கணவரை இழந்த மனைவியருக்கும் கைம்மை என்ற நிலை பொதுவானது. ஆனால் சமுதாயம் அப்படி வகுக்கவில்லை. கணவர்கள் மீது கைம்மைப் பழி விழுவதில்லை. அன்று முதல் இன்று வரை மனைவிகள் மட்டுமே இவ்வேதனையில் சிக்குண்டு நோகின்றனர்; பழியை ஏற்கின்றனர். கைம்மைப் பழியைச் சமூகம் பெண் மேல்தான் திணிக்கின்றது. மனைவி இறந்துவிட்டால் கணவன் வேறு துணையைத் தேடிக்கொள்வதில் தவறில்லை; ஆனால் கணவன் இறந்துவிட்டால் மனைவிக்கு வேறு துணையைப் பெறுவதற்கு உரிமையில்லை. பெண் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையாயிருக்கும் சமுதாயம் பெண் விடுதலைக்குத் தடையிட்டது.

“ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என வரையறுக்கப்பட்ட நிலையில் கைம்மை என்பது பெண்களுக்கு மட்டுமே உரியதாயிற்று. இன்று கணவனை இழந்த மகளிரை ‘விதவை’ என்கிறோம். அதற்குரிய ஆண்பால் சொல் தமிழில் இல்லை. ஆங்கிலத்தில் அப்பெண்களைக் குறிக்க ‘Widow’ என்றும் ஆண்களைக் குறிக்க ‘Widower’ என்றும் அழைத்தனர். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க. ‘ஆண் கைம்மையர்’ என்ற சொல்லை உருவாக்கினார்”[3]. கைம்மைப் பழியேற்கும் பெண்ணின் துன்பத்தைக் கவிஞர் தம் பாடலில் எடுத்துரைக்கின்றார். ‘யாருக்கும் வெட்கமில்லை’ என இச்சமுதாயத்தைச் சாடுகின்றார்.

யாருக்கும் வெட்க மிலை!

தன் கணவன் செத்து விட்டபின் மாது

தலையிற் கைம் மைஎன ஓர் – பெருந்

துன்பச் சுமைதனைத் தூக்கி வைத் தார்; பின்பு

துணை தேட வேண்டாம் என் றார்.

எனக் கூறுகிறார். பெண்களின் காதல் உளத்தைத் தடுப்பது, வாழ்வைக் கவிழ்க்கின்றதை நிகர்க்கும் என்கிறார்.

காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட

கைம்மையைத் தூர்க்கா தீர்! – ஒரு

கட்டழகன் திருத் தோளினைச் சேர்ந்திடச்

சாத்திரம் பார்க்கா தீர்

என்கிறார். இவ்வரிகளில் கைம்மைப் பழியெற்கும் பெண்களின் மறுமணம் குறித்த தற்சார்புச் சிந்தனையினை விதைக்கின்றார்.

அழகிய பெண்கள் – நமக்கோ

அழுகிய பழத்தோல்!

கைம்மை எனக் கூறி – அப்பெரும்

கையினிற் கூர் வேலால்

நம்மினப் பெண் குலத்தின் – இதய

நடுவிற் பாய்ச்சுகின்றோம்.

எனப் பெண்களின் கைம்மை நிலை குறித்த துன்பத்தினைப் பதிவிடுகிறார்.

மாண்டவன் மாண்ட பின்னர் – அவனின்

மனைவியின் உளத்தை

ஆண்டையர் காண் பதில்லை – ஐயகோ,

அடிமைப் பெண் கதியே!

என்று கைம்மை எனத் திணிக்கப்படும் பெண்ணடிமை நிலை குறித்து வருந்துகின்றார். கைம்பெண்ணுக்கு மறுமணம் கூடாது என்ற அடிமை நிலையை வகுத்த சமூகம் அவளுக்கு சில வரைமுறைகளையும் தருகிறது. **"இந்திய நாட்டில் விதவைகள் கொடுமை அடைந்து வருவது போல, வேறெந்த நாட்டிலும் அடைந்ததில்லை. விதவைகள் உடன்கட்டை ஏறவேண்டும், அல்லது வாழ்நாள் முழுவதும் பிரமச்சாரிணி விரதங்காக்க வேண்டுமென, இந்தியரின் சமய நூல்களில் எழுதி வைக்கப்பட்டுள்ளது"[4].** கைம்பெண்

மேல் திணிக்கப்படும் இக்கொடுமைகளைக் கண்டு கவிஞர், ஞாலம் ஒப்புமோ? எனக் கண்ணீர் வடிக்கிறார். இதனை,

தரையிற் படுத்தல் வேண்டும்

சாதம் குறைத்தல் வேண்டும்

தாலி யற்றவள் – மேலழுத்திடும்

வேலின் அக்ரமம் – ஞாலம் ஒப்புமோ?

என்ற அவருடைய பாடல் வரிகள் உணர்த்துகின்றன. **“மகளிரை இரண்டாம் தரக் குடிமக்கள் போல நடத்துவது உலகின் பெரும்பான்மை மக்களால் பரவலாகக் காணப்படும் வழக்கம் என்றே கூறலாம். வாழ்க்கை ஆணுக்குரியது. அவனுக்குத் துணை இவள். சகதர்மினி என்ற வடசொல்லும் என்ற ஆங்கில வழக்கும் பெண்ணுக்கு மேன்மையான நிலைகளைச் சுட்டினாலும் வழக்கில் அவ்வாறு இல்லை என்பதே கண்கூடு”[5].** கைம்மைப் பழி, கைம்மை நிலை, கைம்மைத் துயர் குறித்துப் பாடிய கவிஞர் கைம்மை நீக்கம் குறித்த புரட்சிக் கருத்தினைப் பாடுகின்றார்.

கருத்தொரு மித்த போது

கட்டுக்கள் என்ப தேது

கைம்மை கூறும் அதிசய மனிதர்கள்

செம்மை யாகும்படி செயமனதுவை! அடி!

என்று கைம்மை நீக்கம் குறித்துப் பாடுகிறார்.

மூடத் திருமணம் :

மூடத் திருமணம் என்ற தலைப்பில் பாரதிதாசன் பொருந்தா மணத்தைக் குறிக்கின்றார். அகத்திணைகள் ஏழனுள் சுட்டப்படும் பெருந்திணை எனும் பொருந்தாக் காதல் இப்பாடலுள் பொருண்மையாகிறது. இளம் பருவப் பெண்ணை முதிய ஆணுக்கு (கிழவனுக்கு) மணமுடிப்பதால், அப்பெண் அடையும் துயரநிலை விளக்கப்படுகிறது. இத்தகைய மணத்தை மூடத் திருமணம் எனக் கவிஞர் சாடுகிறார். **“திருமணம் என்பது ஆண்களுக்கு நன்மையாகவும் பெண்களுக்குக் கேடாகவும் இருக்கிறது”[6].** இத்திருமணத்தினால் ஒரு பெண் தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவிற்குப் போகிறாள். பெண்களுக்கே இத்தகைய நிலை. பாழும் சமூகத்தின் இத்தகைய சட்டங்களும், வழக்கங்களும் மண்ணாய்ப் போகட்டும் என மனம் பதைத்துக் கூறுகிறார்.

மண்ணாய்ப் போக! மண்ணாய்ப் போக!

மனம் பொருந் தாமணம் மண்ணாய்ப்போக!

சமூகச் சட்டமே! சமூக வழக்கமே!

நீங்கள், மக்கள் அனைவரும்

ஏங்காதிருக்க மண்ணாய்ப் போகவே!

என்று பாடுகிறார்.

எழுச்சியுற்ற பெண்கள் :

காமவெறி கொண்ட ஓர் ஆணின் பார்வையில் பெண் என்பவள் போகப் பொருளாகவே தெரிகிறாள். அத்தகைய ஆணின் மாய வலையில் (பேச்சில்) சிக்குண்டு, பெண்கள் தங்கள் சுயத்தை இழக்கிறார்கள்; உயிரையும் விடுகிறார்கள். இந்நிலையிலிருந்து பெண்கள் மாற வேண்டும். **“கணவனாக வந்துவிட்டாலே காதல் கொள்வது பெரும்பான்மைப் பெண்களின் இயல்பு. ஆனால் மனைவியாக வந்த பின்னும் மாற்றாளிடம் மனம் பறிகொடுப்பது சில ஆடவரின் இயல்பு”**[7]. பெண்களை ஏமாற்ற நினைக்கும் ஆண்களைத் தண்டிக்கும் பெண்களாக எழுச்சியடைய வேண்டும் என்று பாரதிதாசன் விரும்புகிறார்.

உனக்களிப்பேன் இன்பமென நெருங்கலானான்!

அருகவளும் நெருங்கி வந்தாள்; தன்மேல் வைத்த

ஆர்வந்தான் என நினைத்தான்! இமைக்கு முன்னே

ஒரு கையில் உடைவாளும் இடது கையில்

ஓடிப்போ! என்னுமொரு குறிப்புமாகப்

புருவத்தை மேலேற்றி விழித்துச் சொல்வாள்;

என்று கூறுகிறார். இவ்வரிகளில் ஆணிடம் சிக்காத பெண்ணின் விழிப்பு நிலையை, எழுச்சி நிலையைக் காட்டுகிறார். மேலும், இன்றைய பெண்கள் விழித்துக் கொண்டார்கள் என்பதை,

செல்வப் பிள்ளாய்! இன்று புவியில் பெண்கள்

சிறுநிலையில் இருக்கவில்லை; விழித்துக் கொண்டார்!

கொல்லவந்த வாளை நீ குறை சொல்லாதே!

கொடுவாள் போல் மற்றொருவாள் உன் மனைவி

மெல்லிடையில் நீ காணாக் காரணத்தால்,

விளையாட நினைத்துவிட்டாய் ஊர்ப்பெண் கள்மேல்!

பொல்லாத மானிடனே, மனச்சான்றுக்குள்

புகுந்து கொள்வாய்! நிற்காதே!

என்கிறார். பெண்ணைக் காமுறுகின்ற கயவர்கள் மாள வேண்டும். பெண்கள் விழிப்புற வேண்டும்; எழுச்சியடைய வேண்டும்.

குழந்தை மணத்தின் கொடுமை :

"குழந்தைத் திருமணம் நடந்ததும் தெரியாமல் கணவன் யாரென அறியாமலும், அவன் இறந்ததும் நினைவில்லாமல் பருவ வயதில் கைம்மைக் கோலம் பூண்டு நிற்கும் கன்னியர் மிகப் பலர்"[8]. ஏதும் அறியாத ஒரு சிறு குழந்தைக்குத் (பெண்ணுக்கு) திருமணம் நடத்துகின்றனர். அந்தப் பெண் சில நாட்களிலேயே கட்டிய கணவனை இழந்து தந்தையின் வீட்டிலேயே அடைக்கலம் புகுகிறாள். அத்தந்தையோ தன் மனைவியை இழந்து மறுதாரமாய் ஒரு மங்கையை மணக்கிறான். குழந்தைப் பருவத்திலேயே மணம் முடித்து வாழ்வை இழந்து இளந்தலைக் கைம்பெண்ணாக நிற்கும் அவள் இன்புற்றிருக்கும் தன் தந்தையைக் கண்டு மனம் குமுறுகிறாள்.

நான் ஏன் வெளியில் நாய் போற் கிடப்பது?

அவருக்கு நான் மகள்! அவர் எதிர் சென்றால்,

நீ போ! என்று புருவம் நெரிப்பதோ?

....

குழந்தை வாழ்நாட் கொடுமையிற் பெரிதே.

என்று குழந்தை மணத்தின் கொடுமையைத் தம் பாடலில் காட்சிப்படுத்துகின்றார் கவிஞர்.

பெண்ணுக்கு நீதி :

"உண்மையில் பெண்ணுரிமை வேண்டுவோர் – பொதுவாகவே, அடக்கி ஒடுக்கப்பட்ட எந்தச் சாரார்க்கும் நியாயம் வேண்டுவோர் – இருசாராரும்

நியாயவழியில் செல்லுமாறு கேட்பதே முறை"[9]. பெண்ணை விலை பேசும் மூடர்கள் மத்தியில், பெண்ணுக்கு நீதி வேண்டும் எனக் கேட்கிறார் பாவேந்தர்.

கல்யாணம் ஆகாத பெண்ணே! – உன்

கதிதன்னை நீநிச் சயம்செய்க கண்ணே

என்று கூறுகிறார். பெண்களே தங்களின் நிலையை நிச்சயிக்க வேண்டும் என்கிறார். பேரம் பேசி பெண்ணைத் திருமணம் முடிப்பார்கள். பெண்ணே நீ அவர்களுக்கு அஞ்ச வேண்டாம் என்பதை,

வல்லி உனக்கொரு நீதி – 'இந்த

வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்சவேண்டாம்'

என்ற வரிகளில் கூறுகிறார். பெற்றோரும் தங்கள் சுமை தீர்ந்தது; கடமை முடிந்தது என்று நினைப்பார்கள். பெண் என்பவள் பெற்றோருக்கு என்றும் சுமையாகவே இருக்கிறாள். அடைக்கப்படும் குதிரைக்குக் கூட கனைக்க உத்தரவுண்டு. பொருளையும் கொடுத்துப் பெண்ணையும் கொள்கின்ற, இப்படிப்பட்ட வஞ்சகர்களுக்குப் பெண்ணை விற்று இன்புற்றிருக்கும் கல் நெஞ்சுடைய பெற்றோரிடம் நியாயம் கேட்கச் சொல்கிறார். நியாயம் தராவிடில் இப்படியொரு வாழ்விலிருந்து விடுதலை மேற்கொள்ள வேண்டும் என்று பெண்ணினத்திற்கு உறுதி கூறுகிறார். இதனை,

தனித்துக் கிடந்திடும் லாயம் – அதில்

தள்ளியடைக்கப் படுங் குதிரைக்கும்

கனைத்திட உத்தரவுண்டு – வீட்டில்

காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டும்;

கனத்த உன் பெற்றோரைக் கேளே! - அவர்

கல்லொத்த நெஞ்சையுன் கண்ணீரினாலே

நனைத்திடு வாய் அதன் மேலும் – அவர்

ஞாயம் தராவிடில் விடுதலை மேற்கொள்!

என்ற பாடலில் வலியுறுத்துகிறார். இவ்வாறு பெண்ணிற்கான நீதியைப் பரிந்துரைக்கிறார்.

முடிவுரை :

பாரதிதாசனின் பெண்ணுலகு பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளான கைம்மை, பொருந்தா மணம், குழந்தை மணம், காமுகர்களைக் கண்டறியும் பெண் விழிப்புணர்வு, கொடுமைகளிலிருந்து எழுச்சி பெறக் கூடிய பெண்விடுதலை, கைம்மை நீக்கம், பெண்ணுக்கான நீதி போன்ற பல தகவல்களை நமக்குத் தருகிறது. பெண்களே தங்களுக்கான கை விலங்குகளை உடைத்தெறிய வேண்டும் என்று பாரதிதாசன் கூறுகிறார். சமூகம் என்னும் கட்டுக்களைத் தகர்த்து பெண் விடுதலை பெற வேண்டும் என்று விழைகிறார். பெண்களைக் கட்டுக்குள் வைக்கும் ஆணினத்தையும், சமுதாயத்தையும் சாடுகிறார். இக்கட்டுரையில் குறிப்பிட்டிருக்கும் கவிஞரின் சிந்தனைகள் தவிர பெண் கல்வி, பெண் சொத்துரிமை, பெண் மறுமலர்ச்சிக் கோட்பாடுகள், பெண்ணடிமைப் புறக்கணிப்பு எனப் பல பொருண்மைகளில் இவர் கவிதைகள் மிளிருகின்றன. மகாகவி பாரதியாரின் வழித்தோன்றலாகவும், பெரியாரின் புரட்சிப் பாதையில் பயணிப்பவராகவும் விளங்கும் பாவேந்தர் பாரதிதாசன் பழைமையெனும் மூடத்தனத்தைக் கட்டுடைப்பவராகக் கவிதைகளின் வழி வெளிப்படுகிறார். பெண்ணின் மேம்பட்ட ஆளுமையை இவ்வுலகுக்கு வெளிக்காட்ட வேண்டும் என்கிற புரட்சிக்கவியின் புதுமைச் சிந்தனை அவரை, பெண்ணினத்தைப் போற்றும் ஒரு சிறந்த கவிஞராக வெளிக்காட்டுகிறது.

அடிக்குறிப்புகள்

1. தொ.பரமசிவன் (தொ.ஆ.), பாரதிதாசன் பாடல்கள், முன்னுரை, ப.V
2. இரா.சந்திரசேகரன், ப.சரவணன், பாரதிதாசன் கவிதைகளில் பெண்ணியமும் பெரியாரியமும், அறிமுகவுரை
3. மேற்படி, பக்.66-67
4. ந.சி.கந்தையாபிள்ளை, பெண்கள் உலகம், ப.34
5. மீனாட்சி முருகரத்தினம், பெண்ணியச் சிந்தனைகள், ப.37
6. ச.கல்யாணசுந்தரம், பாரதியார் காட்டிய பகுத்தறிவுப் பாதை, ப.92
7. மீனாட்சி முருகரத்தினம், பெண்ணியச் சிந்தனைகள், ப.56
8. இரா.சந்திரசேகரன், ப.சரவணன், பாரதிதாசன் கவிதைகளில் பெண்ணியமும் பெரியாரியமும், ப.67
9. மீனாட்சி முருகரத்தினம், பெண்ணியச் சிந்தனைகள், ப.36

துணை நூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

1. **தொ.பரமசிவன் (தொ.ஆ.),** **பாரதிதாசன் பாடல்கள்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600 098, எட்டாவது பதிப்பு, மார்ச் 2009. ISBN : 978-81-234-0217-1, Code No: A693

துணைமை ஆதாரங்கள்

1. **இரா.சந்திரசேகரன், ப.சரவணன்,** **பாரதிதாசன் கவிதைகளில் பெண்ணியமும் பெரியாரியமும்,** நாம் தமிழர் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை – 600 005, முதற்பதிப்பு, நவம்பர் 2007.
2. **கந்தையாபிள்ளை ந.சி.,** **பெண்கள் உலகம்,** வேந்தன் வெளியீடு, சென்னை – 89, இரண்டாம் பதிப்பு, 1998, மார்ச்.
3. **கல்யாணசுந்தரம் ச.,** **பாரதியார் காட்டிய பகுத்தறிவுப் பாதை,** சிவபாக்கியம் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி, முதல் பதிப்பு, 1994, ஏப்ரல்.
4. **மீனாட்சி முருகரத்தினம்,** **பெண்ணியச் சிந்தனைகள்,** பெண்ணிய மனிதநேய நூல் வெளியீடு நிறுவனம், மதுரை, முதற்பதிப்பு, 1999.

பன்முக நோக்கில் பாவேந்தர் பாரதிதாசன்

வெ. வரலெட்சுமி, M.A., B.Ed., M.Phil.,
முனைவர் பட்ட ஆய்வாளர், எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி,
கௌரிவாக்கம், சென்னை

தமிழுக்கு அமுதென்று பெயர்

முன்னுரை :

புதுவைக் குயில் என்றும், புரட்சிக்கவி என்றும் அழைக்கப்படும் **பாரதிதாசன் பன்முக நோக்குடையவரே** என்பதை இக்கட்டுரை வாயிலாக ஆய்ந்தறிவோம்.

இளமைக் காலம்

கனகசபை இலக்குமி அம்மாளுக்கு புதுச்சேரியில் ஏப்ரல் மாதம் 29-ம் தேதி 1891-ம் ஆண்டு மகனாகப் பிறந்தார். தமிழாசிரியராக சில ஆண்டுகள் பணியாற்றிய இவர், 1954ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். திராவிட இயக்கத்தின் தீவிர தொண்டனாக இருந்த இவர், தந்தை பெரியார் மற்றும் பல அரசியல் தலைவர்களுடன் இணைந்து பல சுதந்திர போராட்டங்களில் ஈடுபட்டார்.

மறைந்த இயற்பெயர்

கனகசுப்புரத்தினம் என்ற தனது இயற்பெயரே மறந்துவிடும் அளவிற்கு, பாரதியார் மேல் பற்றுக் கொண்டு, தனது பெயரை **பாரதிதாசன்** என்று மாற்றிக் கொண்டார். அதே பெயரில்தான் சாகும்போதினிலும் மறைந்தார். தன் இனிமையான கருத்துக்களை இனவுணர்வோடு வெளிப்படுத்தி மக்களின் எண்ணங்களையும், செயல்களையும் எழுச்சியுற செய்ததினால் அறிஞர் அண்ணா இவரை **புரட்சிக்கவி** என்று அழைத்தார்.

இல்லற வாழ்க்கை

1920ஆம் ஆண்டு பழனியம்மையாரை மணந்தார். 1928ம் ஆண்டு மன்னர் மன்னன் என்ற மகனும், சரஸ்வதி, வசந்தா மற்றும் ரமணி என்ற மகள்களும் பிறந்தனர்.

இயற்றிய நூல்கள்

பெண், கல்வி கற்காவிட்டால் வீடே **இருண்ட வீடு** என்ற உணர்த்துவதற்கு ஒரு நூலுக்கு வித்திட்டவரே

குடும்ப விளக்காய் பெண் இருந்திட அவளுக்கு கல்வி அவசியம் என்பதற்காக ஒரு நூலைப் படைத்தவரே,

மனிதன் சிரித்தால் அழகு என்பதால், **அழகின் சிரிப்பு**க்கு சிந்தனையோடு சிறகடிக்கச் செய்தவரே,

நம் மக்களுக்கு தன்மானம் தான் வீரம் என்பதை பாண்டியன் மூலம் உணர்த்திட **பாண்டியன் பரிசு** தந்தவரே,

தமிழச்சியிடம் **ஒரு கத்தி**யை கொடுத்தவரும் நீரே

பெண்ணை பூட்டி வைத்த அந்த காலத்திலேயே தனி ஒருவளாக அரசை எதிர்த்த **கண்ணகி**க்கு **புரட்சிகாப்பியம்** படைத்தவரும் நம் பாரதிதாசன் அன்றோ

மாதவிக்குப் பிறந்த மகளையும் பெண்ணினம் போற்றும்படியாக, **மணிமேகலை வெண்பா**வை இயற்றியவரும் நம் கனக சுப்புரத்தினம் அன்றோ

மலர்களின் மணிமகுடமான குறிஞ்சியைக் கொண்டு **குறிஞ்சித் திட்டு** படைத்தவரும் நீர் அன்றோ

சஞ்சீவிபர்வதத்தின் சாரலை தெளித்தவரே, எம்மை குளுமையடையச் செய்தவரே

எதிர்பாராத முத்தத்தால் எதையும் எதிர்கொள்ளும் வலிமை கொடுத்தவரே

நின் படைப்புகள் அனைத்தும் நீர் ஒரு புரட்சிக்கவி என்பதற்கு சான்றாக அன்றும், இன்றும், என்றும் உலகம் உள்ளவரை நிலைத்திருக்கும்.

சாகித்ய அகாடமி

பிசிராந்தையார் நாடகம் – நட்பிற்கு இலக்கணம் அன்றோ அவருடைய படைப்புகளில் இருந்து, அவர் தொட்டிராத பண்புகளோ, நாட்டு நடப்புகளோ இல்லை எனலாம். அக்கால, இக்கால சூழ்நிலைக்கேற்ற நூல்களைப் படைத்து இன்றளவும் சாவாக் கவியாக நம்மிடையே புரட்சி செய்து கொண்டிருக்கிறார்.

புத்தக சாலை

மக்கள் புதுவாழ்வு பெற்று, பொலிவுடன் வாழ, புத்தகங்களை நாடுதல் வேண்டும் என்று இருபதாம் நூற்றாண்டிலேயே பாடியவர்.

புத்தகமே புத்துயிர் அளித்திடும் என்பதை உணர்ந்த பாரதிதாசன் அவர்கள்,

இனிதினியாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சலை
புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்
ஆசித்த நூல் தந்தும புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை

நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேசத்தாலும்
மாசற்ற தொண்டிழைப்பீர், சமுதாயம்
மறுமலர்ச்சி கண்டெதென முழக்கம் செய்வீர்

\- பாரதிதாசன்

தமிழக அரசு

இதைத்தான் நம் தமிழக அரசும்

1. ஊருக்கு ஊர் புத்தகக் கண்காட்சி
2. வாசிக்க வாருங்க வளம் நிறையும்
3. பள்ளிகளில் அனைத்து மாணவர்களும் தினம் ஒரு புத்தகம் வாசிக்க நூலகப் பாடப்பிரிவு என்றெல்லாம்

பாரதிதாசனின் அடியொற்றி நூலுக்கும், வாசிப்புக்கும், வாசித்தவர்களுக்கு பரிசளிப்பும் என்று பல திட்டங்களை நம் தமிழக அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

குயில்

குயில் இதழை நடத்தி இந்தப் புதுச்சேரி குயிலின் பாடல்கள் மாணவர்களிடையே எழுச்சிமிக்க எண்ணங்களை அருவியாக கொட்டுகிறது.

படி படி நூலைப் படி

என்ற கவிதையில் கட்டளை, அறிவுரை, அன்பின் வேண்டுகோள் என்ற அனைத்தையும் பொழிந்துள்ளார்.

முதல் கவிதை

பாரதியாரின் ஆசி பெற்றுத்தான் சுதேசி மித்ரனுக்கு அவருடைய முதல் கவிதையை அனுப்பி வைத்தார்.

ஆசிரியரின் ஆசி பெறுபவர் ஆண்டவனின் அருளாசி பெற்றவருக்குச் சமம்.

எங்கெங்கும் காணினும் சக்தியடா – தம்பி

ஏழுகடல் அவள் வண்ணமடா

இந்த இரண்டு வரிகளிலும் ஏழு உலகத்தையும் வாலிபனுக்கு உணர்த்தி, அதில் அவன் சக்தி நிறைந்துள்ளது என்பதை வலிமையோடு எடுத்துரைத்துள்ளார்.

தமிழ்

தமிழுக்கு தொண்டு செய்வோர் சாவதில்லை

தமிழன் என்று சொல்லடா – தலைநிமிர்ந்து நில்லடா

என்ற சொற்றொடரிகளிலிருந்து அவரின் தமிழ்ப் பற்றை நாம் அறியலாம்.

அவன் (பாரதிதாசன்) ஆற்றிய தமிழ்த் தொண்டினால் இன்றுவரை சாகா வரம் பெற்று நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறான். இனியும் நம் **பேரன் பேத்திகளுடனும்** வாழ்வான். அவனுக்கோ அவன் கவிதைகளுக்கோ சாவில்லை. பாரதியின் நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த நன்னடையும், உனக்கு **தமிழன்** என்று சொன்னாலே வந்துவிடும் என்று உணர்த்தியவரும் அவரே.

அடிமைப்பட்ட இந்தியாவை வென்றெடுக்கவும், அடிமை உணர்வினை நம்மிடையே இருந்து நீக்கிடவும் **புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை காத்திடுவோம்** என்று முழக்கமிட்டு நம் மக்களை எழுச்சியுறச் செய்தவர் நம் பாரதிதாசன்.

உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே

என்று நம் குருதியிலும், ஒவ்வொரு அணுவிலும் தமிழ் தமிழ் என்று பாடச் செய்தவர். தமிழ் தமிழ் என்று கூறினால், அது அமிழ்து அமிழ்து என்றே காதுகளில் ஒலிக்கும் என்பதினால்தான் **தமிழுக்கு அமுதென்று** பெயர் என்று பாடினார்.

உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு

திங்களோடும் செழும்பருதி தன்னோடும்

விண்ணோடும் வடுக்களோடும்

மங்கும் கடல் இவற்றோடு

பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்

என்ற கவிதையின் மூலம் தமிழ்தான் உயிர் என்று எடுத்துரைத்துள்ளார்.

பிறந்த குழந்தை கூட இன்று, **உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு** என்று உற்சாகமாக உரைப்பதை கண்கூடாக பார்க்கிறோம். மேலும் **தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடாதே** என்பதின் மூலம் தமிழுக்கு யாராலும் பழி வரக்கூடாது என்று எடுத்துரைக்கிறார். என்னைப் போன்றே பல கவிகளும் உருவாகிட வேண்டும், தமிழ்

உயிர்த்தெழ வேண்டும் என்ற கருத்தில் இளைஞர்களே, வாலிபர்களே, தமிழ் நெஞ்சங்களே **எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்.**

இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.

என்று முழக்கமிட்டு அனைவரையும் ஆரவாரத்துடன் அழைக்கிறார். மேலும் இளைஞர்களுக்கு அறிவுரை வழங்குகிறார். நீ மட்டும் கல்வி கற்றால் போதுமானது இல்லை. அனைவரையும் கல்வி கற்க வழி செய், இல்லையெனில் வெட்கப்படு என்று பொருள் பொதிய,

எளிமையால் ஒரு தமிழனுக்கு படிப்பில்லை

என்றால், இங்குள்ள அனைவரும் நாணிடவும் வேண்டும்

என்று ஒவ்வொரு தமிழனின் கடமையை உணர்த்துகிறார். இளைஞர்களுக்கு கல்வியால் **தமிழனை உயர்த்து** என்று கட்டளையிடுகிறார்.

ஆங்கிலேயர் நம் நாட்டை விட்டு மறைந்தார். நாம் அனைவரும் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் இந்தியாவை உயர்த்துவோம் என்ற அடிப்படையில்,

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்

இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டோம்

எல்லோருக்கும் எல்லாம் என்றிருப்பதனை

இடம் நோக்கி நடக்கின்ற இந்த வையம்

என்று சுதந்திர இந்தியாவில் பாடினார்.

பெண் கல்வி

தமிழைப் போற்றி பாடிய இவரின் பன்முகத் தன்மை பெண் கல்வியை போற்றுவதிலும் தவறவில்லை.

கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம் போன்றவர்கள், கல்வி கற்ற பெண்ணால், ஒரு பரம்பரையே கல்வியால் சிறந்து விளங்கும். எப்படி எனில் கல்வி கற்ற பெண்ணின் குழந்தைகள் அனைவரும் அறிவுச்சுடராகவும், அறியாமை இருளை நீக்குபவராகவும் இருப்பர். அவர்கள், தங்களை உயர்த்திக் கொள்வதோடு, இச்சமுதாயத்தையும் உயர்த்துவர் என்பதில் ஐயமில்லை என்ற கருத்தை ஆணித்தரமாக இக்கவிதையின் மூலம் உணர்த்துகிறார்.

பெண், கல்வி கற்காமல் பேதையாக இருந்தால் நாடு என்னவாகும் என்பதை கீழ்க்கண்ட கவிதையின் மூலம் விளக்குகிறார். மேலும் பெண்ணாகப் பட்டவள் மக்களால் போற்றப்பட வேண்டும். அவளுக்கு எதுவும் தெரியாது என்று ஒதுக்குதல் தவறு,

பெண் எனில் பேதை என்ற எண்ணம்

இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்

உருப்படல் என்பது சரிப்படாது

என்று தன் கருத்துக்களை தெள்ளத்தெளிவாக எடுத்துரைக்கிறார்.

கல்வி

விலை போட்டு வாங்கவா முடியும் கல்வி

வேளை தோறும் கற்றுவருவதனால் முடியும்

என்று கூறுகையில் கல்வியை விலை கொடுத்து வாங்கமுடியாது. நாம் தினம் தினம் படிப்பதனால்தான் கல்வி வரும் என்றும், கல்விதான் வீட்டையும், நாட்டையும் உயர்த்தும் என்று உறுதியுடன் எடுத்து இயம்புகிறார்.

வள்ளுவன்

இவர் முப்பால் தந்த ஐயன் வள்ளுவனைப் போற்றும் விதமாக

வள்ளுவனைப் பெற்றதால்

பெற்றதே புகழ் வையகமே என்று உலகம் புகழடைந்த்தற்கு காரணமே ‘வள்ளுவன்தான் என்கிறார். மேலும் **இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே** என்று திருக்குறளைப் புகழுகிறார்.

தெள்ளுத் தமிழ் நடை சின்னஞ் சிறிய இரண்டிகள் அள்ளுந்தொருசுவை உள்ளத்தொரும் உணர்வாகும் வண்ணம் என்று இரண்டடி குறள் வெண்பாவை போற்றியுள்ளார். இவரைப் பற்றி பல அறிஞர் பெருமக்கள் பலவாறாக போற்றியுள்ளனர். அதில் சில துளிகள்

அறிஞர்கள்

இவர் பெரியாரின் தொண்டன் என்பதால், முதலில் இவர் பெரியாரைப் **போற்றியதை** அறியலாம்.

பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைகளை கவிதை வடிவில் உருவாக்கியவரும் இவரே,

தொண்டு செய்த பழுத்த பழம்

தூய தாடி மார்பில் விழும்

என்று பாடியுள்ளார்.

இவரை **திரு.வி.க.** அவர்கள், எனக்கு குயிலின் பாடலும்,

மயிலின் ஆடலும்

வண்டின் யாழும்

அருவியின் முழவும் இனிக்கும்

பாரதிதாசனின் பாட்டும் இனிக்கும் என்று பாராட்டியுள்ள்ளார்.

சொல்லின் செல்வரான **ரா.பி. சேதுபிள்ளை,**

பாரதிதாசனின் கவிதையில் வேகமுண்டு

விடுதலைதாகமுண்டு, பண்புமுண்டு, பயனுமுண்டு என்று பாராட்டுகிறார்.

இவரைப் **புதுமைப்பித்தனும்,**

அறிவுக்கோயிலை கட்டி அதில் தம்மை குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞன் என்று கூறியுள்ளார்.

சிதம்பர செட்டியார்,

அவர் தம் நூல்களை படிக்கும் **அந்நியனும் தமிழனாகிவிடுவான்** என்று அனைவராலும் பன்முகத் தன்மையோடு பாராட்டப் பெற்றவர் நம் பாவேந்தர்.

முடிவுரை

புதுவைக் குயிலின் பாடலும் ஒலிக்காத மேடையுண்டோ?

இவர் பிறந்த புதுவையில் இன்றளவிலும் தமிழ்த்தாய் வாழ்த்தாக **வாழ்வினில் செம்மை செய்பவள் நீயே** என்று இவரின் பாடலைப் பாடித்தான் அவருக்கு புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தன்னுடைய 16வது வயதிலேயே புதுவை அரசுக் கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றிய இவர், 1964-ல் ஏப்ரல் மாதம் 21-ம் தேதி இயற்கை எய்தினார்.

இவரது மரணத்திற்குப் பின்தான் 1970ம் ஆண்டு, இவருக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது.

புதுவைக் குயில், பாவேந்தர், புரட்சிக்கவி என்றெல்லாம் போற்றப்பட்ட பாரதிதாசன் அவர்கள், இன்றளவிலும் ஒவ்வொரு பள்ளியிலும் அனைத்து மாணவர்கள் மனதிலும் பல்கலைக்கழகமாகவும் தமிழக அரசு கொடுக்கும் விருதாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

கிறுக்கன், கிண்டல்காரன் என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர் இவரே.

வாழ்க இவர் கவிதைகள்,

வளர்க இவர் புகழ்...

தமிழுக்கு அமுதென்று பெயர்,

பாருக்கெல்லாம் அரசர் இவரே

பாரதிதாசனின் பாதம் பற்றி

பாரதத்தை பாரே புகழும்படி செய்வோம்

நன்றி ! நன்றி ! நன்றி!

பாரதிதாசன் கவிதைகளில் அழகியல் கூறுகள்

Aesthetic Elements in the Poems of Bharathidasan

முனைவர் ம. பாலு, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி,சென்னை -73

Abstract

Bhavendra Bharathidasan wrote poetry in simple style. Through his poems, Ongi voiced to live as people without differences of caste and religion, patriotism, language, ethnicity, women's emancipation. He developed the Tamil language with an attachment to his mother tongue. He chanted that Dravida Nadu is Tamil Nadu. Rich and poor should live without difference. He inculcated the ideas of communalism. He shouted that education is common for all. Tamilians want to excel in all arts. The poems of the revolutionary poet, who made Tamil people proud with his poetry, explores the aesthetic elements of simile, metaphor, symbol, image, metaphor, pun, and darkness.

Key words : Aesthetic elements, Metaphor, Symbol, Image, Metaphor, Pun, Darkness

முன்னுரை

கவிதை மனித உணர்வின் ஒரு வடிவம். இது உலகிற்கு வெளியே உள்ள புற உலகை அகத்தினுள் ஓவியமாக வரைந்து புற உலகிற்கு அழகிய காட்சிகளோடு உயிர்ப்பு கொடுத்து மாற்றுகின்றது. 20 – ஆம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதையுலகில் தமக்கென தனியிடத்தை ஏற்படுத்திக் கொண்டவர்கள் பாரதியார் பாரதிதாசன் முடியரசன் ந. பிச்சமூர்த்தி கண்ணதாசன் போன்ற கவிஞர்களைக் கூறலாம். கவிஞர்கள் கண்களால் கண்ட காட்சிகளை உவமை உருவகம் படிமம் குறியீடு அங்கதம் முரண் சிலேடை இருண்மை ஆகிய கவிதை உத்திகளைக் கொண்டு அழகியலோடு கவிதைகளைப் படைத்து வெற்றி பெற்றுள்ளனர். அவ்வரிசையில் பாரதிதாசன் கவிதைகளில் வெளிப்படும் அழகியல் கூறுகளை ஆய்வதாக. கட்டுரை அமைகின்றது.

உவமை அழகியல்

வினை பயன் வடிவம் நிறம் என்னும் அடிப்படைகளில் ஒரு பொருளை அல்லது பல பொருட்களைப் பிற பொருளுக்கு அல்லது பொருட்களுக்கு ஒப்புமைப்படுத்தி அழகியலோடு கூறுவதே உவமையாகும். அறியாதவற்றை அறியச் செய்வதற்கும் அறிந்தவற்றைச் சிறப்பிப்பதற்கும் உவமை கையாளப்படுகின்றது. பாரதிதாசன் இயற்கையை வருணிக்கையில் கடல் அலை இரவின் காட்சி வானவியல் நிலவு ஆகியவற்றை உவமையால் விளக்குகின்றார்.

கடற்கரைக்குச் சென்ற பாரதிதாசன் கடலையும் மணலையும் அலையையும் தன் கண்களால் கண்டு இன்பம் கொள்கிறார். கடல் அலையானது தொடர்ந்து, கடற்கரை மணலில் வந்து மோதிச் செல்கிறது. அதனைக் கண்ட பாரதிதாசன் கடலலை மேலும் கீழுமாக விழுந்தும் உருண்டும் ஏறிச் செல்வதைக் கல்விப் பயிலும் இளைஞர்கள் விளையாட்டாக ஒருவரை ஒருவர் கீழே தள்ளிக் கொண்டும், எழுந்தும் மீண்டும் அவ்வாறு ஈடுபடுவதுமான செயல்கள் போல் இருப்பதாக உவமைபடுத்திக் காட்டுகின்றார்.

……………………………………………………………கல்வி

நிலையத்தின் இளைஞர் போலப்

பூரிப்பால் ஏறும்; வீழும்;

புரண்டிடும்; பாராய்தம்பி

(பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப-2)

பாரதிதாசன் தமிழாசிரியராகப் பணியாற்றிய காலங்களில் கண்ட காட்சிகளை கடல் மணல் அலை ஆகிய அழகியலோடு உவமைப்படுத்துகின்றார்.

அறுசுவைகளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி உண்ணும் சுவை இனிப்பு. அதுவும் தேனை விரும்பாதவர்கள் எவரும் இல்லை. வழியடையாளம் எனும் கவிதையில், தேனை உவமையாகக் கூறித் தன் மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளார்.

வான் வரைமேற்குத் திக்கை

மறைத்திட்ட புகை நீலத்தைக்

தேன் கண்டாற் போலே கண்டேன்

திகழ்காடு நோக்கிச் சென்றேன்.

(பாரதிதாசன், அழகின் சிரிப்பு ப-9)

மேற்கே மறைகின்ற ஞாயிறு செந்நிறமாகக் காட்சித் தருவது இயல்பு. ஆனால் நீல வண்ணமாகக் காண்பது அரிதானது. இக்காட்சியினைக் கண்ட கவிஞர் உள்ளம் மகிழ்ந்து, தேனைக் கண்டது போல் உள்ளதாக உவமைப்படுத்தி மகிழ்கின்றார்.

தமிழ்மொழி மீது பாரதிதாசனுக்கு அளவு கடந்த பற்று உண்டு. இதனை அவரது பாடல்களில் பரவலாகக் காணலாம். தமிழ் மொழியை உயிராகப் போற்றியவர்.

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்

…………………………………………..

இனியன என்பேன் எனினும் – தமிழை

என்னுயிர் என்பேன் கண்டீர்!

(பாரதிதாசன், தமிழின் இன்பம் – ப 11)

பழுத்த பலாப் பழத்தின் சுளை இனிமை, கரும்புச் சாறு இனிமை, தேன் இனிமை, காய்ச்சிய வெல்லப் பாகு இனிமை, பசுவின் பாலும் இனிமை, தென்னையின் இளநீரும் இனிமை. இத்தனை சுவைகளையும் சுவைப்பதற்கு உயிர் என்ற ஒன்று இருந்தால்தானே முடியுமென உவமித்து, இயற்கையான சுவைகளைக் காட்டிலும் தமிழ் உயிர் போன்றது என அழகியலோடு கூறியிருப்பது கொண்டு அறியலாம்.

குளிர்ந்த இலைப்பரப்பின் ஊடே முகிழ்ந்து நிற்கும் செந்தாமரையின் முதிர் அரும்பை, பெண்கள் கையில் ஏந்திய விளக்கின் நுனியில் தோன்றும் ஒளிப்பிழம்பாகக் காட்சிப்படுத்தும் பாரதிதாசன், அக்காட்சி அவர் விழிக்குப் பெரு விருந்தாய் அமைந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

மங்கைமார் செங்கை ஏந்தி

அணி செய்த நல்விளக்கின்

அழகிய பிழம்பு போலத்

தணி இலைப் பரப்பினிற் செந்

தாமரைச் செவ் வரும்பு

பிணி போக்கி என் விழிக்குப்

படைத்து பெரு விருந்தே.

(பாரதிதாசன், அழகின் சிரிப்பு, செந்தாமரை பா.3)

தான் விழியால் உண்ட காட்சியை நமக்குப் படிமங்களால் விருந்து படைத்த பாரதிதாசன், செந்தாமரையின் நுனி அரும்பை விளக்கின் நுனியில் தோன்றும் ஒளிப் பிழம்பிற்கு உவமையாக காட்சிப் படுத்தியிருப்பது அவரது மொழி அழகியலின் பண்பை உணரமுடிகின்றது.

உருவக அழகியல்

உவமையும் பொருளும் வேறுவேறல்ல; ஒன்றே எனக் கருதுமாறு செறிவுற அமைவது உருவகமாகும். மனிதனை மனிதத் தன்மையிலிருந்து கீழ் இறக்குவது மதம். இதை விளக்குவதற்குப் பாரதிதாசன்,

மத ஓடத்தில் ஏறிய மாந்தரே – பலி

பீடத்திலே சாய்ந்தீரே

(பாரதிதாசன், பலிபீடம் – பா.59)

என்று பாடியுள்ளார். இப்பாடலில் மதத்தைப் பலிபீடமாக உருவகம் செய்து பாடியுள்ளார். மேலும், ஓடத்தின் செயலாகிய சாய்தலை, மதத்தின் பிடியில் சிக்கியுள்ள மனிதர்களுக்கு உருவகம் செய்துள்ளார். இவ்வாறு இரண்டு வரிகளில் உருவக அழகியலை வெளிப்படுத்தியுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன் பொருந்தாத மணத்தால் சமூகம் சீரழிந்துக் கொண்டிருப்பதைக் கண்டு சாடுகிறார்.

முகமலரோடு முகமலர் ஒற்றியும்

இதழோடு இதழை இனிது சுவைத்தும்.

(பாரதிதாசன், மூடத்திருமணம், பா- 32)

உறவுமுறை, வறுமை, சாதியம், அறியாமை முதலான காரணங்களால் மணமக்களில் ஒருவரான பெண்ணின் விருப்பம் கேட்காமல் பெற்றவர்களும் மற்றவர்களும் அப்பெண்ணின் வாழ்க்கையை தீர்மானிக்கின்றனர். இத்தகைய மூடப் பழக்க வழக்கங்களை கடுமையாக சாடுகிறார்.

’மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக’

(பாரதிதாசன், மூடத்திருமணம்,பா-32)

தமிழாசிரியராகப் பணியைத் தொடங்கி, மிகுந்த தமிழ்ப் புலமையுடன் வாழ்வில் விளங்கிய பாவேந்தர் பாரதிதாசன் மொழிமீது கொண்டிருந்தப் பற்று அளப்பரியது.

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்

…………………………………………

தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்

தமிழ் எங்கள் பிரவிக்குத் தாய் – இன்பத்

தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ.

(பாரதிதாசன் கவிதைகள்- தொகுதி1, பா1-95)

பாரதிதாசன் தமிழை அமுது, தேன், கனி, நிலவு, மணம், வாழும் நகரம், அசதியை மாற்றும் தேன், பிறவிக்குத் தாய், இதயத் தீ எனப் பலவாறு வர்ணிக்கின்றார். இக்கவிதை வரிகளுக்கு உயிரூட்டுவதாக உருவகங்கள் அமைந்துள்ளன.

காட்சிப் படிமம்

உவமை உருவகம் என்பன மேன்மேலும் இறுகிய நிலையில் படிமம் தோன்றுகின்றது. முற்றுருவப் பாங்கில் அமைந்து தெளிவானதோர் அகக்காட்சியை வழங்கும் ஆற்றலுடையதே படிமம் ஆகிறது.

’மக்கள் இயல்பாக பேசும்போதே குறிப்பால் ஒன்றை உணர்த்தும் வழக்கம் கொண்டவர்கள்.

சாடை பேசுதல் என்னும் வழக்கமும் சிலரிடையே உண்டு. இதுவும் குறியீடே’

(ஜி. கீற்று,பொன். குமார், புதுக்கவிதையில் குறியீடு,25 ஆகஸ்ட் 2010)

பாரதிதாசன், புரட்சிக்கவி காவியத்தில் புரட்சிச் சிந்தனைகளும் பொதுவுடைமைச் சித்தாந்தங்களும் கொண்டு ஆண்டான் அடிமை நடைமுறை ஒழிய வேண்டுமென வலியுறுத்துகின்றார்.

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து

…………………………………………

நித்திய தரித்திரராய் உழைத்துழைத்துத்

தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்

சிறிது கூழ் தேடுங்கால் பானை ஆரக்

கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்

கவின் நிலவே உனைக்காணும் இன்பம் தானோ!

(பாரதிதாசன் கவிதைகள்- தொகுதி 1, ப 20)

வானிலே அழகை வாரி இறைத்தபடி உலா வந்துகொண்டிருந்த நிலாவைக் கண்டதும் கவிஞனான உதாரனுக்குக் கற்பனை வெள்ளம் மடை திறந்தது. நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலா என்று உன் ஒளி முகத்தைக் கட்டுகின்றாயே.உன் கோலம் முழுவதையும் நீ காட்டிவிட்டல் உன்மீது காதல் பித்துக் கொண்டு அலைந்து இவ்வுலகம் அழிந்துவிடுமோ. நீ வானச் சோலையில் பூத்த தனிப் பூவோ? பாற்குடமோ? அமுத ஊற்றோ? என்றெல்லாம் விரிகின்ற அவன் கற்பனைச் சிறகில் பொதுவுடைமைத் தத்துவங்களும் தீபொறியாய்ச் சிதறுகின்றன. எம்நாட்டு ஏழை மக்கள் நித்தமும் உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்தும் அவர்தம் தரித்திரம் தீராமல் பசித்த வயிற்றோடு உண்ணச் சிறிது கூழ் தேடும் போது, ஒரு பானை நிறைய வெண்சோற்றைக் காணும்போது அடையும் இன்பத்தை உனைக் காணும்போது அல்லவோபெறுகின்றனர் என்கிறார். பால்போன்ற நிறத்துடன் காணப்படும் நிலாவின் தோற்றத்தை வெண்ணிற சோற்றொடு ஒப்புமைச் செய்யப்பட்டு காட்சிப் படிமமானது.

குறியீடு அழகியல்

சொல் என்பதே குறிப்பிட்ட பொருளை உணர்த்தும் குறியீடாகும். சில சொற்கள் மற்றொன்றிற்காக நிற்பதும், மற்றொன்றின் பிரதிநிதியாகச் செயல்படுவதும், மற்றொன்றைச் சுட்டிக் காட்டுவதும் ஆகிய நிலைகளில் அமைவதுண்டு. தன்னொடு நெருக்கமான தொடர்புடைய பொருளைக் குறித்த உணர்வினைக் குறியீடு தோற்றுவிக்கின்றது.

புரட்சிக்கவி காவியத்தில் உதாரன் மீது அமுதவல்லி காதல் கொள்கிறாள். அவனோ அரசனுக்கும் சமூக அமைப்புக்கும் அஞ்சி அவளது காதலை ஏற்கத் தயங்குகிறான். அப்போது அமுதவல்லி,

சித்தரித்த ஆணழகே, சென்றுபடர் முல்லையினைக்

கத்தரித்தல் இன்றிக் கரந்தழுவும் மாமரமும்

சத்தமிட்ட வண்டு தடாகத்தின் அல்லியினை

முத்தமிட்டுத் தேன் குடிக்கும் நல்ல முடிவும்

உணர்வுதனை உண்டாக்க வில்லையோ உன்பால்

தணலைத்தான் வீசுகின்றான் சந்திரனும் என் மேல்

(பாரதிதாசன், புரட்சிக்கவி-பா.75)

முல்லைக் கொடிப் படர மாமரம் இடம் தருகின்றது. வண்டு தேன்னுண மலர் வாய்ப்பளிக்கின்றது. இதனை நோக்கிய பிறகும் உனக்கு காதல் அரும்பவில்லையா? நானோ, காதல் மிகக் கொண்டேன். எனக்கு வெண்ணிலவும் தணலாய்த் தகிக்கிறது. காதல் மிகுதியால் குளிர்ந்த தன்மையுடைய வெண்ணிலவும் அனலாக காய்வதாக குறியீட்டு அழகியலை கவிஞர் கையாண்டுள்ளார்.

முடிவுரை

ஒரு சுவைஞன், கவிஞனின் கருத்துக்களை உள்வாங்குவதற்கு இந்த அழகியல் பார்வைத் தேவைப்படுகின்றது. ஒரு கவிஞன் நேரடியாகத் தன் கருத்துகளை கூற முடியாது. அப்படிக் கூறுவதற்கு இது உரைநடையோ, செய்தியோ அல்ல. கவிஞன் என்பவன் அழகியல் தன்மையோடு, கவிதை வடிவில் கருத்துக்களை முழுமையாகக் கூறமுடியும்.

அந்த வகையில் பாவேந்தர் பாரதிதாசன், மதம் என்ற பேய் மக்களை பிடியாதிருக்க வேண்டுமென்று எச்சரிக்கின்ற போதும் அழகியல் வெளிப்படுகிறது. பொருந்தா மணம் செய்கின்ற அவலத்தைச் சுட்டுகின்ற நிலையிலும் அழகியல் தன்மை உயர்ந்து நிற்கிறது. பொதுவுடைமை சித்தாந்தக் கருத்துகள் முன்வைக்கும் போதும் அழகியல் வெளிப்படுகின்றது.

வறுமை, சாதி வேறுபாடு, சமூகச் சிக்கல், அரசியல், காதல் போன்ற எல்லாத் தளங்களிலும் அழகியல் தன்மை தலை தூக்கி நிற்பதை உணரலாம்.

துணைநூற் பட்டியல்

1. கவிஞர் முருகு சுந்தரம், பாவேந்தர் படைப்பில் அங்கதம், சேகர் பதிப்பகம், முதற் பதிப்பு டிசம்பர் 2001.
2. டாக்டர் சி. பால சுப்பிரமணியன்,புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன், பாரி நிலையம், முதற் பதிப்பு, டிசம்பர் 1986.
3. பாவேந்தர் பாரதிதாசன், அழகின் சிரிப்பு, திருச்சி 1964.
4. பொன். குமார், புதுக்கவிதையில் குறியீடு, ஜி. கீற்று, ஆகஸ்ட் 2010.

பாரதிதாசன் கவிதைகளில் பெண் முன்னேற்றம்
Women's empowerment in Bharathidasan Poems

முனைவர் திருமதி.ச.சிதம்பரம்,

உதவிப் பேராசிரியர் - தமிழ்த் துறை, எஸ்.ஐ.வி.இ.டி.. கல்லூரி,

கௌரிவாக்கம், சென்னை – 600073.

அலைபேசி – 94443 39506 / 80562 39506, மின்னஞ்சல் – sivapriya.6854@gmail.com

---

Abstract:

Bharathidasan's poems are chiefly about women empowerment. He highlighted that only those countries that do not follow enslavement of women can develop. He is against child marriage and marriage of convenience. He encouraged love marriage and inter caste marriages and discouraged illtreatement of widows. He believed that the success of society depends on educating the women. He had canvassed through his poetry many revolutionary thoughts like family planning, thus his poems are the chief propagators of women emancipation and empowerment.

KEY WORDS:

Introduction – Slavery of Women – Women Education – Child Marriage – Incompatible Marriage – Obstacles for women – Indispensable - Conclusion.

முன்னுரை

பெண்களுக்காகக் குரல் கொடுத்த தமிழகக் கவிஞர்களுள் பாரதிக்கு அடுத்தபடியாகக் குரல் எழுப்பியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இவர்தம் கவிதைகளில் பெண் முன்னேற்றத்திற்கான சிந்தனைகளைக் காணலாம். பெண் விடுதலை, பெண் கல்வி, பெண் உரிமை, புதுமைப் பெண்ணின் மனப்பாங்கு எனப் பல நிலைகளில் மகாகவி பாரதி கூறியபின் பெண் முன்னேற்றத்திற்குக் கூற வேண்டியவை என என்ன இருக்க முடியும்? என நாம் எண்ணிப் பார்க்கலாம். ஆனால் பாவேந்தரோ பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கக்கூடிய சமூகச் சீர்க்கேடுகளை எண்ணிக் குமுறுகின்றார். வெறும் வேதனைகளை மட்டும் தம் படைப்பில் வெளிப்படுத்துவதோடு நின்று விடாமல் அவற்றிற்கான தீர்வுகளை எடுத்துச் சொல்வதன் மூலம் ஒரு படைப்பாளியாய்ப் பாரதிதாசன் வெற்றி பெற்றுள்ளார் என்றே கூறலாம். அப்பேர்ப்பட்ட வெற்றியாளராய் - பாவேந்தராய் - பெண்களுக்காய்க் குரல் கொடுத்த

பேராண்மைமிக்க புரட்சியாளராய் மிளிர்வதை அவர்தம் கவிதைகளின் வழியாகக் காணலாம்.

பொருளுரை

பாரதிதாசன் வாழ்ந்த காலத்தில் பெண்கள் சகமனுஷியாய்ப் பார்க்கப்படவில்லை. அதற்குச் சமுதாயத்தில் பல தடைகள் இருந்தன. அந்தத் தடைகளைத் தகர்த்தெறிந்தால் மட்டுமே தரணியில் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கும் என்பது கவிஞரின் அசைக்கமுடியாத நம்பிக்கை. இந்த ஆய்வில் பெண் முன்னேற்றத்திற்கான தடைகளாய் இருந்தனவற்றைப் பார்த்து அதற்குப் பாவேந்தர் புரட்சிகரமாக எவ்வாறு சிந்தித்துத் தீர்வு தந்துள்ளார் என்பதைக் காண்பதே இவ்வாய்;வின் பொருளாக அமைகின்றது.

மண்ணடிமை தீர வேண்டுமா?

ஒரு நாட்டின் முதுகெலும்பாய் இருப்பவர்கள் பெண்களே ஆவார். பாவேந்தர் வாழ்ந்த காலத்தில் நாடு விடுதலை அடையவில்லையே என வருத்தம் கொண்டவர் பலர் – அவர்களிடம்.

பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ?
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை!
பெண்ணடிமை தீருமட்டும் பேசிர் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே! (ப.3 பா.தா.கவிதைகள்)

என்று கூறுகின்றார். பெண் பேசக்கூடாது? ஏன் பேசக்கூடாது? அவளுக்குச் சிந்திக்கும் திறன் இல்லை என்பதால் என்றால் இல்லை. அவள் பெண் என்ற ஒரே காரணத்தால் அவள் பேசக்கூடாது. அவளுக்குப் பகுத்தறிவோ, கல்வியறிவோ இருக்கக்கூடாது – ஆதிக்கம் செலுத்தும் பதவியிலோ - அதிகாரம் செய்யும் இடத்திலோ பெண் என்பவள் இருக்கவே கூடாது என்று எண்ணும் ஆடவர் பலர் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். இன்றைக்கே இந்த நிலை என்றால் அன்றைய சூழலில் கேட்கவே வேண்டாம். ஆண் - பெண் சேர்ந்ததுதான் ஒரு சமுதாயம். இதில் பெண்ணினம் வளர்ச்சி அடையவில்லை என்றால் ஆணினம் மட்டும் அகிலத்தில் ஓங்கிவிட இயலுமா?

'ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு
புலன் அற்ற பேதையாய்ப் பெண்ணைச் செய்தால் அந்
நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே (ப.3 பா.தா.கவிதைகள்)

என்று தெளிவாய்க் கூறுகின்றார் பாரதிதாசன். நாட்டில் அடிமைத்தனம் நீங்க வேண்டும் என்றால், முதலில் ஆடவர் பெண்ணடிமைத்தனத்தை நீக்கிட வழிசெய்தல் வேண்டுமென ஆணித்தரமாய்க் கூறுவதைக் காணமுடிகிறது. பெண்ணடிமை தீரப் பெண்கல்வி அறிவு பெறுவதே சிறந்த தீர்வு என்பதையும் பாரதிதாசன் கூறுவதையும் அறியமுடிகிறது

பெண் கல்வி இருந்தால் பேதைமை அகலும்

ஓர் ஆண் கல்வி கற்றான் என்றால் அவன் மட்டுமே சிறப்பினைப் பெறுவான். ஆனால் ஒரு பெண் கல்வி பெற்றாலோ அவள் குடும்பம் மட்டுமல்ல, இந்தச் சமுதாயமே சீர்பெறும். பாரதிதாசனும் குடும்ப விளக்கு என்னும் நூலில் இரண்டாம் பகுதியில் உள்ள விருந்தோம்பல் தலைப்பில் தலைவியின் கூற்றாக அமைத்துள்ளமையைக் காணலாம்.

‘கல்வி இல்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை’ (குடும்ப விளக்கு)

என்றும்,

கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறிவு உடைய மக்கள்
விளைவது நவிலவோ நான்?!

எனத் தலைவி கூறுவதாக அமைந்துள்ள இவ்வரிகளில் பெண்களுக்குக் கல்வி அவசியம் என்பதையும், அதனால் இச்சமுதாயமும் சீர்பெறும் என்பதையும் அறியமுடிகிறது.

பெண்களின் வளர்ச்சிக்குத் தடைக்கற்கள்

பெண்ணுக்குக் கல்வியும், பேச்சுரிமையும், சிந்தனைத் திறனும் கிடைத்துவிட்டால் மட்டும் ஒரு சமூகம் வளர்ச்சி அடைந்து விடுமா? என்றால் இல்லை. அவளின் வளர்ச்சிக்குத் தடையாய் நிற்பவை குழந்தைத் திருமணம், பொருந்தாத் திருமணம், கைம்மைக் கொடுமை எனப் பல கொடுமைகள் அவர் வாழ்ந்த காலத்தில் இருந்தன. இன்று பெண்கள் அக்கொடுமைகளில் இருந்து மீள்வதற்குக் காரணம் அந்தப் புரட்சியாளரின் புரட்சிகரமான சிந்தனைகளே ஆகும்.

குழந்தை மணத்தின் கொடுமை

' தாவாச் சிறுமான்: மோவா அரும்பு' என்று உருவகித்துக் குழந்தையிலேயே விதவையான சிறுமி அடையும் வேதனையை வெளிப்படுத்துகிறார். தன் பாட்டியிடம் ஏழு வயது சிறுமி கேட்கிறாள்.

' அவருக்கு நான் மகள்! அவர் எதிர் சென்றால்

நீ போ! என்று புருவம் நெரிப்பதோ?

இந்நிலைக்கு இவ்வாறு அழுதாள் - இவளது

பின்நிலை எண்ணிப் பாட்டி பெரிதும்

அழுத கண்ணீர் வெள்ளம்> அந்தக்

குழந்தை வாழ்நாட் கொடுமையிற் பெரிதே (ப.92, பா.தா.கவிதைகள்)

இக் கொடுமைக்கு,

'மறுமணம் புரிவது – சிறுமை என் றறைவது

குறுகிய மதியென – அறிஞர்கள் மொழிகுவர்' (ப.94, பா.தா.கவிதைகள்)

எனக் கூறுவதையும் காணலாம்.

கற்கண்டு போன்ற பெண் கணவனை இழந்தால்

கசந்த பெண் ஆவது விந்தைதான் புவிமேல்

சொற்கண்டு மலைக்காதே உன்பகுத் தறிவால்

தோஷம் குணம் அறிந்து நடப்பாய் - துயர் கடப்பாய்

துணை பிடிப்பாய் - பயம் விடுப்பாய்.' (ப.94, பா.தா.கவிதைகள்)

எனப் பெண்ணின் நிலையில் இருந்து அவள் மன உணர்வினைப் புரிந்து அதற்குத் தீர்வும் சொல்வது அவர் வாழ்ந்த காலத்தில் அது மிகப் பெரிய புரட்சிகரமான சிந்தனைதான்!

'கண்ணிலொன்றைப் பழுது செய்தால் கான்றுமிழாதோ?

கான்றுமிழாதோ புவி தான் பழியாதோ' (ப.95, பா.தா.கவிதைகள்)

எனப் பகுத்தறிவு கொண்டு இந்தச் சமூகத்தினைச் சிந்திக்கச் சொல்கின்றார்.

குடும்பக் கட்டுப்பாட்டைக் கூறும் புரட்சிக்கவி

தவிப்பதற்கோ பிள்ளை? என்ற தலைப்பில் அமைந்துள்ள கவிதையில் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிப் பேசுகின்றார். மக்கட் செல்வம் கவிஞர் வாழ்ந்த காலத்தில் மிகப் பெருஞ் செல்வம். ஆனால் முப்பது கோடி மக்கள் தொகை இருக்கும் பொழுதே கருத்தடை பற்றிப் பாடியவர் புரட்சிக் கவிஞர்.

'காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்

கதவொன்று கண்டறிவோம். இதிலென்ன குற்றம்

காதலுக்கோ பிள்ளை? தவிப்பதற்கோ பிள்ளை

சந்தான முறை நன்று தவிர்க்கு முறை தீதோ? (ப.98, பா.தா.கவிதைகள்)

என்று அன்றே வினவியவர் பாவேந்தர் .

பெண் குழந்தை தாலாட்டு

'வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்

பெண்மையினால் உண்டென்று பேச வந்த பெண்ணழகே'

(ப.100, பா.தா.கவிதைகள்)

எனத் தாலாட்டுப் பாடுவதன் மூலம் ஒவ்வோர் ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண்தான் இருக்கிறாள் என்பதைப் பாரதிதாசன் கவிதை வரிகளால் அறியமுடிகிறது. ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்.

'துணைவி இறந்தபின் வேறு துணைவியைத்

தேடுமோர் ஆடவன் போல் - பெண்ணும்

துணைவன் இறந்தபின் வேறு துணை தேடச் சொல்லுவோம் புவிமேல்'

எனக் கூறிப் பசி, தூக்கம் போன்ற உணர்வுகளைப் போல் காதலும் மனிதர்களுக்குப் பொதுதானே எனச் சிந்திக்க வைத்தவர் பாரதிதாசன்.

பொருந்தாமணம் குறித்துப் பாவேந்தர்

இருபது வயது பெண்ணுக்கு அறுபது வயது கிழவனை மணம் செய்விக்கும் மூடத் திருமணத்தை அறவே வெறுத்தவர் பாரதிதாசன்.

'மண்ணாய்ப் போக! மண்ணாய்ப் போக!

மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக!

சமூகச் சட்டமே! சமூக வழக்கமே!

நீங்கள் மக்கள் அனைவரும்

ஏங்காதிருக்க மண்ணாய்ப் போகவே!

என்கிறார்.

முடிவுகள்

பெண்கல்வி சமூகத்தில் வேண்டும். பெண்ணுக்குப் பேச்சுரிமை, கருத்துச் சுதந்திரம் அவசியம் வேண்டும். பெண் விடுதலை வேண்டுமென்றால் அவளின் வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் களைகள் நீக்கப்படவேண்டும். குழந்தைத் திருமணம் கூடாது. மூடத் திருமணமாகிய பொருந்தாத் திருமணம் கூடாது. விதவைகள்

மறுமணம் செய்தல் வேண்டும். ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். பெண் கல்வி அறிவு பெற்றால் பகுத்தறிவு பெறுவதோடு, நல்ல புதல்வர்களைப் பெற்று, வளர்த்து இச்சமூகத்திற்குத் தரக்கூடிய பெரும்பணியினைச் செய்வாள். காதல் மணம், கலப்பு மணம் ஆகியனவற்றிற்குப் பெண்கள் துணிச்சலுடன் முன்வருதல் வேண்டும். அப்பொழுதுதான் இச்சமூகத்தில் சாதி. சமயச் சாத்திரம் என்னும் மூடநம்பிக்கை அகலும். கருத்தடைச்சாதனம் கண்டுபிடித்தல் வேண்டும். பெண் என்பவள் வெறும் பிள்ளை பெறும் எந்திரம் அல்ல என்னும் சிந்தனையை வைக்கின்றார் . மேற்கூறிய தடைகள் எல்லாம் நீங்கும் பொழுது பெண் நம் நாட்டில் முன்னேற்றங்களைப் பெறுவாள். பெண்ணினம் முன்னேறும் பொழுது நாடே அடிமைத் தளையில் இருந்து விடுபட்டுத் தலைநிமிரும்.

துணைநூற்பட்டியல்:

1. பாரதிதாசன் கவிதைகள், உமா பதிப்பகம் - சென்னை - 1. ஏழாம் பதிப்பு - ஜனவரி 2016.

பாரதிதாசன் கவிதைகளில் தொழிலாளர்கள்

முனைவர் ச.சர்புதீன்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620 020
மின்னஞ்சல் : sharpudeen.s@gmail.com அலைபேசி : 7200102376

முன்னுரை

பாரதிதாசன் பாடாத பொருளில்லை அவன் பாடாத எதுவும் பொருளே இல்லை என்று சொல்லுவரர்கள். அதுபோல தான் வாழ்ந்த எழுபத்து மூன்று ஆண்டுகளில் எண்ணற்றப் பாடுபொருளைப் பாடியிருக்கிறார். பக்தி பாசுரத்தை; இந்திய நாட்டின் விடுதலையை; பெண்ணியத்தை; சாதியத்தை; தொழிலாளரின் வறுமை நிலையை, மூடப்பழக்கத்தை, தமிழியத்தை, புதிய உலகத்தை, இயற்கையை, வரலாற்றை, பெரியாரியத்தை என்று எதைப்பற்றி அவர் பாடினாலும் அவற்றில் தம் கொள்கைகளை ஆணித்தரமாகச் சொல்லும் திறம் கொண்டவராக விளங்கினார். அந்த வகையில் பாரதிதாசன் கவிதைகளில் தொழிலாளர்கள் நிலைபற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

பாரதிதாசனின் படைப்புலகம்

ஸ்ரீமயிலம் சுப்ரமணியர் துதியமுது, புரட்சிக்கவி, எதிர்பாராத முத்தம், குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு (நாடகம்), அழகின் சிரிப்பு, தமிழியக்கம், ஆத்திசூடி, காதலா கடமையா? முல்லைக் காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள், கடல்மேல் குமிழிகள், திராவிடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட புதுக்கரடி, அமிழ்து எது? குறிஞ்சித் திட்டு, பிசிராந்தையார் நாடகம், திருக்குறள் – விளக்க உரை (வள்ளுவர் உள்ளம்), பன்மணித்திரள் போன்ற எண்ணற்ற படைப்புகளை இயற்றிய பாரதிதாசன் 1964 ஏப்ரல் 21 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

பசித்த மக்களும் – பானை சோறும்

பசியின் கொடுமை என்பது எப்படி இருக்கும் அது பசித்த மக்களுக்கே தெரியும். பசியால் மடியும் மக்களின் நிலையைக் கவிஞனாகிய கற்றவனே அறிகிறான், தம் படைப்புகளில் அக்கொடுமையைப் பாவேந்தர் பாரதிதாசனும் உழைக்கும் தொழிலாளர்களின் வறுமைநிலையை எல்லா இடங்களிலும் பதிவு செய்து சிறப்பிக்கிறார். புரட்சிக்கவியில் நிலவைப்பார்த்து கவிதைப் படிக்கும் உதாரன் அதன் இன்பத்தை கவிதைகளில் வெளிப்படுத்துவதாகப் படைத்துக்காட்டும் பாரதிதாசன். இதனை,

உனைக்காணும் போதினிலே என்னு ள்ளத்தில்

ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு

நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை

நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்

தினைத் துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்

சிறிதுகூழ் தேடுங்கால், பானை ஆரக்

கனைத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்

கவின்நிலவே உனைக்காணும் இன்பம் தானோ!

(பாரதிதாசன் கவிதைகள், ப.17)

என்ற கவிதை வரிகள்மூலம் வெளிப்படுத்துகிறார். நிலவின் அழகைப் பாடவந்த பாரதிதாசன் உழைக்கும் மக்களின் பசியைப் பாடி, தான் ஒரு மானுடப் பற்றாளன் என்பதை நிருவியிருக்கிறார். பாரதிதாசனின் பாடுபொருள் பற்றித் திறனாய்வு செய்துரைக்கும் பேராசிரியர் மருதநாயகம் அவர்கள் பின்வருமாறு உரைக்கிறார்.

“பாரதிதாசன் பல பாடல்களில் பொதுவுடைமைத் தத்துவம் பற்றியும் தொழிலாளர் சிறப்புப் பற்றியும் பேசுகிறார். பொருள் முதல் வாதத்தின் நுணுக்கங்களிலோ, கார்ல்மார்க்சு, லெனின் ஆகியோரின் தத்துவ விளக்கங்களிலோ அவர் அதிகமான ஈடுபாடு காட்டவில்லை. ஆனால் முடிந்த இடங்களில் எல்லாம் பொதுவுடைமையின் இன்றியமையாமை பற்றியும் தொழிலாளர்களுக்கு நாம் பட்டுள்ள கடன் பற்றியும் அவர் சொல்லத் தவறுவதில்லை. பாடல் இயற்கையழகு பற்றியதாயினும் அல்லது தமிழின் சிறப்புப் பற்றியதாயினும் தொழிலாளர்களை அவர் மறப்பதில்லை. ஏதேனும் ஓர் உவமை மூலமாகவேனும் அவர் பாடும் பாட்டைச் சுட்டிக்காட்டிடுவார்.” (மருதநாயகம், பாரதி ஆறு பாரதிதாசன் பத்து, ப.115)

ஏழை உயர்வது எப்படி?

பாரதிதாசன் உலகப்பன் பாட்டில் ஏழை விழிப்படைந்து உயரப்பரை (பணக்காரரை) அடித்தால் ஏழையும் பணக்காரனும் சமமாகிவிடுவார்கள் என்கிறார். இதனைப் பின்வரும் கவிதை வரிகள்,

ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்

உதையப்பராகிவிட்டால், ஓர் நொடிக்குள்

ஓடப்பர உயரப்பர் எல்லாம் மாறி

ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!

(பாரதிதாசன் கவிதைகள், ப.97)

என்று உரைக்கிறது. பாரதிதாசனின் படைப்புகளின்வழி வெளிப்படும் அறச்சீற்றம் என்பது அவருடை சொந்த உணர்வின் வெளிப்பாடு. இதனை அவர்தம் கவிதைகள் உணர்த்தும்.

உழைத்தது யார்?

உலகம் தோன்றிய நாள்முதல் இன்றைய நாள் வரை இந்தக் காடும், நாடும் சீர்பட்டு செழிப்புற்று இருக்கக் காரணம் உழைக்கும் ஏழை மக்களால் மட்டுமே. புரட்சிக்கவியில் உதாரன் பொதுமக்களிடத்திலே பேசும் எழுச்சிமிகுந்த உரைவீச்சில் மக்களே! என்னை பெற்றத் தாய்மார்களே! இந்த நிலம் சீர்பட, நெடு மரம் வளர, ஏய்த்துப் பிழைக்கும் பெருவிலங்குகள் எல்லாம் (பணக்கார்கள்) நிம்மதியாய் வாழ்வதற்கு ஏற்றார்போல பாழ்நிலத்தை யார்? சரி செய்தது. அழகு நகராக உருவாக்கியது யார்? என்று கேட்டும் வினாக்கள் ஏழைமக்களின் உழைக்கும் திறனையும் பற்றினையும் தனக்கு இருக்கும் மரியாதையையும் வெளிப்படுத்திக் காட்டுகிறார் பாரதிதாசன். இதனை,

நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெல்லாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல் முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச்செவரின் மூச்சு?

(பாரதிதாசன், கவிதைகள், பக்.26-27)

என்ற வரிகளில் உழைக்கும் மக்களின் கடினமான வேலையை (உழைப்பை) சீர்தூக்கிப் பாடுகிறார்.

தொழிலாளர் நிலமை

புதியதோர் உலகம் என்னும் கவிதைப்பகுதியில் தொழிலாளர் விண்ணப்பம் என்ற பகுதியில் உழைக்கும் ஏழைமக்களின் வறுமை நிலையைக் கண்ணீர் சிந்தப் பாடுகிறார்.

காடுகள் களைந்தோம் – நல்ல
கழனிதிருத்தியும் உழவு புரிந்தும்
நாடுகள் செய்தோம்; அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்
வீடுகள் கண்டோம்; அங்கு
வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்

பாடுகள் பட்டோம் – புவி

பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்

(பாரதிதாசன், கவிதைகள், ப.89)

காடுகள் செய்தும், நல்ல வயல்களைத் திருத்தியும், நாடுகள் செய்தும், வீடுகள் செய்தும், இன்னும் பலவற்றை ஈட்டவும் செய்தோம், படாத பாடுகளும் பட்டோம், இந்த பூமியானது பக்குவப்படுவதற்கே. ஆனால் உழைத்ததைத் தவிர வேறு எந்தச் சுகத்தையும் நாங்கள் கண்டதில்லை என்றும், மேலும் ஆடைகள் செய்ததும் நாங்களே! வயல்களில் நாற்றினை நட்டதும் நாங்களே, குப்பைகளைத் தலையில் சுமந்ததும் நாங்களே என்று தொழிலாளர்கள் பாடுவதாகக் கவிஞர் பாவேந்தர் படைத்துக்காட்டுகிறார். இத்துனை வேலைகளையும் செய்த நாங்கள் எங்கள் வாழ்வு எப்படி இருக்கிறது என்றால்,

கந்தையணிந்தோம் – இரு

கையை விரித்தெங்கள் மெய்ப்பினைப் போர்த்தோம்

மொந்தையிற் கூழைப் – பலர்

மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்

சந்தையில் மாடாய் – யாம்

சந்ததம் தங்கிட வீடுமல்லாமல்

சிந்தை மெலிந்தோம் – எங்கள்

சேவைக்கெல்லாம் இது செய்நன்றிதானோ?

(பாரதிதாசன், கவிதைகள், ப.90)

கந்தையை அணியும் சோகம், சிறிதளவு கூழினையும் பலபேர் உண்டு பசியோடு கிடந்தோம், சந்தையில் மாடாய்த் தவித்துக் கிடந்தோம், சந்தையில் மாடாய்த் தவித்துக் கிடந்தோம், நாங்கள் தங்குவதற்கும் வீடில்லாமல் துன்பப்பட்டோம் என்றும் எங்கள் சிந்தை மெலிந்தது என்றும் எங்கள் சேவைக்கு இந்தச் சமூகம் காட்டும் நன்றிக்கடன் இதுதானா? என்று தொழிலாளரின் வறுமை நிலையைத் தனக்கு ஏற்பட்டத் துன்பமாக எண்ணி கவிதை படைக்கிறார் பாரதிதாசன். பாரதிதாசன் பரம்பரையில் வந்த கவிஞர் தமிழ் ஒளியும்,

வானக்கடல் தோன்றிடும் முத்துக்களோ – ஏழை

வாழும் குடிசையின் பொத்தல்களோ?

……………….. …………….. ………………… ……………………

இரவெனும் வறுமையின் கந்தல் உடை தனில்

எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?

(தமிழ்ஒளி கவிதைகள், ப.22)

என்ற வரிகளில் இயற்கைக் காட்சிகளைத் தொழிலாளர்களின் அவலநிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார்.

பாலும்வயிறு வளர்த்திடவே – இந்தப்
பாடுகள் பட்டிடும் எங்களுக்கே
கூழுமில்லை! ஒரு சல்லி தந்தால் – வெற்றுக்
கும்பியின் பட்டினி தீருமையா!
……………………. ……………………….. ……………………….
பிச்சை யெடுத்திட வைத்திருக்கும் – இந்தப்
பேதை சமூகத்தில் வாழ்பவர்கள்
பச்சைக் குழந்தையின் ரத்தங்கண்டும் – அங்குப்
பாதகர் நெஞ்சிலே ஈரமில்லை

(தமிழ்ஒளி கவிதைகள், பக்.36-37)

என்ற தமிழ் ஒளியின் கவிதை வரிகள் பாரதிதாசனின் கவிதைகள் போன்று தொழிலாளர்களின்பால் இரக்கக் காற்றை வீசுகிறது. மேலும் புரட்சிக்கவியில் ஆங்காங்கே தொழிலாளர்களின் இன்னல்களைச் சிறப்புடன் எடுத்துக்கூறும் பாரதிதாசன் காதலைப் பாடும் நேரத்திலும் தொழிலாளர் படும் துன்பத்தைப் பாட மறக்கவில்லை.

காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?
கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்பதுண்டோ?
நேர் இருத்தித் தீர்ப்புரைத்துச் சிறையில் போட்டால்
நிறை தொழிலாளர்களுணர்வு மறைந்து போமோ?

(பாரதிதாசன் கவிதைகள. ப.19)

என்ற கவிதை வரிகளில் உதாரன் வாயிலாகக் காதலைப்பாடும் பாரதிதாசன் தமிழையும், தொழிலாளர்களையும் சேர்த்தே பாடி சிறப்புச் செய்கிறார். இங்கு மருதநாயகத்தின் கூற்று ஒப்பிடத்தக்கது.

‘பாரதிதாசன் பல பாவகைகளில், பல பண்களில், பல வடிவங்களில், பல உத்திகளைக் கையாண்டு எண்ணிறந்த கவிதைகளையாத்துள்ளார். இவற்றுள் தமிழும், தொழில் சிறப்பும் அவர் விரும்புகின்ற தலைப்புகள்; இவை பற்றிய ஏராளமான தனிக்கவிதைகளைத் தவிர எப்பொருள் பற்றிய சிறு கவிதையாயினும் குறுங்காப்பியமாயினும் பெருங்காவியமாயினும் தமிழைப் பற்றியும் தொழிலாளர்

மேன்மை பற்றியும் அவற்றில் எவ்வாறேனும் பேசாமல் விடார்' (மருதநாயகம், பாரதி ஆறு பாரதிதாசன் பத்து, ப.168)

என்று பாரதிதாசனின் பாடுபொருளின் மேன்மைக்குத் தனித்துவமாய்த் திகழும், தொழிலாளர் உணர்வு காரணமாய் இருப்பதைத் திறனாய்ந்து உரைக்கிறார் பேராசிரியர் பேராசிரியர் ப.மருதநாயகம்.

சாதி உயர்வென்னும் தனத்தால் உயர்வென்றும்
போதாக் குறைக்குப் பொதுத்தொழிலாளர் சமூகம்
மெத்த இழிவென்றும், மிகுபெரும்பா லோரை எல்லாம்
கத்தி முனைக்காட்டிக் காலமெல்லாம் ஏய்த்துவரும்
பாவிகளைத்திருத்தப் பாவலனே நம்மிருவர்
ஆவிகளையேனும் அர்ப்பணம் செய்வோம்! இதனை
நெஞ்சார உண்மேலே நேரிழையாள் கொண்டுள்ள
மிஞ்சுகிற காதலின்மேல் ஆணையிட்டு விள்ளுகின்றேன்!

(பாரதிதாசன் கவிதைகள், ப.21)

என்று புரட்சிக்கவியில் அமுதவல்லி தன் காதலன் உதாரன் இடத்திலே பேசும் உரையாடல் ஆகும். பாரதிதாசன் தம் படைப்பின் வெளிப்படும் கதாப்பாத்திரங்களைத் தன் எண்ணத்தில் எழும் ஆசைகளை (தமிழுணர்வு, தொழிலாளர் உயர்வு) நிறைவேற்றிக்கொள்ளவே பயன்படுத்திக் கொண்டார் என்பது வெளிப்படுகிறது.

"பாரதிதாசனின் பாடுபொருள்கள் மிகப்பல; அத்தகைய வீச்சை வேறு கவிஞனிடத்தில் காண்பது அரிது; கவிதை எண்ணிக்கையிலும் பொருட்பரப்பிலும் அவரோடு போட்டியிடத்தக்க நிலையிலிருக்கும் ஒரே இந்தியக் கவிஞர் தாகூர் ஆவார் என்றும் பாரதிதாசனின் இதயத்தில் தமிழ் பெற்ற இடத்தைப் பிடிக்க முயலுகின்ற இன்னொரு பாடுபொருள் உண்டானால் அது தொழிலாளர் உயர்வும் பொதுவுடைமைத் தத்துவத்தின் பெருமையுமே" (மருதநாயகம், பாரதி ஆறு பாரதிதாசன் பத்து, ப.165) என்ற மருதநாயகத்தின் கூற்று பாரதிதாசனின் படைப்பாளுமைக்குக் கிடைத்த அங்கீகாரமாக இருக்கிறது.

முடிவுரை

பாரதிதாசனின் பாடுபொருள்களில் தமிழின் மேன்மையும், சாதியச் சாடலும், பெண் விடுதலையும், வர்க்க வேறுபாடும், பெரியாரியமும் வெளிபட்டு இருப்பினும் தொழிலாளர், மேன்மை என்பது கூடுதல் சிறப்பைப் பெற்று விளங்குகிறது என்பதை இவ்வாய்வு உறுதிப்படுத்துகிறது.

துணைநூற்பட்டியல்

1. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600108.
2. கவிஞர் தமிழ்ஒளி கவிதைகள், மக்கள் பதிப்பு, புகழ் புத்தகாலயம், 48/105, பிள்ளையார் கோவில் தெரு, செனாய் நகர், சென்னை – 600030.
3. மருதநாயகம்.ப, பாதி ஆறு பாதிதாசன் பத்து, மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் - 608001

புரட்சிக்கவியில் பாரதிதாசன்

முனைவர் செ.சுகவனேஸ்வரன்

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி – 620 020, அலைபேசி : 9942335086

முன்னுரை

தமிழ்ப் படைப்பாளிகளில் பாரதிததாசன் தனிச்சிறப்பைப் பெற்றவர். அதற்குக்காரணம் தமிழ், தமிழ் மக்கள், தமிழ்நாடு என்ற பொருண்மையின் அடிப்படையிலேயே தன் சிந்தனையை அல்லது பாடுபொருளை அமைத்துக்கொண்டார். முதலில் பக்திப் பாடல்களை எழுதியவர் பிறகு சுதந்திரப் போராட்டக் கவிதைகளையும் இறுதியில் பெரியாரியக் கவிதைகளையும் எழுதி சிறப்புப்பெற்றார். அதாவது பக்தி பாரதியில் தொடங்கி முக்தி பெரியாரில் முடித்துக் கொண்டவர். கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, தமிழின் சிறப்பு தொழிலாளர் மேன்மை போன்ற(வற்றை) தம் படைப்புக்கு உரமாக்கிக் கொண்டார். ‘புரட்சிக் கவியில் பாரதிதாசன்’, என்ற தலைப்பில் அவரின் கருத்தியலை இக்கட்டுரை ஆராய்கிறது.

படைப்புகள்

குடும்பவிளக்கு, அழகின் சிரிப்பு, தமிழச்சியின் கத்தி, பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், இருண்ட வீடு, சஞ்சீவி பருவதத்தின் சாரல், பிசிராந்தையார், மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம், புரட்சிக்கவி போன்ற எண்ணற்ற படைப்புகளை படைத்தவர்.

தமிழ் - அமுதம்

புரட்சிக்கவியில் மன்னனின் மகள் அமுதவல்லிக்கு கவிதை எழுதத் தெரியவில்லை. தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள், அயல்மொழி என அனைத்தும் கற்றாள். ஆனாலும் அவள் கவிதை புனைய கற்கவில்லை. கவிதை எழுதத் தெரிந்தால் மட்டுமே அகத்தில் எழுந்த உணர்ச்சியை புறத்தில் பிறருக்குப் புலப்படுத்த கவிதை இலக்கணம் அவசியம் என்றும் அதனைக் கற்றுத்தரும் ஆசிரியன் தேவை என்றும் மன்னன் கூறுகின்றான்.

அனைத்தும் உணர்ந்தா ளாயினும், அன்னாள்

....

மேலோர் மேன்மையும், மெலிந்தோர் மெலியும்

தமிழின் அமுதத் தன்மையும், நன்மையும்

காலைஅம் பரிதியும், மாலை மதியமும்

கண்ணையும் மத்தையும் கவர்வன; அதனால்

என்மகள் அகத்தில் எழுந்த கவிதையைப்

புறத்தில் பிறருக்குப் புலப்படுத் துதற்குச்

செய்யுள் இலக்கணம் தெரிதல் வேண்டுமாம்!

(பாரதிதாசன் கவிதைகள், ப.12)

என்ற அடிகளில் 'மெலிந்தோர் மெலிவு, என்று ஏழைகளின் துன்பத்தையும் 'தமிழின் அமுதத் தன்மை' என்று தமிழையும் கவிஞர் பாடியிருக்கிறார். இது பாரதிதாசனின் தனிச்சிறப்பு. "மொழியைக் காக்காத இனம் அடையாள மற்ற மனித மந்தையாக மாறிவிடும், என்று அவர் பாடிய கவிதைக்கு அவரே பயனாக இருந்து தமிழின் மேன்மையை எடுத்துச்சொல்லி நம்மை தமிழின்பால் நெறிப்படுத்துகிறார்.

தமிழுக்குத் தொண்டு செய்வோம்

மன்னின் ஆணைப்படி அமுதவல்லிக்கு ஏற்ற ஒரு ஆசிரியனை அழைத்து வந்தனர். அவர் பெயர் உதாரன் என்பதாம். அவனுக்கு இணையாக இலக்கணம் பகரும் திறமை படைத்தவர் இல்லை. உதாரனுக்கு ஆலோசனைகள் பல வழங்கப்படுகிறது. அதனை ஏற்றுக்கொண்டு உதாரனம் கூறும் கருத்துகள் பின்வருமாறு,

பேர்வாய்ந்த உதாரனைப்போய் அழைப்பீர் என்றான்

பேச்சுவல்ல அமைச்சர் பலர் சென்ற ழைத்தார்.

தேர்வாய்ந்த புவிராஜன் போல அந்தச்

செந்தமிழ்த்தீங் கவிராஜன் உதாரன் வந்தான்

பார்வேந்தன் நிகழ்த்தினான்; உதாரன் கேட்டுப்

பைந்தமிழுக்குத் தொண்டுசெயக் கடவோம் என்றான்.

(பாரதிதாசன் கவிதைகள், ப.15)

என்று உதாரனன் வாயிலாக தமிழுக்குத் தொண்டு செய்வது என் கடமை என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடுகிறார். ஏனென்றால் 'தனக்காக மட்டுமே வாழ்வது சாவுக்கு ஒப்பானது தமிழுக்காக வாழ்வதே வாழ்வது ஆகும்' என்று உறுதியாக நம்புவதால் தமிழ் என்னும் இலக்கிய வானில் துருவ நடசத்திரமாய்த் தனித்துவம்பெற்று விளங்குகிறார்.

யாப்பு முறை

தமிழ் மொழி செழிப்புடன் விளங்க வேண்டுமானால் இலக்கியம் வளத்தோடு இலக்கண வளமும் அவசியமானதாகும் என்பதை உணர்ந்த பாவேந்தர் அமுதவல்லிக்கு இலக்கணம் சொல்லித்தரும் சூழலை திறம்பட விவரிக்கிறார்.

மன்னன் ஆணைப்படி ……

…………. ……………. …………. …………………

அன்னதோர் மேடையிலே ………

………. ………….. ……………. ………..

மின்னொளி கேட்டிருப்பாள் – கவி

வேந்தன் உரைத்திடுவான்!

யாப்புமுறை உரைப்பான் – அணி

யாவும் உரைத்திடுவான்!

பாப்புனை தற்கான – அநு

பவம்பல புகல்வான்

(பாரதிதாசன் கவிதைகள், ப.15)

என்ற வரிகளில் தமிழின் இலக்கணச் செழுமைக்கு யாப்பும், அணியும் இணைத்து பா பல புனைதல் வேண்டும் என்பதை கவிஞர் பதிவு செய்கிறார்.

பாடுபொருள் திறம்

புரட்சிக்கவியில் அரசனின் மகளுக்கு பாடம் சொல்லித்தர வந்த ஒப்பற்ற ஆசிரியர் உதாரன் அமுதவல்லியின் காதல் வலையில் விழுந்துவிடுகிறான். காதலில் விழும் சூழலை உதாரன் வாயிலாக விவரிக்கும் பாவேந்தர் அநுதினமும் தரித்திரராய் உழைத்தும் தினையளவு பயனில்லாமல் பசித்த மக்கள் சிறிது அளவு கூழ் இருந்தால்

போதும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் வேலையில் ஒரு பானை நிறைய வெண்சோறு இருந்தால் அது எவ்வாறு அம்மக்களுக்கு இன்பம் பயக்குமோ? அதுபோல அமுதவல்லியே உனைக்காண்கிற போது அத்தகைய இன்பம் வருகிறது என்று உதாரன் வழி உணர்த்துகிறார். அதாவது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமான உயர்வான காதலைப்பற்றிப் பேசும்பொதுகூட பாரதிதாசன், அன்றாடம் உழைத்து உழைத்து பசியோடு நாட்களைக் கழிக்கும் ஏழைகளின் வாழ்க்கையை உவமையாகக் கூறியிருப்பது உழைக்கும் மகக்ள் மீது அவர்கொண்ட பற்று வெளிப்படுகிறது. **'காலுக்குச் செருப்புமில்லை கால் வயிற்றுக் கூழுமில்லை, பாழுக்கு உழைத்தோமடா என் தோழனே பசையற்று போனோமடா!'** என்ற ப.ஜீவாவின் வரிகளும் பாரதிதாசனின் கவிதையோடு உழைக்கும் மக்களின் வறுமையோடு பொருந்திப்போகிறது.

சூழ்ச்சியால் தமிழ் அழியுமா?

கவிதை கற்கும் காலத்தில் அமுதவல்லி – உதாரன் இருவரும் பிரித்து வைக்கப்பட்டிருந்த உண்மையைத் தெரிந்து கொண்டதும் உதாரன் பேசும் ஒரு வசனம் சிறப்பிடம் பெறுகிறது. அமுதவல்லியே உன் தந்தை என் மகளுக்கு முன்னொன்று தீவினையால் பெருநோய் வந்ததென்று சொன்னார். அதனால்அன்றோ நான் இவ்வளவு நாட்களாக மின்னல் போன்ற அழகுடைய உன்னை உன் அழகு மேனியை நான் பாரக்க எண்ணாமல் இருந்தேன் என்று கூறினால் இதனால் இப்படிப்பட்ட சூழ்ச்சியால் நம்மை பரித்துவிடமுடியுமா? என்று உதாரன் கேட்கிறான். மேலும் காரிருளால் சூரியன் மறையாது; கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போகாது; எதிர்ப்பு இருப்பதனால் உண்மை பொய்யாகிவிடாது; பிறர் சூழ்ச்சியானது செந்தமிழை அழித்துவிடாது! நேர் நிருத்தி பொய்யான தீர்ப்புச் சொல்லி சிறைப்படுத்தினாலும் உழைக்கும் தொழிலாளர்களின் போராட்டக்குணம் ஓய்ந்துபோகாது என்று கேட்பதன் மூலமாக பாரதிதாசன் மானுடப் பற்று வெளிப்படுகிறது.

சாதி - நால்வருணம்

வேதியர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு வருணங்கள் உண்டு இந்த நான்கு வருணங்களில் உள்ளோர் உடலில் ஒவ்வொரு இடத்திலும் பிறந்தவர்கள். அதாவது தலை, தோள், இடை, தொடை என்று வேதம் சொல்வதாகச் சொல்வார்கள்.

இதனை பாரதிதாசனும் புரட்சிக்கவியில் நால் வருணத்தை விமர்சனம் செய்து சாடுகிறார்.

நால்வருணங் கள்விதி நாட்டார்கள்,

என்றும்

காதல் நெருப்பால் கடலுன்மேல் தாவிடுவேன்

சாதி எனும் சங்கிலிஎன் தாளைப் பிணித்ததடீ!

(பாரதிதாசன் கவிதைகள், ப.20)

என்றும் பாடும் பாரதிதாசன் காதல் நிரவேறாமைக்கு சாதி முக்கியக் காரணம் என்கிறார்.

சாதி ஒழித்திடல் ஒன்று – நல்ல

தமிழ் வளர்த்தல்மற் றொன்று

பாதியை நாடு மறந்தால் – மற்றப்

பாதி துலங்குவ தில்லை. **(பாரதி உள்ளம், ப.159)**

என்று பாரதி உரைத்ததாக பாவேந்தர் குறிப்பிடுகிறார். பாரதி சொன்ன கருத்தை பாரதிதாசனும் தம் கவிதைகளில் வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

சாதி உயர்வென்றும் தனத்தால் உயர்வென்றும்

போதாக் குறைக்குப் பொதுத்தொழிலா ளர்சமூகம்

மெத்த இழிவென்றும், மிகுபெரும்பா லோரைஎல்லாம்

கத்தி முனைகாட்டிக் காலமெல்லாம் ஏய்ததுவரும்

பாவி களைத்திருத்தப் பாவலனே நம்மிருவர்

ஆவி களையேனும் அர்பணம்செய் வோம்!

(பாரதிதாசன் கவிதைகள், ப.21)

என்ற அடிகளில் உதாரனைப் பார்த்து அமுதவல்லி அரசியல் அதிகாரத்தால் கோணாட்சி நடைபெறுவதை மொழிகிறாள். இந்த நாட்டைத் திருத்த நம் காதலைத் தியாகம் செய்வது தவறில்லை என மொழிகிற இந்தச் சூழல் பாரதிதாசனின் எண்ண ஓட்டமாகும். மேலும் அரசன் இருவரையும் கொல்ல ஆணையிட்டப் பிறகு நாம் அழிவதற்குக் காரணம் தமிழ்தான் என்று சமுதாயம் தவறாக நினைத்துவிடுமோ?

ஐயகோ! என் தாய்மொழிக்குப் பழிவந்தால் அதை என்னால் ஏற்க முடியாது என்று உதாரன் என்ற கதாபாத்திரம் வழி பாரதிதாசன் உரைக்கிறான். இதனை,

தமிழறிந்த தால்வேந்தன் எனை அழைத்தான்

தமிழ்க்கவியென் றெனை அவளும் காதலித்தாள்!

அமதொன்று சொல்லுமிந்தத் தமிழ்என் னாவி

அழிவதற்குக் காரணமா யிருந்த தென்று

சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என்

தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?

உமைஒன்று வேண்டுகின்றேன் மாசில் லாத

உயிர்தமிழை உயிர்என்று போற்று மின்கள்!

(பாரதிதாசன் கவிதைகள், ப.28)

என்ற அடிகளில் பாரதிதாசனின் தமிழை உயிர் என்று கூறுகிறார். இதில் அவரின் மொழிப்பற்று வெளிப்படுகிறது.

பாரதிதாசனைப் போலவே கவிக்கோ அப்துல் ரகுமானும் தமிழை உயிர் என்கிறார். இதனை,

உன்னாலே பிறந்தோம்

உன்னாலே வளர்ந்தோம்

உன்னாலே பெருமை பெற்றே

உலகத்தில் வாழுகிறோம்

அகம் நீ! புறம் நீ! எம்

ஆருயிரும் நீ! எங்கள்

முகம் நீ! முகவரி நீ!

முடியாத புகழும் நீ!

(கவிக்கோ, எம்மொழி செம்மொழி, ப.12)

என்று தமிழின் பெருமையைச் சிறப்பிக்கிறார். பாரதிதாசனின் சிறப்பினை பேராசிரியர் மருதநாயகம், **'பாரதிதசானின் பாடுபொருள் மிகப்பல;' அத்தகைய வீச்சை வேறு கவிஞனிடத்தில் காண்பது அரிது; கவிதை எண்ணிக்கையிலும் பெருட் பரப்பிலும்**

அவரோடு போட்டியிடத்தக்க நிலையிலிருக்கும் ஒரே இந்தியக் கவிஞர் தாகூர் ஆவார். பாரதிதாசனின் இதயத்தில் தமிழ் பெற்ற இடத்தைப் பிடிக்க முயலுகின்ற இன்னொரு பாடுபொருள் உண்டானால் அது தொழிலாளர் உயர்வும் பொதுவுடைமைத் தத்துவத்தின் பெருமையுமே, (மருதநாயகம், பாரதி ஆறு, பாரதிதாசன் பத்து, ப.165) என்று பாரதிதாசனின் படைப்பாளுமையின் சாராம்சத்தைக் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

புரட்சிக்கவியில் சாதி, வர்ண வேறுபாடு தொழிலாளர் நலன், தமிழ் மொழியின் சிறப்பு ஆகியவற்றை மிகச்சிறப்பாகப் பாடி தமிழ் இலக்கியத்தில் ஆகச்சிறந்த ஆளுமையாய் பாரதிதாசன் விளங்குகிறார். புரட்சிக்கவி வடமொழியைத் தழுவி எழுதப்பட்டிருந்தாலும் பாரதிதாசன் தன் கருத்தியல் வளத்தால் புரட்சிக்கவியில் நீக்கமற நிறைந்திருக்கிறார் என்பதை அறிகிறோம்.

துணைநூற்பட்டியல்

1. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600108.
2. கவிக்கோ அப்துல் ரகுமான், எம்மொழி செம்மொழி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 16, 17 பெரியசாமி டவர், முதலாம் தளம், திருச்சிராப்பள்ளி - 620002
3. மருதநாயகம்.ப, பாதி ஆறு பாதிதாசன் பத்து, மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் – 608001

பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில் கல்வி

முனைவர் வெ.பிரேமலதா,
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 002
darshansarvesh@gmail.com, *அலைபேசி - 9443185022*

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தம் படைப்பு கலைகளால் தனித்த வரலாறு படைத்தவர்களுள் ஒருவர் நம் பாவேந்தர் பாரதிதாசன். தமிழர்கள் வாழ்வு பற்றியும், தமிழினம் பற்றியும், தமிழ் மொழி உயர்வினைச் சிந்தித்தும், அதற்காகவே வாழ்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசனின். இவருடைய படைப்புலகத்தில் கவிதைமொழியை கருவாக எடுத்துக்கொண்டு, அதன் வழியாகச் சமுதாய விடுதலையை மையப்படுத்தி தம் எழுத்தின் வாயிலாகத் தமிழ் உலகிற்கு தம் கவிதைகளைப் படைத்தவர் ஆவார். பாரதிதாசன் தம் காண விரும்பும் புதிய உலகை அறிவுடைய சமுதாயமாக்க பல கவிதைகள் படைத்துள்ளர். தமிழக மக்களுக்கு ஏற்ற வகையில் கல்வி பற்றிய பல்வேறு கருத்துக்களைப் பாரதிதாசன் தமது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். பாரதிதாசனின் கல்விச் சிந்தனை இன்றைய சூழலில் உள்ள கல்வி முறைக்கு உரமூட்டுவதாக அமைந்துள்ளது. அத்தகைய அறிவார்ந்த சமூகத்தைப் படைக்கவே கல்வி பற்றி பாரதிதாசன் கூறும் கருத்துக்களை இக்கட்டுரையில் காண்போம்.

கல்வி

கல்வி என்பது தனி மனித வாழ்வுக்கும் குடும்ப வாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் தேவையான ஒன்றாகும். கல்விதான் மனித வாழ்க்கையை அறிவுடையதாக்குகின்றது. கல்விதான் மனித வாழ்க்கையை அறிவினால் மேன்மையுறச் செய்கின்றது. கல்விதான் ஒரு மனிதனின் வாழ்வியலை முழுமை பெறச் செய்கின்றது. அத்தகைய கல்வியின் முக்கியத்துவத்தை புறநானூறு வலியுறுத்துகின்றது, என்பதை

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”1 (புறம் - 183)

தமக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்குத் தேவைப்படும் பொழுது உதவி செய்தும், மிகுந்த அளவு பொருள் கொடுத்தும், ஆசிரியரிடம் பணிவோடு வெறுப்பின்றி கல்வி கற்பது நன்று என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றார்.

வாழ்க்கைக்குத் தேவையான அறக்கருத்துக்களை இரண்டடியில் சொல்லிய வள்ளுவப் பெருந்தகை, கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கல்விக்கு என்று ஒரு அதிகாரத்தையே இயற்றியுள்ளார். மனிதனுக்குக் கல்வி கண் போன்றது என்பதை,

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு”2 (குறள் - 392)

எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்கு கண்கள் போன்றது என்று கூறுகின்றார்.

“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்து”3 (குறள் - 398)

ஒரு பிறவியிலே தான் கற்ற கல்வியானது, ஒருவனுக்குத் தொடர்ந்து வரும் ஏழு பிறப்புகளிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்படையது என்கின்றார் வள்ளுவர்.

ஒரு மனிதனுக்கு அழகு என்பது சொன்னால் அது கல்வியறிவே என்று நாலடியார் கூறுவதை,

“குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து

நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்

கல்வி அழகே அழகு”4 (நாலடி - 131)

கல்வியானது ஒரு மனிதனுக்கு மிக முக்கியமான அழகு. ஆண்களினுடைய மயிர்முடியின் அழகும், மடிக்கப்பட்ட ஆடையினது கரையினழகும், பெண்கள் பூசிக்கொள்ளும் மஞ்சள் அழகும் உண்மையான அழகு தருவன அல்ல. மன நன்மையும் நடுவுநிலைமையும் ஆகிய குணங்களோடு கூடிய கல்வியின் அழகே சிறந்த அழகு.

கல்வியின் அழகே சிறந்த அழகாகும் என்றும், புற அழகுகள் எல்லாம் அழகு அல்ல. மக்கட்குக் கல்வி அழகே உயர்ந்த அழகாகும் என்று கூறுகின்றது.

"கடை நிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்

தலைநிலத்து வைக்கப்படும் "5 (நாலடி - 133)

கீழ்க்குடியில் பிறந்தவர்களானாலும் கற்றறிந்தவராயின் அவர்களை மேலான குடியினும் உயர்ந்த இடத்தில் வைத்து மதித்தல் வேண்டும் என்று நாலடியார், கல்வி கற்பதால் உண்டாகும் பயனைக் கூறுகின்றது.

அதிவீரராம பாண்டியர் இயற்றிய வெற்றி வேற்கை நூலில்,

"கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே"6 (வெ.வே - 35)

கல்வி கற்றல் என்றும் நல்லது பிச்சை எடுக்கும் நிலை வந்தாலும் கல்வி கற்க வேண்டும் அது செல்வத்தை சம்பாதித்து வளமாக வாழ வழி வகுக்கும் என்று உரைக்கின்றார்.

பாரதிதாசனும் கல்வியும்

கல்வியின் சிறப்பினை உணர்ந்த பாரதிதாசன், கல்வி இல்லாத வீடு இருண்ட வீடு என்று கூறுவதை,

"எல்லா நலமும் ஈந்திடும் கல்வி

இல்லா வீட்டை இருண்ட வீடன்க! "7

குடும்ப வாழ்விற்குக் கல்வி தேவை என்பதை உணர்ந்த பாரதிதாசன்,

"படிப்பிலார் நிறைந்த குடித்தனம் நரம்பின்

துடிப்பிலார் நிறைந்த சுடுகாடென்க!

அறிவே கல்வியாம்! அறிவிலாக் குடும்பம்

நெறிகாணாது நின்றபடி விழும்! "8

மக்களிடம் மூடநம்பிக்கை வளர்வதற்குக் காரணம் கல்வியறிவு இல்லாமை என்பதை, அறிந்தவர் பாரதிதாசன். மூடநம்பிக்கை நிறைந்து காணப்படும் வீடு இருண்ட வீடு போன்றதாகும். அந்த இரண்டு வீட்டில் கல்வி அறிவு என்னும் ஒளியைப் பாய்ச்சிட வேண்டும் என எண்ணினார் பாரதிதாசன். குடும்பத்தில் உள்ள எல்லோரும் கல்வி கற்க வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

தமிழ்நாட்டில் எல்லோரும் கல்வி கற்றவர் என்ற நிலை வரும் பொழுது தான் வாழ்விலே அகமும், வீரமும் உதயமாகும் என்பதை

“இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்

என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்

துன்பங்கள் நீங்கும், அகம் வரும், நெஞ்சினில்

தூய்மை யுண்டாகிவிடும், வீரம் வரும் ”9

என்று பாடித் தமிழ் கல்வி முறையை வரவேற்றுள்ளார்.

பாரதிதாசன் **‘நாட்டியல் நாட்டுவோம்’** என்ற தலைப்பில் வாக்குரிமை இருக்கும் நாட்டில் சனநாயக மரபு சிறக்கவும், இல்லாமை நீங்கவும், கல்லாமை ஒழியவும, வாழ்வுக்கு கல்வி ஒளி பெருகவும் வேண்டும் என்பதை,

“கல்வி இருட்டிற்குக் கலங்கரை விளக்கு

யாவர்க்கும் வாக்குரிமை இருக்குமிந்; நாட்டில்

யாவருக்கும் கல்வி இருக்க வேண்டும் ”10

என்று உரைக்கின்றார். **‘கொட்டு முரசே’** என்ற தலைப்பில் எல்லார்க்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று பாடியிருப்பதில் கல்வி எல்லாருக்கும் கிடைக்க வேண்டும் என்பதைக் கவிஞர்,

“இல்லாமை என்னும் பிணி

இல்லாமல் கல்வி நலம்

எல்லார்க்கும் என்று சொல்லிக்

கொட்டுமுரசே! ”11

என்று பாடிக் கல்வியின் தேவையை உணர்த்தி, உலகிற்கு அறிவுப்பாதை வகுத்து, தம் காண விரும்பும் சமுதாயதத்தில் எல்லோருக்கும் கல்வி அவசியம் என்று பாடியுள்ளார்.

எல்லோரும் கல்வி கற்று, என் தமிழ்நாட்டு மக்கள் எல்லாத் துறையிலும், சிறப்படையும் நாளை பற்றிக் கனவு கண்ட பாவேந்தர்,

“என்னருந் தமிழ்நாட்டின் கண்

எல்லோரும் கல்வி கற்றுப்

பன்னருங் கலைஞா னத்தால்

பராக்கி ரமத்தால், அன்பால்,

உன்னத இமயம லைபோல்

ஓங்கிடும் கீர்த்தி யெய்தி

இன்புற்றார் என்று மற்றோர்

இயம்பக்கேட் டிடல்எந் நாளோ? ”12

எம் அன்னை தமிழ்நாட்டில் உயர்வு, தாழ்வு கருதாமல் அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்றும், எல்லாத் துறையிலும் வளர்ச்சி பெற்று, புகழும் சிறப்பும் பெற்று நாளைய சமூகம் சிறப்புடன் வாழ வேண்டும் என்று பாடுகின்றார்.

பாரதிதாசனின் பெண் கல்வி

சங்க காலத்தில் கல்வி ஆண்களுக்கும், பெண்களுக்கும் பரவலாகக் கிடைத்தது என்பதை, ஔவையார், காக்கைப்பாடினியார், நச்செள்ளையார் போன்ற பெண்பாற் புலவர்களின் மூலம் அறிய முடிகின்றது. ஆண் ஆதிக்கச் சமுதாய அமைப்பு தமிழ்நாட்டில் தோன்றியதால், பெண்களை அடிமைப்படுத்தும் போக்கு ஏற்பட்டது. இப்போக்கால் பெண்கல்வி மறுக்கப்பட்டது. இதனால் தனிமனித வாழ்வும் குடும்ப வாழ்வும் சமுதாய வாழ்வும் சிதைந்து போயின.

ஆண் ஆதிக்கச் சமுதாய அமைப்பில், பெண்களுக்கு உரிமையும் கல்வியும் மறுக்கப்பட்ட நிலையைப் பாரதிதாசன்,

“கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்

கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள் ”13

என்று பாடிப் பெண்களின் அவலநிலையை விளக்கியுள்ளார்.

இயற்கையின் அழகை பாடும் ‘**அழகின் சிரிப்பில்** ’ பெண் கல்வியால் தான்; அறியாமை என்ற இருள் அகலும் என்று கூறுவதை,

“நிலவிடும் நிலா முகத்து

நீலப்பூ விழிமங் கைமார்

தலையாய கலைகள் ஆய்ந்து

தம்வீடு போதல் கண்டேன்

உலவிடு மடமைப் போயின்

உடம்பின் தோல் உரிதல் கண்டேன்! ”14

என்கின்றார். பெண்களுக்குக் கல்வி வேண்டும் எனவே பெற்றோர்களே, தங்களின் பெண் குழந்தைகளுக்குக் கல்வியைத் தாருங்கள் என்பதை,

“பெற்ற நல் தந்தைதாய்மாரே - நும்

பெண்களைக் கற்க வைப்பீரே

இற்றை நாள் பெண்கல்வி யாலே - முன்

னேற வேண்டும் வைய மேலே”15

என்ற பாடலடிகள் மூலம் பெற்றோர்கள் பெண்கல்வியைப் போற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

குடும்பவிளக்கு என்னும் நூலில் விருந்தோம்பல் பகுதியில் பெண்கள் குடும்பம் நடத்தவும் மக்களை வளர்க்கவும் உலகத்தைக் காக்கவும் கல்வியை போற்றவும் பெண் கல்வி வேண்டும் என்பதைக் கவிஞர்

“பெண்கட்கு கல்வி வேண்டும்

குடித்தனம் பேணு தற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்

மக்களைப் பேணு தற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்

கல்வியைப் பேணு தற்கே! ”16

பெண்களுக்கு கல்வியானது மிகவும் அவசியம்; தன்னுடைய குடும்பத்தை நல்ல முறையில் கவனிப்பதற்கும், குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கும், உலகினைக் காப்பதற்கும் பெண்களுக்கு கல்வி அவசியம் என்கின்றார்.

பெண்களுக்கு கல்வி இல்லை என்றால் சமுதாயமும் குடும்பமும் பின்தங்கிய நிலையில் இருக்கும் என்பதை,

“கல்வியில் லாத பெண்கள்

களர்நிலம்! அந்நி லத்தில்

புல்விளைந் திடலாம்; நல்ல

புதல்வர்கள் விளைதல் இல்லை!

கல்வியை உடைய பெண்கள்

திருந்திய கழனி, அங்கே

நல்லறி வுடைய மக்கள்

விளைவது நவில வோநான்! ”17

கல்வி அறிவில்லா பெண்கள் களர்நிலம் என்றும், கல்வி உடைய பெண்கள் நல்ல கழனி என்றும், ஒப்பிட்டுக் கூறியுள்ளார். கழனியில் நல்ல பயிர் விளைவது போல், கல்வி கற்றப் பெண்களால் தான் நல்ல அறிவுடைய மக்களைப் பெற்றெடுக்க முடியும் என்று கூறுகின்றார். இவ்வாறு பாரதிதாசன் பெண்களுக்கு கல்வி அவசியம் வேண்டும் என்று உணர்த்துகின்றார்.

தொகுப்புரை

பாவேந்தர் தன்னுடைய கூர்நோக்கும் விழியால் இச்சமுகத்தையும் பெண்களையும் உற்றுநோக்குகின்றார். கல்வியால் மட்டுமே தனிமனிதனையும், சமுதாயத்தையும் முன்னேற்ற முடியும் எனவே, தமிழ்நாட்டில் தாய்மொழிக் கல்வி வேண்டும் என்றும், ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி எல்லார்க்கும் கட்டாயம் கல்வி வழங்க வேண்டும் என்று உரைக்கின்றார். கல்வி அறிவு தான் சனநாயக மரபை, வாக்குரிமையை சிறப்பிக்கும் தன்மை உடையது என்றும், பெண்கல்வியை அனைவரும் போற்ற வேண்டும்; பெண்கல்வியால் தான் குடும்ப வாழ்வு சிறப்புடையும் என்றும்; பெண்கல்வியால் நன்மக்கட்பேறு சிறக்கும் என்று பெண் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகின்றார்.

சான்றெண்விளக்கம்

1. புலவர் இரா.இளங்குமரன்(உரை.,), சங்கஇலக்கியம் மூலமும்உரையும், வர்த்தமானன் பதிப்பகம், முதற்பதிப்பு, 2022, ப.313
2. நாமக்கல்கவிஞர்(உரை.,), பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், முதற்பதிப்பு, 2022, ப.106
3. மேலது, ப.107
4. மேலது,ப.345
5. மேலது,ப.346

6. அ.மாணிக்கம்(உரை.,) நீதிநூல்கள் மூலமும்உரையும், வர்த்தமானன் பதிப்பகம், முதற்பதிப்பு, 2023, ப.44
7. முனைவர் சுபாசு, பாரதிதாசனும்தமிழியமும், கபாலிகா பதிப்பகம், ஐந்தாம்பதிப்பு, 2000, ப.40
8. மேலது,ப.41
9. பாவேந்தர்பாரதிதாசன், பாரதிதாசன்கவிதைகள், மணிவாசகர்பதிப்பகம், முதற்பதிப்பு, 1999, ப.65
10. மேலது, ப.409
11. மேலது, ப.202
12. மேலது, ப.67
13. மேலது,ப.71
14. முனைவர் சுபாசு, மு.நூ, ப.44
15. மேலது, ப.43
16. முனைவர்கமலாமுருகன்(உரை.,) குடும்பவிளக்கு மூலமும்உரையும், சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு, 2008, ப.100
17. மேலது, ப.100

துணைநூற்பட்டியல்

1. இளங்குமரன்.இரா(உரை.,) - சங்கஇலக்கியம் மூலமும்உரையும், வர்த்தமானன் பதிப்பகம், 21,இராமகிருஷ்ணா தெரு, தியாகராயநகர், சென்னை - 17, முதற்பதிப்பு - 2022

2. கமலாமுருகன் (உரை.,) - குடும்பவிளக்கு மூலமும்உரையும், சாரதாபதிப்பகம், ஜி-4,சாந்திஅடுக்ககம், ராயப்பேட்டை, சென்னை - 14, முதற்பதிப்பு - 2008

3. முனைவர் சுபாசு - பாரதிதாசனும் தமிழியமும்,
கபாலிகா பதிப்பகம்,
15,வங்கியர் குடியிருப்பு,
குமரன்நகர், திருச்சி - 17,
ஐந்தாம்பதிப்பு - 2000

4. நாமக்கல் கவிஞர்(உரை.,) - பதிணெண்கீழ்க்கணக்கு நூல்கள்
மூலமும் உரையும்,
வர்த்தமானன் பதிப்பகம்,
21, இராமகிருஷ்ணா தெரு,
தியாகராயநகர், சென்னை - 17
முதற்பதிப்பு - 2022

5. பாவேந்தர்பாரதிதாசன் - பாரதிதாசன்கவிதைகள்,
மணிவாசகர்பதிப்பகம்,
31,சிங்கர்தெரு,
பாரிமுனை, சென்னை - 108,
தற்பதிப்பு - 1999

6. மாணிக்கம்.அ (உரை.,) - நீதிநூல்கள் மூலமும்உரையும்,
வர்த்தமானன் பதிப்பகம்,
21, இராமகிருஷ்ணா தெரு,
தியாகராயநகர், சென்னை - 17
முதற்பதிப்பு – 2023

பாரதிதாசன் பாடல்களில் பெண் கதைமாந்தரிகளின் பன்முக நிலை

முனைவர் தி.வ. சந்திரிகா

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சென்னை -99

Chandrika.kumaraguru@gmail.com, **கைபேசி – 9445150032 , 8667470160**

ஆய்வுச்சுருக்கம்

பாரதிதாசன் தம்முடைய காப்பியங்கள், கதைப்பாடல்களில் படைத்த பெண் கதைமாந்தர்கள் அறிவார்ந்தர்களாகவும் வீரம் செறிந்தவர்களாகவும் குடும்பத்தை நல்வழியில் நடத்திச் செல்பவர்களாகவும் அமைத்துள்ளார். பாவேந்தர் தம் படைப்புகள் அனைத்திலும் மானுடத்தை உயர்த்த பெண்களால் மட்டும் முடியும் என்ற கருத்ததை பெண்கதைமாந்தர்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை தெளிவுறுத்தும் வகையில் இக் கட்டுரை ஆய்ந்துரைக்கிறது.“ பாரதிதாசன் பாடல்களில் கதைமாந்தர்களின் பன்முக நிலை“ என்ற தலைப்பு இவ்வாய்விற்கு ஏற்புடையதாகிறது. இவ்வாய்வில் சிந்தைனைப் பண்ணையில் பாரதிதாசன், பாரதிதாசன், பாவேந்தர் தொகுதிகள் ஒரு படைப்புப் பார்வை, பாவேந்தர் பாரதிதாசன் 125 நூல்கள் முதன்மை ஆதாராங்களாகும். இணையத்தில் அமைந்த கட்டுரைகள் துணைமை ஆதாரங்களாகும்.

ஆய்வு அறிமுகம்

குடும்பத்தலைவியின் மூலம் பெண் கல்வியில் சிறந்தவளாக விளங்கினால்தான் குடும்பம் பெருமையுடையதாக இருக்கும் என்பதையும் ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாய் வாழ வேண்டும், பெண்கள் பகுத்தறிவுடன் விளங்க வேண்டும் என்பதையும் பெண்கள் பகுத்தறிவு சிந்தனை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் முடியாட்சி ஒழித்து மக்களாட்சி நிலை பெறுதல் வேண்டும் என்ற கருத்ததையும் பெண்ணாவள் கல்வி , கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும் என்றும் வீரமும் உறுதியும் பெற்றிருக்க வேண்டும் என்பதை தம்முடைய பாடல்களில் பெண் கதைமாந்தர்களை படைத்து பெண்ணின் பெருமையை உணர்தியுள்ளார் என்பதை ஆய்ந்துரைக்கும் நோக்கில் இக் கட்டுரை அமைந்துள்ளது.

குடும்பவிளக்கின் தலைவி தங்கம்

குடும்பவிளக்கில் படைக்கப்பட்ட தலைவி தங்கம், கணவன் மணவழகன் , இவர்களுக்கு இரு பிள்ளைகள், மாமனார் மாமியோடு கூட்டுக் குடும்ப வாழ்க்கை நடத்துகிறாள். தங்கத்தின் இன்னொர் பெயர் சுறுசுறுப்பு என்று சொல்லலாம். காலையில் உதிக்கும் முன்னே எழுந்து குழந்தைகளைக் குளிப்பாட்டிப் பாடத்தோடு, இசையையும் கற்றுக் கொடுப்பாள். கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் காலையுணவு படைக்கிறாள். இத்தனை வேலைகளையும் செய்து தன்னுடைய பிள்ளைகளுக்கு ஆசிரியராகவும் விளங்குகிறாள்.

" பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்

அவள் வாத்திச்சி அறை வீடு கழகம்

தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை அள்ளி

விழுங்கினார். பிள்ளைகள் " 1

என்ற வரிகளின் மூலம் பெண்கல்வியை வலியறுத்துகிறார். குடும்ப விளக்கின் தலைவி தங்கம் தான் பெற்ற கல்வியைத் தன் குழந்தைகளுக்கு கொடுக்கிறாள்.

குடும்பம் உயரப் பாடுபடும் அறிவுடைய குடும்பத்தலைவியாக

"அன்றியும் உன் பெண்டாட்டி

அறிவுக்கோர் திருவிளக்காம் " 2

என்ற இலக்கணத்தின் படி தங்கத்தைப் படைத்துள்ளார். மாமியாரால் அறிவுக்கோர் திருவிளக்கு என்று பாராட்டப்படுகிறாள். குடும்பத் தலைவி கல்வியறிவு பெற்றிருந்தால் தான் குடும்பம் பெருமையுடையதாக இருக்கும் என்பதை விளக்குகிறார். குடும்பத்தொண்டைக் கடந்து பொதுத் தொண்டும் செய்ய விரும்புகிறாள் தங்கம் என்பதை

" அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்

அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்ப தல்லால்

இதுவரைக்கும் பொதுநலத்துக்கென்ன செய்தோம்." 3

என்ற வரிகளின் வழி தன் கணவனிடம் தமிழ்மொழியின் உயர்வுக்கும் தமிழர் முன்னேற்றத்திற்கும் தமிழன் ஏதாவதொரு நல்ல செயல்கள் செய்ய வேண்டும் என்கிறாள்.

தன்னுடைய முதுமை வயதிலும் தன் கணவனுடன் இலக்கியம் படித்தும் ஆராய்ந்தும் வாழ்கின்றாள்.

"புலன்கள் தோய்ந்து கருவிகள் ஓய்ந்த நிலையிலும்கூட

அன்பு வாழ்க்கை வாழமுடியும் " 4

என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்கின்றாள்

'நானடைந்த மனைவியோ என்றால்

"எனக்கினியாள் என்னிரண்டு கண்களே போல்வாள்

நவையில்லாள் நான்வாழத் தன்னுயிரும் நல்கும்

நாட்டத்தாள் அவளாலே என் வாழ்வைக் காத்தேன்" ."5

என்று தன்னுடைய கணவனால் 105 வயதிலும் புகழப்படுகிறாள் தங்கம்.

இறுதியில்

" இடும்பை தீர்ப்பவள் என்மனை அவள்என்

குடும்பவிளக்கு வேறெது கூறுவேன்" 6

என்று குடும்பவிளக்கின் வண்ண ஓவியமாக தங்கத்தைப் படைத்துள்ளார்

சஞ்சீவி பர்வதத்தின் சரரலின் தலைவி வஞ்சி

இக் குறுங்காப்பியத்தில் தலைவன் குப்பன். தலைவி வஞ்சி என்பவள். குப்பனின் காதலி வஞ்சி. பகுத்தறிவுக் கண் கொண்டு ஆராய்ந்து, ஆணுக்கும் அதனைப் புகட்டுவாள் பெண் என்ற கருத்தை உணர்த்தும் வகையில் வஞ்சி என்ற பெண்ணைப் படைத்துள்ளார்.

"பெண்ணுக்கு பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ

மண்ணுக்கு கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை

பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு

மண்ணடிமை தீர்த்து வருதல் முயற் கொம்பே " 7

இவ்வாறு குப்பனிடம் வஞ்சியின் என்ற கதைமாந்தரின் மூலம் மூலம் பெண்ணடிமை நிலையை உணர்த்துகிறார்.

“மூடப்பழக்கம் முடிவுற்ற கண்ணுறக்கம்

ஓடுவதென்றோ உயர்வதென்றோ நானறியேன்“ 8

குப்பன் ஆண்மகனாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் அஞ்சும் கோழையாகவும் புராணங்களில் நம்பிக்கைக் கொண்டு பகுத்தறிவு இல்லாமல் பேசும் போது வஞ்சி, அவனுடைய கோழைத்தனத்தை மாற்றுகிறாள். புரட்சிக்கவி கதையில் வஞ்சி மூடநம்பிக்கைகளைச் சாடும் அறிவுள்ள பெண்ணாக காட்டப்படுகிறாள். மூடப்பழக்கம் நீங்கினால்தான் மக்கள் உயர்வடைவர் என்பதை உணர்த்துகிறார்.

புரட்சிக்கவியில் அமுதவல்லி

புரட்சிக்கவியின் தலைவி அமுதவல்லி. மன்னன் மகள். கதைத்தலைவன் உதாரன். இவன் கவிஞன். மன்னர் மகள் என்பதால் அவளை ஏற்க மறுக்கிறான். நடுங்கின்றான். ஆனால் அமுதவல்லியோ அஞ்சா நெஞ்சினாளாய்

வாளை உருவி வந்து மன்னன் எனதுடலை

நாளையே வெட்டி நடுக்கடலில் போடட்டும்

ஆரத்தழுவி அடுத்தவினாடி க்குள் உயிர்

தீர் வரும்எனினும் தேன்போல் வரவேற்பேன். 9

பொருளாதார ஏற்றத்“தாழ்வு பணக்காரன் ஏழைழயென்ற பேதம் , உயர்சாதி – தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லாமல் , இருவர் மனம் விரும்பினால் கலப்புத்திருமணம் செய்து கொள்ளலாம் என்ற கருத்ததை அமுதவல்லி என்ற கதாபாத்திரத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

முடியாட்சி நீங்கிக் குடியாட்சி அமையவேண்டும் என்ற கருத்தை

”நாட்டின் இளவரசி நான்ஒருத்தி ஆதலினால்

கோட்டை அரசன் எனைக்கொல்வதற்குச் சட்டமில்லை

சாதிஉயர் வென்றும் தனத்தால் உயர்வென்றும்

கத்தி முனைக்காட்டி காரமெல்லாம் ஏய்த்து வரும்

பாவிகளைத் திருத்தப் பாவலனே நம்மிருவர்

ஆவிகளை யேனும் அர்பணம் செய்வோம்.” 10

என்னும் அமுதவல்லியின் மூலமாக பெண்ணினத்திற்கு கொடுக்கும் பாரதிதாசனின் குரலாகும். அமுதவல்லி என்ற கதைபாத்திரத்தின் வழியாக

கொடுங்கோல் முறியடிக்கப்பட்டுக் குடியாட்சி ஏற்படுகின்றது.

வீரத்தாய்

பெண்களுக்கு விடுதலை என்ற உணர்வ, அவர்கள் உள்ளத்திலேயே தோன்ற வேண்டும்.

"ஆடை, அணிகலன்கள் , ஆசைக்கு வாசமலர்

தேடுவதும் ஆடவர்க்குச் சேவித்திருப்பதவம்

அஞ்சவதும் நாணுவதும் ஆமைமணைப் போல் வாழ்வதும்

கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்

மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி வீரத்தாய் காட்சி -1

நாடு நன்மை அடைய வேண்டுமென்றால் பெண்கள் அறிவும் துணிச்சலும் கொண்டவர்களாக விளங்க வேண்டும். வீரத்தாய் என்ற காவியத்தில் விஜயா என்ற பெண்ணைப் படைத்துள்ளார். விஜயா தன்னுடைய மகனிடம்

நிற்கையில் நீ நிமிர்ந்து நிற்பாய்

குன்றத்தைப் போல் 11

என்று கூறி தன் மகனுடைய வீரத்தை வளர்த்தாள்.

தன்னுடைய அறிவு கூரமையால் நாட்டைக் காத்தாள்.

விஜயா என்பவள் பகுத்தறிவு உடையவள். மன்னராட்சியை நீக்கும் எண்ணம் கொண்டவள். அரசனின் மனைவியாக படைக்கப்பட்டு கவிஞர் உள்ளத்தில் உருவாக்கப்பட்ட பெண்ணின் இலக்கணத்திற்க பெருமையாக படைக்கப்பட்டவள் விஜயராணி. தன்னுடைய மகனுக்காக கிழவேடம் தரித்து மறப்போர் கலைகளைக் கற்றுக் கொடுக்கிறாள்.

கற்போர்கள் வியக்கும்வகை இந்நாள் மட்டும்

கதியற்றுக் கிடந்திட்ட அடியேனுக்கு

மற்போரும் விற்போரும் வாளின் போரும்

வளர் கலைகள் பலப்பலவும்

சொல்லித்தந்தீர் 12

விஜயாவின் மகன் சுதர்மனன் போர்ப்பயிற்சி கற்றத்தந்த சிறப்பைக் கூறுகின்றான்.

"அன்னையென்னும் தத்துவத்தை

இப்புவிக்குக் காட்ட வந்த

மின்னே! விளக்கே ! விரிநிலவே

வாழ்த்துகிறேன். 13

என வாழ்த்தி பாடும் பாங்கில் விஜயராணியைப் படைத்துள்ளார்.

முடிவுரை.

இக் கட்டுரையின் வாயிலாக பெண்கள் கல்வியறிவு உடையவர்களாக இருந்தால்தான் குடும்பத்தையும் உயர்த்தி சமுதாயத்தையும் உயர்த்துவாள் என்பதை தங்கம் அன்ற கதைமாந்தரின் வழி புலப்படுத்தியுள்ளார். பெண்கள் ஆணுக்கு பெண் சரிநிகர் சமானமாய் வாழவேண்டும். பகுத்தறிவு சிந்தனையோடு திகழ வேண்டும் என்பதை வஞ்சி என்ற கதைமாந்தரின் மூலம் தெளிவுறுத்தப்பட்டுளது. முடியாட்சி நீங்கிக் குடியாட்சி அமைய வேண்டும் என்ற கருத்தையும் அன்னையின் தத்தவத்தையும் தமிழர்களுக்குரிய வீரப்பெண்ணாகவும் ஓன்றரகச் சேர்த்து வீரத்தாய் என்ற கதைமாந்தரின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். காதல் என்பது ஏழை பணக்காரன் பார்த்து ஆணுக்கும் பெண்ணுக்கும் வருவதில்லை. என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் அமுதவல்லி என்ற புரட்சிகரமான பெண்ணின் வழி வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு பாரதிதாசன் கண்ட பெ்ண் காமாந்தர்கள் அறிவார்ந்தர்களாகவும் சிந்தனை மிக்கவர்களாகவும் புதுமைப்பெண்ணாகவும் புரட்சிப்பெண்ணாகவும் படைக்கப் பெற்றுள்ளாள். பாரதிதாசன் கெண்ணை கல்வி அறிவு, பகுத்தறிவு ஆணோடு சமமாக வாழும் பெண்ணாகவும் படைக்கப் பட்டுள்ளாள் என்பது தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது .

அடிக்குறிப்புகள்

1. குடும்பவிளக்கு -ப- 9 பாரதிதாசன்
2. பாரதிதாசன் ப- 24, பேரா. நா. சிவசுப்பிரமணியன்
3. குடும்ப விளக்கு ப- 30 , பாரதிதாசன்
4. பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் ப- 189 , மா. செல்வராசா
5. குடும்ப விளக்கு ப- 194 , பாரதிதாசன்

6. மேலது ப- 194
7. புரட்சிக்கவி , பாரதிதாசன்
8. மேலது
9. மேலது
10. மேலது
11. வீரத்தாய், பாரதிதாசன்
12. மேலது காட்சி- 3
13. மேலது

துணைநூற்பட்டியல்

1. முனைவர் அ. ஆறுமுகம், பாவேந்தர் தொகுதிகள் ஒரு படைப்புப் பார்வை , பாவேந்தர் பதிப்பகம். சீரகம், திருமழபாடி, அரியலூர் மாவட்டம் .
2. முனைவர் மு. கலைவேந்தன், தமிழ் ஐயா வெளியீட்டகம், ஔவைக்கோட்டம், திருவையாறு – 613 204
3. குமரி அனந்தன். சிந்தனைப் பண்ணையில் பாரதிதாசன் . வானதி பதிப்பகம். திநகர் , சென்னை- 17.
4. பேரா. நா. சிவசுப்பிரமணியன் , பாரதிதாசன், காவ்யா. கோடம்பாக்கம், சென்னை – 24.
5. பாவேந்தர் பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ஸ்ரீசெண்பகா பதிப்பகம்

விடுதலை உணர்வில் பாவேந்தர்

முனைவர் தி. பிரகாசி மேரி

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி

திருச்செந்தூர் 628 215

அலைபேசி : 9655842730

மெயில் : dprakasimary@gmail.com

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு மிக நீண்ட வரலாற்றினை உடையது. இந்திய விடுதலைக்குத் தன்னலமில்லாத வகையில் தொண்டு செய்து புகழ்பெற்றோர் பலர். அவர்களில் தமிழர்களின் பங்களிப்பு வரலாற்றின் ஏடுகளில் பிறர் அறியப்படாத நிலையிலேயே உள்ளது. அவர்கள் பட்டம் பதவிகளைத் துறந்து, பல்வகைத் துன்பங்களுக்கு உள்ளாகித் தம் உயிரையும் பொருட்படுத்தாது நாட்டுப் பணியாற்றினர். ஒவ்வொரு நிலைகளிலும் தமிழ் இயக்கங்களோடு தொடர்பு கொண்டவர்களாக விளங்கியதோடு தமிழப்;பணியோடு விடுதலை உணர்வினையும் ஊட்டி வளர்த்தனர். அவ்வகையில் 20-ஆம் நூற்றாண்டில் புதுமைக்கவி, புரட்சிக்கவி பாவேந்தர் என்று சிறப்பித்து உரைக்கப்பெறும் பாரதிதாசனின் இந்திய விடுதலை இயக்கப் பங்களிப்புச் சிறப்பானது.

பாரதிதாசன் அறிமுகம்

புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்படும் பாரதிதாசன் பாண்டிச்சேரியில் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ஆம் நாள் பிறந்தார். இவருடைய இயற்பெயர் கனகசுப்புரத்தினம். தமிழாசிhயராகப் பணியாற்றி இவர், சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால், பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார்.

பாரதியார்மீது கொண்ட பற்று

பாவேந்தர் பிறந்த புதுவை மாநிலம் பிரெஞ்சு ஆளுமைக்கு உட்பட்டிருந்தது. ஆதலால் தன்னை ஓர் இந்தியன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொண்டிருந்தார். பாரதியாரின் அறிமுகத்திற்கு முன்பாகவே அவரது நூலான இதழும்

அதில் வெளிவந்த ‘சுதேச கீதங்கள்’ என்னும் பாடலின் கருத்துக்களும் அவரை ஈர்த்திருந்தன. இதனைப் பின்வரும் அவரது கூற்றால் உணரலாம்.

‘‘சுதேச கீதங்களை நான் படித்து வந்தேன். ராகத்தோடு முணுமுணுத்து வந்தேன். இந்தியா பத்திரிகையின் சித்திர விளக்கங்கள், சிறுகதைகள்,ஈசுவரன் தருமராஜாகோயில் தெருவின் விளக்கங்கள், குவளையின் கூச்சல் இவைகள் எல்லாம் சுதேச கீதத்தின் உட்பொருளை எனக்கு விளக்கின. அதன்பிறகு கொஞ்சம் விஷயமான உணர்வோடும் ‘நான் ஓர் இந்தியன்’ என்ற அகம்பாவத்தோடும் அப்பாடல்களை என்னால் நாளடைவில் பாடமுடிந்தது’’ என்கிறார்.

பாரதியாரைத் தன் கவிதை ஆசானாக ஏற்றுக்கொண்ட பாவேந்தர், அவர் பின்பற்றிய இந்திய விடுதலை இயக்கத்தையும் பின்நாட்களில் முற்றாக ஏற்றுச் செயல்பட்டிருக்கின்றார் எனில் மிகையன்று.

பாரதியைச் சந்தித்தல்

சிறு வயதிலேயே சிறுசிறு பாடல்களை அழகாகச் சுவையுடன் எழுதி தமது தோழர்களுக்குப் பாடிக்காட்டுவார். நண்பர் ஒருவரின் திருமணத்தில் விருந்துக்குப்பின், சி. சுப்பிரமணிய பாரதியாரின் நாட்டுப்பாடலைப் பாடினார். பாரதியாரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார். ஆனால் கவிஞருக்கு அது தெரியாது. அப்பாடலே, அவரைப் பாரதியாருக்கு அறிமுகம் செய்து வைத்தது. அன்றுமுதல் தனது இயற்பெயரான கனகசுப்புரத்தினம் என்பதைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார். ‘தன் நண்பர்கள் முன்னால் பாடு’ என்று பாரதிகூற, பாரதிதாசன் ‘எங்கெங்கு காணினும் சக்தியடா’ என்று ஆரம்பித்து இரண்டு பாடல்களைப் பாடினார்.

புதுவையிலிருந்து வெளியான தமிழ் ஏடுகளில் கண்டழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன் எனப்பல புனைப்பெயர்களில் எழுதி வந்தார்.

அரசியல் ஈடுபாடு

காங்கிரசு கட்சியில் ஈடுபாடு கொண்டு பாடுபட்ட பாரதியாரின் கருத்துக்களை ஏற்று நடத்த பாரதிதாசன் அதனை வலுப்படுத்தும் விதத்தில் பல பாடல்களைப் புதுவையிலிருந்து வெளிவந்த தேசசேவகன், ஆத்மசக்தி முதலான இதழ்களில் எழுதி வெளியிட்டுள்ளார். தந்தை பெரியாரின் தீவிரத் தொண்டராகவும் விளங்கினார். மேலும் அவர் திராவிடர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அதன் காரணமாகக் கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்றவற்றினை தனது பாடல்கள்மூலம் பதிவு செய்தார்.

அரசியல் ஈடுபாடு

புதுவைக்கு வந்த கோகலே, திலகர், சி.ஆர். தாஸ், காந்தியடிகள் முதலான தேசியத் தலைவர்களைக் கண்டு மகிழ்ந்த பாரதிதாசன் பல ஆண்டுகள் பாரதியார், அரவிந்தர், வா. வே. சு. ஐயர் ஆகியோரிடம் நெருங்கிப் பழகியுள்ளார். அவர்களால்தான் தன் உள்ளத்தில் தேசிய உணர்வு பெற்றதனை, ~~பள்ளி நேரம் போக ஓய்வு நேரங்களில் பாரதியாருடன் இருப்பேன். அரவிந்தர், வா. வே. ஐயர், பாரதி ஆகியோர் ஓயாமல் பேசிக் கொண்டிருப்பர். அவர்கள் பேச்சில் அடிபடாத செய்தி எதுவுமில்லை. நான் அருகில் அமர்ந்து அவர்கள் பேசுவதைக்கேட்டு எவ்வளவோ தெரிந்து கொண்டேன். பாரதியார் எதைப் பேசினாலும் ஒரு கவிஞனுக்குரிய மிடுக்கோடுதான் பேசுவார். இப்புரட்சிக்காரனின் பேச்சைக்கேட்டு இளைஞனான என் உள்ளத்திலும் அப்போது தேசிய உணர்வும் புரட்சிக் கருத்துக்களும் வேர்விடத் தொடங்கின|| என்று எடுத்துரைக்கின்றார்.

பாரதநாட்டின்மீது பற்று

பாரதநாட்டை பாரதத்தால் என உருவகித்து பல பாடல்கள் பாடியவர் பாரதியார். பாரதிதாசன் அவ்வழியைப் பின்பற்றிப் 'பாரதத்தாய்' என்னும் தலைப்பில் எழுதியுள்ள கவிதைகள் அவரது இந்திய விடுதலை உணர்வின் வெளிப்பாடாய் அமைந்துள்ளன.

பாரதத்தாய் அனைத்துப் பொருள்களிலும் தன் அழகைக் காட்டுகின்றாளாம். சின்னஞ்சிறு வண்டு, சித்திரத்தேன் பூக்கள், தென்னமரத்தோப்பு, சீதத்தென்றற்காற்று, பாய்ந்திடும் வீரப்புலி, பாடிடும் சாந்தக்குயில் என பலவற்றைக் கூறி இறுதியில்,

''முழுவதும் அவள் ரூபம் - எனில் நாட்டின்

மோகத்தில் என்வாழ்வு - அவள்

எழிலுண்டு கண்ணேரில் இழிவென்ப தொன்றில்லை''

என்று புதுமை பொங்கப் பாடுகின்றார். எல்லாப் பொருள்களிலும் தன்னெழில் காட்டி நிற்கின்றாள் பாரதத்தாய் என்பது பாடலின் கருத்தாகும்.

''காலப் பெருங்கடலில் நாளும்

கரைந்த தோற்றமெலாம்

பாலப் பருவமுதல் - எங்கள்

பாரதத் தாய் அறிவாள்

நாலு திசை முழுதும் - கொள்கை

நாற்பதி னாயிரத்தார்

ஆலின் கிளையவைகள் - என்னில்

ஆக்கும் மரம் இவள்தான்”

என பாரதத்தாயை இந்திய இனத்தின் கிளைகளைத் தாங்கும் அடிமரமாக உருவகப்படுத்தியுள்ளார்.

விடுதலை இயக்கப் பாடல்கள்

பாரதிதாசன் 1920-ஆம் ஆண்டில் நடந்த சத்தியாகிரக இயக்கத்தில் பங்கெடுத்துள்ளார். அவற்றோடு விடுதலை இயக்கத்திற்குத் துணைபுரியும் நோக்கில் சிறுவர் சிறுமியர் தேசியகீதம், தொண்டர் படைப்பாட்டு, கதர் இராட்டினப்பாட்டு ஆகியவற்றை எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றுள் கதர் இரட்டினப் பாட்டுதான் கிடைக்கப்பெற்றுள்ளது. ஏனைய இருநூல்களும் கிடைக்கப்பெறவில்லை.

கதர் இயக்கத்தோடு பாரதிதாசன் தன்னை இணைத்துக் கொண்டார். அதன் விளைவாக உருவானதே கதர் இராட்டினப்பாட்டாகும். இதில் காந்தியடிகளும் கதரும், சுதந்திரதேவியும் கதரும், தேசத்தின் பிரதான வேலை, இராட்டினச் சிறப்பு, அன்னைக்கு ஆடை வளர்க்க என்னும் ஐந்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

“பால்நுரை போலப் பருத்தியுண்டு சொந்தப்

பாரத தேசத்தில் எங்கும் - எனில்

பண்டைமுதல் இழை நூற்பதிலே யாம்

சிங்கம் - சிங்கம் - சிங்கம்

முப்பது முக்கோடி
மொய்ம் புடைய மைந்தர்களை
இப்புவியிற் பெற்ற
எழில் பாரதத்தாளின்
ஆடை பறித்தார்
அதிகாரம் கொண்டவர்கள்
ஓடி அவளின்
உடைமீட்க வேண்டாமோ?”

என்பன போன்ற எழுச்சிமிக்கப் பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

மதுவிலக்கில் பாரதிதாசன்

இந்திய விடுதலை இயக்கத்தின் பன்முகப்பட்ட பணிகளில் மதுவிலக்குக் கொள்கையும் ஒன்றாகும். 1920-ல் ஒத்துழையாமை இயக்கத்தோடு மதுவிலக்கும் பணியினையும் மேற்கொள்ளுமாறு காந்தியடிகள் வேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்று ஈ.வே.ரா. பெரியார் தலைமையில் ஈரோட்டில் கள்ளுக்கடை மறியல் நடைபெற்றது. கள்ளை அகற்றுதல் தேசக்கலை என்றுக் கருதி பாரதிதாசன் மதுவிலக்குப் பணியிலும் தன்னை முற்றாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். இதனை வலியுறுத்தும் விதத்தில் மதியைக் கலக்குவது, நிதியனைத்தும் வீணாக்குவது, நிதம் நலிய வைப்பது என மதுவின் தீமைகளைச் சுட்டிக்காட்டி அதனை விலக்கச் சொல்லி மதுவிலக்குப் பாடல் பாடியுள்ளார்.

''ஈக்கள் எறும்புகள் எலிகள் பூனைகள்
எருதுகள் குதிரைகள்
பூக்கள், மரங்கள், கொடிகள், செடிகள்
புலிகள், மிளகாய்கள்
ஊக்கங் கெடவைத்து உங்கள் பணத்தை
ஒழித்துப் பாரதத்தை
ஏக்கங் கொள்ள அறிவை மயக்குவது
இவற்றில் எது சொல்வாய்?"

இப்பாடலில் பன்மை விகுதிகளாகிய 'கள்' அடிதோறும் மீண்டும் மீண்டும் வருவதைக் காணலாம். இதில் கேட்கப்பட்ட விடுகவிக்கு விடை 'கள்' என்பதாகும். இவ்வாறு மதுவின் தீமைகளை பாவேந்தர் எழுத்தியம்புகின்றார்.

மொழி விடுதலை

தமிழ், தமிழர், தமிழ்நாடு எனும் முப்பரிமாணங்களில் பாரதிதாசன் கவிதைகள் முத்தமிழை முழுமையாக வலம் வந்திருக்கின்றன. உலகக் கவிஞர்களிலேயே ஒருமொழியை உயிருக்குச் சமமாக நினைத்துப் பாடியவர் பாரதிதாசன் ஒருவராகத்தான் இருக்க முடியும். அந்த அளவிற்கு தமிழ் மொழியை நேசித்தார். 37 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிய பாவேந்தரின் உயிர்மூச்சாகத் தமிழே இயங்கியது. பண்டிதர்கள் மட்டுமே அறியக்கூடிய நிலையில் இருந்த தமிழ்மொழியின் அவலத்தை

நீக்கி மொழிவிடுதலையை வேண்டி நின்றார் பாவேந்தர். அனைவருக்கும் மொழிப்பற்று தோன்ற வேண்டும் என்பதைத் தமது கடமையாகக் கொண்டு செயல்பட்டார்.

"தமிழுக்கு நீ செய்யுந்தொண்டு - நின்
பகைமீது பாய்ச்சிய குண்டு"

எனத் தமிழினத்தைக் காக்க மொழித் தொண்டாற்றி அனைவரையும் அழைக்கின்றார். எதிரிகளை வீழ்த்தும் வலிமையான ஆயுதம் வீரம் செறிந்த தமிழ்மொழியே எனக்கூறி அனைவரையும் மொழித்தொண்டு புரியத் தூண்டுகின்றார்.

"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை"

எனவே நிலைத்தப் புகழை அடையவேண்டுமெனில் தமிழ்த்தொண்டு புரிதலே சாலச்சிறந்தது என்கிறார்.

பாவேந்தருக்குக் கிடைத்த பாராட்டு

பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் என்றென்றும் வீறுநடைபோடும் செம்மாந்தமொழி தமிழ். தமிழ்மொழியின் மூலம் தமிழினத்தை அடையாளப்படுத்த புரட்சிக்கனலை மூட்டிவிட்டவர் புரட்சிக்கவி தனிமனித வாழ்வுக்கும் சமூக உயர்வுக்கும் தேவையான புதிய கருத்துக்களைச் சீரிய புரட்சியோடு விதைத்தவர். இவர்தம் படைப்புகளில் மொழிப்பற்று, இனவுணர்வு, சமுதாய மறுமலர்ச்சிக் கருத்துக்கள், பகுத்தறிவு கொள்கைகள், இயற்கை நேயம் விரவிக் கிடக்கின்றன.

இத்தகைய செம்மாந்த படைப்புகளை அளித்த பாவேந்தரைச் சிறப்பிக்கும் பொருட்டு 1946 ஜீலை 29-இல் அறிஞர் அண்ணா அவர்கள் கவிஞரைப் புரட்சிக்கவி என்று பாராட்டி ரூ. 25,000 வழங்கி கௌரவித்தார்கள். 1969-ல் பிசிராந்தையார் என்ற நாடகநூலுக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. இவருடைய படைப்புகள் தமிழ்நாடு அரசினால் 1990-இல் பொது உடைமையாக்கப்பட்டன.

முடிவுரை

பாவேந்தர் இந்திய விடுதலை இயக்கத்தில் செயலாற்றிய தலைவர்களின் போக்கினைக் கண்டு சாடவும் செய்துள்ளார். தான் எந்தவொரு கட்சியையும் சார்ந்தவன் அல்லன் என்றும் அவர் தம்முடைய இறுதிக்காலத்தில் தெரிவித்திருக்கிறார் எனினும் அவர் ஒன்றுபட்ட இந்தியாவை விரும்பினார் என்பதனையே அவரது பாடல்கள்மூலம் அறியமுடிகின்றது.

தன்னை ஓர் இந்தியன் என்றுக் கருதி செயலாற்றிய பாரதிதாசன் காங்கிரசுக் கட்சியில் இணைந்து பாரதநாட்டைப் பலவாறு போற்றி, விடுதலையின்

மேன்மையினை வெளிப்படுத்தி ஒற்றுமை சீர்குலைவுகளைக் கண்டு, தாயின் மணிக்கொடியை வணங்கி, தன்மான இயக்கம் சார்ந்த நிலையிலும் நாட்டு விடுலையில் நாட்டம் குறையாமல் காந்தியடிகளின் திட்டங்கள் பலவற்றைப் புகழ்ந்துபாடி, காந்தியடிகளின் சிறப்புகளை எடுத்துரைத்துப் பலவகையாலும் இந்திய விடுதலைக்குத் துணைநின்றுள்ளார் என்பது இக்கட்டுரையின்வழித் தெளிவாகின்றது.

பார்வைநூல்

பாரதிதாசன் கவிதைகள் தொகுப்பு நூல்

பாரதிதாசனின் வீரத்தாய் நாடகத்தில் பன்முகநோக்கு

முனைவர் ச.இந்திராமேரி,

உதவிப்பேராசியர், மற்றும் துறைத்தலைவர்

முதுகலை தமிழ்த்துறை, திருவள்ளுவர் கலை மற்றும் மகளிர் அறிவியல் கல்லூரி,

சூலப்புரம். மதுரை மாவட்டம், தமிழ்நாடு.

அலைபேசி: 8940013274மின்னஞ்சல்: indrasamy01@gmail.com

முன்னுரை:

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் முதல் கவிதைத் தொகுதி 1938 – ல் வெளிவந்திருக்கின்றது. அக்கவிதைத் தொகுதியின் வழி மூன்று காவியங்களைப் படைத்துள்ளார். அக்காவியங்கள் "சஞ்சீவி பர்வதத்தின் சாரப்", புரட்சிக்கவி, வீரத்தாய் எனும் காவியங்கள். இவை மூன்றும் புரட்சிக் கவிஞர் என்று உலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமையை பெற்றது. இதில் வீரத்தாய் எனும் காவியம் தமிழ்ப் பெண்கள் வீராங்களையும், வீரப் புதல்வரைப் பெற்றவர்கள் என்ற பெருமையை காட்சிப்படுத்துவதாக அமைகின்றது. ஒன்பது காட்சிகளைப் படைக்கப்பட்ட "வீரத்தாய்" காவியம் ஓர் ஒரங்கக் கவிதை நாடக வகையைச் சார்ந்தது எனலாம்.

வீரத்தாய்

காவிய இலக்கண விதிமுறைகளைத் தாண்டி காப்பிய நெறியில் புதுமையைக் கொண்டுள்ள காவியம் வீரத்தாய். இக்காவியத்தில் பாவேந்தன் பாரதிதாசன் பலவிதமான பன்முகநோக்குகளை மையமாக கொண்டு படைத்துள்ளார். பெண் மக்களின் அடிப்படை உரிமை பறிக்கப்படுவது. பெண் கல்வி இழப்பு, உரிமை இழப்பு, குடும்பமே கண் என்ற அறியாமை போன்ற பல பகுத்தறிவுச் சிந்தனையை பன்முகநோக்கில் எடுத்துரைக்கும் களமாக வீரத்தாய் அமைகின்றது. தமிழ்ச் சமுதாய வாழ்விற்கு மகளிரே தலைமையேற்கும் வரலாற்றை பெண்கள் பெற வேண்டும். அதற்கு பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கவிஞர் "வீரத்தாய்" எனும் காவியத்தலைவி மூலம் நிறைவேறச் செய்கிறார்.

கல்வி:

பாரதிதாசன் சிறந்த சமுதாயச் சீர்திருத்தவாதி தமது சிந்தனைகளை உணர்வுகளாக காப்பியத்தின் பல இடங்களில் வெளிப்படுத்துகிறார். சமுதாயம் ஏற்றத்தாழ்வுகள் இன்றி வாழ்வதற்கு கல்வி மிகவும் இன்றியமையாதது என்பதைச் சுட்டுகிறார் கவிஞர்.

"நல்லுயிர் உடம்ப செந்தமிழ் மூன்றும்

நான் நான் நான்."

என்று முழுங்கும் பாவேந்தர், தாம்வாழ்ந்த காலத்துச் சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறு பிளவுகள், பிரிவுகள், ஏற்றம், இறக்கம் ஆகியவற்றையும் அதன் கொடுமைகளையும் கண்டு மனம் வெகுண்டு கண்ணீர் வடித்தார். எனவேதான் "வீரத்தாய்" எனும் காவியத்தில் மிகவும் அற்புதமாகப் படைத்துக் காட்டுகிறார். கல்வி கற்ற பெண்ணாக வீரத்தாய் இருப்பதனாப் அவனை எல்லாவித அடிமைத் தனத்திலிருந்தும், சூழ்ச்சியிலிருந்தும் மீள்கிற வீரப் பெண்ணாகப் படைத்துள்ளார்.

'படியாத பெண்ணினால் தீமை'

எனத் தமது மற்றொரு நூலில் படியாத பெண்ணை 'ஊமை' என்று தீட்டுவதைக் காணலாம்.

கல்லாரைக் காணுங்கள் கல்வி ஒப்பாகக் கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்! என்றும்! எளிமையினால் ஒரு தமிழன் கல்வி இல்லையென்றால் இங்குள்ள எல்லாரும் நாண்டவும் வேண்டும். என்றும் கல்வியின் அவசியத்தைத் தமது கவிதைகளில் படைத்தவர் பாரதிதாசன்

. வீரத்தாயை, வீரமும் உறுதியும் சர்வ கலையினையும் கற்றுக் கல்விப் பெருமையும் உடையவனாகக் காட்டுகிறார். "கல்வி இல்லாதவனை நடைப்பிணம் என்று இளவரசன் சுதர்மனைக் குறிப்பிடும் போது கூறுவதைக் காண முடிகின்றது. "கல்வியில்லாதவனை ஆவியில்லாதவன்" என்ற மந்திரத்தின் மூலமாகப் பேசும் பாவேந்தரை வீரத்தாயில் காணலாம்.

"கல்வியில்லாதவன் நாட்டில் வாழ்ந்தாலும் காட்டில் வாழ்வதற்குச் சமம்" என்பதை சுதர்மனைக் காளிமுத்து என்னும் தன்னுடைய ஆளிடத்தில் பழக்கவிடும்போது குறிப்பிடும் சேனாபதியின் பேச்சிலிருந்து அறிய முடிகின்றது. மன்னன் மகனுக்குக் கல்வியோ நல்லறிவோ ஒன்றும் வராமல் செய்யுமாறு நினைத்த சேனாபதி காங்கேயனின் சூழ்ச்சித் திறமைகளையெல்லாம் தவிடுபொடியாகும் அளவுக்கு வீரத்தாயைக் கல்வி, கேள்விகளில் சிறந்தவனாகப் படைத்திருக்கும் பாரதிதாசனின் உயர்ந்த நோக்கத்தை அறிய முடிகின்றது.

"தக்க நல்லறிஞரின்றித் தரணியும் நடவாதன்றோ!" என்று கல்வி கற்ற சான்றோராக வீரத்தாயைப் போற்றுவதையும் காணமுடிகிறது. "அரிவையர் கூட்டமெல்லாம் அறிவிலாக் கூட்டம்" என்று நினைக்கும் சமூகச் சிந்தனைக்குச் சவுக்கடி கொடுத்தார் பாவேந்தர்

"அன்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும்

என்றும்படி"

பெண்னினத்தை அமைத்து,

எல்லார்க்கும் எல்லா உரிமைகளும்,

எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக!

என்று பொதுவுடைமைக் கோட்பாட்டை முழக்கமிடும் வீரத்தாயினைக் காப்பியத்தின் இறுதியிலும் படைத்திருக்கும் பெண்ணின் பெருமையைப் பாடிய கவிஞர் பாரதிதாசன் என்பதை எடுத்துரைக்கின்றது.

பெண்ணின் ஆளுமைப்பண்பு:

தமிழச் சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயம் என்பதை சிறிது எண்ணி பெண் சமூகத்தில அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டிருந்ததை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் பாரதிதாசன்.

"ஆடை அணிகலன், ஆசைக்கு வாசமலர்

தேடுவதும், ஆடவர்க்குச் சேவித்து இருப்பதுவும்,

அஞ்சுவதும், நாணுவதும், ஆமையைப் போல்

வாழுவதும்

கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்

மானுடர் கூட்டத்தில் வலியற்ற ஒரு பகுதி"

என்று பெண்களின் இழிநிலைக்கருத்தினை மாற்றியமைத்திடவே, வீரத்தாய் நாடகத்தில் வீரமும் உறுதியும் சர்வகலையினையும் பயின்றவளாக வீரத்தாயைப் படைத்துள்ளார். இதன் மூலம் பாரதிதாசன் பெண்ணின் ஆளுமைத்தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

"அரிவையர் கூட்டமெல்லாம் அறிவிலாக் கூட்டம்

என்பாய்

புரிவரோ விஜயராணி புரிந்தவிச் செயல்கள் மற்றோர் எனும் கவிதை வரிகளில், பெண்கள் அறிவிலாக்கூட்டம் இல்லை என்பதனை "விஜயராணி" மூலம் முறியடித்துக் காட்டுகிறார் பாரதிதாசன்.

" -------- ஆடவரைப்

பெற்றெடுத்த தாய்க்குலத்தைப் பெண்குலத்தை

துஷ்டருக்குப்

புற்றெடுத்த நச்சரவைப் புல்லெளவே எண்ணி

விட்டான்"

என்று தன் மகன் சுதர்மனைக் கொல்ல வந்த சேனாபதியைத் தனது வாளால் தடுத்துக் காப்பாற்றுபவளாகக் காணப்படும் வீரத்தாய் விஜயராணி மூலம் ஆண்சமூகத்தின் அடக்கும் மனப்பான்மையை "தாய்க்கு பாடமாயிற்றே அது, வீரமற்றதெனில் பிறந்த ஆண் குலமன்றோ பீடழியும் எனக் குறிப்பிடுகிறார்.

“என்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும்

என்னும்படி அமைந்தீர்! இப்படியே பெண்ணுலகம்

ஒரு நாள் எந்நாளோ? அந்நாளே துன்பமெலாம்

போகும் நாள் இன்பப் புதியநாள்”

என்று அன்னையின் தத்துவத்தை உலகுக்குக் காட்ட வந்த பெண் படைப்பாகவே வீரத்தாயைப் படைத்துள்ளார். கவிஞர் பாரதிதாசன், தமிழர்களுக்கு இருந்து வீரமரபினையும், பெண் பெறும் கல்வியின் பெருமையினையும் “வீரத்தாய்” காவியம் அமைகின்றது.

வர்க்கமற்ற சமுதாய அமைப்பு:

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்ந்த காலம் நாடு வளமிழந்து, வறுமையில் உழன்று, உரிமை கெட்டு, அடிமையில் கிடந்து, ஏற்றத்தாழ்வான ஒரு சமுதாயமாக இருந்து கொண்டிருந்தது. ஊலகம் முழுவதும் நாடுகள் பொருளாதார அடிப்படையில் புரட்சியைத் தோற்றுவித்துப் புதிய சமுதாயத் அமைத்துக் கொண்டிருந்தன. ஆதன் வழியிலே வர்க்கமற்ற சமுதாயத்தை அமைப்பில் பாரதிதாசனும் பேரார்வம் காட்டினார். தோழிலாளர்களுடையது என்றும் மேல் கீழ் என்று பேசும் அறியாமையைப் பொதுவுடைமையினால் தானே அகநிற முடியும் என்று இதற்கான மாற்றங்களை தனது படைப்புகளில் வலியுறுத்தியுள்ளார். மேலும் தனது படைப்புகளில் ‘குடியரசு’ ஆட்சியை நிறைவேற்றிக் காட்டுகிறார் கவிஞர் குறிப்பாக வீரத்தாய் காவியத்தில்,

“எல்லார்க்கும் தேசம்: எல்லார்க்கும் உடைமை எலாம்

எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுவே

எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக!

எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக

எல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுடைமை

வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக,

வில்லார்க்கும் நல்ல நுதல் மாதர் எல்லார்க்கும்

விடுதலையாம் என்றே மணிமுரசம் ஆர்ப்பீரே!

என்று மணிபுரியை ஓதும் குடியரசுக்குட்படுத்தி அரசியல் சட்டம் இயற்றிட வழிவகுக்கிறார் கவிஞர்.

முதலாளித்துவ மோசடிக் கொள்கையால் கிடைக்க கூலியைக் கெஞ்சிப் பெற்றுத் ‘தலைவிதி’ என்று நொத்து கொண்டு தொலையாத துயரினைக் கண்ட பாரதிதாசன் தோழா! ஓடப்பனே! நீ ஒடுங்கி நில்லாதே, உதைப்பயனாகி நீ, ஓர் நொடிக்குள் ஒப்பப்பர் ஆதிடு! என்று உலக சமத்துவத்தின் குரலை உரத்து எழுப்பியவர் பாவேந்தர்.

“உழைப்போர் உதிர்ந்த வியர்வைகளின்

ஓவ்வொரு துளியிலும் கண்டேன்

இவ்வுலகுழைப்பவர்க் குரியதென் பதையே!

என்று தனது காவியங்களில் உழைப்போர் மேனிலையடையவும், மன்னராட்சி ஒழிந்து மக்களாட்சி முறை நிலவிடவும், வர்க்கமற்ற சமுதாயம் பாடல்களை படைத்துள்ளார்.

தமிழர்களின் தமிழ் ஈடுபாடு:

தமிழ், தமிழர், தமிழ்நாடு எனும் முப்பரிமாணங்களில் பாரதிதாசன் கவிதைகளை முழுமையாக படைத்து தமிழ், தமிழர்களுக்கு பெருமை போற்றியுள்ளார். உலக மக்களில் அனைத்துக்கும் உயிராக தமிழ் மொழி இருக்க வேண்டும் என்பதை தன் படைப்புகள் மூலமாக அறைகூவப் விடுத்தவர் கவிஞர் பாதரதிதாசன் அதன் அடிப்படையில் வாழ்ந்தும் காட்டினார். உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என்று போற்றினார், வீரத்தாயில் 'மலையைப் பெயர்க்கும் தோள் உடையோராக வளருங்கள், கீழ்ச் செயல்கள் வடுங்கள், வீரத்தைப் போற்றுங்கள், வீரத்தில் உயருங்கள்' என்று அனைத்துத் தமிழர்களுக்கும், குறிப்பாகப் பெண்ணினத்துக்கு விழிப்புணர்வு விடுப்பதைக் காணமுடிகிறது.

"என் நாட்டை நான் ஆள ஏற்ற கலையுதவும்

தென்னாட்டுத் தீரர், செழுந்தமிழர், ஆசிரியர்

என்று வீரத்தாயில் சுதர்மன் மூலமாகப் பேசுகிறார் கவிஞர். தமிழ்நாட்டு அரசியல் சூழ்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் தமிழின் ஆக்கத்திற்கும், தமிழ்நாட்டின் ஆட்சிக்கும் தமிழர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துபவரே தமிழாசிரியர் என்று வீரத்தாயில் நிலை நிறுத்தியுள்ளார்.

தமிழ்ப் பெண்களை வீராங்கனைகளாகவும் வீரப் புதல்வரைப் பெற்றவர்களாகவும் நினைவுபடுத்தி, தமிழர்களில் வீரத்திற்குச் சான்றாக வீரத்தாய் எனும் பெயரில் காவியம் படைத்துள்ளார் பாவேந்தர்

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது: சிறுத்தையே வெளியில்வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியெனச் செயல் செய்யப் புறப்படுவெளியில்!

என்று இளைய தலைமுறைக்கும் வீரத்தை தம் படைப்பு மூலம் ஊட்டியவர் பாரதிதாசன். வீரத்தாயில் விஜயராணியும் வீரம் நிறைந்த கதை மாந்தர்களாகக் காணப்படுகின்றனர். விஜயராணியை அறிமுகம் செய்யம் போதே வீரமும் உறுதியும் அமைந்தவனாகக் காட்டுகிறார் கவிஞர். மேலும் தமிழனின் வீரப் பாரம்பரியத்தை நினைவுபடுத்த விரும்பியே வீரத்தாய் காவியத்தில் தன் மகனைத் தாயே வீரனாக்குகின்ற வகையில் படைக்கிறார். சுதர்மனை நோக்கி வீசிய சேனாபதியின் வாளினைத் தனது வாளினால் துண்டித்துவிடும் வீர மகளாக விஜயராணி காணப்படுகிறாள்.

“பறித்தெடுத்த தாமரைப் பூம் பார்வையிலே வீரம்

பெருக்கெடுக்க நிற்கின்றாய் பிள்ளையே!

எனும் வரிகளைப் பிற நாட்டு வேந்தர்கள் மூலம் சுதரிமணின் வீரத்தைப் பேச வைக்கிறார் கவிஞர்

அதுபோல

“ஆவி சுமந்து பெற்ற அன்பாள் உயிர் காப்பதற்குக்

கோவித்த தாயின் எதிர்கொல் படைதான்

என் செய்யும் என்று விஜயராணியின் வீரத்தைப் புலப்படுத்துகிறார். கடைசியில் “குடியரசு” ஓங்க, வீரமகன் அரசியல் பிரகடனம் செய்வதைக் காண முடிகிறது. இவ்வாறு தாயையும் மகனையும் வீரத்தின் விளைநிலமாக அமைத்து, கொடியவர்களின் கையிலிருந்து நாட்டைக் காக்கும் வீரப் பெண்ணாகவும், அதே நிலையில் ஒழுக்கம் மிக்க வீரப்புதல்வனைப் பெறும் வீரத்தாயாகவும் படைத்துத் தமிழரின் வீர மரபினை நிலை நிறுத்தியுள்ளார் பாவேந்தன் பாரதிதாசன்.

முடிவுரை

கவிஞர் ‘வீரத்தாய்’ எனும் படைப்பு வழியாக பெண் சமூகத்தைப்போற்றியுள்ளார். பன்முக நோக்கில் ஆளுமைப் பண்புகளை படைப்புவழியாக எடுத்துரைக்கிறார். பெண் கல்வி, பெண்வீரம், பெண் ஆளுமை வர்க்கமற்ற சமுதாயச் சிந்தனைகள் போன்ற பல நிலைப்பாடுகளை வைத்து வீரத்தாய் எனும் கவிதை நாடகத்தினை உருவாக்கியுள்ளார் என்பதனை இக்கட்டுரையானது எடுத்துரைக்கின்றது.

மேற்கோள் நூல்கள்

பாரதிதாசனின் தமிழ் உணர்வு – இலக்குவனார் திருவள்ளுவர்

பாரதிதாசனின் வீரத்தாய் - கோ.கிருஷ்ணன்

பாரதிதாசனின் தமிழ் உணர்வு

Bharathidasan's Tamil Sensibility

திருமதி.அ.பாவை M.A..,M.PHIL..,MLISC.,(PH.D).,

தமிழ்த்துறை தலைவர், தமிழ்த்துறை,

சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்.(Dt.)

புலன எண் : 9994176424.

முன்னுரை

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என முழங்கும் காலம் இக்காலம். இந்த முழக்கத்திற்கு காரணமாக இருந்த பெருமக்களுள் பாவேந்தர் பாரதிதாசனார் குறிப்பிடத்தக்கவர். கடல் போலச் செந்தமிழை பெருக்க வேண்டும் என்று தமிழின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர். மேலும் சாதி வேறுபாடற்ற சமத்துவ சமுதாயம் காண விரும்பியவர்.அன்னைத் தமிழ் மீது அளவில்லாப் பற்றுடையவர் பாரதிதாசனார். “தமிழே அவர்; அவரே தமிழ்”. "நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும் நான் நான் நான்" எனக் கூறினார். ஆடற்றமிழே நீ என்றன் ஆவி” என்று தமிழைத் தன் உயிராகக் கூறும் பாவலன் பாரதிதாசன். "தமிழுக்கு அமுதென்றுபேர் - அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று வாயினிக்க, கேட்போர் செவியினிக்கப் பாட்டிசைத்தப் பாவலர் புரட்சிக்கவிஞர் ஆவார்.

தமிழ் மொழிப்பற்று

தமிழ் மொழியின் சிறப்பினை உணர்ந்த பாரதிதாசன், தமிழர் மனங்களும் பண்பட வேண்டும் என்ற உயர்ந்த நெறியில் தன் உணர்வுகளைப் புலப்படுத்துகிறார். தமிழை வாளாகவும்; தன்னை வீரனாகவும், தமிழை இசையாகவும்; தன்னை மகரயாழாகவும், தமிழை ஒளியாகவும்; தன்னைக் கண்ணாகவும் குறிப்பிடுகிறார். "கனிச்சுருள், கரும்புச்சாறு, வெல்லப்பாகு, இளநீர், பசும்பால் ஆகியவற்றின் சுவையைவிடச் சுவைமிக்கது தமிழ்" என்று தமிழின் பெருமையை உலகறியச் செய்கிறார்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு எனும் முப்பரிமாணங்களில் பாரதிதாசன் கவிதைகள் முத்தமிழை முழுமையாக வலம் வந்திருக்கின்றன. உலகக் கவிஞர்களிலேயே ஒரு மொழியை உயிருக்கு சமமாக நினைத்துப் பாடியவர் பாரதிதாசன் ஒருவராகத்தான் இருக்க முடியும். அந்த அளவிற்குத் தமிழ் மொழியை நேசித்து சுவாசித்தார். உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என்று வாழ்ந்தார் பாவேந்தர். தமிழ் இன்பம் தருவதால், அது அமுதம் போன்றது என்று குறிப்பிடுகிறார். அமுதத்தை உண்ணும் போது கிடைக்கும் மகிழ்ச்சி, அல்லது இன்பம், தமிழைப் படிக்கும் போது கிடைக்கும். எனவே,

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்

கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது !

(பாரதிதாசன் பாடல்கள், எங்கள் தமிழ் –ப.86)

என்று இனிமையின் எல்லை எனக் கருதப்படும் அமுதத்தையே தமிழ் இன்பத்திற்கு இணையாகக் கூறுகிறார் பாரதிதாசன்.

தமிழின் இனிமை

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ஒவ்வொரு வகையான இன்பம் கிடைக்கும். சிலருக்குப் பொருள் ஈட்டுதல் இன்பம் தரும். ஒரு சிலருக்கு அவர்கள் வகிக்கும் பதவி இன்பம் நல்கும். புகழ் இன்பம் வழங்கும். ஆனால் பாரதிதாசனுக்கு எது இன்பம் தருகிறது தெரியுமா? தாய்மொழியாம் தமிழ் இன்பம் தருகிறது. தமிழ் தரும் இன்பத்தைத் தம் பாடல்களின் பல இடங்களில் வெளிப்படுத்துகிறார்.

இன்பம் எனப்படுதல் - தமிழ்

இன்பம் எனத் தமிழ்நாட்டினர் எண்ணுக.

(பாரதிதாசன் பாடல்கள் தமிழ் உணவு,ப.85)

என்று குறிப்பிடுகிறார். எனவே, தமிழுக்கு இன்பம் என்று இன்னொரு பெயருண்டு. தமிழ் நாட்டினரே அதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்.

தமிழனின் வீரப்பண்பு

தமிழ்ப் பெண்களை வீராங்கனைகளாகவும் வீரப் புதல்வரைப் பெற்றவர்களாகவும் நினைவூட்டி, தமிழர்களின் வீரத்திற்குச் சான்றாகக் காணப்படுகின்ற புறநானூற்று வீரக்கதைகளை நினைவுபடுத்திடவும் **வீரத்தாய்** எனும் பெயரில் காவியம் படைத்தளித்துள்ளார் பாவேந்தர் பாரதிதாசன். இளைய

உள்ளங்களுக்கு வீரத்தை ஊட்டியவர் பாரதிதாசன். தாம் படைத்த மூன்று காப்பியங்களிலும் வீரப்பெண்களைத் தலைமைப்படுத்தியே அமைத்துள்ளார்.

பாவேந்தரும் தமிழும்

தமிழ் மீதுகொண்ட பற்றால், அதைத் தன் உயிரினும் மேலாக நேசித்தமையால், தமிழை என் உயிரே என்று அழைத்து மகிழ்ந்தார். அதன் இனிமையின் சிறப்பினையும் பல பாடல்கள் மூலம் எடுத்துக்காட்டுகின்றார்.

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு ”

(பாரதிதாசன் பாடல்கள்,சங்கநாதம்,ப.91)

எனும் முழக்கம், தமிழக மேடைகளிலும், தமிழ் உணர்வு கொண்ட ஏடுகளிலும், தமிழர்களிடையேயும் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கும் ஓர் எழுச்சிக்குரல் ஆகும். தமிழ் உணர்ச்சியின் வெளிப்பாடு. இந்த உணர்ச்சியின் பிறப்பிடம் பாவேந்தர் பாரதிதாசனின் உள்ளம். பாரதிதாசனின் இந்த உள்ள உணர்ச்சியை அவரது பாடல்களில் உணரலாம். பாரதிதாசன் தமிழ் மொழியைத் தேன், பால், கண், உயிர் என்று கருதிப் பாடியுள்ளார். மொழியை இவ்வாறு வருணித்துப் பாடும் மரபும் புதியது தான் என்றாலும், இம்மரபுக்கு முன்னோடியாய், ஊன்றுகோலாய்த் திகழ்ந்தவர் பாரதிதாசன்.

உயிர்த்தமிழ்

தமிழ் மொழி மீது பாரதிதாசனுக்கு அளவு கடந்த பற்று உண்டு. இதனை அவரது பாடல்களில் பரவலாகக் காணலாம். வாய்ப்புக் கிடைக்கும் இடங்களிலெல்லாம், அவர் தமது தமிழ்ப் பற்றை வெளியிடுவார். தமிழைத் தன் உயிரினும் மேலாக மதித்தார், போற்றினார்.எனவே,

“செந்தமிழே ! உயிரே ! நறுந்தேனே !
செயலினை மூச்சினை உனக்களித்தேன் ”

(பாரதிதாசன் இசையமுது, தமிழ் 5)

என்று பறை சாற்றுகின்றார். இனிய தேன்போன்ற தமிழ்மொழிக்குத் தன் வாழ்வையே, வாழ்க்கையின் செயல்பாடுகள் முழுவதையுமே அர்ப்பணித்தார். எனவே தான், ‘செயலினை மூச்சினை உனக்களித்தேன்’ என்று கூறுகிறார். இயற்கையில் பல்வேறு

வகையான சுவைகள் இருக்கின்றன. நன்கு பழுத்த பழத்தின் சுளையில் இனிமை இருக்கிறது. கரும்புச் சாற்றிலும் இனிமை உண்டு. தேனிலும் இனிமை உண்டு. காய்ச்சிய வெல்லப் பாகிலும் இனிமை இருக்கிறது. பசுவின் பாலிலும் இனிமை இருக்கிறது. தென்னையின் இளநீரிலும் இனிமை இருக்கிறது. அவ்வாறு ஆயின் தமிழில் என்ன இருக்கிறது? என்பதை பாரதிதாசன்,

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்

கழையிடை ஏறிய சாறும்,

பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்

பாகிடை ஏறிய சுவையும்,

நனிபசு பொழியும் பாலும் - தென்னை

நல்கிய குளிரிள நீரும்,

இனியன என்பேன் எனினும் - தமிழை

என்னுயிர் என்பேன் கண்டீர் !

(பாரதிதாசன் பாடல்கள்,தமிழின் இனிமை, ப.80)

தமிழ் அமுதம்

அமிழ்தம் (அமுதம்) என்றால் உணவு என்று பொருள். வானுலகில் வாழும் தேவர்கள் உண்ணும் உணவிற்கும் அமிழ்தம் என்று பெயர். அது மிகவும் சுவை உடையது என்றும், அதை உண்பதினால் தான், தேவர்கள் சாகா வரத்துடன் வாழ்கிறார்கள் என்றும் ஒரு நம்பிக்கை உண்டு. நல்ல சுவையான உணவை உண்ணும் போதுகூட, "ஆகா! என்ன சுவை! என்ன சுவை! 'அமிழ்தம்' போன்றல்லவா இருக்கிறது" என, தேவர்கள் உண்ணும் உணவை, மனத்திற்கொண்டு கூறுகிற மரபு உண்டு. பாரதிதாசனுக்கோ தமிழே அமிழ்தமாகின்றது.எனவே,

தமிழுக்கும் அமுதென்று பேர் ! - அந்தத்

தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

(பாரதிதாசன் பாடல்கள், இன்பத் தமிழ் –ப.81)

என்று பாடுகிறார். பாரதிதாசன் இன்றும் நம்மிடையே உயிர்ப்புடன் உலவவும், நம் உணர்வினைத் தூண்டவும் அவர் படைப்புகள் தான் காரணம். எனவே தமிழை அமிழ்தம் என்றும் உயிர் என்றும் சொன்ன சொற்கள் மிகை அல்லவே!

முடிவுரை

சொல் புதிது, பொருள் புதிது என்ற பாரதியாரின் அடிகள் பாரதிதாசனின் பாட்டுக்கும் பொருந்தும். மொழி உணர்வோடு சமூக கொடுமைகளைச் சாடிய அவரது கவிகள் ஏவுகணைகளாகும். அவரது இன்பத்தமிழ், தமிழின உணர்வு கொண்டு நாமும் வாழ்வோம். அவர் மறைந்தாலும், அவருடைய கவிதைகள் இன்றும் மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றுள்ளன. இன்றைய சமுதாயத்தில் எழுத்தாக்கம், வாசிப்பு திறன் என்பன மிகவும் குறைந்து போயுள்ளன. தமிழையும் தாய்மொழியையும் என்றைக்கும் ஆழமாய் நேசிக்க வேண்டும் என்று உணர்த்தி சென்ற இவரின் தடம் என்றைக்கும் எம் மனதில் ஆழமாய் பதிந்திருக்கும். இன்றைக்கு தமிழும் நம் கலாச்சாரமும் ஓரளவேனும் தலைநிமிர்ந்து நிற்கின்றதென்றால் பாரதிதாசன் போன்ற ஒப்பற்ற எழுத்தாளர்களுடைய தமிழ்ப்பற்றும் தமிழ்ப்பணியும் என்றால் அது மிகையல்ல.

துணைமை நூல்கள்

பாரதிதாசன் பாடல்கள், பாவை பப்ளிகேஷன்ஸ்,சென்னை -600 014, இரண்டாம் பதிப்பு – மார்ச் 2003.

பாரதிதாசனின் சமுதாய உணர்வு

BHARATHIDASAN’S SENSE OF COMMUNITY

முனைவர்.சொ.கோகிலமீனா,M.A..,M.PHIL..,B.ED.,PH.D.,

உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,

சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

ஒட்டன்சத்திரம். திண்டுக்கல்(DT).

புலன எண் : 9095040184.

முன்னுரை

பாரதிதாசனின் சிந்தனைகள் நேற்றோடும் காற்றோடும் கரைந்து போகக்கூடியவை அல்ல. கடலும் மலையும் உள்ள வரை, வானும் மண்ணும் உள்ள வரை நிலைத்து நின்று மானுட சமுதாயத்திற்கு வழிகாட்டுவன. தான் வாழ்ந்த காலத்தில் மொழியை, கலையை, கலாச்சாரத்தை, மக்களைத் தன் தோளில் சுமந்தவன். அதனால் தான் நிகழ்காலம் மட்டுமல்ல எதிர்காலமும் பாரதிதாசனை அவரின் பாடல் சிந்தனைகளில் நாம் நினைத்துக் கொண்டே இருக்கின்றோம்.

முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் ஒரு முழுமதி போல"

என்ற கவிதை வரிகளுக்கு ஏற்ப பாரதிதாசனின் கவிதைகள் அனைத்தும் முழுமதி போலத் தோன்றி, சமுதாயத்தில் நிகழும் அவலங்களை கண்டிக்கும் விதமாக புரட்சிக் கருத்துகள் அவரது உள்ளத்தில் பொங்கிப் பூரித்து, புதுமைக் கவிதைகளாக வெளிவருகின்றன. இயற்கையின் எழில், காதல், மேம்பாடு, கலை நுணுக்கம் முதலியனபற்றி அவர் இயற்றியுள்ள கவிதைகள் படிப்போரைக் இன்பக் கடலில் ஆழ்த்தும். பாரதிதாசன் சிறந்த சமுதாயச் சீர்திருத்தவாதியாவார் தமது சீர்திருத்த உணர்வுகளைக் கவிதைகள், பாடல்கள், மற்றும் காப்பியத்தின் பல இடங்களில் வெளிப்படுத்துகிறார்.

கல்விச் சிந்தனை

தமிழர்களின் வாழ்வு பற்றியும், தமிழ் மொழி உயர்வு குறித்தும் சிந்தித்து அதற்காகவே வாழ்ந்தவர் பாவேந்தர். தமிழக மக்களுக்கு ஏற்ற வகையில் கல்வி பற்றிய பல்வேறு கருத்துக்களைப் பாவேந்தர் தமது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

பாரதிதாசனாரின் கல்விச் சிந்தனை இன்றையச் சூழலில் உள்ள கல்வி முறைக்கு உரமூட்டுவதாக அமைகின்றது எனலாம். மனித வாழ்க்கையை அறிவினால் மேன்மையுறச் செய்வது கல்வியே. கல்வியின் முக்கியத்துவத்தை,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" (புறம்-183)

எனப் புறநானூறு வலியுறுத்துகிறது. வாழ்க்கைக்கு கல்வி அவசியம் என்பதை வள்ளுவர் தமது திருக்குறளில்,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்

சாந்துணையும் கல்லாத வாறு" (குறள் எண் - 397)

என வலியுறுத்துகிறார். பாரதிதாசன், 'இருண்ட வீடு' என்னும் நூலில் கல்வி இல்லான் கண்ணிலான் என்க என்று வள்ளுவர் கருத்தை வழி மொழிந்துள்ளார்.

'நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்

நான் நான் நான்' (இளைஞர் இலக்கியம்-தமிழன்)

என வீரத்துடன் முழங்கும் பாவேந்தர் பாரதிதாசன், தாம் வாழ்ந்த காலத்துச் சமுதாயத்தில் காணப்பட்ட சாதிப் பிளவு, சமயப் பிரிவு, பொருளாதார ஏற்ற இறக்கம் ஆகியவற்றின் கொடுமைகளைக் கண்டு மனம் வெகுண்டு குருதிக் கண்ணீர் வடித்தார். இதற்கெல்லாம் காரணம் பெண்கள் கல்வி கற்காமையே என்று நினைத்தார். அதன் வெளிப்பாட்டினைத்தான் **'வீரத்தாய்'** காவியத்தில் மிகவும் அற்புதமாகப் படைத்துக் காட்டுகிறார். கல்வி கற்ற பெண்ணாக வீரத்தாய் இருப்பதாலேயே அவளை எல்லாவித அடிமைத்தனத்திலிருந்தும், சூழ்ச்சியிலிருந்தும் மீள்கிற வீரப் பெண்ணாகப் படைத்துள்ளார்.

எளிமையினால் ஒரு தமிழன் கல்வி இல்லையென்றால்

இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்!

என்றும் கல்வியின் அவசியத்தைத் தமது கவிதைகளில் படைத்தவர் பாவேந்தர் பாரதிதாசன். கல்வி இன்றி, உரிமை இழந்து, சிந்தனை அறியாமல், கண்டதெல்லாம் குடும்பம் என்றே பெண்கள் உலகத்தைக் காண விரும்பாத கவிஞர், வீரத்தாயை, வீரமும் உறுதியும் சர்வ கலையினையும் கற்றுக் கல்விப் பெருமையும் உடையவளாகக்

காட்டுகிறார் கவிஞர். குடித்தனம் பேணுவதற்கும், மக்களை, உலகினை, கல்வியைப் பேணுதற்கும் பெண்களுக்குக் கல்வி வேண்டும் என வற்புறுத்துகிறார். கல்வியில்லாத பெண்கள் களர் நிலமாவர், என அவர்களைக் களர் நிலத்திற்கு ஒப்பிடுகிறார். குடும்பம் பல்கலைக் கழகமாக மாறப் பெண்கல்வி அவசியம் என்கிறார் பாவேந்தர். தமிழ் பண்பாட்டை விளக்கும் வகையில் அடிப்படைக்கல்வி அமைதல் வேண்டுமென்பது பாவேந்தாரின் கல்விக் கொள்கையாக அமைந்திருக்கிறது எனலாம். மேலும் அவர் அனைத்து நிலையிலும் தாய்மொழி வழிக் கல்வியே அமைந்திருந்தல் நட்டின் உயர்விற்கும் சிந்தனை வளர்ச்சிக்கும், சுய சார்பிற்கும் வழிகோலும் என தெளிவுறுத்துகிறார். பிறமொழிகளைத் தமிழர்கள் கற்றாலும் தமிழைத் தங்கள் உயிராகத் தமிழர்கள் கருதி அதனைப் போற்றல் வேண்டும் என்கிறார்.

பெண்ணின் பெருமை

குடும்ப அமைப்புக்குக் கடைக்காலாக நின்று சமூக வாழ்விற்கு நெடுத்துணையாக விளங்குகின்ற பெண்கள், கல்வியில்லாமல், உரிமையில்லாமல், முன்னேற வழியில்லாமல் கடைக்கோடிப் பள்ளத்தில் தள்ளப்பட்டதை மாற்றிடவும், தமிழ்ச் சமூக வாழ்விற்கு ஏற்றம் தந்திடவும் சமூக வாழ்விற்கு மகளிர் தான் தலைமையேற்றிட வேண்டும் என நினைத்தவர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ்ச் சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயமாகவே இருக்கிறது. பெண் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டிருந்ததை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் பாரதிதாசன்.

"ஆடை அணிகலன், ஆசைக்கு வாச மலர் தேடுவதும்,

ஆடவர்க்குச் சேவித்து இருப்பதுவும்,அஞ்சுவதும்,

நாணுவதும், ஆமையைப் போல் வாழுவதும் கெஞ்சுவதுமாகக்

கிடக்கும் மகளிர் குலம் மானுடர் கூட்டத்தில் வலிவற்ற ஒரு பகுதி"

என்கிற பெண்களின் இழிநிலைக் கருத்தினை மாற்றியமைத்திடவே, **'வீரத்தாய்'** நாடகத்தில் வீரமும் உறுதியும் சர்வகலையினையும் பயின்றவளாக வீரத்தாயைப் படைத்துள்ளார். இதன் மூலம் பாரதிதாசனின் பெண்மை நலச் சிந்தனைகள் வெளிப்படுகின்றன. நாட்டின் வளர்ச்சிக்கான ஆசிரியர் துறையிலும் மருத்துவத்துறையிலும் பெண்களையே அதிகமாக தேர்வு செய்து வருகின்றனர். ஏனெனில் பொறுமையாகவும் அன்பாகவும் அக்கறையோடும் கவனிப்பார்கள்

என்பதற்காக. ஏனென்றால் பெண் என்பவள் அன்பின் இலக்கணம். பூவை போல் மென்மையானவள் எதையும் தாங்கிக் கொள்ளும் பொறுமை உடையவள். பெண் பொறுமையானவள் என்பதால் தான் பூமிக்கு பெயர் பூமாதேவி, ஆற்றின் பெயர்களில் எல்லாம் பெண்ணின் பெயர்களையே தேர்ந்தெடுத்து வைத்துள்ளனர்.

பொதுவுடைமைச் சிந்தனை

தமிழ்க் கவிஞர்களில் மட்டுமில்லாது இந்தியக் கவிஞர்களிலும் கூட வேறு எவரோடும் இணைத்து வைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு பாவேந்தருடைய கவிதைகள் தமிழ், தமிழர் என்று தொடங்கி பல சிந்தனைகளில் திராவிடம் பாடி,தேசியம் பாடி, உலகப் பொதுமைப் பாடி, மானிடத்தின் மகத்துவம் பாடி, இவரது பாடல்கள் விசாலப் பார்வையால் விரிந்து செல்லும் இயல்புடையன. மானிடத்தின் மகத்துவம் பேசும் கவிஞன், சமத்துவத்தின் தேவையை, உயர்வைப் பேசும் கவிஞன், உழைக்கும் மக்களின் உன்னதத்தைப் பேசும் கவிஞன் என்பதோடு நில்லாமல்,

“ புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோடு அதை எங்கள் உயிரென்று காப்போம் ”

(பாரதிதாசன் பாடல்கள் 58,புதிய உலகு செய்வோம் ப.138)

என்று புதிய உலகம் அதுவும் பொதுவுடைமை உலகம் அமைக்க விரும்புகிறார் பாவேந்தர். புதியதோர் உலகு காணப் புறப்பட்ட எழுச்சிப் படையின் தளபதியாக விளங்கியவர் பாரதிதாசன். கவிதைப் போக்கின் இருண்ட வீட்டில், குடும்ப விளக்கேற்றி ஒளியூட்டியவர். மக்களுக்காக மக்கள் மொழியில் மக்களைப் பாடிய மாக்கவிஞர்.

பகுத்தறிவுச் சிந்தனை

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நிலவிய சாதிக் கொடுமை, சாதிச் சண்டை, அறியாமை, மூடபழக்க வழக்கம் முதலியவற்றுக்கு எதிராகத் தமது பகுத்தறிவுக் கருத்துகளைப் பாரதிதாசன் பாடியுள்ளார். எனவே தான் அவர் புரட்சிக் கவிஞர் என்று போற்றப்படுகிறார். அறியாமையில் மூழ்கி இருந்த மக்களுக்கு அடிப்படை அறிவைக் கொடுக்க எண்ணினார் பாரதிதாசன். அதன் பின்னர்

அவர்களைப் பகுத்து அறியும் சிந்தனை உடையவர்களாக உயர்த்த எண்ணினார். தமது பாடல்களில் எங்கு எல்லாம் பகுத்தறிவுச் சிந்தனையைப் புகுத்த முடியுமோ அங்கு எல்லாம் பாரதிதாசன் புகுத்தி உள்ளார்.

அறிவுக்குப் பொருந்தாத கருத்துகளை மறுப்பதும், அறிவுக்குப் பொருந்தும் கருத்துகளை ஏற்பதும் பகுத்தறிவு ஆகும். இந்தச் சிந்தனை உடையவர்களைப் பகுத்தறிவாளர்கள் என்கிறோம். அறிவுக்குப் பொருந்தாத ஒன்று சாதி ஆகும். மனித சமுதாயத்தை ஒரே குலமாகப் பார்க்கும் பண்பு கொண்டவர்கள் தமிழர்கள். உலக மக்கள் இடையே எந்தப் பிரிவும் இல்லை என்ற எண்ணம் கொண்டு அவர்கள் வாழ்ந்தார்கள். இவ்வாறு உலக மக்களை ஒன்று என்று கருதினாலும் ஆட்சி நிர்வாகத்திற்காக உலகில் பல நாடுகள் பிரிந்துள்ளன. அவற்றுள் மொழி அடிப்படையில் பல இனங்கள் உள்ளன. இந்தப் பிரிவுகளுக்கு நிர்வாக நோக்கம் இருப்பதை நாம் அறிய முடிகிறது. ஆனால், இந்தச் சாதிப்பிரிவிற்கு நம்மால் எந்த நல்ல நோக்கத்தையும் அறிய இயலவில்லை. ஆகவே சாதியை அறிவுக்குப் பொருந்தாது என்று பாரதிதாசன் கூறியுள்ளார்.

உலகினில் சாதிகள் இல்லை – என்
உள்ளத்தில் வேற்றுமை இல்லை
கலகத்தைச் செய்கின்ற சாதி – என்
கைகளைப் பற்றி இழுப்பதும் உண்டோ?

(பாரதிதாசன் காதல் பாடல்கள்,அவள் அடங்காத சிரிப்பு ப.498)

என்று கேள்வி கேட்டு, ஒரு பெண்ணின் வாய்மொழியாகவே இந்த உலகில் சாதி இல்லை என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ளார்.

முடிவுரை

மனிதன் தனது மதிப்பை உணர்ந்து வாழவேண்டும் என்று பாரதிதாசன் சுயமரியாதைச் சிந்தனையைத் தூண்டியுள்ளார். பகுத்தறிவோடு வாழ்வில் உயரலாம் என்று பாவேந்தர் பாடல்களில் உணர்த்தியுள்ளார். மக்கள் பகுத்தறிவை இழந்து வாழ்வதற்கு அடிப்படைக் காரணம் அவர்களின் மூடநம்பிக்கை ஆகும். இந்த மூடநம்பிக்கை மக்களை விட்டு ஓடுவதற்குப் பாரதிதாசன் பல பாடல்கள் பாடி, நல்ல நம்பிக்கையை மக்கள் மனங்களில் விதைத்துள்ளார். பகுத்தறிவாளர்கள் நிறைந்த சமுதாயம் பொதுவுடைமைச் சமுதாயமாய் மலரும் என்ற கருத்தையும் அவர்

வலியுறுத்தியுள்ளார். பகுத்தறிவுக்குத் தடையாய் விளங்கும் கடவுள் நம்பிக்கையைத் தகர்க்கக் கருதிய பாரதிதாசன் கடவுள் இல்லை என்று பாடியுள்ளார்.

பொதுவுடைமைச் சமுதாயத்தைத் தமிழ் மண்ணில் உருவாக்க விழைந்தவர் பாரதிதாசன். தமிழ்ச் சமுதாயம் ஒரு ஆணாதிக்கச் சமுதாயமாக இருப்பதைப் உணர்ந்தவர் பாரதிதாசன். இங்குள்ள ஜாதி, சமய மூடத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வருவதிலேயே முதல் கவனம் செலுத்தவேண்டிய நிலையில் இருந்தது. அறிவுகொண்ட சமுதாயமாய் உலக மக்களைக் காண விரும்பியவர் பாரதிதாசன்.

துணைமை நூல்கள்

பாரதிதாசன் பாடல்கள், பாவை பப்ளிகேஷன்ஸ்,சென்னை -600 014, இரண்டாம் பதிப்பு – மார்ச் 2003.

பாரதிதாசனின் "பெண்ணுலகு"கவிதையில் பெண்ணியச் சிந்தனைகள்

முனைவர் வி.கலாவதி

தமிழ்த்துறைத்தலைவர்,உதவிப்பேராசிரியர், இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி,

மின்னஞ்சல்-skalavathiv@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

பாரதிதாசனின் "பெண்ணுலகு" கவிதையில் பெண்ணியச் சிந்தனைகள் என்ற தலைப்பில் இடம்பெறுள்ள இக்கட்டுரையில் தொடக்க காலகட்டத்தில் பெண்களின் நிலை கேள்விக்குறியான ஒன்றாக இருந்துள்ளது என்பதையும் மூடநம்பிக்கையினால் ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருந்த நிலையில் இருந்து பெண்கள் மாற்றம் பெற்று புதிய வாழ்க்கையை தொடங்க வேண்டும் என்பதை கருதுகோளாகக் கொண்டு பாரதிதாசனின் கவிதை இடம்பெற்றுள்ளது கவிதையை அடியொற்றி கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. பெண்ணியம் சார்ந்த தேடல்கள் தோன்றும் காலத்திற்கு முன்பே ஆண் ஆதிக்கச் சமூகத்தால் பெண்களுக்கு ஏற்பட்ட அடக்குமுறைகளைச் சுட்டிக்காட்டும் குறுகிய வட்டத்திற்குள்ளான பெண்ணிய வாழ்க்கையை பெண்ணுலகு என்ற கவிதையின் வழி அறிய முடிகிறது என்பதை இவ்வாய்வு மெய்ப்பிக்கின்றது.

பாரதிதாசன் வீறு கொண்ட கவிதைகள் புனைந்த புரட்சிக்கவி. மக்களின் வாழ்க்கை நெறிகளை உணர்ந்து நன்மை தீமைகளை தெள்ளிதின் ஆராய்ந்த மாட்சிமைப்பட்ட பெருங்கவிஞன். தான் எண்ணிய யாவற்றையும் தெளிவாக கவிதைகளில் சொல்லும் ஆற்றல் பெற்றவன். எனவே, இவரது கவிதைகள் மனதில் என்றும் இருக்கும் வண்ணம் ஆழப்பதிந்து விடுகின்றது. "மானுடன்" வாழும் வழிவகைகளைக் கவிதைகளில் கூறியதோடு அல்லாமல் பெண்களின் சிறப்புகளையும், உலகளாவிய நோக்கில் பெண்கள் எவ்வாறெல்லாம் சித்தரிக்கப்படுகின்றார்கள் என்பதையும் கூறியுள்ளார்.பெண்ணியம் என்பது போற்றப்பட வேண்டிய ஒன்று. உரிமைக்கும் கடமைக்கும் வேறுபட்ட சிந்தனைகளை உருவாக்கி மனிதன் பெண்ணை

அடிமையாக்கி வைத்திருக்கின்றான் என்ற கோட்பாட்டு அணுகுமுறையில் இவருடைய கவிதைகள் பேசப்படுகின்றன.

பெண்ணியம்

பெண்ணியம் என்ற கோட்பாடு பதினெட்டாம் நூற்றாண்டில் மேலைநாட்டில் தோன்றியது என்று ஆய்வியல் அறிஞர்கள் கூறுகின்றனர். பெண் என்பவள் மாசக்தி என்று புலவர்களும், கவிஞர்களும் கற்றோரும் பாடினால் கூட பெண் என்பவளின் சிறப்புகளை எடுத்துக் கூற மற்றொரு ஞானிகளின் அறவுரைகளும் தேவைப்படுகின்றன. மாநிலம் செழிக்கச் செய்ய மங்கையரின் பங்களிப்பு அவசியம் என்பதை பாரதிதாசன் கூறுகின்றார்.

> **"பெண்ணியம்" என்பது உலகளாவியது. இஃது, உலகில் உள்ள அனைத்து மனிதகுலத்துக்குள்ளும், ஒவ்வொரு காலக்கட்டத்திலும், பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிக்க ஏற்பட்டது. குறிப்பாக, பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதாகும்.[1] (பெண்ணியம்-1)**

என்று இரா.பிரேமா பெண்ணியம் பற்றிய கருத்தினைக் கூறுகிறார்."பெர்னாட்ஷா" பெண்கள் பற்றிக் கூறியக் கருத்தினை பாரதிதாசன் மனதில் இருத்திக்கொண்டு மக்கள் அனைவரும் அறியும் வகையில் படைத்திட்ட கவிதை "பெண்ணுலகு" என்பதாகும். ஆண் சமூகம்,பெண்சமூகம் என்ற பாகுபாடுகளும் பெண் அடக்குமுறைகளும் காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் அவலச் சூழலை விட்டொழித்து பெண்களைச் சிறப்புற வழி நடத்தி மேன்மையுறச் செய்தல் வேண்டும் என்னும் கொள்கை உடையவராய் "பெர்னாட்ஷா" பெண்கள் பற்றிக் கூறும் கருத்தை பாரதிதாசன் கவிதைகளில் முன்மொழிந்துள்ளார்.

"உவந்தொருவன் வாழ்க்கை சரி யாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்"[2]
(பெண்ணுலகு)

என்று நல்லதொரு குடும்பத்தை நானிலம் செழிக்கச் செய்ய வேண்டும் என்னும் பொறுப்புணர்வுடன் மனைவி நடப்பவள் என்ற பெர்னாட்ஷாவின் கருத்தை பாரதிதாசன் கூறுகின்றார். ஆண்கள் தவறுகள் செய்யும்போது அதனைக் கண்டித்து சிறந்த வழியில் நடத்திச் செல்லுபவள் பெண் என்பதையும் கூறுகின்றார்.

பெண்கள் இல்லாத உலகம் ஆண்களால் பயணிக்க முடியாதது என்ற கருத்தை முன்வைத்து பாரதிதாசன் கவிதை பாடியுள்ளார்.அதனை,

“அவனியிலே ஒருவனுக்கு

மனைவியின்றேல்

அவனடையும் தீமையை யார்

அறியக் கூடும்“[3] (பெண்ணுலகு)

மரபு வழிவந்த குடும்பம் என்ற அமைப்பு ஓர் நீண்ட வரலாற்றை உடையது.மார்க்சும், ஏங்கல்சும் இவ்மைப்பு ஒழிக்கப்பட வேண்டும் என்ற புரட்சிகரமானக் கருத்தை கூறியிருந்தாலும்,சமதர்ம பெண்யவாதிகள் குடும்ப அமைப்பில் தீவிரமான சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கருத்துரைகின்றனர்.[4] (பெண்ணியம் ப- 45) என்று இரா. பிரேமா கூறுகின்றார்.

பாரதிதாசன் பெண்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்று வலியுறுத்துவதோடு அல்லாமல் வாழ்க்கைத் தரம் உயர்ந்து கல்வியில் சிறந்ததோராக மிளிரச் செய்தல் அவசியம் என்று கூறுகின்றார்.

“கல்வியில்லை உரிமையில்லை

பெண்களுக்கு

கடைத்தேற வழியின்றி

விழிக்கின்றார்கள்!

புல்லென்று நினைக்கின்றீர்

மனைவிமாரைப்

புருஷர்களின் உபயோகம்“[5] (பெண்ணுலகு)

என்று பெண்ணடிமைத்தனத்தை அறவே ஒழிக்க வேண்டும் என்றும்,வாழ்வில் முன்னேற்றத்திற்குரிய வழிவகைகளைப் பெண்கள் உணரத் தலைப்பட வேண்டும் என்றும் முழக்குகின்றார்.

கைம்மைப்பழி

"கைம்பெண்" (அல்லது) விதவை என்று கணவனை இழந்தோரைக் கூறுவர். குழந்தை திருமணத்தினால் மிகச் சிறுவயதிலேயே கணவனை இழந்த பெண்கள் சமூகத்தில் மிகவும் கடினமானச் சூழலை எதிர்கொள்ளும் அவலநிலையை பாரதிதாசன் தன் கவிதைகளில் பாடியுள்ளார்.

"துணைவி இறந்த பின் வேறு
துணையைத்
தேடுமோர் ஆடவன் போல் பெண்ணும்
துணைவன் இறந்த பின் வேறு
துணை தேடச்
சொல்லி விடுவோம் புவிமேல்"[6]

(பெண்ணுலகு)

என்று பாடியுள்ள பாரதிதாசன் மற்றொரு கவிதையில்,

"வாடாத பூ போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ
பாடாத தேனீக்கள் உலவாதத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?"[7]

(பாரதிதாசன்-கவிதைகள்)

குடும்பஉறவில் ஆண்,பெண் இருவரும் சமம். எனவே, கைம்பெண் மணத்தை ஆதரித்து தனது கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார் .

பெண்களை இழிவுபடுத்தப்படும் சூழலை முற்றிலும் எதிர்த்து பயன்படுத்தப்படாதப் பொருளாகக் கருதிடும் நிலையைக் கூறுகின்றார்.

"புழுதி, குப்பை உமி- இவற்றின்
புன்மைதனைக் களைந்தே
பழரசம் போலே- அவற்றைப்
பயன்படுத்துகின்றார்.
எழுதவும் வேண்டாம்- நம் நிலை

இயம்பவும் வேண்டா!

அழகிய பெண்கள்-நமக்கோ

அழுகிய பழத்தோல்'[8] (பெண்ணுலகு)

என்று பயன்படாத வெற்றுப்பொருளாக பெண்களின் நிலை உள்ளது. இதனை உணர்ந்து சமூகத்தின் நிலை மாற நன்மதிப்புடன் திகழப் பெரும் புரட்சிகரமான எண்ணங்களால் சமூக மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட வேண்டும்.

தன் வீட்டில் வளர்க்கும் கிளி,நாய் போன்ற உயிரினங்களுக்கு கொடுக்கும் மதிப்பினைக் கணவனை இழந்த பெண்களுக்கு கொடுப்பதில்லை என்ற வேதனையை தன் சொற்களால் கவிதையாக்கி சமூக மாற்றத்திற்கு பாரதிதாசன் வித்திட்டுள்ளார்.

“கூண்டிற் கிளி வளர்ப்பார்- இல்லத்தில்

குக்கல் வளர்த்திடுவார்

வேண்டியது தருவார்- அவற்றின்

விருப்பத்தை அறிந்தேன்!

மாண்டவன் மாண்ட பின்னர்- அவளின்

மனைவியின் உளத்தை

ஆண்டையர் காண்பதில்லை-ஐயகோ!

அடிமைப்பெண் கதியே!“[9] (பெண்ணுலகு)

என்று அஃறிணை உயிர்களாகக் கூற கைம்பெண் மதிப்பதில்லை@ வேதனையின் ஒட்டுமொத்த கருத்தாக மேற்கண்ட கவிதையை பாரதிதாசன் எழுதியுள்ளார்.

மூடத் திருமணம்

இளம் பெண்களுக்கு வயதான கிழவர்களைத் திருமணம் செய்து வைப்பதால் அவள் இறப்பைத் தழுவக் கூடும்@ கால கதியில் வாழ்ந்தே தீர வேண்டும் என்றே வாழ்க்கையை அழித்துக் கொள்ளவும் முடியும் என்ற எண்ண ஊடாட்டத்தின் விளைவாக பாரதிதாசன் எழுதியக் கவிதை “மூடத் திருமணம்“என்பது.

இளம் வயது மகளை வயது முதிர்ந்தோருக்கு மணம் பேசுவதால் ஏற்படும் இழப்பும் அதனால் தாய் வருந்தும் நிலையும் @இரு பெண்களின் போராட்டச் சூழலாகக்

கவிதை அமைந்துள்ளது. பாரதிதாசனின் கவிதை வரிகளில் வயதான கிழவனை மணம் செய்த அப்பெண்ணின் நிலை பற்றிய வரிகள்,

“தொண்டு கிழவன் விழிப்பான் என்று
கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள்
காதலும் தானும் கனலும் புழுவுனாய்
ஏங்கினாள்“ [10] **(பெண்ணுலகு)**

என்பன பெண்படும் அவல நிலையின் உச்சமாகக் கொள்ளலாம். ஆணாதிக்கச் சமூகத்தின் ஆணிவேர் அசைக்கக்கூட முடியாத அவல நிலையில் பெண்ணினம் படும் துன்பத்தை பாரதிதாசனின் கவிதை வரிகள் எடுத்துரைக்கின்றன.

முடிவுரை

சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் எண்ணற்ற சிக்கல்களில் பாலியல் சிக்கலும் ஒன்று. குழந்தைமுதல் குமரி,கிழவி என்றெல்லாம் ஆண் வர்க்கம் பார்ப்பதில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனியே நீதிகள் ஒதுக்கப்பட்டு அதன் வழியே செயலாற்ற வேண்டும் என்பதும் சட்டங்களாக உருவாக்கி வைக்கப்பட்டாலும்,சமூகம் சட்டங்கள் வழியில் மரபு நெறியைப் பேணி பின்பற்றி வருகின்றன என்பதை,பாரதிதாசனின் பெண்ணுலகு என்ற கவிதை வரி இடம்பெற்றுள்ளன என்பது கவிதைகள் சுட்டிக் காட்டுகின்றன. மரபை மீறி பேசும் துணிவினை பெண்கள் உருவாக்க வேண்டும் .அதனால்,பெண்ணிடம் எழுச்சி பெறும் என்பது பாரதிதாசனின் கருத்தாகும் என்பதை மேற்கண்ட கட்டுரை கூறுகின்றது.

அடிக்குறிப்புகள்

1. பிரேமா.இரா-பெண்ணியம்-1
2. பாரதிதாசன் கவிதைகள் -1 –பெண்ணுலகு
3. பாரதிதாசன் கவிதைகள்-1 - பெண்ணுலகு
4. பிரேமா.இரா-பெண்ணியம்- ப- 45
5. பாரதிதாசன் கவிதைகள் --1பெண்ணுலகு
6. பாரதிதாசன் கவிதைகள் -1-பெண்ணுலகு
7. பாரதிதாசன் கவிதைகள் -1-பெண்ணுலகு

8. பாரதிதாசன் கவிதைகள் 1--பெண்ணுலகு
9. பாரதிதாசன் கவிதைகள் -1-பெண்ணுலகு
10. பாரதிதாசன் கவிதைகள் -1-பெண்ணுலகு

துணைநூற்பட்டியல்

1. பெண்ணியம்- பிரேமா.இரா உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி-சென்னை-13 மு.ப-அக்டோபர்-1994
2. பாரதிதாசன் கவிதைகள்-1, செந்தமிழ் நிலையம், இராமசந்திராபுரம்,திருச்சி-

பாவேந்தர் பாரதிதாசன் படைப்புகளில் குழந்தைச் செல்வம்

முனைவர் கு.சுரேஷ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை விவேகானந்தா கல்லூரி,
சென்னை 600 004
பேசி: 7812012712 மின்னஞ்சல்: thamizhsuresh02@gmail.com

முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் குழந்தைச் செல்வத்தைப் பற்றிக் காலம் தோறும் பாடி வருவதைக் காணலாம். சங்க இலக்கியத்தில் மன்னன் பாண்டியன் அறிவுடைய நம்பியின் பாடல் கவனிக்கத் தக்கது. இடைக்காலத்தில் பிள்ளைத்தமிழ் எனும் சிற்றிலக்கிய வகை குழந்தையைப் பற்றி மட்டுமே பாடுவதற்காக எழுந்தது. பக்தி இலக்கியத்திலும் கடவுளைக் குழந்தையாகப் பாவித்துப் பாடும் வழக்கமுண்டு. உரைநடைக் காலத்திலும் இம்மரபு தொடர்ந்து வந்துள்ளதைக் காணலாம். சில கவிஞர்கள் குழந்தைக் கவிஞர்கள் என அழைக்கப்படுவதினின்று குழந்தை இலக்கியம் வளர்ச்சி பெற்றுள்ளதை அவதானிக்கலாம். அவ்வகையில் பாவேந்தர் பாரதிதாசன் தம் படைப்புகளில் குழந்தைச் செல்வத்தைப் பற்றியும் அவர்களினால் பெறும் இன்பம் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார். இசையமுது படைப்பில் சரிபாதி சிறுவர்களுக்கான கவிதைகளைக் காண முடிகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பாவேந்தர்தம் படைப்பில் காணலாகும் குழந்தைகள் பற்றிய கருத்துக்களை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்காய் அமைகிறது.

தமிழ் இலக்கியத்தில் குழந்தைகள்

பாண்டியன் அறிவுரை நம்பி தாம் அரசனாய் இருந்தும் பிள்ளைச் செல்வம் இல்லாத செல்வம், செல்வம் ஆகாது எனும் பொருளிலும் குழந்தைகள் செய்யும் செயல்களையும் கண்டு இன்புறுவதாய்ப் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

“படைப்பு பல படைத்து பலரோடு உண்ணும்

உடைப்பெரும் செல்வர் ஆயினும் இடைப்பட

குறுகுறு நடந்து சிறகை நீட்டி

இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்

நெய்யுடை அடிசில் மெய்ப்படவிதிர்த்தும்

மயக்குறு மக்களை இல்லோருக்குப்

பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே”[1]

எனத் தாம் வாழும் நாட்கள் குறையிலா நாட்களாய் வாழ குழந்தைச் செல்வம் இன்றிமையாதது எனப் புறநானூற்றுப் பாடல்வழிப் பகர்கிறார்.

திருவள்ளுவர் மக்கட்பேறு எனத் தனி அதிகாரமே இயற்றியுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது. ‘சிறு கை அளாவிய கூழையும்’, ‘தம் மக்கள் மெய்த் தீண்டலையும்’ உணர்ந்தாற் போன்றே கூறியுள்ளமையை நோக்குங்கால் வள்ளுவர் இல்லற வாழ்வில் சிறந்தமையை அறியலாம். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை

“தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து

முந்தி இருப்பச் செயல்”[2] என வள்ளுவரும்

“ஈன்று புறந்தருதல் எங்களைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே”[3] எனப் பொன்முடியார் பாடலிலும் அறியலாம். பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்யும் கடமையாக

“மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை

என்னோற்றான் கொல்எனும் சொல்”[4] என்றும் ஈன்ற பொழுதைக் காட்டிலும் வீர மறவனாய் இருந்து இன்பம் தருதல் வேண்டும் என்பதை **“ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே”[5]** என்றும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

குழந்தையும் இன்பமும்

இயற்கை இன்பத்தைப் பாடிய பாவேந்தர் குழந்தையையும் இயற்கையோடு இணைத்துப் பாடியுள்ளார். தாம் இன்பம் எனக் கருதும் அனைத்திலும் குழந்தை இன்பமே இன்பம் என்கிறார்.

“கனி அமிழ்து முல்லை

யரும்ப மிழ்து தேனமிழ்து

அப்பம் அமிழ்து

குழந்தை குதலை

மொழி யமிழ்து"[6] என்றும் "**குழவிகள் மழலை பேச்சும் அன்பை கொட்டிடும் அமுத பண்ணும்"[7]** எனக் குழந்தை மொழிகளினால் உண்டாகும் இன்பப் பெருக்கைத் தம் கவிதை வெள்ளத்தில் மிதக்கச் செய்துள்ளார்.

"மெல்லென அதிர்ந்த மின்னல், அந்தச்

செல்வக் குழந்தையின் சிரிப்பு! நல்ல

இன்பம் வேண்டுவோர் இங்குள்ளார் வாழ

அருஞ்செயல் செய்துதான் அடைய வேண்டுமோ?"[8] என இன்பம் எய்த அருஞ்செயல்கள் செய்து அடையும் வழியிலும் பிள்ளைச் செல்வம் கண்டு, அடையலாம் என்கிறார்.

குழந்தை, இமை நீக்கிக் காணும் ஒளியையும் தங்க மாதுளைச் செங்கனி போன்ற மழலையின் சிரிப்பும் அணைத்து மகிழ வேண்டாமோ? என அழைப்பு விடுத்து, உலக இன்பமே மழலை இன்பத்தில்தான் உள்ளது என்கிறார். இதனைத்

"தங்க மாதுளைச் செங்கனி பிளந்த

மாணிக்கம் அந்த மதலையின் சிரிப்பு

வாரீர் அனைத்து மகிழ வேண்டாமோ?

பாரீர் அள்ளிப் பருகமாட் டோமோ?

செம்பவளத்துச் சிமிழ் சாய்ந்த அமிழ்தாய்ச்

சிரித்தது இல்லை சிரிக்கையில்

சிரித்தது வையம்! சிரித்தது வானமே"[9] என்று குழந்தையும் இன்பமும் வேறுவேறல்ல என்பதை நிறுவுகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

பெண் குழந்தைத் தாலாட்டு

முற்போக்குப் பாசறையை உருவாக்கிய பாவேந்தர், இலக்கியத்தில் தாலாட்டு என்றாலே ஆண் குழந்தைக்கானது என்பதை மாற்றிப் பெண் குழந்தைக்குத் தாலாட்டு பாடும் வழக்கத்தைக் கொணர்ந்தார். பெண் குழந்தைக்கு நிலவை உவமை கூறுவதை விடுத்துச் சூரியனைச் சான்று காட்டுகிறார்.

“சோலை மலரே! சுவர்ணத்தின் வார்ப்படமே

காலைஇளஞ் சூரியனைக் காட்டும் பளின்குருவே”[10] என்கிறார். பெண்மையின் உயர்வைத் தாலாட்டுப் பாடல்வழித் தணல் வரிகளாய் எழுதுகிறார்.

“வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்

பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே!

நாய் என்று பெண்ணை நவில்வோர்க்கு இப்புவிக்குத்

தாய் என்று காட்டத் தமிழருக்கு வாய்த்தவளே!”[11]எனப் பெண்மையை மதியாச் சமூகத்தில், பெண் குழந்தையின் நன்மை சமூகத்தின் நன்மை எனச் சபதம் ஏற்றலைக் காணலாம். சாதி, மூடநம்பிக்கை இருளைக் கிழிக்கும் திறம் பெண்ணுக்கு உண்டு என்பதை உணர்ந்த பாவேந்தர் உதிர்த்த வரிகள் தாம்,

“மூடத்தின் முடை நாற்றும் வீசுகின்ற

காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே

வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்

தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி”[12] எனச் சமூகக் கருத்துக்களைத் தாலாட்டில் கூறிப் பெண்ணியப் பெருமைகளைப் பாடுகிறார். தாம் ஏற்ற கடவுள் மறுப்புக் கொள்கையைக் குழந்தைக்கும் புகட்டுகிறார். பின் எள்ளி நகையாடுகிறார்.

“சாணிக்குப் பொட்டிட்டுச் சாமிஎன்பார் செய்கைக்கு

நாணிஉறங்கு நகைத்துநீ கண்ணுறங்கு”[13] என்று கூறுகிறார்

ஆண் குழந்தைத் தாலாட்டு

தாய் தன் குழந்தைக்குப் பாடும் தாலாட்டில் சமூக நலனைக் காண்கிறார். சாதி, சமயம் என கூறுபாடு கொண்டு சமூகத்தை நலிவடையச் செய்யும் போக்குகளைக் களையவே மகனே நீ கையில் வாளேந்தி வர வேண்டுமாய்

“நீதிதெரி யும்என்பார் நீள்கரத்தில் வாளேந்திச்

சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில்

கனலேற்ற வந்த களிரே, எனது

மனமேறு கின்ற மகிழ்ச்சிப் பெருங்கடலே”[14] எனச் சாதிப் போராட்டத்தின் களிறாய்க் காண்கிறார் ஆண் குழந்தையை. அத்தோடு சமூகத்தில் கொள்ளை நோய்

போல் மதம் இருந்து மக்களை மூடத்தனத்தில் மூழ்கடிக்கும் வைதிகத்தை எதிர்த்தும் வறுமையைப் போக்கவும் அறைகூவல் விடுத்துத் தாலாட்டுப் பாடுகிறார்.

"அள்ளும் வறுமை அகற்றாமல் அம்புவிக்குக்

கொள்ளைநோய் போல்மதத்தைக் கூட்டிமூம் வைதிகத்தைப்

போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்

வேரோடு போக்கவந்த வீரா! இளவீரா!"[15] என்கிறார். ஆரியத்தின் ஆதிக்கத்தைத் திராவிடத்தால் வீழ்த்த வேண்டி குழந்தைத் தாலாட்டைப் பாடியுள்ளார். ஆதிக் குடியில் பிறந்த திராவிடச் செல்வமே ஆரியன் வருவதற்கு முன் நாகரிகத் தேறுதல் கண்டவனின் பேரனுக்குப் பேரன்களே எனும் பொருளில்

"ஆரியர்கள் இங்கே அடிவைக்கு முன்னமே

வேரிட்டு வாழ்ந்த வெற்றித் திராவிடரின்

பேரர்க்குப் பேரனே பிள்ளாய்நீ கண்ணுறங்கு"[16] என்றும், தொண்டு செய்து, தொடை நடுங்காத திராவிட இனமாய் வளர வேண்டும் என்பதை

"தொண்டு விரும்போம் துடை நடுங்கோம் - எந்நாளும்

சண்டையிட்டுத் தோற்றதில்லை தக்க திராவிடர்கள்"[17] இவ்வாறாகத் தாலாட்டிலும் தணல் தெறிக்கும் கருத்துக்களை இளந்தலைமுறைக்கு ஊட்டி வளர்க்கும் கவிதைகளைப் பாவேந்தர் கவிதைகளில் காண முடிகின்றன.

குழந்தைப் பராமரிப்பு

குழந்தையின் அழகைப் பாடிய கவிஞர் அக்குழந்தையின் நலத்தையும் காணத் தவறவில்லை. இளங்குழந்தைகளைத் தொட்டுத் தூக்கும் முறையைக் குடும்பவிளக்கில் பதிவு செய்கிறார். இன்று சிலர் குழந்தையைத் தூக்குவதற்கு பயப்படுகிற சூழல் உள்ள நிலையில் பாவேந்தர் பாடிய கவிதை சாலப் பொருந்துவதாய் அமைவதோடு இளங்குழந்தைகளை அணுகுவதற்கு உதவியாயும் அமைகிறது.

"இறுகா அமிழ்தின் இளகல் உடம்பை

உறுத்தாமல் தூக்க ஒருதிறம் வேண்டும்

குளநீர்த் தாமரை குழந்தையின் இளந்தலை

அம்மலர்த் தண்டே அழகிய மெல்லுடன்

தண்டுடல் மலர்தலை தாங்குமா அத்தான்?

தலை உடல் இரண்டையும் ஒருங்கு தாங்கி

உலை அமிழ்தை வரியவள் ஒருத்தி தூக்கல்போல்

தவறாது தூக்குவது தலையாகிய கடன்

தெரிந்ததா அத்தான் என்றாள் தெரிவை”[18] எனத் தன் கணவனுக்குக் குழந்தையைத் தூக்கும் முறையை உவமை நயத்தோடு கூறுவது படிப்போரை வியப்பில் ஆழ்த்துகிறது.

குழந்தைகளுக்கு நோய்கள் எளிதில் தொற்றும். குழந்தையின் உடல்நலத்தைப் பேணும் நோக்கில் பெற்றோர்கள் கவனமாய் இருத்தல் வேண்டும். மூடநம்பிக்கையிலும் சடங்கு முறைகளிலும் மூழ்காமல் மருத்துவ முறையினை நாடுவது மேலானது என்பதை

“முடுகிவரும் நோய்க்கெல்லாம் கடவுள்தனை

வேண்டியே முடிவடைய மார்க்கம் உண்டு”[19] எனச் சாடுகிறார். தூய்மையைப் பற்றிச் சிறுவர்க்குக் கூறுகையில் உடலில், உண்ணும் உணவில், நடையில், வாய்மையில், தூய்மை வேண்டும் என்பதை இசையமுது தொகுப்பில் பின்வருமாறு உரைக்கிறார்.

“உடையினில் தூய்மை – உண்ணும்

உணவினில் தூய்மை - வாழ்வில்

நடையினில் தூய்மை - உன்றன்

நல்லுடற் தூய்மை - சேர்ப்பின்

தடையில்லை வாழ்நாள் ஒவ்வொன்றும் இன்பம்.

வாய்மையாலும் ஒழுக்கத்தினாலும் அகத்

தூய்மை உண்டாகும் மேலும் மேலும்!”[20] எனும் கவிதை வரிகளில் சிறுவருக்கான தூய்மையைப் பற்றி மிக எளிமையாய்க் குறிப்பிடுகிறார்.

பெண் குழந்தைகளின் சிறப்பு

பெண் சிசுக்கொலைகள் நிறைந்த சமூகச் சூழலில் வாழ்ந்த பாவேந்தர் அம்முறையைக் கண்டு சீற்றம் கொண்டார். அதற்கு எதிராகக் கனல் கக்கும்

கவிதைகளை எழுதினார். பெண் கல்வியின் முக்கியத்துவம், சமூகத்திற்கும் வீட்டுக்கும் பெண்களின் பங்கு முதலியவற்றைத் திறம்படக் கவிதைகளாய்த் தீட்டினார்.

“கல்வியில் லாத பெண்கள்

களர் நிலம் அந்நிலத்தில்

புல் விளைந்திடலாம் நல்ல

புதல்வர்கள் விளைதல் இல்லை”[21] எனக் கூறிப் பெண் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும் வழியைக் காட்டினார். பெண் குழந்தைகளின் கல்வி அவசியத்தை ஆணுலகம் ஏற்க வேண்டும் எனும் நோக்கில் தந்தையே தன் பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்புவதாய் கவிதை படைத்துள்ளார்.

“தலைவாரி பூச்சூடி உன்னை பாட

சாலைக்கு போஎன்று சொன்னாள் - உன் அன்னை!

கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு - பெண்

கல்விபெண் கல்விஎன் கின்றதன் போடு”[22] பெண் பிள்ளைகளுக்குக் கல்வி அளித்திடுவதால் ஏற்படும் பயனையும் பெற்றோருக்கு வலியுறுத்துகிறார்.

“பெற்றநல் தந்தை தாய்மாரே - நும்

பெண்களை கற்கவைப் பீரே

இற்றைநாள் பெண் கல்வியாலே – முன்

னேறவேண்டும் வைய மேலே”

“மண்ணில் பட்டால் மாசுபடும் என்றுஎன்

கண்ணில் வைத்தே காப்பேன் ஐயா”[23] எனப் பெண் குழந்தையின் பிறப்பைக் கொண்டாடியவர் பாரதிதாசன் என்பதை மேற்கண்ட கவிதை வரிகளில் அறியலாம்.

குழந்தைகளுக்குப் பாவேந்தர் கூற்று

`இன்றைய குழந்தை நாளைய தலைமுறை’ என்பதைக் கவனத்தில் கொண்டு குழந்தைகளுக்குப் பாவேந்தர் அறிவுரை புகட்டும் வண்ணம் பல கவிதைகள் படைத்துள்ளார். இதில் பாவேந்தர் ஆத்திசூடி முதன்மையானது எனலாம்.

“நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகாள்!

ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணங்கள்”[24]எனக் கல்விச் சிறப்பையும் ஒற்றுமை குணத்தையும் சிறார்கள் கொள்ள வேண்டும் என்கிறார். மரபுப் பிடியில் சிக்குண்டு பழமை போற்றாமல் புதுமைக்கு வழிகாட்டுவதை

“தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்

அன்றன்று வாழ்விற் புதுமை காணவேண்டும்”[25] என்பதையும் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டுகிறார். அன்பை வளர்த்து, பகையை வெல்லவும் பங்கிட்டு ஒற்றுமை சேர்க்கவும்

“அன்பை வளர்த்திடுவாய் மெய் –

யன்பை வளர்த்திடுவாய்!

தேடிய அப்பத்தில் கொஞ்சத்தை இன்னொரு

சின்ன வனுக்குத் தர- நீ

ஓடுவ துண்டெனில் கண்டிருப்பாய் உன்

உள்ளத்தி ருந்த அன்பை

உன்னையும் உன்னரும் தோழர்கள் தம்மையும்

ஒட்டிய தன்பன்றோ?”[26] என அன்பை விதைக்கிறார் சிறார் உள்ளத்தில் என்பதை அறியலாம். மேலும் மெய் சொல்லல், பொறுமை, சினம், சிறார் பொறுப்பு, தூய்மை, கல்வி, வறுமையில் செம்மை, மாணவருக்கு எழுச்சி, நல்லினம் சேரல், வழிநடத்தல், சுகாதாரம் போன்ற தலைப்புகளில் கவிதை படைத்துள்ளார்.

முடிவுரை

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது எனும் பழமொழிக்கு ஏற்ப குழந்தைகள் பெறக்கூடிய ஒழுக்க முறைகள், கல்வி, செயல்கள் போன்றவற்றைக் குழந்தையிலிருந்தே தருதல் வேண்டும் என்பதை அடிப்படையாய்க் கொண்டே பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகள் அமைந்துள்ளன. பெண் குழந்தைகளின் முக்கியத்துவத்தையும் பெண்களால் விளையும் நன்மைகளையும் கவிதையில் எடுத்தியம்பி உள்ளதைக் காணலாம்.

தாலாட்டுப் பாடலிலும் முற்போக்குத் தன்மையையும் இனப்பற்றையும் பாடியுள்ளமை புதுமை பயப்பதாய் அமைந்துள்ளது. கற்பனைகளில் குழந்தைகளை மூழ்க விடாது சமூக அக்கறையோடு வளர்க்க வேண்டும் என்பதே பாவேந்தரின் நோக்கமாய் அமைவதை அறியலாம். ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என வேறுபாடு இல்லாது குழந்தைச் செல்வமாய்க் காணும் போக்கு பாவேந்தரிடத்தில் இருந்துள்ளமையை இவண் அறியலாம்.

பெற்றோருக்குக் கூறும் அறிவுரைகளில் கருத்தடை பற்றியும் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும் இடம்பெறும் கவிதைகள் இன்றைய சூழலிலும் பொருத்தமாய் அமைகிறது. பாவேந்தர் பாரதிதாசன் படைப்புகளில் காணலாகும் குழந்தை கவிதைகளை நோக்குகையில் பல்வேறு சிந்தனைத் திறப்புகள் உருவாகும் என்பது திண்ணம்.

சான்றெண் விளக்கம்

1. புறநானூறு,188
2. திருக்குறள், 67
3. புறநானூறு, 312
4. திருக்குறள், 70
5. புறநானூறு, 278
6. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி -3, ப.286
7. மேலது, தொகுதி – 1, ப.106
8. மேலது, தொகுதி 2, ப.203
9. மேலது,
10. மெலது, தொகுதி 1, ப,106
11. மேலது
12. மேலது
13. மேலது
14. மெலது, தொகுதி 1, ப.105
15. மேலது

16. இசையமுது, ப.52
17. மேலது
18. குடும்ப விளக்கு, ப.178
19. மேலது
20. இசையமுது, ப.11
21. குடும்ப விளக்கு, ப.86
22. இசையமுது, ப.29
23. மேலது, ப.28
24. குடும்ப விளக்கு, பா.365
25. இசையமுது, ப.10
26. மெலது, பக்.11-12

துணைநூற் பட்டியல்

1. இராம சுப்ரமணியம்.வ.த, (உ.ஆ), புறநானூறு, திருமகள் நிலையம், முதற் பதிப்பு 2000, தி.நகர், சென்னை 17.
2. பாரதிதாசன் பாவேந்தர், இசையமுது 2 தொகுதிகள், மணிவாசகர் பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு 2009, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 108.
3. பாரதிதாசன் பாவேந்தர், பாரதிதாசன் கவிதைகள், இந்து பப்ளிகேஷன், ஒன்பதாம் பதிப்பு 2010, சென்னை 17.
4. பாரதிதாசன் பாவேந்தர், குடும்ப விளக்கு, பாரி நிலையம், இரண்டாம் பதிப்பு, 1960, 59,பிராட்வே, சென்னை 01.
5. மாணிக்கம். அ (உ.ஆ), திருக்குறள், தென்றல் நிலையம், பத்தாம் பதிப்பு, 2007, சிதம்பரம், 608001.

தமிழச்சியின் கத்தி - உவமை தேர்வும் நேர்வும்

கி.ராஜ்குமார்,

அன்னை இந்திரா குடியிருப்பு, அலவாக்கோட்டை, சிவகங்கை மாவட்டம். 630553.

9655280231, kumar1990svg@gmail.com

முன்னுரை:

"சாணிக்கு பொட்டிட்டு சாமி என்பார் செய்கைக்கு

நாணிஉறங்கு; நகைத்து நீ கண்ணுறங்கு "

என்று பெண் குழந்தை தாலாட்டு பாடியவர் புரட்சிக்கவி பாரதிதாசன். எளிய தமிழில் கவிதைகளைப் படைத்து அன்னைத் தமிழுக்கு வழங்கியவர் பாரதிதாசன். அவர் படைத்த தமிழச்சியின் கத்தி எனும் நூலின்கண் அவர் கையாண்டுள்ள உவமைகளையும் அதன் வகைகளையும் உவமை அமையும் சூழ்நிலைகளையும் ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கதைப்போக்கு:

தமிழச்சியின் கத்தி எனும் இந்நூல் முழுவதும் துன்பியல் நிகழ்வுடனேச் செல்கிறது. அதன் இடையில் தமிழரின் வீரமும் கொப்பளிக்கிறது. திம்மன், சுப்பம்மா இருவரின் காதல் வாழ்வின் இடராக வந்த சுதர்சன் சிங், ரஞ்சித் சிங் ஆகிய சுபேதார்களின் வருகையும் சுதர்சன் சிங் , சுப்பம்மாவை அடையும் ஆசையினால் திம்மன், சுப்பம்மா இருவரின் இயல்பான குடும்ப வாழ்வுச் சிதைந்து அவர்கள் படும் இன்னல்களைத் துன்பியலோடு இக்கதை சொல்லுகின்றது.

உவமை:

மொழி மனித முயற்சியின் அரிய படைப்பாகும். மொழியைக் கற்றுக் கொள்ள ஒப்பிட்டு பார்க்கும் உவமை முறை பெரிதும் உதவி செய்கிறது. பொருளின் சிறப்பையோ இழிவையோ புலப்படுத்தத்தான் உவமை கூறப்படும் எனினும் பொருளின் இயல்பான தன்மையைப் புலப்படுத்துவதும் உவமை தான். உணர்ச்சியை வெளியிடும் உயர்ந்த கருவி உவமை . ஒரு பொருளின் சிறப்பும் அதனால் பெரும் நன்மையும் அதன் மீது கொண்ட ஈடுபாடும் அதன் வலிமையும் ஆற்றலும் உவமை கூறுமாறு கவிஞனை உந்துகின்றன. எளியோர் மொழியிலும் உவமைகள் உணர்ச்சியை வெளிப்படுத்த தாமாகவே உருண்டோடி வருகின்றன.

மரபு உவமை:

உவமையைப் புரிந்து கொள்ள மரபு கைக்கொடுக்கிறது. கயல், வேல் குவளைப்பூ, மாவடு போன்ற உவமைகளைக் கூறுவது மரபாக இருக்கின்றது. தொன்று தொட்டு வழங்கப்படும் உவமையையே இங்கு மரபு உவமை என்று குறிக்கிறேன்.

1. 'மாவின் வடு போன்ற கண்ணாள் காண்
2. மாங்குயிற்கும் கூவும் இனிமைதனை சொல்லிக் கொடுப்பவள் காண்'
3. 'கொடி போல் இடை அசைந்து கொஞ்ச கையில் யானைப் பிடி போல் அடிகள் பெயர்கையிலே'
4. பொம்மை வரும் என்றதும் குழந்தைகள் பூரித்துப் போவது போல்.
5. கன்னலைப் போல் மொழியுடையாள் துடிதுடித்தாள்
6. செந்தாழை மடல் போன்ற கத்தி
7. தேன் இதழ்தான் உலர்ந்தது.
8. கிளிக்குச்சொல்வது போல் சொன்னாள்
9. மேகம் திசை ஆர்ந்தது போல் கருங் கூந்தல்
10. கடல் போன்ற அன்புடையான் என்னிடத்தில்

இயற்கை உவமை:

உவமைக்கு காரணம் ஒப்பே. வேறுபட்ட இரு பொருள்களுக்கு இடையே அமைந்த ஒப்புமையே உவமைக்குக் காரணம். இயற்கையில் காணப்படுகின்ற பொருளைக் கொண்டு உவமிக்கப்படும்போது அது இயல்பாக மக்களிடம் போய் சேரும் வலிந்து திணிப்பதாக அமையாது. தமிழச்சியின் கத்தியில் காணப்படும் இயற்கை உவமைகள்

1. கள்ளிருந்த பூவோ களிவண்டோ மாதுவிழி
2. தாமரை பூத்தது போலே நல்ல நீல திரைகடல் மேலே பெருங்
   காரிருள் நீக்கக் கதிர் வந்து பூத்ததினாலே.
3. காற்றினில் ஆடும் கிளை போல் அவள் கட்டுடல் ஆடிற்று

அரசியல் உவமை:

அரசியலையும் மக்கள் வாழ்வையும் பிரித்துப் பார்க்க முடியாது அரசியல் இலக்கியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். அது கவிஞனுடைய நிலையிலிருந்து விடுபட்டு கதை மாந்தர்களின் வாயிலாகவும் வெளிப்படக்கூடும்

1. இங்கே அதிகாரிகள் வெம்மைக் கொடும் பாம்பு போல்- அவர் சீறுவார் வெள்ளையை வெள்ளை என்றால்.
2. தோட்டத்துப்புடலங்காய் தமிழர் நாடு தூங்கி விழித்தால் உடையோன் உரிப்பான் தோலை.

அறவியல் உவமை

தனிமனித அறங்களாகவும் சமுதாய அறங்களாகவும் படைப்பது கவிதை. கவிதை சமுதாயத்தில் விளைவிக்கும் பயன்களில் ஒன்றாக அறம் அமையும். அவ்வகையில் இந்நூலில் அறம் கூறும் முறையில் உவமைபெறும் இடம்

1. ஆட்சி எனில் ஐம்பொறியை ஆள்வதாகும் அடுக்காத செயல் செய்தோன் ஆளக்கூடும் காட்சியிலே காணு முகில் ஓவியம் தான் கலைந்து விடும் ஒரு நொடிக்குள் நிலைப்பதில்லை. போன்ற உவமைகள் கையாளப்பட்டுள்ளன.

சமய உவமை:

தமிழ் மொழியில் காணுகின்ற சமய இலக்கியங்கள் நம் மொழி கூறுகளில் செல்வாக்கைச் செலுத்துகின்றன. வலியுறுத்தி சொல்வதற்கு சமய உவமைகள் ஏற்புடையனவாக உள்ளன.

1. கண்ணன் கதை-

   'வெண்ணெய் என்ற பிள்ளைக்கு மண்ணை அள்ளி உண்ணென்று

   தந்தது போல் இவ்வாறு சாற்றினளே'.

2. பாண்டவர் பற்றி-

   'நீங்கள் எல்லாம் கலப்படங்கள்

   துளி கூட ஒழுக்கம் இல்லா பாண்டு மக்கள்'.

3. சமண சமயம் வழங்கும் நரகங்கள் இருள் ,சேறு-

   இருட்சேற்றுக்குள் இருந்த மணி விழியைக்

   கரும்பாம் பாம் துயில் கவர.

நுட்ப உவமை:

கதை மாந்தர்களின் மன உணர்வுகளை நுட்பமாக படிப்பவர் உணரும் வண்ணம் வெளிப்படுத்தி உள்ளார்.

1. 'சேய் போல் நங்கை திடுக்கிடும் நினைப்பில்

   ஆழ்வதும் மீள்வதுமாக இருந்தாள்'
2. தீயில் நின்றவள் போல ஒரு நெஞ்சம் கொதித்து

   பிள்ளை போல் விம்மிப் பெரும் பேதையாய் மாறி.
3. காட்டை முறித்திடும் காற்றும்- அவன்

   கையை முறிப்பது போலே

   கொட்டிக் கிடந்திட்ட பூப்போல்- அந்தக்

   கோதை கிடந்திட்ட போது.
4. தேசிங்க் துடிதுடித்தான் நெருப்புப் பட்டவனைப் போலே.

எதிர்மறை:

பஞ்சு பெருந்தீயைப்பொசுக்க பார்ப்பது போல என பஞ்சின் தன்மைக்கு மாறான கருத்து தோன்ற உவமை கையாளப்பட்டுள்ளது.

1. பஞ்சும் பெருந்தீயைப் பொசுக்க பார்த்தும் இருப்பீரோ
2. மீட்டாத வீணை -தரை

   மேலிட்டதைப் போல்
3. ஒட்டுற வில்லா வடக்கன்-உல

   கொத்தது காணாத தீயன்.

முரண்அமைத்தல்:

1. குன்று × கொடி

   குன்றொத்த சிப்பாய்கள் இறந்து விழுந்தார்

   கொடியொத்த இடையுடையாள் சிரிப்பில் வீழ்ந்தாள்
2. மண் மூடி × மனமூடி

   மண் மூடி வைத்துள்ள புதுமையைப் போல்

   மன மூடி வைத்திருப்பார் சூழ்ச்சி

3. பிள்ளை × பேதை

தீயில் நின்றவள் போல ஒரு

நெஞ்சம் கொதித்து

பிள்ளை போல் விம்மிப் பெரும்

பேதையாய் மாறி

அன்மொழித்தொகை:

'திண்ணையில் குந்துங்கள் என்றுரைத்தால் சேல்விழியாள்'

எடுத்துக்காட்டு உவமை:

திம்மன் வீட்டை விட்டுச் செல்வது கூட்டை விட்டு சுப்பம்மாவின் உயிர் போவது போன்றது என்று எடுத்துக்காட்டி உவமித்துள்ளார்.

1. வீட்டை விட்டவர் வெளியே செல்வது

கூட்டை விட்டு உயிர் வேறு கூடு செல்வதே

பழமொழி உவமை:

பழமொழிகள் என்பது முன்னோர்களின் அனுபவத்தால் விளைந்த மொழியின் சொத்து. அதனை கவிஞர்கள் தன் கவிதைகளில் ஏற்றுக் கொள்கிற போது கவிதையின் கருத்து ஆழம் பெறுகிறது. தமிழச்சியின் கத்தியில்

1. நரியும் யானை கண்டத்தை விரும்பும்
2. நாய் குலைக்க நத்தம் பாழாமோ சொல்வீர்

உவமை அடுக்கி வரல் நீட்டி வைத்த வில்லைப்போல், மணித் தேர் போலே

நிலை கெட்டு வீழ்ந்திட்ட புலியைப் போல

உவமைத்தொகை:

விரித்து சொல்வதை விட தொகுத்துச் சொல்வதில் கவிதையில் அழகும் விரைவும் வாசிப்பவன் இடத்து உடன் நிகழ்ச்சியையும் ஏற்படுத்த வல்லது.

1. நம் குடிக்கு நாம் தலைமை கொள்வோம் கெட்ட நாய்ப்பிழைப்பில்
   ஆயிரம் வந்தாலும்
2. எரிமலை பெருமூச்சோடு
3. இருட்காட்டில் நிலவு முகம்

உவம உருபுகள்

உவமை, உவம உருபு, பொருள் என்ற மூன்று கூறுகளைக் கொண்டது உவமை. இங்கு உவம உருபு வெளிப்பட வருவதும் தொகுத்து வருவதும் உண்டு . உவமையின் நோக்கம் பொருளை புலப்படுத்துவது தான் .பாரதிதாசன் தமிழச்சியின் கத்தியில் உவம உருபு வெளிப்பட வந்தனவற்றைக் காண்போம்

உவம உருபுகள்:- ஒத்த, நிகர், போல், போல, போலும், என, போன்ற..

ஒத்த:

பாண்டியனின் வாளையொத்த வாளை- மீன்

பக்குவம் கெடாது வறுப்பாயே

2. தணல் நிகர் சுதரிசன் சிங்

குன்றத்தைக் குள்ளநரி கடித்துப் பற்கள்

கொட்டுண்டது இவ்விடம் தான் போலும் சுப்பம்மா.

தேள் என அஞ்சுகின்றார்.

உருவகம்

செரிவாக்கப்பட்ட உவமையே உருவகம் எனப்படும். தமிழச்சியின் கத்தியில் வரும் சில உருவகங்கள்

1.உளம்பூத்த சுதரிசனின் ஆசைப் பூவும்

ஒரு நொடியில் பிஞ்சாகிக் காயும் ஆகி

தள தளத்த கனியாகிப் போனதாலே

கிச்சென்று பேசாக் கிளி

2.தூயதோர் கைமலர் தன்னை

3.பல ஆட்களின் கூச்சல் அலை வந்து மோதுகையில்.

4.பெட்டையும் ஆண் கிளியுமாய் அமர்ந்தார் ஆலில்

உவமையில் புதுமை

1.சிவப்புக்கல் சிற்றினச் சிவப்போ குருவிரத்தம்- உற்றது போல்

2.கோவை பழத்தில் மெருகு கொடுத்தது போல்

3.தீவட்டி போல் ஒளியைச் செய்வதுதான்

4.இந்த புது நோயை எண்ணி புழுங்கிப்

5. எலிக்கன் போல் எரிந்தது வண்டியின் விளக்கும்

6.வால் குழைக்கப் போ

7. கோழி அடைபட்டது போல்

8.ஓட்டையிலே ஒழுகுவது போல நீரை ஒழுகவிடும் இரு விழியும்

9.மாம்பழம் போன்ற மொழிக்கும்

உவமை அடுக்கி வரல்

1.தூங்கும் குயிலினை நோக்கி ஓர் ஆயிரம்

துப்பாக்கி சூழ்ந்தது போல்- துயர்

தாங்கருங்கிள்ளையை நோக்கிக் கவண் பலர்

தாங்கி நடந்தது போல்

ஏங்கும் விளக்கினை நோக்கிப் பெரும் புயல்

ஏற்பட்டு வந்தது போல

அவனின் மார்பில் சுடர் விளக்குத் தண்டு போல் நாட்டி வைத்தேன்.

உருவகம் உய்த்துணரல்:

1.காட்டை நிகர் சேரியிலே அந்தப் பாம்பு

2. களாப்புதரும் தன்னகத்தே இடம் கொடுத்தால்

கவ்விவிடும் வேரினையே காட்டுப்பன்றி

விளா ஓடும் பழமும் போல் பிரிதல் தீமை.

மிகை உவமை:

தலைசிறந்தது என்று சொல்வதை விட தலைசிறந்த பொருளை விட தலை சிறந்தது என்று கூறும் ஒப்பியல் முறை ஒரு பொருளை உயர்த்தி கூறும் முறையில் மிகச்சிறந்தது. தமிழச்சியின் கத்தியில் கீழ்க்கண்ட உவமைகளை காட்டலாம்.

1.புன்னகைக்கு புது நிலவும் தோற்றுப் போகும்

2.திம்மன் மனைவியைப் போல்- கண்டிலோம்

திறத்தில் என்று உரைத்தார்

உவமைக் கண்ட நேர்வு:

'பத்து நூறு பேர்கள் சேரியில் போய் தேடுவதை குன்றத்தின் வீழருவி போல் இறங்கும் கோலத்தைக் கண்டிருந்த' என்று உவமைக்கிறார். இதன் மூலம் படைவீரர்களின் தேடுதல் வேகம் கண்முன் காட்டப்படுகிறது.. அதேபோல் சுப்பம்மா மானம் இழந்த இடத்தை பற்றி சொல்லுகிற போது 'துயரக் கடலில் வீழ்வது போல் பாயில் விழுந்து சோர்ந்ததும் இவ்விடம் தான்' என்றும் 'புயலுக்குச் சிறுவிளக்கு விண்ணப்பத்தைப் போட்ட அழைத்தது இவ்விடம் தான் போலும்' என்றும் கூறுகிறார். 'தனியாக உலவினான் புலியைப் போலே' என்று செங்கானின் உளவுத் தனிமைக்கு புலியை உவமித்தார். படைவீரர்களது செயலை 'ஊமைகள் போல் சேரி தன்னை நாற்புறமும் சுற்றினார்' என்றும் 'குலைக்கின்ற நாய் போல் கூவிப் பார்த்தார்' என்றும் உவமைக்கப்படும்போது கதையின் தேசிங்கு மற்றும் அவன் படைவீரர்களின் இழிந்த செயல் பெறப்படுகிறது. 'சுற்றி இரையினைக்கொத்தும் பருந்தென உற்றுவிழித்த சுப்பம்மா' எனும்போது தமிழச்சியின் வீரம் கண்களில் கொப்பளிப்பதை பாரதிதாசன் வாயிலாக நம்மால் உணர முடிகிறது. ஒருத்தியை பலர் சூழ்ந்து பிடிக்கிற செயலை 'பாய்ந்தனர் அன்னவள் மேலே மிகச் சிற்றின நாய்களைப் போலே' என்று உவமை வெளிப்படுகிறது. சுப்பம்மா கைது செய்யப்பட்டு தேசிங்கு முன் நிறுத்தப்படுகிற போது 'கொதிக்கின்ற நெஞ்சத்தால் கொல்லுவாள் போல் கொலுமுன்னே வந்து நின்றாள்' என்று உவமைக்கிறார். தமிழர்களை வஞ்சத்தால் வீழ்த்தி ஆட்சியில் அமர்ந்தவர்களை நோக்கி

'கொஞ்சமுமே உயர்நோக்கும் தருகண் வாய்ப்பும்

கொள்ளாத வாழைக்குக் கீழ்க்கன்றே கேள்'

என்று சுப்பம்மா குறிப்பிடும் நேர்வும் தனக்கு என்ன தண்டனை வழங்க உள்ளாய் என்பதை 'சிறையோடா கொலையோடா என்று உரைத்து தீப்போல் நின்றாள்' என்று உவமைக்கும் நேர்விலும் கதை போக்கிற்கு ஏற்ப உவமைகள் கவிஞனுக்குள் நேர்ந்திருக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

முடிவுரை:

பொருளைச் சிறப்பிப்பதற்காக மிக உயர்த்தியும் மிக தாழ்த்தியும் உவமை கூறினாலும் பொருளின் சிறப்பை வெளிப்படுத்தும் கவிஞனின் நோக்கு நன்கு நமக்கு புலனாகிறது. தமிழச்சியின் கத்தி படிப்பவருக்கு இளங்கோவடிகளின் சிலப்பதிகார கதையைப் படிப்பது போன்றதொரு உணர்வு மேலிடும். வடநாட்டவர்களின் ஆதிக்கத்தையும் அதனால் தமிழர்கள் அடைந்த துன்பங்களையும் கவிதையாக தந்திருக்கும் இந்நூலில் ஒரு தமிழச்சியின் வீரம் வெளிப்பட்டு இருப்பது இன்றைய காலத்து பெண்கள் தன்னையும் தன் மொழியையும் தன் இனத்தையும் காப்பதில் முன்னணியில் இருக்க வேண்டுமென்ற கவிஞனின் பேரவாவைக் காட்டுகிறது.

பார்வை நூல்கள்:

1. தமிழச்சியின் கத்தி, பாரதிதாசன், மூன்றாம் பதிப்பு ஆண்டு 1967, பாவேந்தர் பதிப்பகம், புதுச்சேரி.
2. சங்க இலக்கிய உவமைகள், டாக்டர். அர. சிங்கார வடிவேலன், தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை, முதற் பதிப்பு: டிசம்பர் 1986, பழனியப்பா பதிப்பகம், 65, தியாகிகள் சாலை, தேவகோட்டை.

பாவேந்தர் பாரதிதாசனின் பெண்ணுலகில் கைம்பெண்

முனைவர் மா.செல்வத்தரசி,

உதவிப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி,

தமிழ் உயராய்வு மையம், மதுரை-625001.

முன்னுரை

தமிழகத்தின் ஒப்பற்ற மரபுக் கவிபாடியவர் பாவேந்தர் பாரதிதாசன். தனது எழுத்தின் வழி சமுகங்களை ஊடாடிச் சென்று செய்திகளை வெளிக்கொணர்ந்தவர். பாவேந்தர் கவிதைகளில் பெண்ணுக்கென்று தனியிடம் உண்டு. இவர் தம் கவிதைகள் பல்சுவை உடையதாயினும் பெண்களில் கைம்பெண்களின் இன்னல்களை நீக்க மறந்தாரில்லை. கைம்பெண் கொடுமை நீங்க கவிதை நடைகள் மூலம் விடுதலை பாடிய கருத்தமைகளை ஒட்டியதாகக் கட்டுரை அமைகிறது.

பாவேந்தர் பாரதிதாசன்

கனகசுப்புரத்தினம் என்ற இயற்பெயர் கொண்டவர் புதுச்சேரியில் 1891-இல் பிறந்தார். பெரும்புகழ் படைத்தவர். தமிழாசிரியரான பாரதியார் மீது பற்றுக் கொண்டு தனது பெயரினை ‘பாரதிதாசன்’ என்று மாற்றிக் கொண்டார். தம் எழுச்சி மிக்க எழுத்துகளால் “புரட்சிக் கவிஞர்” என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார். பிரெஞ்சு மொழி பயின்றாராயினும் தமிழ் மீது காதல் உடையவர். தமிழறிவுடைய அவரை இயல், இசை, நாடகம் இளமையிலேயே அவரைத் தழுவி நின்றன. மொழியறிவும், இசைவுணர்வும், நல்லெண்ணமும் அவரது உள்ளத்தில் கவிதையுருவில் காட்சியளித்தன. மரபுக் கவிபாட வந்த வள்ளல் பெருமானிடம் பெண்ணுரிமை குடிகொண்டிருப்பினும் ‘கைம்பெண்’ குறித்த விடுதலை அவரது உள்ளத்தில் நெருப்பாய் சுடர்விட்டு எரிந்தமையை அவரது ‘பெண்ணுலகு’ எனும் கவிதை வழி அறியமுடிகிறது.

பெண்கள் குறித்து பாவேந்தர்

பெண் என்பவள் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை பேரிளம்பெண் என்று சுட்டப்படுகின்றனர். திருமணத்திற்குப் பின் அவள் மனைவி என்ற உயர்தகுதியைப் பெறுகிறாள். மனைவி என்பவள் கணவன் சரியாக அனைத்துச் செயல்களிலும் செயல்படுவதற்கு உதவுகிறாள். அவளாலே அவன் ஒழுங்குபடுகிறான்.

இத்தகைய பெண்களுக்குத் துன்பம் தருபவர்களே உங்கள் வாழ்வில் நீங்கள் முன்னேறுவதற்கான சூழ்ச்சி பெண்களிடம் உள்ளது.

பூமியில் ஒருவனுக்கு மனைவி இல்லை எனில் பெருந்தீமையை அவன் அடைவான். ஆடவர்கள் செய்யும் ஊழல்களை எல்லாம் பெண்களே விலக்குகிறார்கள். கல்வியில்லாது எவ்வித உரிமையும் இல்லாது பெண்கள் முன்னேற வழியின்றித் தவிக்கின்றனர். சிறுபுல்லாய் மனைவிமாரை நினையாதீர். திருந்தினால் பெண் ஆண் என்ற இன்ப வாழ்வை இயல்பாய் அடையக்கூடும் என்கிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் பெண்களுக்கான உரிமைகளாக கல்வியும், உரிமைகள் எதுவுமின்றி தவித்ததை கவிஞர் பெர்னார்ட்ஷா என்ற பெயரில் பதிவு செய்திருக்கிறார்.

கைம்பெண்

திருமணம் ஆன பின்பு கொண்ட கணவன் இறப்பால் பெண்ணிற்கு இடும் பெயர் ‘கைம்பெண்’. திருமணம் என்பதனை சீ.பக்தவத்சபாரதி “மனித இனம் தன்பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும்”1 என்கிறார். திருமணத்திற்குப் பின்னர் அவள் தனது கணவனை இழந்த போது சமுகம் அவளுக்குச் சூட்டும் பெயர் விதவை, கைம்பெண், கைம்மை, வைதவியம், அமங்கலி, அமங்கலை, விதவாகாம், வாழாவெட்டி என்றெல்லாம் பட்டம் சூட்டுகிறார்கள். செந்தமிழ் அகராதி “கணவனை இழந்தவள்”2 என்கிறது. எனினும் இவற்றையெல்லாம் தகர்த்தெரிவதற்கு வந்தவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். கைம்பெண்களுக்கு விடுதலை பெற்றுத்தருவதாக அவரது கவிதைகள் அமைகின்றன.

கைம்மைப் பழி

பெண்கள் தங்கள் இளம் பருவத்திலேயே கைம்மையுற்று வாழும் வாழ்வின் கொடுமைகளைப் பழித்துரைக்கிறார். வேரில் பழுத்த பலா எவ்வாறு சுவையுடையதோ அது போல் இளம் பருவப் பெண்கள் இனிமையானவர்கள். இத்தகையோரை இளம்பருவத்தில் குளிர் தென்றல், பூமாலை, பூஞ்சோலை இவற்றை நாடக்கூடாது என்று நீக்கியும்; நலம் தரும் கனிகளைக் கூட நஞ்சென்று நீக்கி வைத்தார்கள்; எழில் வீணை நரம்புதரும் தொனியை சூடப்படாது என்றும்; மன்னன் சூடும் கிரீடத்தைத்

தொடக்கூடாது நறுந்தேன் சுவைத்திடும் பொற்குடத்தைத் தொடுதல் தகாது என்று இவ்வாறு கூறுவதில் யாருக்கும் வெட்கமில்லை என்றுரைக்கிறார்.

கணவன் இறப்புக்குப் பின் கைம்பெண் என்று ஒரு பெரிய கல்லை அவளது தலையில் தூக்கி வைத்தனர். அவள் மறுமணம் செய்யக் கூடாது என்றெல்லாம் விதி வகுத்திருந்தனர். ஆனால் பாவேந்தர் தம் கவிதையில் அவள் ஆடவனைப் போல் மறுமணம் செய்யவும் வேறு துணைதேடச் சொல்வோம் என்று உரைக்கிறார். எனினும் 'கைம்மை' என்ற பழிச்சொல்லை அறவே ஒழிக்க முயன்றுள்ளார்.

கைம்பெண்ணின் நிலை

பெண் தன் பெற்றோர் வீட்டில் கண்ணைப் போல் பாதுகாத்து வளர்க்கப்படுகிறாள். கணவன் இறந்த பின்னர் கூந்தலில் மலர் சூடினால் உலகமே வசைபாடுகிறது. எதிரில் காண்போர் முகம் சுளிக்கின்றனர். தரையில் படுத்தல், சாதம் குறைத்தல், தாலியற்றவள் என்றெல்லாம் பழிக்கின்றனர். இந்த பழிக்கு ஆளாகக் கூடாது என்று நினைத்த பெண் ஒருத்தியின் முடிவினை சங்க இலக்கியப் பாடல் ஒன்று சுட்டுகிறது.

சங்க இலக்கியம் ஆகிய புறநானூற்றில், கணவனின் சிதையில் தானும் உயிர்விடத் துடிக்கும் பெண்ணொருத்தியைச் சான்றோர்கள் தடுத்து நிறுத்துகின்றனர். அவளோ கணவனின் இறப்பிற்குப் பின்னர் சமுகத்தால் தான் அடையும் இன்னல்களை எண்ணி மறுக்கிறாள். காரணம் அவள் இனிமேல்,

"………………………நறுநெய் தீண்டாது
ஆடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளள் சாந்தொடு புளிப்பெய் தட்ட
பரற்பெய் பள்ளிப் பாயின்று வரியும்"3

- (புறநானூறு.246)

நறுநெய் படாததாக பானையின் அடியில் நீருடன் கிடக்கும் சோற்றுப் பருக்கைகளை வெள்ளை எள் துவையலுடன் புளியிட்டுக் காச்சிய வேளைக் கீரை ஆகியவையே உணவாகவும், கல்பரப்பிய படுக்கையே பாயாகவும் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு வாழ்வதற்கு நான் இறப்பதே மேல் என்று கைம்பெண் கூறிய செய்திகளும்

ஒப்புநோக்கத்தக்கது. கைம் பெண்கள் வருந்தாமல் இருக்க வேண்டுமே ஆனால் சமுகம் முதலில் திருந்தியாக வேண்டும் என்கிறார்.

கைம்மைத்துயர்

பெண்களின் துயரினைக் காண்பதற்கு கண்ணிழந்தீரோ! பெண் தன் துணையிழந்தால் வேறு துணை கொள்வதில்லை. மங்கையரைப் பெற்றோரோ மாலையிட்ட மணவாளன் இறந்துவிட்டால் மங்கை என்ன செய்வாள்? அவளை ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம் அணுவளவும் அடையாமல் சாகச் செய்கிறீர்கள். பெண்டிழந்த குமரன் மனம் பெண்டு கொள்ளச் செய்யும். ஆனால் பெண்ணுக்கு அந்த உரிமை இல்லை. துணையிழந்தவளுக்கு காதல் பொய்யா? சுகம் அவளுக்குத் தேவையில்லையா அவளது அணையாத காதலை அணைக்கச் சொன்னீர். அணைகடந்தால் நீங்கள் அவளுக்கு இடும் தடைகள் எந்தமூலை? பெண்ணுக்கு ஒரு நீதி பேதமெனும் மதுவை உண்டீர். உங்கள் கண்ணில் ஒன்று பழுதானால் என்ன செய்வீர்கள்? உங்களை உலகம் பழியாதா? என்று கைம்பெண்களைப் பழிப்பதனை ஒழிக்குமாறு செய்கிறார்.

கைம்மைக் கொடுமை

பாவேந்தர் பாரதிதாசன் பூமியின் மேல் உள்ள மனிதர்களைப் பார்த்து கண்களும் உண்டு. சிந்திக்கும் ஆற்றலும் உண்டு. வாழ்க்கையில் பல புதுமைகளைக் காண்கின்றோம். வானில் ஏறுவதும், கடலை வசப்படுத்துவதும் ஈனப் பொருள்களிலே உள்ளுறை இனிமை கண்டு மேன்மை அடைகின்றனர். புழுதி, குப்பை, உமி இவற்றின் புன்மைதனைக் களைந்து பழரசம் போல் அவற்றைப் பயன்படுத்துகின்றனர். நம்மை எழுதவோ, பேசவோ வேண்டாம். அழகிய பெண்களாகிய நமக்கு அழுகிய பழத்தோல் தான் உண்பதற்கு.

கைம்மை எனக்கூறி கையினிற் கூர்வேலால் நம் இனப் பெண்குலத்தின் இதய நடுவில் குத்துகின்றோம். செம்மை நிலை அறியாது பெண்களின் சிந்தையை வாட்டுகின்றோம். கூண்டில் கிளியை வளர்த்து அதன் தேவை அறிந்து வேண்டியது தருவர். ஆனால் மாண்டவர் மனைவியின் உள்ளத்தை அறிய மறந்துவிடுகின்றனர். பெண்ணின் கதி இவ்வளவே தான் அவளின் உணர்வை மதிப்பாரில்லை.

இறந்தவன்மேற் பழி

கணவன் ஒருவன் நோயுற்ற காலத்தில் தன் மனைவியைப் பார்த்து கூறிய சில மொழிகள். நோயுற்று இறக்கும் நிலையில் தன் மனைவியிடம் நாம் இன்பமாக வாழும் ஒரு சூழலில் இப்படியொரு தொல்லை எனக்கு வந்துவிட்டது. இறக்கும் நிலையில் கணவன் ஒருவன் தன் மனைவியைப் பார்த்து, என் மனதில் உள்ளதைச் சொல்கிறேன் கேட்பாயாக! கடும்பிணியால் நான் இறந்த பின்னர் கைம்பெண்ணாய் வருந்தாதே. பழி என்மீதுதான். வையகம் அடம் பிடிப்பதனைப் பொருட்படுத்தாமல் ஆசைக்குரியவனை நாடு மகிழ்வோடு மாலை சூடி நலமாய் இரு என்றான். புவிமேல் உள்ளவர்கள் சொல்வதைக் கேட்டு மலைக்காதே. உன் பகுத்தறிவால் குணம் அறிந்து நடந்துகொள். துயர்கடந்து, துணைபிடித்து, பயம் விடுப்பாய் என்றுரைத்தான்.

இவ்வாறு இறக்கும் நிலையில் உள்ள ஆண் மகன் ஒருவன் தன் மனைவிக்கு நல்லனவற்றை எடுத்துரைக்கிறான். தனக்குப் பின்னும் அவள் நலமுடன் வாழ வேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்டவனாய் காட்சியளிக்கச் செய்கிறார்.

முடிவுரை

பெண்கள் பூமியில் பகுத்தறிவுடன் வாழ்தல் வேண்டும். அவர்களது உணர்வுகள் மதிக்கப்படுதல் வேண்டும். நாமே நம் பிள்ளைக்கு நெருப்பை மூட்டித்தருதல் கூடாது. கைம்மை என்ற பைந்தமிழைச் சீராக்கக் கைம்மை என்னும் சொல் நீங்க வேண்டும். இது போன்ற பெண்கள் விடுதலை பெற வேண்டும். இத்தகைய அதிசய மனிதர்கள் செம்மையாகும்படிச் செய்வதற்கு நாமே மனது வைக்க வேண்டும் என்று ஆணையிடுகிறார்.

குறிப்புகள்

1. சீ.பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.370.
2. ந.சி.கந்தையா, செந்தமிழ் அகராதி, ப.222.
3. புலியூர் கேசிகன், புறநானூறு, ப.299.